வீரவிளக்கு வ. வே. சு. ஐயர்

விற்பனை உரிமை.

வஸந்தா புத்தகசாலை, கண்டனூர்

பதிப்புரிமை

முதற் பதிப்பு: ஜூலை, 1947

Printed at C. P. & P. H., Madras-M/S. 120-B
For Anbu Nilayam : Ty-58 (1000-Copies)

VIRAVILAKKU Va Ve Cu AYYAR

வீரவிளக்கு வ. வே. சு. ஐயர்

(வரலாறும், தொண்டும்)

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

CUTTANANTA PARATIYAR

CONNEMARA PUBLIC LIBRARY
7 MAR 1943
MADRAS

அன்பு நிலயம்
இராமச்சந்திரபுரம் :: திருச்சி ஜில்லா.

43196

விலை ரூபாய் நான்கு

V2:5M81
31H7

பதிப்புரை

வீரவிளக்கு வ. வே. சு. ஐயர், தமிழ்த்தாய் பெற்ற தவமணிப் புதல்வர்; கலைக் கற்பகம். தமிழருக்கே வாழ்ந்த தமிழர்; கம்பரையும் திருவள்ளுவரையும் உலகிற்கு விளக்கிய புலவர்மணி; சிறு கதை அரசர். அவர் வரலாற்றைத் தமிழர் நீண்ட காலம் எதிர்பார்த்திருந்தனர். அதை, யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அவர்கள் அழகாகவும், உருக்கமாகவும், இயல்பாகவும், உணர்ச்சியுடனும் எழுதி, தமிழருக்கு அளிக்கிறார்கள். சுத்தானந்தர், ஐயருடன் நெருங்கிய நட்புறவு கொண்டவர்; ஐயரே கவியோகி அவர்களைத் தமிழுலகிற்கு நன்கு அறிமுகப்படுத்தியவர்: ஐயரிடமிருந்தே அவர் வரலாற்றைச் சுத்தானந்தர் நேரில் கேட்டறிந்து குறிப்புகள் எடுத்துக் கொண்டதுண்டு; புதுச்சேரியிலும் சில விவரங்கள் கிடைத்தன. ஐயரின் புதல்வர் டாக்டர் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி, தமது தந்தையாரைப் பற்றிய சில பயனுள்ள குறிப்புகளைத் தந்துதவினர். சுத்தானந்தரின் தினசரிக் குறிப்புகளில் பல இனிய நிகழ்ச்சிகள் இருந்தன. எல்லாம் சேர்த்து ஆராய்ந்தெழுதியதின் பயனே இந்நூல். இதில், ஐயரிடம் நேரில் கேட்ட விஷயங்களை, ஐயர் நடையில், அதே உச்சரிப்புடன் சொல்லப் பெற்றுள்ளது.

ஐயரின் அரசியல் வாழ்க்கை, புரட்சிகரமானது; அதன் முழு விவரங்களையும் குறிக்கக் காலம் கனியவில்லை. இக்காலத்தில் ஐயரைப் பற்றி எவ்வளவு சொல்ல முடியுமோ, அவ்வளவும் இந்நூலில் அடங்கும். ஐயரின் நட்புரிமை, நாட்டன்பு, கலை வாழ்வு, அரிய தன்மைகள் இவையனைத்தும் இந்நூலில் நன்கு விளங்கும்.

இந்நூலைத் தமிழ்த்தாய் பெற்ற வீரவிளக்கான் ஸ்ரீ வ. வே. சு. ஐயருக்கே அர்ப்பணித்து வணங்குகிறோம்.

இராமச்சந்திரபுரம்,
30-6-1947

அன்பு நிலயத்தார்.

PUBLIC LIBRARY
7 MAR 1943
MADRAS

பொருளடக்கம்

எண் பக்கம்

பதிப்புரை ... ரு
பொருளடக்கம் ... சு
க. கலைவாழ்வும், அரசியலும்:
1. பண்புறு நண்பர் ... 1
2. கண்டேன் ஐயரை! ... 3
3. நம் ஐயர் ... 5
4. ஐயர் பிறந்தார் ... 9
5. மணிப்பிள்ளை ... 10
6. பாக்ய லக்ஷ்மி ... 11
7. வக்கீல் ஐயர் ... 12
8. 'பால்' போல்வா? ... 13
9. இரங்கூனில் ஐயர் ... 14
10. பாரிஸ்டர் படிப்பு ... 15
11. இந்திய வீடு ... 19
12. வீர வாலிபர் ... 20
13. மிதவாதியின் பதில் ... 25
14. மகானுபாவனைக் கண்டேன்! ... 27
15. ஒற்றனுக்கு எத்தன்! ... 32
16. ஸஹன சக்தி ... 36
17. வீடு கலைகிறது ... 38
18. ஆ, பயங்கரம்! ... 39
19. "தியாக பலியானேன்" ... 41
20. "போ, போ... உடனே!" ... 43
21. "வே. விக்ரம ஸிங்" ... 44
22. பாரிஸில் ஐயர் ... 46
23. சாவர்க்கார் வீரம் ... 47
24. பார்ஸி கனவான் ... 50
25. ரோமில் ஐயர் ... 50
26. கான்ஸ்தாந்தி நோபிள் ... 51
27. அல்லாஹூ அக்பர்! ... 51
28. புதுவை சேர்ந்தார் ... 52
29. துல்லாக் கதை ... 53

எண்		பக்கம்
30. துன்பக் கண்ணீர் !	...	55
31. "பிதுரார்ஜிதம் வேண்டாம்"	...	58
32. யட்டு பறந்தாள்	...	60
33. கடிதங்கள் கலக்கின	...	61
34. "புதுச்சேரிக்கு வா"	...	63
35. ஐயரின் தேசபக்தி	...	65
36. ஐரோப்பியருடன் கலையுறவு	...	66
37. சுற்றிலும் ஒற்றர்	...	70
38. தேச வைராக்கியம்	...	72
39. உஷார் !	...	74
40. மணியாச்சியில்	...	75
41. பிள்ளையாருக்குப் பின்னே !	...	76
42. பாடையில் யார்?	...	77
43. ஐயையோ சூனியம்!	...	78
44. நியாயமா?	...	80
45. காலிகளுக்கு ஒரு வேட்டு	...	81
46. குறள் மொழி பெயர்ப்பு	..	84
47. கம்ப நிலையம்	...	85
48. மஹாத்மா தரிசனம்	...	87
49. விடுதலை	..	88
50. காசி யாத்திரை	...	89
51. தேச பக்தன்	...	92
52. ஐயர் பேச்சு	...	94
53. சிறை வாழ்க்கை	...	98
54. ஆசிரமம்	...	101
உ. தமிழ்க் குருகுல சேவை:		
1. சேரமா தேவி குருகுல அமைப்பு	...	104
2. குருகுல நோக்கம்	...	108
3. பாரத்வாஜ சங்கமும், தொண்டரும்	...	110
4. குருகுல வரவு செலவு	...	113
5. குருகுல உணவு	...	116
6. குருகுலப் பாடங்கள்	...	119
7. குருகுல ஒழுக்கம்	...	122
8. பாரதி திருநாள்	...	129
9. திலகர் ஜயந்தி	...	133

எண்		பக்கம்
10.	வில் வித்தை	... 135
11.	குருகுல ஜயந்தி	... 136
12.	நரசிம்ம ஜயந்தி	... 137
13.	நவராத்திரி	... 140
14.	கிணற்றைத் தூர்வை எடுத்தல்	... 141
15.	காந்தி ஜயந்தி	... 142
16.	பெல்காம் காங்கிரஸ்	... 148
17.	ஐயரின் அன்பு	... 152
18.	ஐயர் கண்டிப்பு	... 157
19.	ஐயர் மரியாதை	... 163
20.	மலைமேல்	... 166
21.	ஆற்று மணலில்	... 168
22.	செய்யுங்கள் தவம்	... 169
23.	ததாஸ்து	... 175
24.	மாணவர்களுடன் யாத்திரை	... 178
25.	குருகுலப் போர்	... 180
26.	ஐயரின் சமாதானம்	... 186
27.	ஐயர் தியாகம்	... 197
28.	கவலையில்லை	... 199
29.	சீர்திருத்தம்	... 200
30.	பால பாரதி	... 202
31.	இறுதி நாளில்	... 213
32.	அருவியின் அழைப்பு !	... 233
33.	ஐயர் கண்ணிகள்	... 245

CONN... 7 MAR 1949 MADRAS

வீரவிளக்கு வ. வே. சு. ஐயர்

(வரலாறும், தொண்டும்)

க. கலை வாழ்வும், அரசியலும்

1. பண்புறு நண்பர்

உலகில் எத்தனையோ அரிய பொருள்கள் உண்டு; ஆனால் ஒரு பண்புள்ள நண்பனைப் போன்ற அரிய பொருள் எங்கு மில்லை. படிக்கப் படிக்கப் பயன்தரு நூல்போல், பழகப் பழகப் பயன் தரும் நட்பு. இக் கருத்தைத் திருவள்ளுவர் அழகாகச் சொல்லி யிருக்கிறார் :

"நவில்தொறும் நூல்நயம் போலும், பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு."

நான் ஒரு சமயம் திருக்குறளை ஆங்கிலமாக்க முயன்று, இக் குறளை மொழி பெயர்த்துக் கொண்டிருந்தேன். அச் சமயம் ஆசிரிய நண்பர் ஒருவர் வந்தார்; மொழி பெயர்ப்பைப் படித்தேன்: "குறளா? வ. வே. சு. ஐயர் மொழி பெயர்த்திருக்கிறாரே; வாரும், பாரும்" என்றார்; அவருடன் சென்றேன்; "The Maxims of Tiruvalluvar" என்ற நூலைக் கண்டேன். உடனே, மேற்சொன்ன நட்புக் குறளுக்குக் கீழ்க்காணும் ஐயர் மொழிபெயர்ப்பைப் படித்தேன்.

"The friendship of the worthy is like
the studying of great books:
The more thou approachest them
the more charms thou wilt discover in them."

பிறகு நூல் முழுதும் படித்து மகிழ்ந்து என் முயற்சியை "Saint Valluvar" என்ற ஆராய்ச்சி நூலாக முடித்தேன். அந்த நண்பர் ஐயருடன் திருச்சி யோசேபு முனிவர் கல்லூரியில் (St. Joseph College) படித்தவர். ஐயரின் அருமை பெருமைகளை அவர் ஆவேசமாகப் பேசினுர்.

முன்பே இந்தியாப் பத்திரிகையில் வந்த கரிபால்டியும், லண்டன் கடிதங்களும் என்னை ஐயரிடம் ஈடுபடச் செய்திருந்தன. அவரது சீமை—புதுவை வாழ்வு, கதைகதையாகக் காதிற்கெட்டின; எனினும், மேற்சொன்ன நட்புக் குறளே, ஐயர் நட்பை எனக்களித்தது. ஐயர் அப்போது புதுவையில் "கம்ப நிலயம்" நடத்தி அரிய தமிழ் நூல்களை வெளியிட்டார். நான் அவற்றை வாங்கிப் படித்து ஒரு போற்றியுரை எழுதினேன். பிறகு எனது பாரத சக்தியில் ஒரு பகுதியும், ஒரு நாடகமும் அனுப்பினேன். அதை ஐயரும், பாரதியாரும் பார்த்து மகிழ்ந்தனர். என் பேனுவுக்கு ஐயர் ஆசியும் ஆதரவும் கிடைத்தது. ஐயருக்குக் கவிதைக் கடிதங்கள் எழுதி வந்தேன், ஒன்றில்,

"கற்கக் கற்கக் கம்பனைப் போன்ற
சுவிச்சுவை யளிக்கும் கவின்பெறு நண்பா!
விரக் கனலே, வித்தகச் சுடரே,
தியாக மென்னுந் தெய்வக் கனலில்
புடம்வைத் தொளிரும் பொன்னே! உன்னை
உடலினும், உயிரினும், உலகினும் பெரிதாய்க்
காதலிக் கின்றேன், கலைமணி விளக்கே!
நட்பிற் குரிய சுப்பிர மணியா!..."

"தங்கள் வாக்கு மஹாகவிகள் வாக்குப் போலிருக்கிறது! தமிழன்னைக்குத் தாங்கள் அரிய கலைத்தொண்டு செய்கிறீர்கள்" என்று ஐயர் எனக்கு எழுதினுர்; பிறகு, "தேச பக்தனி"ல் என்னைக் குறித்து எழுதினுர். அக்காலமே, அவருடன் என் வாழ்வை ஐக்கியப்படுத்த முயன்றேன்; நான் அவரைக் காணச் சென்னை சென்றபோதுதான்

அவர் பல்லாரிச் (Bellary) சிறைக்குச் சென்றார். என் வாழ்வாறும் எங்கெங்கோ சுற்றிச் சுழன்று, முடிவில் சேரமாதேவியில் அவரைக் கலந்தது. ஐயர் அழைப்பு வந்ததும், என் அலுவலை உதறித்தள்ளி, ஆவலாக ஓடினேன்; சேரமாதேவி குருகுலத்தில் நுழைந்தேன்; கண்டேன் ஐயரை! பண்புள்ள நண்பரைக் கண்டேன்!

2. கண்டேன் ஐயரை!

"வாருங்கோ, நமஸ்காரம்! நெடுநாளாகப் பார்க்க வேண்டுமென் றிருந்தேன்; பாரதசக்தி பாடி முடித்து வீட்டீர்களோ?" என்று பேசிக்கொண்டே ஐயர் என்னைப் புத்தகசாலைக்கு அழைத்துச் சென்றார். அந்தப் பேச்சில் வஞ்சமற்ற குழந்தையுள்ளம் கொஞ்சியது; அந்த நடையில் குஞ்சரம் தவழ்ந்தது; ஐயர் பஞ்சகச்சம் வைத்து வேட்டி கட்டி, மேலே ஓர் அங்கவஸ்திரம் போர்த்தி, நெற்றியில் பட்டையாக விபூதி யணிந்திருந்தார். அந்த எளிய உடையில் ஒரு களங்கமற்ற வீரக்கனல் வீசியது!

புத்தகசாலையில் இருவரும் நின்றோம்; ஐயர் என்னைப் பார்த்துப் புன்னகை புரிந்தார்—நான் அவர் கார்[illegible] யழகைக் கண்ணால் பருகினேன்; படம் பிடிப்பவன் [illegible] அவரைப் பார்த்தேன்; உடனே பாரதசக்தியை விரித்தேன். விரித்ததும், வீர சிவாஜிப் படலத்தில் ஒரு செய்யுள் வந்தது; படித்தேன்:

> உண்ணும் ஊணினை, உயிர்த்திடும்
> உயிர்ப்பினை, உரையை,
> எண்ணும் எண்ணத்தை, இயற்றிடும்
> பணிகளை யெல்லாம்,
> கண்ணினும் அரி தாகிய
> கற்பக நாட்டின்
> புண்ணியப் பயன் வாழவே
> பூசனை புரிந்தான்!

ஐயர், "இஹ்ம், இஹ்ம்!" என்று மெல்லிய நகை புரிந்து— "வாக்கு கம்பீர மாயிருக்கிறது; அடிக்கடி படிப்போம்" என்றார். நான் பாரதசக்தியை அவர் காலில் வைத்துப் பணிந்து, "என்னைத் தங்களுக்கே பலிதானமாக்கி விட்டேன்; நான் யோகமும் கவிதையுமாக வாழ்ந்தவன்; தங்களால் உலகை அறிய வேண்டும்; என்னை ஆளாக்க வேண்டும்; என் வாழ்வை அமைக்கும் சிற்பி, தாங்களே— நமஸ்காரம்!" என்று நின்றேன். ஐயர் என் விழிகளை ஊடுருவிப் பார்த்தார். உடனே கம்பனிலிருந்து பின்வரும் பாட்டை மெல்லிய குரலிற் சொன்னார்; அக்குரலில் பாட்டில்லை; ஆனால் பாவனாரசம் ததும்பியது:

"இல்லாத உலகத் தெங்கும்
இங்கிவன் இசைகள் கூறக்
கல்லாத கலையும், வேதக்
கடலுமே யென்னும் காட்சி,
சொல்லாலே தோன்றிற் றன்றே!
யார்கொலிச் சொல்லின் செல்வன்?
வில்லார்—தோள் இளைய வீர,
விரிஞ்சனோ விடை வல்லானோ!"

"இது ஹனுமானைக் கண்டு கேட்டு இராமன் சொன்னது; இதையே இங்கே சொல்லவேண்டி யிருக்கிறது. தங்கள் தவமும் கவியும் இங்கே அமோகமாக வளரட்டும்!" என்று ஆசி கூறினார் ஐயர். பிறகு நான் பாரத சக்தியிலிருந்து ஐயருக்குப் பொருத்தமான ஒரு செய்யுளைப் படித்தேன்:—

கார்வரை மேனி யானைக்
கலை வளர் கடல னானை
நேர்திரு நடையி னானை
நேசருக் குயிரன் னானைக்

கூர் விழிக் கருணை யானைக்
கொள்கைக்கே வாழு வானைப்
பார் புகழ் வீர வேளைப்
பார்த்துளம் பூத்து நின்றேன்!

"டண் டண் டாண்!' மணி அடித்தது. "பிரார்த்தனைக்குப் போகலாமே" என்றார் ஐயர்; மாணவர் வட்டத்திலுருந்து பிரார்த்தனை செய்து முடிந்தது. உடனே ஐயர், "பாரதிக்கு ஆகார மெப்படியோ?" என்று அன்புடன் வினவினார்: "கனி, கடலை, தயிர்" என்றேன். "இராத்திரி பலகாரம் வைத்துக்கொள்ளலாம்; பகலில் புஷ்டியாகச் சாப்பிடட்டும் பாரதி" என்று ஐயர் அழைத்துச் சென்றார்.

கிணற்றங் கரையில் ஒரு கூரைக்குடில்; அதில் சமை யல்; மரத்தடியில் சாப்பாடு. ஐயர் என்னைப் பக்கத்தில் அமர்த்திக் கொண்டு நன்றாகச் சாப்பிடச் சொன்னார்; உணவு புதிதாகையால் நான் சங்கோசப் பட்டுக் கொண்டே இலையைத் தொட்டேன்; என் குறிப்பறிந்து மறுநாளே ஐயர் கனிகடலைக்கு ஏற்பாடு செய்து, தம்மு டன் இருந்து உண்ணச் செய்தார். உண்ணும் போதே கலைப் பேச்சும், நாட்டுப் பேச்சும், வீரப் பேச்சும் நடந் தன. உடன் உண்பதும், உரையாடுவதும், உயர்ந்த நூல் களைக் கற்பதும், கவி பாடுவதும், படிப்பதும், பத்திரி கைக்கு எழுதுவதும், தியானிப்பதுமாக என் வாழ்க்கை ஐயருடன் ஐக்கியமானது; பழகப் பழக அவர் நட்பு கலைச் சுவையாக மாறி தெவிட்டா தினித்தது. பண்புள்ள நண்பு பயனுள்ள காவியம் போன்றதன்றோ?

3. நம் ஐயர்

பேச்சுக்குச் சிதம்பரம் பிள்ளை, பாட்டுக்குப் பாரதியார், எழுத்துக்கு ஐயர். இம் மூவரும், தமிழ் நாட்டின் மும் மணிகள்; பாரதமாதாவின் வீரத் திரிசூலங்கள். இவர் களைத் தமிழர் மறக்க முடியாது. உலகமே மறக்க முடி

யாது. தமிழருக்கு ஓர் ஐயர் இருந்தார். இன்னோர் ஐயரை நாம் எப்போது காணப் போகிறோம்? ஐயர் என்றால் உயர்ந்தவர், பெரியவர், அந்தணர், அரசர், ஆசிரியர், முனிவர், தந்தை, வணங்கத் தக்கவர் என்று பொருளாகும்.

"ஐயர்" என்று போற்றுதற்கு உரிய ஒருவர், நம் ஐயரே! ஐயர் வீர விளக்கு; உச்சி முதல் உள்ளங்கால் வரையில் வீரர்; தீரமே அவர் உள்ளம்; கலையே உடல்; தியாகமே வாழ்க்கை. நீல மணிக்குன்றுபோல் மேனி; வஜ்ராயுதம் போன்ற முதுகு; வைரம் பாய்ந்த கர்லாக் கட்டைகள் போன்ற கைகள், கோபுரம் போல் நிமிர்ந்த தலை, செவ்வரிப்படர்ந்த விழிகள், பசுவும் சிம்மமும் சேர்ந்தது போன்ற முகப்பொலிவு; அடர்ந்த தாடி; அகன்ற மார்பு, ஜலதரங்கம் போன்ற கிண்கிணிக் குரல், காவற்ற மனம், எளிய நடை, எளிய வைதீக உடை, நேர்மையான பேச்சு, கூர்மையான பார்வை, மாசற்ற நேசம், தேசாவேசக் கனவுலகில் தோய்ந்த சித்தம்; அப்பழுக்கற்ற ஒழுக்கம்—இவையே ஐயர்! ஆ, ஐயர் இதோ என்முன் இருக்கிறார்; என்னுள் இருக்கிறார்! அர்ஜுனன், குருகோவிந்த சிம்ஹன், பிரதாப சிம்ஹன், சாந்தியாதோபி, கரிபால்டி, மஃஜினி - ஆகிய உலக வீரருடன் ஐயரை வைத்து மதிக்க வேண்டும். இந்த வீரர்களைப் பற்றி நான் பேசும்போதெல்லாம் ஐயர் பரவசங் கொள்வார். "வீரதருமமே நமக்கு வேண்டும்; எனக்கு வசிஷ்டாதி முனிவரைவிட, இராமனையும் குருகோவிந்தனையுமே அதிகம் பிடிக்கும்; மஹாகவிகளெல்லாம் வீரர்களுக்கே தமது வாக்ஸம்பத்தை அர்ப்பணித்தார்கள்" என்பார். வீரம்! ஆ, இந்த ஒரு மொழியில் ஐயர் வாழ்க்கை அடங்கும்; அந்த வீரத்தின் சுடர்ப்பொறிகளே ஐயரின் அருங்கலைச் செல்வம்.

ஒரு நாள் மாலை ஐயர் என் பர்ணசாலைக்கு வந்தார்; நான் எழுதி முடித்த 'ராணா பிரதாபசிங்கன்' என்னும் நாடகத்

தைப் படித்தேன். அரவிலி மலைக் காட்டில் அவன் பட்ட கஷ்டத்தை வருணிக்கும் காட்சியைப் படித்தபோது ஐயர் உருக்கமாகக் கேட்டார். சட்டென்று அங்கே நிறுத்தி, "ஐயரே, தாங்களும் இப்படித்தானே தேசத்திற்காகப் பயங்கரமான தியாகம் செய்தீர்; எத்தனையோ இடர்களைப் பொருத்துவென்றீர்? தங்கள் வீரவரலாற்றையும் வசனமாகவும் காவியமாகவும் பாடப் போகிறேன்" என்று அவர் முகத்தை நோக்கினேன். ஐயர் 'பக்'கென்று சிரித்துவிட்டு, "சரியாய்ப் போச்சு; நமது ஆதர்சங்கள் முதலில் முடியட்டும்; மற்றதெல்லாம் பின்னால் நடக்கட்டும்; மேலே படியுங்கள்" என்று பேச்சை நழுவ விட்டார். அவரைப்பற்றிய விஷயங்களை அவர் வாயிலிருந்தே அறிய முயன்றேன்; முதலில் தோற்றுப் போனேன். ஆனால் நான் விடவில்லை; தக்க சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கேள்வி போட்டு, அவர் அனுபவங்களைக் கேட்டுக் குறித்து வந்தேன். கம்பன், மில்தன், ஷேக்ஸ்பியர் போன்ற கவிதைகளைப் படிக்கும்போது, வீரர் வரலாற்றைச் சொல்லும்போது, கால விமர்சனம் செய்யும்போது, சேர்ந்து உண்ணும்போது, தனியாக இரவில் உலாவும் போது, எனது பர்ணசாலைக்கு அவர் வரும்போது, 'பால பாரதி' விஷயமாகச் சந்திக்கும்போது, குருகுல நடைமுறைகளை வகுக்கும்போது, காந்தி திலகர் பேச்சு வரும் போது—அசைக்க முடியாத கேள்விகள் போட்டுவிட்டால், அவர் அமைதியாகத் தம் அனுபவங்களைச் சொல்லுவார். அப்போது, அவர் உதட்டில் ஒரு நாணப் புன்னகை குலுங்கும்; கனியுண்ணும் குயில்போலத் தலை இப்படியும் அப்படியும் அசையும்; கைஓங்கி, தடபுடலாகப் பேசமாட்டார்; ஐயர் வெகு நிதானமாகவே வார்த்தையை அளந்து பேசுவார்; அவர் பேசுவதை விரைவாக எழுதி விடலாம். கண்களில் பேச்சுக்கேற்ற உணர்ச்சி காணும்

ஆளைப் பார்க்கா விட்டாலும், ஐயரே பேசுகிருர் என்றறியலாம். ஐயர் சாதாரணமாக அக்கிரகாரங்களில் பிராமணர்கள் பேசுவது போலத்தான் பேசுவார்; நிரம்ப சமுஸ்கிரதம் கலப்பார்; ஆனால், ஓர் ஆங்கிலச் சொல் கூடக் கலக்க மாட்டார். நான் ஆங்கிலச் சொல் கலந்தா லும் உடனே திருத்துவார்; "கம்போஸ் (Compose) செய்ய மாடர் (matter) வேண்டும்" என்று அச்சுக்கூடத்தில் பேசக் கேட்டால், "ஹம்! யாரது? அச்சுக்கோக்க விஷயம் வேண்டும் என்று சொல்லணும்" என்று உரக்கத் திருத்து வார். இவ்வாறு நான் கேட்ட விஷயங்களே இந்நூலில் அடங்கியுள்ளன. தமிழர், ஐயரை என்றும் நினைக்க வேண் டும்; அவர் உள்ளத்தில் பற்றிக் கொழுந்தேறிய வீரக் கனலும், கலையார்வமும் தமிழர் உள்ளத்திற் பற்ற வேண்டும்; பாரதியார் கவிதையைப்போல் ஐயரின் மாசற்ற தியாக வாழ்வைத் தமிழர் என்றும் கொண்டாட வேண்டும்—இந்த நோக்கத்துடனேதான் இந்நூலை எழுதி என்னுள்ளத்தை விட்டு நீங்காத ஐயருக்கே அர்ப்பணிக் கிறேன். இந்நூலை இரண்டு பாகமாகப் பிரித்திருக்கிறேன்; முதற் பாகம், அரசியல் வாழ்வு; இரண்டாம் பாகம், குரு குலத்தில் கலை வாழ்வு. ஐயரின் அரசியல் வாழ்வை அவர் வாயினின்று கேட்டபடி எவ்வளவு எழுதலாமோ, அவ் வளவே எழுதுகிறேன்; கலைவாழ்வை உடனிருந்து பார்த்த படி எழுதுகிறேன்.

ஐயரின் வாழ்வாறு *1909*-ஆம் ஆண்டு வரையில் சம வெளியில் சாதாரணமாகவே சென்றது; பிறகு இலண்ட னில் புயலாகக் கிளம்பியது. புதுவையில் சண்டமாருத மாக அடித்து, மெல்ல மெல்ல மந்தமாருதமாகி, குருகுலத் தில் கலை மலர்களைக் கொஞ்சி விளையாடி, ஓர் அருவியில் மின்னல் போல் மறைந்துவிட்டது. ஐயர் விட்ட இடம் இன்னும் காலியாகவே யிருக்கிறது—அவருக்குச் சமானம் அவரே! ஐயர் வரலாற்றைக் கருத்துடன் கற்ருல், நமது

தமிழர் தலை நிமிர்ந்து நிற்பர்; அவரது தியாகக் கனல் தமிழர் உள்ளத்தில் வீசும். வாருங்கள், இத்தியாகக் கனலின் பிறப்பிடத்திற்குச் செல்வோம்.

4. ஐயர் பிறந்தார்

திருச்சிராப்பள்ளி, சரித்திரப் புகழோங்கிய நகரம்; திருச்சி என்றால் மலைக்கோயில் நமக்கெதிரே வந்து நிற்கிறது; அத்துடன் வரகநேரி ஐயரும் மலைபோலே எதிரே வந்து நிற்கிறார். திருச்சியைச் சேர்ந்த ஓர் அழகான கிராமம் வரகநேரி; அது காவிரிப்பாசனத்தில் பசுந் திருவுடன் கொலு வீற்றிருக்கும் நிம்மதியான கிராமம். இக் கிராமத்தில் வேங்கடேசையர் என்னும் அந்தணர் இருந்தார்; அவர் யோசேப்பு முனிவர் கல்லூரியில் ஆங்கிலம் படித்தவர்; கல்வி இலாகவில் வேலை பார்த்துக் குடும்பத்தைத் தாங்கியவர். அவர் மனைவி, காமாக்ஷி என்னும் குணவதி. இவ் வுத்தம தம்பதிகள் பெற்ற செல்வனே, நம் ஐயர். காமாக்ஷி யம்மாளின் சொந்தவூர் ஈரோடுக் கருகேயுள்ள சின்னாளம் பட்டி என்னும் கிராமம்; அதிலே தான் ஐயர் பிறந்தார்—விக்ரம ௵ பங்குனி மாதம் 22-ஆம் தேதி, கார்த்திகை நக்ஷத்திரம், துலா லக்கினம் (2-4-1881). கார்த்திகை ஆறும் ஏற்றிய விளக்கு என்பர்; ஆதலின் நாமும் ஐயரை வீர விளக்கு என்போம். கார்த்திகை முருகனுக்கு இசைந்தது; ஐயரும் முருகன் போல் வீரர். ஐயரின் இராசிச் சக்கரம் அடியில் வருமாறு:

சூரியன்	குரு, சனி சுக்ரன்	சந்திரன் கேது	
செவ்வாய் புதன்	இராசி		
	ராகு	ல	

ஐயரின் பிள்ளைத் திருநாமம் †வேங்கட சுப்பிரமணியன்.

5. மணிப் பிள்ளை

தந்தை மகனைக் கருத்துடன் வளர்த்தார். ஆரியம் தமிழ் இரண்டும் பயிற்றினார்; இராமாயண பாரதக் கதைகள் சொன்னார்; 'மணி,' தான் கேட்ட பாரதக் கதையைத் தோழருக்குச் சொல்வான்; வில் கட்டி விசயன் இராமன் போல் விளையாடுவான்; குளத்தில் நன்றாக நீந்துவான்: ஊரைச் சுற்றியுள்ள பசு வனங்களிலும், ஆற்றங் கரையிலும் உலாவித் திரிவான்- வீட்டில் எண் எழுத்துக் கற்றதும் தந்தை மகனை மிஷனரி பள்ளிக்கூடத்திற்கனுப்பினார். அவனை ஐரோப்பிய முறையில் பழக்க அவர் விரும்பினார். ஆதலால் மணி லத்தீனை இரண்டாம் பாடமாக எடுத்துக் கொண்டான். மணி படிப்பில் மணிதான்! வகுப்பில் நல்ல கவனம்; நல்ல பெயர்; படிக்கும்போது படிப்பான்; விளையாடும்போது விளையாடுவான்; காலை மாலை கசரத் செய்வான்; கர்லாக் கட்டைப் போடுவான். பள்ளிப் பாடந் தவிர வேறு உயர்ந்த நூல்களையும் கருத்தூன்றிப் படிப்பான். கிரேக்க ரோம வீரர் வரலாறு

---

†வேங்கட சுப்பிரமணியன்: எனக்குப் பெற்றோரிட்டபெயரும் இதுவே ஒரு தீபாவளியன்று எனது தாயாருக்குக் கதர்ப்புடவை அனுப்ப நான் ஐயரிடம் பணம் கொடுத்தேன். "தாயார் பெயரென்ன?" என்று கேட்டார் ஐயர். "காமாக்ஷி" என்றேன். "சரியாய்ப் போச்சு; என் தயார் பெயரும் அதுவே! என் பெயரும் வேங்கட சுப்பிரமணியே!" என்றார். மறுமுறை ஒருவர், "தாங்கள் ஐயர் சகோதரரா?" என்று கேட்டார்; "ஆமாம்" என்றேன். அவர் தங்கள் சகோதரரென என்னைக் குறித்து ஐயரிடம் பேசியபோது நான் வந்தேன். "பாரதி, தங்களை என் சகோதரராக்கி விட்டனர்; நியாயந்தானே" என்று புன்னகைபுரிந்து, அன்று தம் பிறப்பு குலம் இவற்றைக் குறித்துச் சொன்னார்.

களைக் கற்று சிந்திப்பான்; தானும் வீரனாக வாழ விரும்பு வான்; பன்னிரண்டே வயதில் மாகாணத்திலேயே ஐந் தாவது ஸ்தானம் பெற்று மணி மெட்ரிகுலேஷன் தேறி னான். 1894-ல் எப். ஏ. படித்தான். இக் காலத்தில் மணி, ஷெல்லி, பைரன், ஷேக்ஸ்பியர், ஏ நீ து, ஓராசியன் போன்ற உயர்ந்த காவியங்களைப் படித்து இயற்கை வளத் தில் உலாவினான். ஜான் ஸ்டுவர்ட் மீல், ஸ்பென்ஸர், ஹக்ஸ்லி, ஷோர்பன் ஹார், எமர்ஸன் போன்ற ஐரோப்பிய ஞானி களின் நூல்களைக் கற்றுச் சிந்தித்தான். இவை மணிக் குச் சுதந்தர உணர்ச்சி அளித்தன. ஆங்கிலம், இலத்தீன், சரித்திரம், கணிதம் இந்நான்கிலும் மணி, மணிதான். 1896-ஆம் ஆண்டு முதல் தரத்தில் மணி எஃப். ஏ. தேறிக் கைநிரம்பப் பரிசுகள் பெற்றான். இதே சமயம் டாக்டர் ராஜனும் அதே கல்லூரியில் படித்தார் - இருவரும் தோழர்.

6. பாக்ய லக்ஷ்மி

மணிக்குப் பதினைந்து வயதாய்விட்டது; அக்கால வழக்கப் படிக் கண்ணனுக்குக் கலியாணம் பண்ணிப் பார்க்கப் பெற்றோர் விரும்பினர். ஐயருக்குப் பால்ய விவாகம் பிடிக்காது. "வினைத்தெரியுமுன் பெண்களுக்கு விவாகம் செய்வது பிசகு; பால்ய விவாகம் ஹூணர், ஆப்கானியர் வந்த காலத்தில் இடையே புகுந்தது; நம் நாட்டில், வருஷத்திற்கு 25 லக்ஷம் கைக்குழந்தைகள் இறக்கின்றன. —பால்ய விவாகத்தின் கொடூரம் அப்படியிருக்கிறது; அதை அறவே ஒழிக்க வேண்டும்" என்பார் ஐயர்; ஆனால் பெற்றோர் வேண்டுகோளை மறுக்க முடியவில்லை; ஐயர் ஒரே பெண்ணைக் காதலித்தார்—பாக்கிய லக்ஷ்மி! எவ்வளவு அழகான பெயர்! வேங்கட சுப்பிரமணியனுக் கும் பாக்கியலக்ஷ்மி அம்மாளுக்கும், அக்கால வைதீக சம்பிரதாயப்படியே விவாகம் நடைபெற்றது. பாக்கிய லக்ஷ்மி, ஐயருக்கொரு வீரலக்ஷ்மியாக வாய்த்தாள்

திருமணமானதும் ஐயர் பி. ஏ. படித்தார். ஆனால் இச் சமயம் நோய் வந்து படுத்தார்; ஒரு வருஷம் அப்படிச் சென்றது. 1899-ல் ஐயர், சரித்திரம் பொருளாதாரம் இலத்தீன் ஆகிய பாடங்களை எடுத்துக்கொண்டு, பி. ஏ. தேறினார்; இலத்தீனில் முதன்மை பெற்றார்.

7. வக்கீல் ஐயர்

கல்லூரிப் பரீட்சை தேறியாயிற்று; இனி? வாழ்வுப் பரீட்சையில் ஈடேற வேண்டும். அக்காலம் வக்கீல் வேலைக்கே மதிப்பும், வரும்படியுங்கூட அதிகம். தந்தையின் விருப்பமும் அவ்வாறிருந்தது. ஐயர் ~~1891~~ 1901-ஆம் ஆண்டு தமது இருபதாம் வயதில் சட்டம் படித்து, சென்னையில் பரீட்சை கொடுத்துத் தேறி, முதல்தர வக்கீல் (First Grade Pleader) ஆனார். இல்லறப் பொறுப்பும் ஏற்பட்டது. 1902-ஆம் ஆண்டு ஐயர் திருச்சி ஜில்லா கோர்டில் தொழில் நடத்தத் தொடங்கினார். வரும்படி சுமாராயிருந்தது; கட்டி வந்தது. வந்ததைத் தாமும் துய்த்துப் பிறருக்கும் ஐயர் வழங்கினார்—மனம் போலவே கையும் தாராளம்! இக் காலமும், எக்காலமும் ஐயர் இலக்கிய விருந்துண்ணச் சலித்ததில்லை. மிகவுயர்ந்த ஆங்கில லத்தீன் இலக்கியங்களுடன் ஐயர், வள்ளுவர், கம்பன், வால்மீகி, காளிதாஸன் ஆகிய நமது நாட்டு அருட்புலவர் வாக்குகளையும் அள்ளிப் பருகினார். உலக இலக்கியங்களிலேயே அவர் உள்ளத்தைக் கொள்ளைகொண்டவை கம்பன் கவிதை, வள்ளுவர் முப்பால், சாகுந்தலம், ஷேக்ஸ்பியரின் யூலிய கேசரி, மாக்பெத், ஹாம்லெட், ஹோமரின் ஒதேசியன், வர்கீலியன் எழுதிய ஏனீது, எமர்ஸன் கட்டுரைகள்—இவையே.

வீரருள், நெப்போலியன், கரிபால்டி, குரு கோவிந்தன், இராஜராஜ சோழன் ஆகிய நால்வரையும் அவர் உச்சிமேல் வைத்துக் கொண்டாடுவார். " உறக்கம்,

காதல், கானம், சித்திரம், சிற்பம் இவற்றிலுள்ள சுகத்தைக் காட்டிலும் உயர்ந்த இலக்கியங்களில் உள்ள சுகம் பெரியது; அரியது. மற்றச் சுகங்கள் ஓர் அளவுக்கு மிஞ்சினால் தெவிட்டிப்போகும். எப்போதும் அனுபவிக்க முடியாது - ஈசுவரம். நூற்சுவையோ, எப்போதும் அனுப விக்கலாம்; நவில் தோறும் செவ்விய நூல்களின் நயம் வளர்ந்து கொண்டே போகும். நூல்களை அளவுக்கு மிஞ்சிப் படித்துக் கெட்டவரை நாம் கண்டதில்லை’ என்று ஐயர் ஒருதரம் சொன்னார்; எழுதினார். ஐயர் வாழ்வில் எத்தனையோ மாறுதல்கள் உண்டு; ஆனால் நூலாராய்ச்சியில் மட்டும் மாறுதல் கிடையாது; ஓய்வு கிடையாது.

ஐயர் மனம் புதுமை புதுமை என்று துறுதுறுத்தது; நான்காண்டுகள் திருச்சியில் தொழில் நடத்தியாயிற்று. இனி எங்காவது தூரதேசங்களுக்குப் போக அவர் உள்ளம் துடித்தது; அழைப்பும் வந்தது.

8. ‘பால்’ போல் வா?

இரங்கோனில் ஐயர் உறவினரான K. G. பசுபதி ஐயர் பெரிய ஜவுளி வியாபாரம் நடத்தினார். பசுபதி ஐயர் பாக்கியலக்ஷிமி அம்மாளின் பெரியப்பா பிள்ளை; ஐயரின் ஒன்றுவிட்ட மைத்துனர். இவர் தக்க செல்வர்; தாராளமான மனதுடையவர்; ஈகையாளர்; ஐயருக்கும் ஐயர் குடும்பத்திற்கும் இவர் சமய சஞ்சீவிபோல் உதவி யிருக்கிறார். இச் செல்வருக்கு, இரங்கோன், புதுச்சேரி, பெங்களூர் முதலிய இடங்களில் ஜவுளி வியாபாரம் உண்டு. இரங்கோன் தொழிலே பெரிது; ஆதலால் அவரை ‘இரங்கூன் பசுபதி ஐயர்’ என்றே அழைப்பர். ஐயர் மகிழ்வுடன் புறப்பட்டார்; தாயாருக்கு அரைமனதுதான் :—மணி வீட்டோடு வாசலோடு குடும்பத்திற்கு ஆதரவாயிருக்க வேண்டுமென்று அவள்

கினைத்தாள். பிறகு "குலாச்சாரங்களைச் சரியாக அனுஷ்டிக்க வேண்டும்" என்ற கட்டளையுடன் விடைதந்தாள். தகப்பனார், விடை கொடுக்கும் போது, மணியை ஆசீர்வதித்து, ஒரு மணியான வசனம் சொன்னார்: "மணீ! நீ †ஸால் போல் சென்று, *பால் போல் வா" (Go like **Saul** and Come like **Paul**) என்பதே அது. மணிக்கு, தந்தை சொல் மந்திரமானது.

9. இரங்கூனில் ஐயர்

1907-ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம், ஐயர், இரங்கூனில் ஓர் ஆங்கில பாரிஸ்டருடன் சேர்ந்து வக்கீல் தொழில் நடத்தினர். நல்ல வரும்படி வந்தது. மைத்துனர், பசுபதி ஐயர், வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுத்தார். இரங்கூனில் ஐயர் சிறிது உருது பழகினர். அது, பிற்காலம் பேருதவி செய்தது. ஆறு மாதம்

---

†**ஸால்**=ஒரு ஹீப்ரு வாலிபன்; ஓடிப்போன கழுதைகளைத் தேடிச் சென்றான். வழியில் சாமுவேல் முனிவரைக் கண்டு கேட்டான். முனிவர், பையனை ஊடுருவிப் பார்த்து, "தம்பீ, நீ இந்நாட்டு மன்னன்; இது, தெய்வ வாக்கு" என்று ஒரு மகுடத்தைச் சூட்டினர். எப்படிச் சுக்கிரதசை! ஸால், தவீது மன்னரை எருசலத்தினின்றும் துரத்திப் புரட்சி செய்தான். பிறகு தாமால் என்னும் ஊரில் மனந்திருந்தி, ஸால், பழைய வாழ்வை விட்டான்.

***பால்** என்னும் புதுப்பெயர் தாங்கிச் சன்மார்க்கத் தொண்டு செய்தான். அவன் கிறிஸ்து தருமம் பரவ வேண்டிய சட்டதிட்டங்களை வகுத்தான். உரோமாபுரியில் அற்புதமான சமய சேவை செய்து, அதற்கே பலியானன். அவன் கடிதங்கள் பைபிளில் உள்ளன. கிராம்வெல்லை (Cromwell) "இங்கிலாந்தின் ஸால்" (Saul of England) என்பர். ஐயரும் தொழிலுக்காகவே இரங்கோன் சென்று, புரட்சி வீரரானர்; புகழ் முடி சூடிப் புதுவையில் வசித்தார்!

சென்றது. ஒரு வக்கீலினும், பாரிஸ்டர் பட்டதாரிக்கிருந்த மதிப்பை ஐயர் பார்த்தார்; தாமும் பாரிஸ்டராக விரும்பினர். மைத்துனரிடம் சொன்னர். பசுபதி ஐயரும், இலண்டனில் ஓர் உண்டியல் வியாபாரம் நடத்தித் தமது தொழிலைப் பலப்படுத்த விரும்பினர். வியாபாரத்தைக் கவனித்துக் கொண்டே பாரிஸ்டருக்கும் படிக்கச் சொல்லி பசுபதி ஐயர், வ.வே.சு. ஐயருக்கு வேண்டிய பணந்தந்து, கப்பலேற்றிச் சீமைக்கு அனுப்பினர். ஐயருக்கு அப்போது ஒருவயதுள்ள பெண் குழந்தையிருந்தது; பெயர் பட்டு; அக்குழந்தையைக் கொஞ்சி முத்தமிட்டு, மனைவிக்கு ஆறுதல் கூறி, விடைபெற்றுக் கொண்டு ஐயர், இங்கிலாந்திற்குக் கப்பலேறினர்—(28—10—1907). ஐயருக்குப் பிறகு, டாக்டர் T.S.S. ராஜனும் இரங்கோனில் தொழில் நடத்தினர்; அவரும் மேற்படிப்பிற்காக இலண்டன் சென்றார். இனி எல்லாரையும் அங்கே சந்திப்போம்:

10. பாரிஸ்டர் படிப்பு

இலண்டனில் லிங்கன்ஸ் இன் உள்ளது; அது 14-ஆம் நூற்றாண்டில் லிங்கன் என்னும் சீமானல் கட்டப் பெற்றது; ஏழாவது ஹென்றி காலத்தில், அது சட்டமாணவர் படிக்கத் தருமமாகத் தரப்பெற்றது. இதே லிங்கன்ஸ்-இன்னிலே தான் சித்தரஞ்சன தாஸர், மஹாத்மா காந்தி, முதலியோர் படித்தனர்; இதே இடத்திலே தான் நமது ஐயரும் பாரிஸ்டருக்குப் படித்தார். ஐயர் தமது லண்டன் வாழ்வைப்பற்றி எனக்கு ஒரு தரம் விரிவாகச் சொன்னர்; நமது தேசாசாரங்களையும் ஆங்கிலேயர் தேசாசாரங்களையும் பாகுபடுத்தி விளக்கித் தாம் பாரத நாகரிகத்தில் மோகங் கொண்ட காரணத்தை விளக்கினர்:—

"நான் கலியாப்தம் †ரு00அ-ல் கார்த்திகைமீ இலண்டனுக்குப் புறப்பட்டேன்; உடை ஐரோப்பிய மோஸ்தர்; நடை இந்திய ஆசாரப்படிதான்; சட்டை தொப்பி யணிந்த போதும், என் உள்ளத்தில் பாரத தருமமே துடித்தது. நான் காயத்திரியை மறக்க வில்லை; கம்பனை மறக்க வில்லை; கப்பலிலும் சந்தி ஜபம் செய்தேன். ஏடனி லிருந்து என்னுடன் ஒரு கால்ஸா சிஷ்ய வீரரும், ஓர் ஆரிய சமாஜியும் பிரயாணம் செய்தனர். சிஷ்ய வீரர் ஜப்ஜி, சுகமணி முதலிய கிரந்தங்களை உருக்கமாக ஓதினர்; அவர்களிட மிருந்து * கால்ஸா சிஷ்யரின் (ஸீக்) பழக்க வழக்கங்களையும், குருகோவிந்த சிம்ஹன் சரித்திரத்தையும் கேட்டு மகிழ்ந்தேன். ஆரிய சமாஜிகள் வேத மந்திரங் களை ஓதிய போது, என் உள்ளம் பூரித்தது. சிஷ்யரின் வீர வாழ்வும்; வேத வுள்ளமும் இன்று ஹிந்து ஜாதிக்கு வேண்டும். கான்ஸ்தாந்திநோபிளில், இஸ்லாமியர் நட்புக் கிடைத்தது. அவர்கள் அனுஷ்டானங்களையும் கவனித்தேன். அவ்வளவு சிரத்தையுடன் நானும் நித்யகர் மானுஷ்டானங்களைச் செய்ய விரும்பினேன். ஆனால் லண்டனில் என் ஜபம் பலிக்க வில்லை. சங்கேதத்தை ஒட்டி, பாரிஸ்டர் வகுப்பிற் குரிய விருந்துகளிலும் கலந்து கொண்டேன். கூடியமட்டும் நமது தருமத்தை அனுஷ் டித்து வந்தேன். படிப்புடன் பசுபதி ஐயர் என்னிடம் தந்த பணத்தைக் கொண்டு, உண்டியல் வியாபாரம் நடத்தி னேன்; கட்டி வரவில்லை. காலையில் அதைப் பற்றிய கடி தப்போக்கு வரத்து செய்து, பிறகு நான் வகுப்புக்குச் சென்று வந்தேன்.

---

†ஐயர், ஆங்கில வருஷம் மாதம் தேதி சொல்ல மாட்டார். தமிழிலே தான் கலியாப்தம் போட்டுச் சொல்வார், எழுது வார்; ஐயரிடம் கேட்டதை அவர் நடையிலேயே சொல்லு கிறேன்.

*கால்ஸா என்பது குரு கோவிந்தன் நாட்டிய சீக்கிய மதப் பிரிவு. "சீக் " என்றால் 'சிஷ்யன்' என்பதாம். ஐயர். "சிஷ்யக் கூட்டம், சிஷ்ய தருமம்" என்றே சொல்லு வார்.

"சட்டப்படிப்பு சுலபமாகவே இருந்தது; லத்தீன் பாஷா ஞானம் எனக்கு உதவியாயிருந்தது; ரோமன் லா எளிதாயிருந்தது; இலண்டனிலும் எனக்குப் பிரியமான கம்பனையும் வள்ளுவனையும் நான் மறக்கவில்லை. கிரீக்கு, லத்தீன், ஆங்கில மேதாவிகள் எழுதிய திவ்யக்கிரந்தங்களையும் நான் சிரத்தையாகப் படித்தேன்; இலக்கியச் சுவையில்லாத நாள் எனக்கு வெற்று நாளாகத் தோன்றும்.

✓ "எனக்கு ஐரோப்பியரின் கலைவாழ்வு பிடித்திருக்கிறது; ஐரோப்பிய இலக்கியங்களில் எனக்கு மோகமுண்டு; ஆனல் ஐரோப்பிய சமுதாய வாழ்க்கை பிடிக்கவில்லை. அங்கே இல்லற வாழ்வில் ஆயிரம் அலங்கோலங்கள் உண்டு; ஸ்நானபானம் ஆசார அனுஷ்டானங்கள், தார்மீக விஷயங்களில் நமது பாரத சமுதாய நாகரிகமே சர்வோத்தமமானது. மேற்கே பணமே குறி; வியாபாரமே நோக்கம். நமது கிருஹஸ்த தர்மத்திலுள்ள பரஸ்பர ப்ரேமையும் பதிவ்ரதா தர்மமும், அங்கில்லை; நமது சதாசாரமே சிரேஷ்டமானது. அங்கே தானே முதல்; பிறகே பிறர்; சுதேசமே பிரதானம்; விதேசம் நமக்கு அடிமையாயிருக்க வேண்டும் என்ற அகம்பாவம் அதிகம். அதுபோகபூமி. நமது தேசம் தியாகபூமி.

"† ஆபராக்களில் (Operas) எனக்கு பிரிய மதிகம்; நடனக் கச்சேரிகளுக்கும் சென்றேன்: நானும், சங்கீத

---

† குருகுலத்தில் நான் சக்திப் பாடல்கள் பாடி நடனமாடுவதுண்டு ஐயரும் என்கூட அழகாக நடனமாடினார்:

"மங்கல ரமணீ கல்யாணீ—மாம்
பாகி பராசக்தி ஸ்ரீ வாணி"—

என்ற அடிகளைப் பாடும்போது, அவர் முழந்தாள் பணிந்து பாவனரசம் ததும்ப நடித்தது இன்னும் என் கண்முன் உள்ளது. "ஐயரே, இவ்வளவு அழகாக நடனமாட எங்கே கற்றீர்" என்றேன். அதற்கு மேற்கண்டவாறு பதிற் சொன்னார்.

மும் நாட்டியமும் பழக விரும்பினேன். நான் இருந்த வீட்டருகே, ஒரு வித்துவான் இருந்தார்; கலா நிபுணர். அவரிடம் சங்கீதம் தொடங்கினேன்; சரிப்படவில்லை. பிறகு நாட்டியங் கற்றேன்; நாட்டிய நூல்களைப் படித்தேன்—எல்லாம் மூன்றே மாதம்! பிறகு பெரிய காரியங்களில் கவனம் திரும்பியது."

ஆகார விஷயமாக ஐயரைக் கேட்டேன். ஒரு நாள் இவ்வாறு சொன்னார்: "காலதேச வர்த்தமானங்களை யொட்டித்தான் மனுஷ்யன் நடக்கவேண்டி யிருக்கிறது. நான் முதலில் ஓர் ஓட்டலில் சாப்பிட்டேன்; பிறகு ஒரு வீட்டில் பணந்தந்து சாப்பிட்டேன்; எனக்கு ஐரோப்பியச் சாப்பாடு பிடிக்கவே யில்லை. நமது சுதேச முறைப்படி உணவை ஏற்பாடு செய்து கொள்ள விரும்பினேன். அப்போது இங்கிலாந்தில் பல இந்தியர் இருந்தனர்—சுமார் ௫௦௦ பேர். இலண்டனில் மட்டும் ௪௦௦ மாணவர் இருந்தனர். சிலர் என்னுடன் படித்தனர். அவர்கள் உணவு ஏற்பாட்டை விசாரித்தேன். முடிவில் இந்திய மாணவர் ஒரு வீட்டில் சேர்ந்து சமைத்து சாப்பிட்டுக் கொண்டு வசிப்பதாக அறிந்து அங்கே சென்றேன். அதுதான் இந்தியாவீடு. அங்கே வாசலில் வேலையாள்மூலம் சீட்டனுப்பினேன். கதவு திறந்தது. சில இளைஞர் வந்தனர். அவருள் மின்னல் போன்று மெலிந்த இளைஞர் ஒருவர்..கண்டதுமே அவர் வசப்பட்டேன். அவரே தீரன் ஸாவர்க்கார். அவன் என்னைப்பற்றி விசாரித்தார். நான் இரங்கூனில் வக்கீலா யிருந்து லண்டனுக்கு பாரிஸ்டர் பட்டம் பெற வந்திருப்பதாகவும், சங்கீதமும் நடனமும் கற்றுக் கொள்ளப் போவதாகவும் சொன்னேன். "இந்த அற்ப விஷயங்களிலெல்லாம் காலத்தை வீணாக்கலாமா? வாலிப சக்தியை மகத்தான காரியத்தில் நாங்கள் செலவிடுகிறோம்," என்றார் ஸாவர்க்கார். முதலில் அவர் சொல் எனக்குப் படவில்லை. அடிக்கடி வந்து அவருடன் பழகினேன்

பழகப் பழக அவர் நட்பு இனிமையாயிருந்தது. அவர் வீரம் என்னையும் பற்றிக் கொண்டது. நானும் இந்திய வீட்டில் புகுந்து அவருடன் ஐக்கியமானேன்."

✓11. இந்திய வீடு

இந்திய வீடு சியாமாஜி கிருஷ்ண வர்மாவால் எழுந்தது; அதில் சுமார் இருபதுபேர் வசிக்கலாம். என்றாலும், எழெட்டுப்பேருக்குமேல் தங்கியதில்லை. ஏன்? அது புரட்சிவீரர் நிலயம்; போலீஸ் கண்காணிப்பில் இருந்தது.

சியாமாஜி கிருஷ்ணவர்மாவே இந்தியாவில் முதல் புரட்சிவீரர். அவர் 1857-ல் கட்சில் மாண்ட்வி என்ற ஊரில் பிறந்தார். இளமையில் பெற்றோரையிழந்து, பாம்பாயில் பாட்டியிடம் வளர்ந்தார். வடமொழியில் புலமைபெற்றார். வில்ஸன் கல்லூரியிலும், எலிபின்ஸ்டன் கல்லூரியிலும் கற்று, ஆங்கிலத்திலும் தேர்ச்சிபெற்றார். தயானந்தரின் நேர்சீடராகி, ஆரிய சமாஜத் தொண்டுசெய்தார், உருவணக்க எதிர்ப்பு, சிசுமண எதிர்ப்பு, மாதர் மறுமணம் ஆகிய சமுதாயப்பிரசாரம் செய்தார். சீமைக்குச் சென்று ஆக்ஸ்போர்ட்டில் படித்து, ஐரோப்பிய இலக்கியங்களில் புலமைபெற்றதுடன், பாரிஸ்டர் பட்டமும் பெற்றார். அவர் பம்பாயில் தொழில் நடத்தி, ஏராளமாகச் சம்பாதித்தார். ஆஜ்மீர் திவானுயிருந்தார். பிறகு இங்கிலாந்தில் இலைத்துத் தொழில்நடத்தி ஏராளமாகச் சம்பாதித்தார். அவர் பிரெஞ்சு தேசீய கீதத்தை வடமொழியில் பாடினார். பிரான்ஸைப் போல் தமது நாடும் வீர சுதந்தரம் பெற வேண்டுமென்ற விருப்பம் அவரைப் பலமாகப் பிடித்துக் கொண்டது. அதற்கு வழி கரிபால்டியும் மஃஜினியும் செய்ததே யென்று கருதினார். இலண்டனில் இந்திய சுதந்தரச் சங்கம் நாட்டினார். இந்திய வீடெழுப்பினார். சமுதாயன் (ஸோஷியலாஜிஸ்டு) என்ற ஒரு பத்திரிகை நடத்தித் தீவிரமான தேசபக்திக்கனலைத் தூண்டினார். அவர்

காரியங்களுக்குப் பலமான கண்காணிப்புகள் ஏற்பட்டன. அதனுல் பத்திரிகை சீமையிலிருந்து நடக்கவில்லை. உடனேதமது இயக்கத்தைப் பாரிஸில் வைத்துப் பலமாக நடத்தினர்.

அவருக்கு வலக்கைபோன் றுதவினுள் ஸ்ரீமதி பீகாஜிகாமா என்னும் பாரீஸீச் செல்வி. அவள் பம்பாயில் ஒரு பெரிய வர்த்தகர் மனைவி. இந்தியச் சுதந்திரத்திற்கே வாழ்வைத் தியாகம் செய்த வீராங்கனை. அவளே இந்தியாவிற்கென்று மூவர்ணக்கொடி செய்து அதைக் கூட்டங்களுக்கெல்லாம் கொண்டு சென்று சண்டமாருதமாகச் சுதந்தரகர்ஜனை செய்தாள். "அவளைக் கொடியம்மை" என்றழைத்தனர்! இந்திய வீட்டு வாலிபருக்கு அவள் பெற்றதாய் போல் உதவினுள். சாமாவும்—காமாவும் இரண்டு வாலிபர்களை உயிர்போல நேசித்தனர்—சாவர்க்கார், ஐயர். இந்த வாலிபர்கள் நிர்வாகத்திலேயே அவர் இந்திய வீட்டை விட்டுப் பாரிஸில் தங்கிப் பணிவிடை செய்தார். வீரவாலிபர் முயற்சிக்கெல்லாம் காமாவும்—சாமாவும் தாராளமாக எல்லா உதவியும், எக்காலமும் செய்தார்கள். சாமாஜி கல்விநிலயங்களுக்கு, ஏராளமான பொருள் தந்தார். அவர் பெயர் பிரான்ஸில் புகழ் பெற்றது. காமா சமீபத்திலே தான் காலஞ்சென்றுள். 1930-ஆம் ஆண்டிலே தான் சாமாஜி காலஞ்சென்றுர். இறுதி மட்டும் அவர்கள் வீர சுதந்தர உணர்ச்சியே கொண்டிருந்தார்கள்.

12. வீர வாலிபர்

அக்காலம் இந்தியா வெங்கும் ஒரு நூலின் பெயர் பிரசித்தமாயிருந்தது. அதுவே, சாவர்க்கார் மராத்தியில் எழுதி, ஐயருடன் சேர்ந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த † "இந்திய சுதந்திரப்போர்" (Indian War of

† அரசாங்கத்தடை நீங்கி, இந்நூல் இப்போது புத்தகமாக வெளியிடப் பெற்றுள்ளது.

Independence) என்னும் விறுவிறுப்பான சரித்திர நூல். இந்த நூற்றுண்டின் உணர்ச்சி ததும்பும் புரட்சி நூல் அது தான். அதன் ஒவ்வொரு வரியும் 'வீரம் வீரம் என்று துள்ளி நமது நெஞ்சில் துடிக்கும். அதை வைத்திருப்பதே ஆபத்து, போலீஸ் பயம். இருந்தாலும் அது எப்படியோ புதுச்சேரி, திருநெல்வேலி, இராமநாதபுரம், திருச்சி, தஞ்சை, சென்னை எங்கும் பரவி, இரகசியமாக உலாவிக் கொண்டிருந்தது. நான் ஒரு நண்பரிடம் அதை மறை வாக வாங்கிப் படித்து தேசவெறி கொண்டேன். ஐயர் அந்தப் புத்தகத்தில் இரண்டுபிரதி வைத்திருந்தார். ஒன்று சிவப்பட்டைபோட்டு இரகசியமாக அவர் பெட்டியில் இருந்தது. அதை வெளியே காட்டமாட்டார். மற் றென்று கறுப்பட்டைபோட்டு மறைவாகவே வைத்திருந் தார். நான் பாரத சக்தியில் ஒரு படலம் எழுத வேண்டி அதைக் கேட்டேன். ஐயர் விரைவில் தனியாக என் அறைக்கு வந்து, "இந்தாருங்கள்! இதை இரவிலேதான் படிக்க வேண்டும். இங்கே வைத்துவிட்டு வெளியே செல்லக்கூடாது...கவனம்...ஒரு வாரத்தில் படித்துக் குறிப்பெடுத்துக்கொண்டு, விஷயத்தைச் சித்தர் மெட்டில் பாட்டாகப் பாடிவிடுங்கள்" என்று பணித்தார். நான் அவ்வாறே செய்தேன். அச்சமயமே ஐயர், "இந்திய வீட்டில் நானுசாகெபு தினக்கொண்டாட்டம் நடந்தது" என்று தொடங்கிப் பல விஷயங்களைச் சொன்னார். அத்துடன் ஒரு படமும் காட்டினார். அப்படம் அதே நாளில் எடுத்தது. அதில் இந்திய வீட்டு வாலிபர் உருவங் கள் இருந்தன. ஐயர் விளக்கினார் :

அவருள் டாக்டர் ராஜன் 'Doctor of Medicine' பட்டம் பெற அங்கே வந்திருந்தவர். எம். பி. திருமலாசாரியார் இருபது வயது வாலிபர் ; புதுச்சேரி 'இந்தியா' பத்திரிகை யில் ஐயர் கட்டுரைகளைப் படித்து உணர்ச்சி கொண்டு லண்டனுக்கு வந்து, இந்திய விடுதியில் சமையல் வேலையும்

சாமான் வாங்கி வரும் வேலையும் பார்த்துத் தொண்டு செய்தவர். இவர் பிற்காலம் எனக்குச் சில கடிதங்கள் எழுதினர். இருவரும் ஐயருக்கு அரிய துணை செய்தனர். இம்மூன்று தமிழர்களைத் தவிர, மற்ற வடநாட்டார், விபினசந்திரபால் மகன் நிரஞ்சன்பால், ஜபல்பூர் பாரிஸ்டர் ஜி.டி. சர்மா, நாபாசமஸ்தான பாரிஸ்டர் ஸ்ரீ கான், கேரளமணி கோவிந்த மேனன், வங்க அறிஞர் மித்ரா, தில்லிவீரர் ஹரிநாமஸிங், செல்வர் ஸையத் ராஜா முதலியோர். இவர்களுக்கெல்லாம் நடுநாயகமாய் இருந்தவர், வீர-ஸாவர்க்கார். அவர் இந்திய சுதந்தர சங்கத்தின் மூளை; ஐயர் உறம்பெற்ற நெஞ்சம்.

ஸாவர்க்கார், சமர்த்தகுரு ராமதாஸர் தவம்புரிந்த நாஸிக்கில் தோன்றி, அவர் உபதேசங்களையே போற்றும் சிவாஜி உபாசகர்; அந்தண மராடியர்; இந்து தருமசீலர்; தியாக வீரர், தேசபக்திச்சுடர், ஆங்கில - மராட்டியப் புலவர், கவி; ஆவேசமான பேச்சாளர், எழுத்தாளர், சரித்திரக் கலைவாணர், திலகர்நாட்டிய ஃபெர்கூஸன் கல்லூரியில் படித்து பி. ஏ. பட்டம் பெற்ற கல்விமான். சியாமாஜி கிருஷ்ணவர்மா ஆதரவில் லண்டன் வந்து பாரிஸ்டருக்குப் படித்தவர். அவர் தமயன் கணேசர் ஆள்தூக்கிச் சட்டத்தால் அந்தமான் சென்றார். தம்பி வெடிக்காய் வியாபாரத்தில் சிக்கிச் சிறையுண்டார். சாவர்க்கார் சகோதரர், இந்தியாவின் தியாக மணிகள். "ஆருயிர் தந்தும் அறம்போற்ற, ஆண்மையுடன் அறப்போர் செய்து ஹிந்து ராஜ்யத்தை நாட்டு" என்ற இராமதாஸ் முனிவர் வாக்கே அவர்களுக்குச் சுருதிவாக்கியம். இராமன் விஜயன், குருகோவிந்தன், ராணாபிரதாப சிங்கன், சிவாஜி, பாஜி, பலாஜி, மாதவராவ், நானாசாஹேபு முதலிய வீரர்களை அவர்கள் ஆவேச தேவதைகளாகக் கொண்டாடினார்கள். மஃஜினி கரிபால்டி போன்ற ஐரோப்பிய வீரர்களையும் போற்றினார்கள். மித்திரமேளா அபிநவபாரதி

முதலிய சங்கங்கள் நாட்டி, தேசாபிமானத்தைத் தீவிர மாக எழுப்பினர்கள். இலண்டன் இந்தியவீட்டிலும் சாவர்க்கார் அதிதீவிரமாகவே தமது தேசசேவையை நேச ருடன் நிறைவேற்றிவந்தார்.

ஐயரும் சாவர்க்காரும் சீமையிலிருந்து இந்திய வாலி பர்களுக்கு நாட்டன்பு புகட்டினர். ஐயர் தேசீயப்பாதிரி யானுர். அவருக்கு தேசத்தைப்பற்றிப் பேசாநாளெல்லாம் பிறவாநாளே. இலண்டனில் வாலிபர்களைக்கண்டு ஐயர், "நாம் இந்தியர்கள், நமது இரத்தம் இந்தியரத்தம். நமது தேசம் அடிமையாயிருக்கிறது. அஃது இங்கிலாந்து பிரான்சு தேசங்களைப் போல் விடுதலைபெறவேண்டும்.. அதற்கு நாம் மஃஜினி கரிபால்டிபோல் உழைக்க வேண்டும்...எழுந்திருங்கள்" என்று உபதேசிப்பார்; எதிர்த்தால் வாதாடுவார். அவர் உபதேசத்தில் தேசபக்தி கொண்ட வாலிபர் பலர். அத்துடன் ஐயர் இலண்ட னுக்கு வந்த இந்தியத் தலைவர்களையெல்லாம் கண்டு, தம் கொள்கையைப்பற்றிப் பேசினுர்; வாதாடினுர். அவருள் ராமேசசந்திர தத்தர், காந்தி, லாலாஜி, பி. ஸி. பால், கோகலே முதலியோர் முதன்மையானவர்கள் .(இவர்களை ஐயர் சந்தித்த விபரம் தனியாக வரும்.)

இந்தியவீட்டு வாலிபர் வாரக்கூட்டம் நடத்தினர். அதற்குச் சுமார் முப்பது நாற்பது வாலிபர் வந்தனர். சாப்பாட்டிற்குப் பிறகு பொதுக்கூட்டம் நடந்தது. அக் கூட்டத்தில் தேசசுதந்தர விஷயங்களே பேசினர். சாவர்க்காரின் வீரப்புயலும், ஐயரின் உணர்ச்சி வேகமும் வீசியடிக்கும். அந்த வீட்டில் நுழைந்த எவரும் தேசா வேசங் கொள்வார். வாலிபர்கள் இந்திய வீரர், பிறந்த நாட்களைத் திருவிழாவாகக் கொண்டாடுவதுண்டு. சிவாஜி, குருகோவிந்தன், நாளுசஹேபு தினங்கள் அமளியாக நடக்கும். அக்காலம் பலாத்காரப் பேச்சுக்களும், விடுதலை

விரதங்களும் நிகழும். ஒற்றரும் மெல்லப் புகுந்து கவனித்துச் செல்வார்.

வீரவாலிபர், மோட்டார் ஓட்டுதல், வாள்வீசுதல், குஸ்தி, துப்பாக்கி சுடுதல் முதலிய வேலைகளும், இராணுவ சாத்திரமும் பயின்றனர். ஐயர் போர்க்கலையில் தேர்ச்சி பெற்றார். இங்கிலாந்தில் கற்றதைப் பாரிஸில் நிறைவாக்கினார். அவர் ஒரு பெரிய சேனையை கரிபால்டிபோல் நடத்தும் திறமை யுடையவர்.

இந்திய விடுதி வாலிபர், உணவை இந்திய முறையில் சமைத்துண்டனர்; சிக்கனமாக வாழ்ந்தனர். வாரம் 24 ஷில்லிங் செலவு. அடிக்கடி உபவாசம் இருந்தும், தேவைகளைச் சுருக்கியும் சுதந்தர இயக்கத்திற்குச் சாமான்கள் வாங்கப் பணம் மிச்சம் பிடித்தனர். ஐயர் மட்டும் மூன்றுண்டுகளில் 600 வேளைகள் பட்டினியிருந்தார். இவ்வாலிபர் அந்தப் போக பூமியில் நடக்கும் எந்தக் காட்சிகளிலும் விருப்பம் வைக்கவில்லை. ஆட்டம்பாட்டங்களுக்குச் செல்வதில்லை; இரவில் வெளியே தங்குவதில்லை. கடுமையுான பிரமசரிய விரதம் அனுஷ்டித்தனர். உடல், உள்ளம், அறிவு, வீரம் இவற்றை இவர்கள் நாட்டுப் பணிக்காகவே வளர்த்து, அதற்கே தம்மைத் தியாக பலியாகத் தந்தனர்.

தினம் ஏதாவது தேசப்பணி செய்வது இவர்கள் விரதம். சாவர்க்கார் 'இந்திய சுதந்தரப் போர்' என்ற நூல் எழுதினார். ஐயர் கரிபார்டி சரித்திரமும், லண்டன் கடிதங்களும் எழுதி, புதுவை இந்தியாப் பத்திரிகையில் வெளியிட பாரதியாருக்கு அனுப்பி வந்தார். இந்திய சுதந்தரப் போரையும் ஐயர் சில பகுதிகள் மொழி பெயர்த்து, இந்தியாவுக்கனுப்பினார். அந்நூல் 2000-ம் பிரதிகள் அச்சானது. அதற்குத் தடையுத்தரவிருந்தும் இந்த வாலிபர்கள் எப்படியோ அந்நூலை இங்கிலாந்து, பாரிஸ், இந்தியா நாடு

களுக்கு அனுப்பி விட்டனர். அது சூருவளிபோல மாந்தர் உள்ளத்தில் சுதந்தர ஜ்வாலையைத் தூண்டிவிட்டது. இந்தியா வீட்டுச் சமையற்காரன் மூலம் உணவுப் பெட்டியில் புத்தகங்களும் சாமான்களும் பம்பாய் வந்து பரவின என்பர். டாக்டர் ராஜன், இராணி லக்ஷ்மீபாய் வரலாறு எழுதினர்.

இவ்வாலிபர் அடிக்கடி பாரிஸ் சென்று, சியாமாஜி, காமாஜி இருவர் உபசரிப்பிலும் இருந்து வருவர். வீரப் பயிற்சியுடன் இந்தியாவில் நடக்கும் சம்பவங்களைப்பற்றி இவர்கள் இரவில் பேசுவதுண்டு. இந்திய வீட்டுச் சம்பவங்கள் பல. இங்கே சிலவற்றையே முறைப்படுத்திச் சொல்லுகிறேன். இவையெல்லாம் ஐயர் சொன்னவையே. இவற்றைக் குறித்து இலண்டன் கடிதங்களில் ஐயர் எழுதினர்.

13. மிதவாதியின் பதில்

ஐயர் லண்டனுக்கு வந்த தலைவர்களை யெல்லாம் பார்த்துத் தமது கொள்கையை உபதேசித்துத் தீர்த்தார். அவர் பார்த்த முதல் பெரியார், சரித்திராசிரியரான ராமேச்சந்திர தத்தர். தத்தர் ஐயரின் தேசாவேசத்தைப் போற்றினர். ஐயருக்கும் அவரிடம் நல்ல மதிப்பு. பிறகு விபினசந்திர பாலர், லாலாஜி முதலியோரை ஐயர் சந்தித்தார். அவர்கள் ஐயரின் தேசபக்தியை மெச்சினர்.

1908-ல், கோபாலகிருஷ்ண கோகலே, லண்டன் பார்லிமெண்டு தாராளக் கட்சிமுன் இந்திய நிலையைப்பற்றிப் பேசவந்து, வெஸ்ட்மினிஸ்டர் மாளிகையைச் சேர்ந்த நாஷனல் லிபரல் கிளப்பில் அசல் வெள்ளைக்காரர்மோஸ்தரில் தங்கியிருந்தார். அச்சமயம் இந்தியவீட்டில் 1857-ஆம் ஆண்டு நடந்த சுதந்தரப்போரின் ஐம்பதாம் ஆண்டுவிழா அமோகமாக நடந்தது. நாவிற்கும் செவிக்கும் வீரவிருந்துகள் நடந்தன. ஐயர் கோகலேக்கும் அழைப்பனுப்பினர்:

அவர் வரவில்லை; விழா முடிந்ததும் தகவல் கொடுத்து விட்டு, உண்டியல் பெட்டியைத் தூக்கிக்கொண்டு சாவர்க்கார் ராஜம் இருவருடனும் கோகலே இறங்கியிருந்த மாளிகைக்குள் நுழைந்து சீட்டனுப்பினர். கோகலே அசல் ஐரோப்பிய உடையுடன் "ஹலோ, சுமான்" என்று வரவேற்றார். புரட்சித் திரிமூர்த்திகளைக் கண்டதுமே அவர் முகம் புன்னகை யிழந்தது. எல்லாரும் நாற்காலியில் அமர்ந்தனர். ஐயர் அவர் கண் படும்படியாக உண்டியல் பெட்டியை மேஜை மேல் வைத்தார். அதன்மேல் "1857-ஆம் ஆண்டில் நாட்டிற்காகத் தியாக பலியான வீரருக்கு" என்றெழுதி யிருந்தது. மிதவாதியின் கண்கள் சோர்ந்தன.

கோகலே:—இதென்ன? எங்கு வந்தீர்கள்?

ஐயர்:— நாங்கள் 1857-ஆம் ஆண்டில் நாட்டுக்காக உயிர் துறந்த தியாகிகள் பேரில் நிதி வசூலிக்கிறோம். தாங்கள் இயன்ற உதவி செய்ய வேண்டும்....

கோகலே:—நான் ஏழை. இந்தக் காரியத்திற்கு ஒரு பைசாக் கூட என்னால் போட முடியாது....

ஐயர்:— தாங்கள் எங்கள் கொள்கையை நன்றாகக் கேட்க வேண்டும். நமது தேசம்....

கோகலே:—"உஸ்" மேலே வாருங்கள் தனித்துப் பேசலாம்.

மூவரும் கோகலேயுடன் இரண்டாம் மாடி அறைக்குச் சென்றனர். ஐயர் "தாங்கள் எதற்காக இங்கே வந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார். கோகலே "இந்தியாவைப் பற்றித் தாம் லிபரல் கட்சி முன் பேசப் போவதைச் சொன்னார். ஐயர் "இதனால் ஒரு மண்ணும் பயனில்லை. நமது சுதந்தரம் நமது கையில் உள்ளது. நமது பலத்தினாலேதான் அதைப் பெற வேண்டும்...." என்று தொடங்கினர். கோகலே முகம் சிவந்தது. "நிறுத்

தும்; நான் சரித்திராசிரியனு யிருந்திருக்கிறேன். உங்களைவிட எனக்கு விஷயம் நன்ருகத் தெரியும். உங்களுடன் வாதாடப் பிரியமில்லை" என்ருர். ஐயர் தம் கொள்கையைப் பிடிவாதமாகச் சொல்லத் தொடங்கவே கோகலே "பாருங்கள் மூன்ருண்டுகளில்; அப்போது இருவர் நிலையில், 'எது நல்லது; காலத்திற் கேற்றது' என்று தெரியும். நமக்கு ஒற்றுமை யில்லை; ஆயுதபல மில்லை. பல்லாண்டுகளாக அடிமைப் பட்டுக் கிடக்கிருேம். மெல்ல மெல்லத்தான் செல்ல வேண்டும். சர்க்காரையும் அனுசரித்தே போகவேண்டும்... பலாத்காரம் பலிக்காது...." என்று முடிவாகச் சொல்லித் தீர்த்தார்.

மூவரும் "சரி பார்ப்போம்" என்று எழுந்து சென்றனர். ஐயர் "இந்த மிதவாதிகள், நாட்டு விடுதலையில் தலையிடக் கூடாது" என்பார்.

14. மகானுபாவனைக் கண்டேன்!

தீபாவளி வந்தது. வீரவாலிபர் லண்டனிலுள்ள இந்தியர்களையெல்லாம் ஓரிடம்கூட்டிப் பண்டிகை கொண்டாட ஏற்பாடு செய்தனர். சீமையிலிருக்கும் செல்வ மாணவர் ஐரோப்பிய நாகரிகத்தில் மோகங் கொண்டு, இந்தியாவை மறவாமல் நினைப்பூட்டவும், இந்திய விடுதலைக்கு ஒரு தாகத்தைக் கிளப்பவுமே, அந்நாள் கொண்டாடப் பெற்றது. விருந்து, பேச்சு-இரண்டும் நிகழ்ச்சிகள். திருநாளுக்குத் தலைமை வகிக்க ஒரு பெரியாரைப் பார்த்தனர். "இந்தியவீடா ? எனக்குச் சௌகரியமில்லை" என்றே எல்லாரும் கட்டிக் கழித்தனர்.

அச்சமயமே மகாத்மா காந்தியடிகள் தென்னுப்பிரிக்கா சத்தியாக்கிரகம் நடத்தினுர். ஏழை இந்தியர் துயரத்தை பார்லிமெண்டில் எடுத்துரைக்க அவர் லண்டனுக்குவந்திருந்தார். ஐயர் உடனே சென்று அவரை கண்டார். கோகலே போலப் பெரிய மோஸ்தரில் பெரிய

மாளிகைகளில் காந்திஜி இறங்கவில்லை. ஐயர் பெரிய ஓட்டல்களிலெல்லாம் புகுந்து பார்த்து, முடிவில் வண்டி கூட நுழைய முடியாத சிறு சந்தில் இருந்த ஓர் இந்திய ஓட்டல்காரர் வீட்டில் காந்திஜியைக் கண்டார்.... பிறகு அவர் சொன்னதையே குறிக்கிறேன் :

" காந்திஜியைப் பார்த்ததுமே பரம சாத்வீகர் என்றறிந்தேன்! அவர் பாரிஸ்டர் அந்தஸ்திற் கேற்றபடியே ஐரோப்பிய உடுப்பணிந்திருந்தார். என்றாலும், அவர் முகத்தில் பாரத தர்மஜோதி விளங்கியது. என்னைப் புன்னகையுடன் அவர் வரவேற்றார். பழைய நாற்காலிகளில் இருவரும் அமர்ந்து பேசினோம். அவர் தமது தென்னாப்ரிக்கா சத்தியாக்கிரகத்தைப் பற்றியும், சாத்வீக எதிர்ப்பைக் குறித்தும் இனிமையாக, தெளிவாக, படாடோப மில்லாமல் நிதானமாகவே பேசினார். நான் " இந்த வழியில் நமது இந்தியா விடுதலை பெறாதே... நாம் சிவாஜி, கரிபால்டிபோல் தீவிரமான சேனாபலமும் ஆயுத பலமும் பெற்றாலே, இவ்வளவு பெரிய பீரங்கிப் படைகொண்ட அரசாங்கத்தை இணக்கி விடுதலை பெறலாம்" என்றேன். அவர் நான் சொன்னதையெல்லாம் நிதானமாகக் கேட்டுப் புன்னகைபுரிந்து, " உலகில் சத்தியமே பெரியது; சத்தியமே கடவுள். கடவுளுக்கு மிஞ்சியது ஒன்றுமில்லை. சத்தியமே ஜயம். அதில் சந்தேகமில்லை. அரிச்சந்திரன் எவ்வளவு வருந்தினாலும், முடிவில் அவன் உண்மையே வென்றது. நமதுபக்கம் சத்தியமும் தருமமும் இருந்தால், கத்திதீட்டாமலே சாந்தமான வைராக்யமான அஹிம்ஸாதருமத்தால் வெற்றிபெறலாம். அஹிம்ஸையும் சத்தியமும் ஒன்றுதான்" என்றார். அவர் கொள்கை அப்போது எனக்கு ஏறவில்லை யென்றாலும், அவரிடம் எனக்கொரு பக்தி விசுவாசம் உண்டானது... மறுநாள் நான் சாவர்க்காரையும் அழைத்துச் சென்று வாதாடினேன். எங்கள் கேள்விக்கெல்லாம் அவர்

பொறுமைப் புன்னகையுடன் தகுந்த விடையளித்தார். அவர் அப்போது எங்களுக்குச் சொன்ன உபதேசங்களே ஹிந்து ஸ்வராஜ்யம் என்ற நூலில் அடங்கியுள்ளன. எங்கள் தீபாவளிக் கூட்டத்திற்குத் தலைமைவகிக்க, மோகனதாஸ் காந்தியையே வேண்டினோம். அவர் ஒருவரே தைரிய மாக எங்கள் இந்திய வீட்டிற்கு வரச் சம்மதித்தார். கூட்டத்தின் நோக்கத்தைக் கேட்டார். "இந்திய வாலி பருக்கு இந்திய உணர்ச்சி தருவதே நோக்கம்" என்றோம். "அது மிக நல்லது. ஆனால் நாம் இந்தியர்; இந்திய வுணர்ச்சியுடன் கூடுகிறோம். ஆதலால் அன்று விருந்தும் முற்றிலும் இந்திய முறைப்படியே, சாத்வீகமா யிருக்க வேண்டும்; அதையும் நீங்களே தயாரிக்க வேண்டும்." என்றார்! "ஆஹா" என்று மகிழ்ச்சி கூறி வந்தோம்.

* * * *

"அடுத்த சனிக்கிழமை மாலை ஏழுமணிக்கு விருந்து. நாங்கள் அங்குமிங்கும் அலைந்தோடி எப்படியோ இந்தியச் சரக்குகள் வாங்கிச் சமையல் செய்தோம். நான் கூட்டத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தேன்; டாக்டர் ராஜனும் திருமலாசாரியும் இன்னும் நாலைந்து பேரும் பாக சாலைக்காரியம் பார்த்த னர். அப்போதுமணி ஆறு. நான் சமையல் எப்படியிருக் கிறதென்று பார்க்கப் போனேன். அங்கே ராஜன் "தண் ணீர் கொண்டுவாரும், பாத்திரம் கழுவும், இதைச் சுத்தி செய்யும், அதைச் செய்யும்" என்று ஒருவரை வேலை யேவிக் கொண்டிருந்தார். அவர் சுறு சுறுப்பாக எல்லா வேலையும் செய்து கொண்டிருந்தார். எனக்குத் திடுக்கிட்டது. "என்ன ராஜம்? இவரை யார் வேலை செய்யச் சொன்னது? இவரே நமது தலைவர் மோகன தாஸ் காந்தி!" என்றதும், எல்லாரும் திடுகிட்டனர்! "ஐயா, மன்னிக்க வேண்டும். அபராதம் செய்துவிட்

டோம் ; அடையாளம் தெரியவில்லை ; மன்னிக்க வேண்டும்" என்று ராஜன் காந்திஜியை வேண்டினர். நானும் மன்னிப்புக் கேட்டேன். காந்திஜி பக்கென்று சிரித்தார்! "நானல்லவா உங்களை இவ்வளவு கஷ்டப் படுத்தியதற்கு மன்னிப்புக் கேட்கவேண்டும். லண்டனில் இந்திய முறைப்படி விருந்திடுவதன் கஷ்டத்தை நான் அறிவேன். ஆதலால் என் கடமையைச் செய்யவே வந்தேன் இங்கு" என்று காரியங்களைச் செய்து முடித்து, தட்டுகளைப் பரிமாறி, உணவு வைத்து எல்லாரையும் அமர்த்தியபிறகே அந்த மகான் தாமும் எங்களிடையே அமர்ந்து உண்டார். ஆஹா! அதை இன்று நினைத்தால் கூட, என் உள்ளம் சிலிர்க்கிறது...என்ன சுத்தமான ஹிருதயம், எவ்வளவு இனிமையான பேச்சு! தற்பெருமை சிறிதும் கிடையாது; எவ்வளவு பொறுமை, ஸஹனசக்தி! வேலைக்கு எப்படி முந்துகிருர்! அவரல்லவா தீர மஹானுபாவர் என்று நான் நினைத்து நினைத்துருகி னேன். இன்னும் பத்துநாள் அவருடன் பேசியிருந்தால், நான் நிச்சயமாக அஹிம்ஸா தருமத்தையே அனுஷ்டித் திருப்பேன். மோகனதாஸர் என்னை மோகனுஸ் ரத்தால் அப்போதே வசப்படுத்திவிட்டார். அவர் யாரையும் துச்சமாகக் கண்டிக்காமல், தத்துவத்தையே பிடித்துச் செல்கிருர்.

"அந்த மகானுடன் உண்ட அந்த விருந்து தேவா மிருதமா யிருந்தது. எல்லாரும் பிரம்மானந்தமாகச் சாப்பிட்டோம். லண்டனில் அதுவரையில் அப்படிப் பட்ட இந்தியச் சாப்பாடு கிடையாது!"

சாப்பிட்டதும், சிறிது சிரமப்பரிகாரம் ஆனது; உடனே கூட்டம் தொடங்கியது. மோகனதாஸ் காந்தி தலைமைவகித்து, நிதானமாக அளந்து சிலவார்த்தைகளே பேசினர்: "நமது தேச வாலிபர்களை ஒருங்கே சந்தித்

துப்பேச ஒருசந்தர்ப்பம் எனக்குஅளித்ததற்காக வந்தனம். உங்கள் தேசாபிமானத்தை நான் போற்றுகிறேன். இந்தியத்தன்மையை இந்தியர் எங்கிருந்தாலும் காக்கவேண்டும். அரசியல் விஷயத்தில் எனக்கும் ஸாவர்க்காருக்கும் உள்ள பேதத்தை நான் அறிவேன். இந்தியாவுக்கு ஸ்வராஜ்யம் வேண்டும் என்பதில் இருவருக்கும் விருப்பம் ஒன்றுதான். எப்படி அதை அடைவது என்பதிலேதான் வேறுபாடிருக்கிறது. நான் சத்தியத்திலும் ஸாத்வீகத்திலும் பிடிவாதமான நம்பிக்கையுடையவன். 'சத்தியமே ஜயம்' என்பது வேத வாக்கு. சத்தியமே சக்தி. சத்தியம் அஹிம்ஸா ரூபத்தில் விளங்குகிறது: அதையே நான் தாரகமாகக் கொண்டிருக்கிறேன்., அதன் பலனை டர்பனில் காண்கிறேன். இப்போது பயானக மார்க்கத்தில் செல்லுகிறவர்களும், ஒரு நாள் உணர்ந்து, சாத்வீக தர்மத்திற்கே திரும்புவார்கள்" என்று பேசி நிறுத்தினார். பிறகு வீரச் சொற்கள் பறந்தன! எழுந்தார் சாவர்க்கார். ஆஹா! அதென்ன? வாக்படுத்தவம்! எவ்வளவு சரித்திரஞானம்! கரிபால்டியும், சிவாஜியும் நேரே இருந்து பேசுவதேபோல் வீரச்சண்டமாருதம் பொழித்து தீர்த்தார். "அரசியல், சாத்வீகத் துறவிகளுக்கன்று. அது, வாளும் வஞ்சமுங்கொண்ட பகைவனை எதிர்த்துப் போராடும் படுகளம். அதில் நாம் கத்தி பிடித்தே முன்னேற வேண்டும். நமது முன்னோர்களான சிவாஜி, குருகோவிந்தன், ராணாபிரதாபசிங்கன், நானு சாஹேபு போன்ற மகான்கள் பலாத்காரத்தாலேதான், சத்ருநாசம் செய்து, தருமத்தை நாட்டினர்." என்று வெளுத்துவாங்கினார்! அவர் பேச்சு எல்லார் உள்ளத்திலும் வீரக்கனல் தூண்டியது. தீபாவளிக்கு லண்டனில் வெடிசுடவில்லை: சாவர்க்காரின் பேச்சே உள்ளத்தில் வீரத் தீ வெடித்துக் கிளம்பச் செய்தது.

மஹாத்மா காந்தியடிகள் சௌரி சௌரா சம்பவத்திற்காக 21-நாள் பட்டினியிருந்து பாரணை செய்த தினத்தில், நாங்களும் ஒரு நாள் பட்டினியிருந்து தனியாகக் கூடிப்பேசினோம். அச்சமயம் ஐயர் இச்சம்பவத்தைச் சொன்னார். ஐயரைப்பற்றி மகாத்மா யங் இந்தியாவில், "நான் லண்டனில் கண்டபோது ஐயர் பயங்கரப் புரட்சிக்காரரா யிருந்தார். ஆனால் அவர் நாளடைவில் பரம சாந்தராய்விட்டார். ஆயினும் அவர் உள்ளத்தில் எரிந்த தேச பக்திக்கனல் குறையவில்லை. அவர் மிகவும் வீரமுள்ள ஒத்துழையாதார். அவரை நான் எப்போதும் உண்மையும் விடாமுயற்சியுமுள்ள சிறந்த தேச பக்தத் தொண்டராகவே கருதிவந்தேன்" என்று குறித்தார்.

சாவார்கார், ஐயரை "தீரன்' என்றார். காந்தியை "மஹானுபாவன்" என்றழைத்து வந்தார். "அந்த மஹானுபாவனாலேதான் நமக்கு இவ்வளவு நிர்ப்பயமாக வந்தேமாதரம் போட்டுப் பேசும் சக்தி வந்தது" என்று ஐயர் காந்திஜியை அடிக்கடி புகழ்வார். காந்தியை மகாத்மாவாகக் கண்ட முதல் இந்தியர், நம் ஐயரே.

15. ஒற்றனுக்கு எத்தன்!

ஸ்கார்ட்லந்து யார்டு போலீசுக்கு ஒரு கண் இந்திய வீட்டின்மேல் விழித்திருந்தது. *அடிக்கடி நண்பர்போல்

---

* ஒரு நாள் குரு குலத்தில் என்னைக் காண ஓர் ஒற்றர் வந்தார். ஒற்றரென்று தெரியாமல் நான் அவருடன் காந்தியடிகளின் ஒத்துழையாமையைப் பற்றிப் பேசத் தொடங்கினேன். கிணற்றங்கரைக்கு வந்த ஐயர் உடனே "பாரதி சாப்பிட வரலாமே" என்றழைத்துச் சென்றார். வந்தவர் "நானே வருவேன்; வந்தனம்" என்று சென்றான். ஐயர் "கண்ட பேருடனெல்லாமா இப்படிப் பேசுவது? அவன் ஒற்றன்... நான் எங்கே போனாலும் அவன் பின்னாலேயே திருநெல்வேலிமட்டும் வருகிறான்; ஒற்றரைப்பற்றி உஷாராக யிருக்க வேண்டும்." என்ற பீடிகையுடன் கீர்த்திகர் விஷயத்தைச் சொன்னார்.

ஒற்றர் புகுந்து அங்கே, நடப்பதைப் போலீசுக்குத் தெரிவிப்பதுண்டு.

1909-ல் ஒரு நாள் மாலை கீர்த்திகர் என்றமராதிய பிராமணன் சாவார்காருடன் பேச வந்தான்; அவர் சலுகையைப் பெற்று இந்திய வீட்டில் ஜாகை அமைத்துக் கொண்டான். சாவர்க்கார் அவனுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுத்தார். அவன் வந்த காரியத்தை வினவினர். அவன் "நான் பல் வைத்தியம் பழக வந்தேன்" என்ருன். சாவர்க்கார் சிபார்சால் அவனுக்கு ஓர் ஆஸ்பத்திரியில் பல் வைத்தியம் கற்க வசதி கிடைத்தது. ஆசாமி ஒரே வாரம் பல் வைத்திய சாலைக்குப் போவது போல் நடந்தான். டாக்டர் ராஜன் அவனைப்பற்றி விசாரித்ததில், பிறகு அவன் அந்தப் பக்கமே போவதில்லை என்று தெரிந்தது. எங்கேயோ போய்த் திரிந்து இரவு ஜாமத்தில் வந்து அறைக்குள் புகுந்து கொண்டான். ஆனல் ஆள் நல்லவன்; ஒட்டுறவாயிருந்தான். சாப்பாட்டை குறை சொன்னதில்லை. சாப்பிடாவிட்டாலும் மாதம் 24 ஷில்லிங் தந்தான். இந்திய சுதந்தர சங்கத்தில் சேர்ந்து, மாதம் ஒரு பவுன் நன்கொடை தந்தான். வாரக் கூட்டங்களுக்குத் தவருமல் வந்தான். கூட்டமானதும் அறையை மூடிக் கொண்டு என்னமோ எழுதினன். எல்லார் பேசுவதையும் கேட்டான். அவன் அரசியல் விஷயமாக வாய் திறக்கவில்லை, ஆள் அவ்வளவு புத்திசாலியில்லை. நடத்தையும் வழ வழா !

அச்சமயம் இந்திய வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்ள ஓர் இளம் பெண் அமைந்தாள்—அழகி, வம்பி... அவளை கீர்த்திகர் மெள்ளப் பணம் கொடுத்து இழுத்துக் கொண்டான். அவள் அவன் மேல் மையல்கொண்டு விட்டாள்; அவனுக்குத் தொண்டு செய்வதிலேயே மோகமாயிருந்தாள். ஐயர் இதைப் பொறுக்க முடியுமா? அந்தப் பெண்ணை வேலையிலிருந்து நீக்கினர். இன்னும்

எளிதானது...கட்டில்லாமல் அப்பெண் கீர்த்திகருடன் தமாஷாகத் திரிந்தாள். அவளுக்கு இவன் வீடமைத்துக் கொடுத்துப் பிரியமாக வைத்துக்கொண்டிருந்தான். அவள் காதலைப் பெற்றுன். அதனுல் வந்த மேகரோகத்தையும் அனுபவித்தான்.

கீர்த்திகர் நடையுடை பாவனைகளையும், இரவில் நேரங் கழித்து வருவதையும் பார்த்து எனக்குச் சந்தேகந் தட்டியது. ஒரு நாள் அவன் தன் கூத்தியாளுடன் நாடகம் பார்க்கச் சென்றுன்; அப்போது வேறு சாவி போட்டு அவன் அறையைத் திறந்து, பெட்டியெல்லாம் சோதித்தேன். பிறகு மேற் சட்டையை உதறினேன். ஒரு காகிதச் சுருள் தொப்பென்று விழுந்தது. யார்டுதேன்; அன்று நடந்த வாரக் கூட்டத்தின் தப்பான அறிக்கை. அபத்தக் களஞ்சியம்...ஸ்காத்லந்து யார்டு போலீசுக்கு அதை மறுநாள் அனுப்ப எழுதி வைத்திருந்தான்! குட்டு வெளிப்பட்டது. சாவர்காரிடம் காட்டினேன். அவருக்கும் ஆள் ஒற்றன் என்று தெரிந்துகொண்டது. ஆளை வெளிப்படையாகச் சொல்லி விரட்டிஞல் பூசகு. அவனுக்கும் வேலை போய்விடும். எங்களைக் கண்காணிக்க வேருெருது துஷ்டன் வருவான். ஆதலால் அவன் அறிக்கையை நாங்கள் தணிக்கை செய்தே அனுப்புவதென்று தீர்மானித்தோம்...ஆள் நிசியில் உல்லாசமாக வந்து அறையில் புகுந்து பள்ளி கொண்டான். நான் கதவைத் தட்டினேன்; திறந்தான். சாவர்காரையும் அழைத்துக் கொண்டு, பையில் ஒரு சுருள் துப்பாக்கியையும் வைத்துக் கொண்டு, அவன் படுக்கையில் உட்கார்ந்தேன். சாவர்கார் அவன் அங்கு வந்த விபரமெல்லாம் கேட்டார். ஆள் மராதியில் "என்மேலா சந்தேகப் படுவது?" என்றெல்லாம் உளறினன். நான் "இதோ உன் அறிக்கை...என்ன சொல்லுகிறுய்?" என்றேன். அதைக் கண்டதும் அவனுக்கு நடுக்கம் எடுத்தது. அப்போதும்

"சும்மா எழுதினேன்' என்ருன், பிறகுதான் என் கையி லிருந்த கைத் துப்பாக்கியை எடுத்தேன். "இதோ பார்... சொல் உண்மையை : ஒற்றன் என்பதை ஒப்புக்கொள்: இன்றேல் குதிரையை அழுத்தி விடுவேன் ; ஹதம் செய் வேன்" என்று நெஞ்சில் துப்பாக்கியை வைத்தேன். ஆள் விலவிலத்துப் பணிந்தான். "உயிர்ப்பிச்சை கொடுங் கள். உங்கள் இஷ்டம்போல் நடக்கிறேன். நான் உங் கள் தாஸன். நான் பம்பாய் கோர்ட்டில் தார்ஜுமா செய்பவன். ஐந்தாறு பாஷைகள் வரும். சாவர்கார் குடும்பத்தை நன்ருய் அறிவேன். ஆதலால் ஓராண்டு ஓய்வெடுத்துக் கொண்டு என்னை இங்கே வந்து உங்களைக் கண்காணிக்கும்படி அனுப்பினார்கள். நாசிக்கில் புரட்சி இயக்கம் வலுத்திருப்பதால். இங்குள்ள சாவர்காரை கூர்ந்து கவனிக்கச் சொன்னார்கள்" என்று உள்ளதைக் கக்கி விட்டான். "சரி, இன்று முதல் உன் அறிக்கையை எங்களிடமே தர வேண்டும். நாங்கள் திருத்தம் செய்கிற படியே எழுதிக் காட்டி, போலீசுக்கு அனுப்ப வேண்டும். அங்கே நடப்பதை இங்கே ஒளியாமல் சொல்ல வேண்டும். எங்கள் சுதந்தர சங்கத்துக்கு மாதம் ஒரு பவுன் கொடுத் தாய். இனி இரண்டு மூன்று பவுன் தரவேண்டும். சம்மதமா?" என்றேன். ஆள் வேறு கதியில்லாமல் ஒப் புக்கொண்டு அப்படியே நடந்தான். எங்களுக்கு மிகவும் சௌகரியமாயிருந்தது!

இந்த ஒற்றன் சொல்வதும் போதாது; இன்னோர் ஒற்றனை எங்களிடம் அனுப்ப ஸ்காட்லந்து யார்டு போலீ சார் நினைத்தனர். அதை அறிந்தோம். ஒரு வேடிக்கை நடத்தினோம். எங்கள் சமையல் வேலையைக் கவனித்து வந்த திருமாலாசாரியை போலீஸ் துரையைப் பேட்டி கண்டு, "நான் இந்திய வீட்டு நடப்பெல்லாம் அவர்களுட னிருந்தே பார்த்து உடனுக்குடன் தெரிவிப்பேன்; மாதம் ஐந்து பவுன் தந்தாலும் போதும்" என்று மனுச் செய்து

கொள்ளச் சொன்னோம். நெஞ்சுரங் கொண்ட திருமலாசாரி அப்படியே செய்து, வேலையும் பெற்றான்...நாங்கள் எழுதித் தருவது, நாங்கள் அச்சிடும் துண்டுப் பிரசுரங்கள் எல்லாவற்றையுமே அவன் துரைக்குச் சமர்ப்பித்தான். ஸ்காட்லண்டு யார்டு போலீசுக்கு எங்கள் அந்தரங்கம் தெரியாமல், மழுப்ப இந்த ஏற்பாடுகள் மிகவும் சௌகரியமாயிருந்தன."

16. ஸஹனசக்தி

ஸஹனசக்தி என்ற வார்த்தையை ஐயர் அடிக்கடி உபயோகிப்பார். ஒருநாள் இந்திய சுதந்தரப் போரில் முதற் பலியான மங்கல்பாண்டேயைப்பற்றி ஐயரிடம்புகழ்ந்தும் போது ஐயர், "அந்த மங்கல் டிங்கிராவாக வந்தான்' என்றொரு படத்தை எடுத்துக் காட்டினார். ஆள் பரட்டைத்தலை. விழிபெரிது; பார்வைக்கு அவ்வளவு அழகாயும், கட்டுமஸ்தாயுமில்லை. என்றாலும், அந்த விழிகளின் வீரக் கனல் இருந்தது...அந்தப்படத்தை முன்பே நான் பார்த்திருந்தேன். ஆதலால் டிங்ராவின் பேச்சை இழுத்தேன். ஐயர் சொன்னார்.

"சஹனசக்தியில் அற்புதமானவன். இந்த வீரன் 'அசல் பஞ்சாபி' க்ஷத்ரியன். செல்வக் குடும்பத்தைச் சேர்ந்தவன். உறவினர் நல்லவேலையில் இருந்தனர். மனைவியும் ஒரு மகனும் உண்டு. இவன் எஞ்சினீரிங் படிப்பதற்காக லண்டனுக்கு வந்தான். ஸாவர்கார் பேச்சே இவனை வசீகரித்தது. எங்கள் சங்கத்திற்குத் இவன் தவறாமல் வந்தான். ஆனால் பேசுவதில்லை. அனாவசியமாக வாயைத்திறப்பதில்லை. நாங்கள் இரவில் கணப்புத் தீயண்டை அமர்ந்து, இந்திய அரசியல் நடப்புகளையும் எங்கள் புரட்சி இயக்கத்தையும்பற்றி நீளப்பேசுவோம்; பத்திரிகைகளைப் படித்து, விமர்சனம் செய்வோம்; வீரர் கதைகளைச் சொல்வோம். இந்த ஆள் எல்லாம் கேட்பானே

யொழிய வாய்திறக்கமாட்டான்; நாங்கள் சளசள வென்று பேசுவது இவனுக்குப் பிடிக்காது. அவனை நாங்கள் அப்பாசு என்று கேலி செய்து வந்தோம். பொறுக்கும் மட்டும் பொறுத்தான். ஒருநாள்கோபம்வந்து நாற்காலியைத் தூக்கி டாக்டர் ராஜன் மண்டையைக் குறி வைத்து எறிந்தான். நான் தடுத்தேன். ஒருநாள் நாங்கள் பலாத்கார இயக்கத்தைப்பற்றிச் சத்தம் போட்டுப் பேசினோம். "இப்படிச் சத்தம்போடுவோர், பெரிய காரியங்களை நடத்த லாயக்கில்லை; அதற்குப் பொறுமை வேண்டும்; ஸஹனசக்தி வேண்டும்" என்றான். எனக்குச் சுறுக்கென்றது. "சரி டிங்ரா, ஸஹனசக்தி வேண்டியது தான்; சோதிப்போமா" என்றேன்? "தயார்" என்று மார்தட்டினன்.

மறுநாள், ஒரு கூர்ந்த ஊசியை நாங்கள் புறங்கையில் அழுத்தி உள்ளங்கைவரையில் ஏற்றுவது; அதைப் முகஞ் சுளிக்காமல் பொறுத்தவருக்கே ஸஹனசக்தி என்று முடிவுசெய்தோம். நண்பர் கையில் ஊசியேற்ற, நண்பர் சம்மதிக்கவில்லை. நான் அந்த வேலையை எடுத்துக் கொண்டேன். எல்லோரும் அத்தச் சோதனையில் முழு வெற்றிபெறவில்லை. டிங்ரா, "ஏற்றும் ஊசியை" என்று மேஜைமேல் வைத்துக் கண்ணைக்கொட்டாமல் இருந்தான். நான் மெல்ல ஊசியேற்றினேன். ஊசி மேஜையைக்கூடத் துளைத்தது. பிறகு மெல்ல இழுத்தேன். டிங்ரா கையில் இரத்தம் வந்தது. அந்த வாலிபன் ஒன்றும் நடக்காதது போல் மலர்ந்த முகத்துடன் தன் பாடம்படிக்க சென்றான்! அவனிடம் எங்களுக்கு அதுமுதல் அளவற்ற மதிப்பேற்பட்டது. அவன் கொஞ்சங்கூடப் பதறாமல் காரியமே கண்ணுயிருந்தான். இரகசியத்தை உயிர்போனாலும் வெளியே சொல்லமாட்டான். அவன் இந்திய வீட்டிலேயே எங்களுடன் தங்கியிருந்து, பிறகு தனியே சென்றான்."

17. வீடு கலைகிறது

வீரவர இந்திய வீட்டிற்கு ஒற்றர்தொல்லை அதிகரித்தது. தங்கள் கையிலிருந்த ஒற்றர் அறிக்கையை ஸ்காட்லண்ட்யார்டு போலீஸ் முழுதும் நம்பவில்லை. ஏனென்றால் அதில் சாவர்காரரைக் குற்றம் சுமத்தும்படியான வரியேயில்லை. பொதுவாக தேசாபிமானத்தைப் பற்றிய கட்டுரைகளாகவேயிருந்தன. போலீஸாருக்குக் கட்டுரை தேவையில்லை. உள் ரகசியமே தேவை. கீர்த்திகரும் அழகைக் கட்டியழுது அங்கமெல்லாம் நோயாகி, ஆஸ்பத்திரிக்குப் போய்ச் சேர்ந்தான். ஏதேதோ பலமான பேச்சும் ஏற்பாடும் நடந்தன. பிறகு மூன்றே பேர்-சாவர்கார், ஐயர், ராஜன்—அங்கிருந்தனர். மற்றவர்கள் பல காரணங்களால் அந்த வீட்டை விலகியோடினர். பிறகு சாவர்காரும் உடல் நலத்திற்காகப் பாரிஸில் காமா அன்னையிடம் சென்றார். டாக்டர் ராஜன் மிடில்ஸெக்ஸ் வைத்தியக் கல்லூரியில் தன் படிப்பைத் தொடர்ந்து, அதே கவனமானார். டிங்ரா தன் எஞ்சினீரிங் கல்லூரிக்கருகே ஜாகை மாற்றிச் சென்றான். இந்திய வீடு கலைந்தது. ஐயர், ஒரு ஓட்டலில் தங்கினார்.

பரீட்சையும் முடிந்தது. சாவர்கார் ஐயர் இருவரும் தேர்ச்சி பெற்றனர். ஐயர் ரோமன்லாவில் முதன்மை பெற்றார்! ஆனாலென்ன? பாரிஸ்டர் பத்திரம் வந்தது. "நான் எந்த பிரிடிஷ் கோர்டிலும் கௌன்போட்டு நுழையப் போவதில்லை. எனக்குப் பட்டம் தேவையில்லை; பத்திரத்தை இதோ வாபஸ் செய்கிறேன். அதற்கு நான் கட்டியபணத்தைத் திரும்பத் தந்துவிடுங்கள்" என்று வாங்கிக் கொண்டார். காந்தியடிகள் ஒத்துழையாமைத் திட்டம் வகுப்பதற்குப் பத்தாண்டுகளுக்கு முன்பே ஐயர் அதைக் காரியத்தில் காட்டிவிட்டார். ஐயருக்கு ஒரே பாசம்—தேசம்.

சில நாட்கள் ஒரு தகவலுமில்லை. கிணற்றில் கல் விழுந்ததுபோலிருந்தது. பாரிஸில் மட்டும் ஏதோ ஏற்பாடு சுறு சுறுப்பாக நடந்தது. முக்கியமான சாமான்கள் அங்கே போய்ச் சேர்ந்து விட்டன. இலண்டனில் ஐயரே இந்திய சுதந்தர சங்கத்திற்குத் தனிப் பிரசாரம் செய்துகொண்டிருந்தார். தனி நபர்களைப் பார்த்துப் பேசிக் கொண்டிருந்தார். இச்சமயம் அது நடந்தது—படார் !

18. ஆ, பயங்கரம்!

1910, மே மாதம். லண்டன் பத்திரிகைகளெல்லாம் "பயங்கரம்! ஆ! பயங்கரம்!" என்று அலறின! லண்டன் தெருவெல்லாம் "ஆ பயங்கரம்! பயங்கரம்... ஓர் இந்திய வாலிபன்...ஆ!" என்ற பேச்சே! யாரந்த வாலிபன்? அவனே மதன்லால் டிங்ரா! அவன் என்ன செய்தான்? வாருங்கள், இம்பீரியல் இன்ஸ்டிடூட் ஜிஹாங்கீர் ஹாலுக்கு; அங்கே கூட்டம் நெரு நெருக்கிறது. வெள்ளைக்காரர் பற்கள் ஒரு வாலிபனைப் பார்த்து நர நர வென்று கடிக்கின்றன. "சுடு அந்தக் கொலைகாரப் பாவியை" என்கின்றனர். அந்த வாலிபன்—டிங்ரா—எக்கவலையுமில்லாமல் தரையைப் பார்த்து நிற்கிறான். அவனுக்கு முன்னே இரண்டு பிணங்கள் விழுந்துகிடக்கின்றன. ஒன்று கர்ஜான் வில்லி; மற்றொன்று லால் காகா.

கர்ஜான் வில்லி, ஐ.ஸி.எஸ், இந்திய சமஸ்தானங்களில் வேலை பார்த்த பழம்புலி. இப்போது லண்டனில் இந்தியக் காரியதரிசிக்கு யோசனை சொல்பவன். கர்ஜான் ஆட்சி அங்கே நடக்கிறது. கர்ஜான் வில்லியின் யோசனை இங்கே நடக்கிறது. பாவம் அவன் அன்று ஜிஹாங்கீர் ஹாலில் ஒரு விருந்து சாப்பிட ராகுகாலத்தில் புறப்பட்டு வந்திருக்கிறான். டிங்ரா அவனுடன் கைகுலுக்கி, சிநேகம் செய்துகொண்டே ஹால் முற்றத்தில் உலாவி

ஞன். ஆள் அசப்பாயிருந்தபோது, பைக்குள்ளிருந்து ஏதோ ஒரு முழம் எடுத்தான்... குதிரையை அழுத்தி விட்டான்: "படார்!" கர்ஜான்வில்லி "அல்லாஸ்" என்று தரையில் உருண்டான். "அடாடா" என்று தடுக்க வந்தான் லால் காகா என்ற ஒரு பார்சி. அவனுக்கும் ஒரு படார்தைத்தது...அவனும் உயிர் துடித்து மௌத்தாகி விட்டான்! பார்த்தவர்கள் அலறுகிறார்கள். பத்திரிகைகள் விசேஷ மாலைமலர், வெளியிட்டு மாலைமாலையாக அலறு கின்றன. ஊரெல்லாம் அந்தப் பயங்கர வாலிபனைச் சபிக்கின்றனர்; "கொல்லு குத்து வெட்டு புதை" என்கின்றனர். அந்த ஸஹன சக்தி பெற்ற டிங்ரா அசையவில்லை. போலீசார் வந்து கைது செய்யக்கூடக் காத்திருக்கவில்லை. தானே தன்னை அவர்களிடம் ஒப்பித்து, "என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள்" என்றான்.

போலீசார் அவன் அறையைச் சோதித்துப் புத்தகம் துணி மணிகளையெல்லாம் கைப்பற்றினர். வேறொன்று மில்லை. இந்திய, வீட்டின்மேல் கோபப் பார்வை செலுத் தினர். அங்கே வீடுதான் மிச்சம். டிங்ராவை விசாரணை செய்தனர். சில ஜூரிகள் அவனைப் பைத்தியம் என்றனர். டாக்டர்கள், "ஆள் சரியாகத்தானிக்கிறான்; தாதுவிலோ மூளையிலோ, கோளாறில்லை" என்றனர். நீதிபதி ...க்குத் தண்டனை விதித்து, "நீ ஏதாவது சொல்ல வேண்டுமானால் சொல் இது சமயம்" என்று அவன் முகத் தைப்பார்த்தார். அப்போதே ஆள் வாயைத் திறந்து தனது வாக்கு மூலத்தைக் கொடுத்தான். அதில் சிலவரிகளே நமக்குக் கிடைக்கின்றன :—

"எனக்குக் கர்ஜான்வில்லிமேல் சொந்த மனஸ்தாப மெதுவுமே கிடையாது. பிரிடிஷ்காரர் இந்தியாவில் கடுமையான அடக்கு முறை ராஜ்யம் நடத்துகிறார்கள். அவர்களைப் பழிதீர்க்கவே இப்படிச் செய்தேன். எனது தேசவிடுதலைக்கு இதுதான் வழியென்பதையும் இதனால்

காட்டினேன். இந்தச் செய்கையை நானே செய்தேன். யாரும் என்னைத் தூண்டவில்லை. குற்றம் எனதே. பிறர் இதில் சம்பந்தமில்லை."

தூக்குமேடையில் ஏற்றினர்: "கடவுளே, வந்தனம்! நாட்டிற்காக உயிர்விடும் நன்மை பெற்றேன்" என்று டிங்ரா உயிர் நீத்தான். இச்சம்பவத்தை லண்டன் மறக்கவில்லை. இந்தியாவும் ஐயரும் மறக்கவேயில்லை. இது, பலரைத் திடுக்கிடச்செய்தது!

19. "தியாக பலியானேன்"

இச்சமயமே இந்தியாவில் ஜாக்ஸன் கொலை நடந்தது. அதற்கு இந்திய வீட்டிலிருந்தே துப்பாக்கி சென்றதாகப் போலீஸார் ஊகித்தனர். பிடி சாவர்காரை! என்று வாரண்டு லண்டனுக்கு வந்துவிட்டது. அப்போது அவர் பாரிஸில் இருந்தார். இந்தியா வீடு இதற்குள் கலைந்து போனது. அதைச் சோதனை போட்டனர் ஒற்றர். கூட்டாது கிடந்த குப்பைதான் மிச்சம்! சாவர்காரைப் பாரிஸிலேயே இருக்கும்படி நண்பர் வேண்டினர். சாவர்கார் எதற்கும் துணிந்தே புறப்பட்டு டோவருக்கு வந்தார். பசக்கென்று போலீஸார் கைதுசெய்து சிறை யிட்டனர். அவருக்குத் தூக்குமேடை அல்லது அந்தமானே கதியென்று எல்லாரும் அஞ்சினர். அவர் சகோதரர்களும் அந்தமானில் வாடினர்கள். அச்சமயம் சாவர்கார் தம்மை அன்னைபோல் வளர்த்த அண்ணிக்கு ஓர் உருக்கமான கவிதை எழுதினர்:

"அண்ணியே! சிறு வயதில், அமுத நிலாவில், உன் அமுதக் கரத்தால் சோறு போட்டாய். சகோதரர் சேர்ந்துண்டோம். அப்போது மஃஜினி கரிபால்டி முதலிய வீரர்கள் செய்த விடுதலைப் போரைப் பற்றிப் பேசினோம். சிவாஜி, தானஜி, பாஜி, நானு, ராணி லக்ஷ்மிபாய் போன்

ரோர்போல வீரச் செயல் புரிவதாகச் சபதம் செய்தோம். அச்செயலுக்குக் காலம் வந்தது. மனிதன் எவனும் சாகவேண்டியது தான். தாய் நாட்டுக்கே எங்கள் உயிரைப் பலிதானமாக்க நாங்கள் விரதம் பூண்டோம். விரதம் பலித்தது. ஜீவன் சபலமானது. அதனால் என்ன பயன் என்பாயோ? அதோ! குமரிமுதல் இமயம் வரை உள்ள பாரத பூமி சிங்கநாதத்துடன் எழுந்து கர்ஜிக்கிறது! அதன்மேல் படர்ந்த பிச்சைக்கோலம் கிழிந்து தூள்தூளாய்ப் பறந்து போனது! ஸ்ரீராமச் சந்திரன் கொடியை உயர்த்திவிட்டான்! அதைத்தாங்க அணியணியாக அடியார் படைகள் நிற்கின்றன. ஓம குண்டத்திலே அக்னி ஜ்வாலையாக எரிகிறது. இந்த வேள்விக்கனலில் முதலில் நமது குடும்பம் ஆகுதியாகிறது. உடல் பெற்றபயன், தருமங்காப்பதே. தருமத்திற்கே நாங்கள் தியாக பலியானோம். தியாகாக்னியில் சுய நலத்தைச் சுட்டுச் சாம்பலாக்கினோம். அன்று சொன்ன சொல்லை நிறைவேற்றி விட்டோம். கிருதார்த்தர்களா னோம். ஹே மாத்ருபூமியே! உள்ளத்தை உன் கோயி லாக்கினோம். என் இதயத்தில் நவநவமாகப் பூக்கும் கவி மலர்களை உனக்கே சூட்டினேன். உன் பணியே, ராம சேவை. என் இளந்தளிர்ச் சேய்கள், இன்னுயிர்க் காதலி, என் அண்ணி, தம்பிகள் எல்லாரையும் ஹே பாரததேவி, உன் வேள்விக்கே ஆஹுதியாக வழங்குகிறேன். யூபஸ் தம்பத்தில் இதோ என்னையும் கட்டியாயிற்று. இன்னும் என்னுடன் எழுபேர் பிறந்திருந்தாலும், அவர்களையும் தேசபலி கொடுப்பேன். உலகில் தழைக்கும் மானிடமா பெல்லாம் என்னுடன் பிறந்தார்களே! என் அன்னையே அவர்கள் அன்னை! அண்ணியே, நீ வீரனுக்கு வீரமாலை சூட்டினாய். இராஜபுத்திர கோமளங்களை நினைத்துச் சமாதானமாயிரு."

20. "போ, போ....உடனே!"

பெல்காம் காங்கிரஸிற்குப் பிறகு, ஐயர் சாவர்காரைக் கண்டு வந்தார். உடனே அதைப் பற்றிக் கேட்டேன். "பதினன்கு ஆண்டுகளுக்குப் பிறகு, இராமனைக் கண்ட பரதன்போல் சாவர்காரைக் கண்டேன்!" என்ருர். அக் காட்சியை சாவர்காரே அழகாக வர்ணித்திருக்கிருர்.

"1910, மார்ச்சு; ஒருநாள் நாங்கள் லண்டனில் உள்ள பிரிக்ஸன் சிறையில் இருந்தோம். நண்பர் அடிக்கடி எங்களை வந்து பார்ப்பதுண்டு. கம்பி வழியாக யார் வருகிருர்கள் என்று பார்த்திருந்தோம். எங்களுடன் அதிகமாகப் பழகுவோர் நாளடைவில் சிறைசெல்ல நேர்ந்தது. ஆதலால் பலர் பார்த்துப் பார்த்து உடனே சென்றனர்.

ஒருநாள் ஒரு கம்பீரமான புருஷன் எங்கள் முன்னே வந்தார். அவரே வ. வெ. சு. ஐயர். அவர் தாடி, மார்பைத் தடவிக் கொண்டிருந்தது. முன்னிருந்த ஆடம்பர புருஷரில்லை. வாழ்வையே தியாகப் பலியாக்கும் தீர வுணர்ச்சியால், அவர் உருவமே மாறிப்போனது. "தலைவா, நீ யேன் பாரிஸை விட்டு வந்தாய்?" என்று அவர் என்னைக் கேட்டார்; மனமுருகி நின்ருர். "அதைப் பற்றி யென்ன? சரியோ தப்போ, இந்தச் சிறையில் இருக்கிருேம். இனிச் செய்ய வேண்டியதைச் சிந்திப்போம்," என்று நாங்கள் சொன்னேம்.

மேலே நடக்க வேண்டியதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது, சிறை மணி யடித்தது. வார்டர்கள் மரியாதையின்றி "நேரமானது" என்று கூச்சலிட்டு வந்தனர். நாங்கள் ஒருவரை யொருவர் மனத்துயருடன் நோக்கினேம். அப்பொழுது எங்கள் வாணளில் ஒருவரை யொருவர் கடைசி முறையாகப் பார்க்கிருேம் என்று எங்களுக்குத் தெரியும். கண்ணீர் பெருகியது. அதை அடக்

கிக் கொண்டு; "நாம் ஹிந்துக்கள், பகவத்கீதை பாராயணம் செய்பவர்கள். இரக்கமற்ற இந்த ஜனங்கள் முன்னே நாம் அழலாகாது" என்றோம். நாங்கள் ஹிந்தியிலே தான் பேசினோம்.

"நண்பா உன்னைவிட்டுப் பிரிவதா? சேர்ந்து தேசசேவை செய்தோம். அதன் தியாகபலனைச், சேர்ந்தே அனுபவிப்போமே? நானும் சிறைக்குள் வந்து விடுகிறேன்" என்றேன். "சிறைக்குள் வந்து என்ன செய்வாய், நீ வெளியே யிருந்து தாய் நாட்டுக்குச் செய்ய வேண்டிய சேவை மலைபோலிருக்கிறது. இதோ உன்னையும் வாரண்டு துரத்தி வருகிறது...போ போ... உடனே இத்தீவை விட்டுப் புறப்படு" என்றான் தீரன்.

நாங்கள் பிரிந்தோம். அவர் மறையுமட்டும் பார்த்துக் கொண்டிருந்தோம்: "ஐயோ, இந்த அன்புமயமான ஆத்மாவை இனிப் பார்க்க முடியாதே" என்று மனத்திற்குள் சொல்லிக் கொண்டோம். ஏனெனில், தூக்குமரம் அல்லது அந்தமான் இரண்டில் ஒன்றே எங்களுக்கு ஏற்படுவதாயிருந்தது..."

ஐயர் "நான் அன்று பார்த்தது ஓர் ஒல்லி மனிதனன்று: தியாகத் தீக்கொழுந்தையே பார்த்தேன்! அவர் உள்ளத்தில் தைர்ய லக்ஷ்மி விளங்கினாள்...இப்போதும் அதே உணர்ச்சி, அதே தைரியம் அவரிடம் விளங்குகிறது. ஆனால் பல இடர்களால் உடல் மட்டும் உடைந்து போனது." என்றார். சாவர்காரைப் பற்றிப் பேசும் போது, ஐயர் கண்களும் குரலும் அசாதாரணமான வீரவுணர்வைக் காட்டும்.

21. "வே. விக்ரம ஸிங்"

இனி ஐயருக்கு இங்கிலாந்தில் வேலையில்லை. பாரிஸில் அபாரமான வேலைகள் உள்ளன. வாரண்டு துரத்தி வருகிறது; ஐயர் அவசர அவசரமாகத் தன் ஓட்டலில் சாப்

பிடுகிறார். ஓட்டல்காரி அனுதாபமுடன் அவருக்குத் துணை செய்கிறாள். அந்த அவசரத்திலும் ஐயர் கம்ப ராமாயணத்தை எடுத்து வந்து, தன்பெட்டியில் வைத்தார். ஓட்டல் காரியிடம் "கம்பன் எங்கள் கவி யாகன்" என்றும் சொன்னார். ஐயர் அகாலி போல் சட்டை முண்டாசு கண்ணாடி அணிந்து ஒரு 'ஸூட்கேஸ்' கையிலெடுத்துக் கொண்டு புகை வண்டி நிலையத்திற்கு ஓடினார். அவர் வருவதற்கும் வண்டி புறப்படுவதற்கும் நேரம்சரியாயிருந்தது. அதவும் நல்ல காலமே. ஏனெனில் ஒற்றர் அந்தப் பாதையில் ஐயரை எதிர்பார்த்து நின்றனர். இன்னும் ஐந்து நிமிஷம் தாமதித்திருந்தால், ஐயரும் சிறை சென்று அந்தமானில் அவதிப் பட்டிருப்பார். ஐயர் துறைமுகத்திற்கு ஓடினார். அங்கே ஒரு கப்பல் ஆம்ஸ்தர்தாமுக்குப் போகத் தயாராயிருந்தது. விரைவாகச் சீட்டு வாங்கி அதில் ஏறி நிம்மதியான இடத்தில் அமர்ந்தார். மேல் நடந்ததை ஐயரே சொன்னார்: "என்னை லண்டனில் தேடிக் காணாமல், நாடெங்கும் தந்தி பறந்தது. தென்னிந்திய பிராமணன். உச்சிக் குடுமிக்காரன் என்று என் வர்ணனையும் போலீசாருக்குத் தந்திருந்தனர். நான் இந்திய வீட்டில் ஐரோப்பிய வுடுப்புடன் எடுத்த கூட்டப் படமே அவர்களுக்குக் கிடைத்தது. நான் பாரிசுக்குப் போகப்போவதாக அறிந்த இரகசியப் போலீசார் எங்கே கண்டாலும் என்னைக் கைது செய்ய கண்விழித் திருந்தனர். ரயிலிலும் கப்பலிலும் ஒற்றர் வலை போட்டுத் தேடினர். கலே செல்லும் கப்பலில் அலசிப் பார்த்தனர். ஆளைக் காணோம். உடனே துறைமுகம் வந்தனர்.

"திடுதிப் பென்று நான் அமர்ந்த கப்பலில் ஒரு ஸார்ஜெண்டு நுழைந்தான். சுற்றிப் பார்த்தான். என் ஸூட்கேஸில் V. V. S. என்று எழுதியிருந்தது. நான் அமைதியொடு ஒரு ஹிந்துஸ்தானி புத்தகம் பார்த்துக் கொண்டிருந்தேன். ஸார்ஜெண்டு என்னிடம் வந்து

''மிஸ்டர் வி. வி. எஸ் ஐயர், உமக்கொரு தந்தி; இந்தாரும்'' என்று கொடுத்தான். சட்டென்று எனக்கு விஷயம் புரிந்தது. ''இந்தத் தந்தி வி. வி. எஸ் ஐயருக்கல்லவா. என் பெயர் வே. விக்ரம சிங்'' என்று சமயோசிதமாகச் சொன்னேன். ''தென்னிந்திய பிராமணர் குடுமி வைத்திருப்பார்கள். இந்த ஆள் தாடி மீசை அகாலிக் குல்லா எல்லாம் அணிந்து, இந்துஸ்தானியும் படிக்கிருன்'' என்று ஸார்ஜெண்டு மன்னிப்புக் கேட்டுக்கொண்டு சென்ருன். ஆம்ஸ்தர்தாமில் ஓர் ஒற்றன் என்னைக் கூர்ந்து பார்த்தான். நான் அமைதியாகச் சென்றேன். ''தாங்கள் பாரிசுக்குத் தானே போகிறீர்கள்? வாருங்கள், இருவரும் இந்த ஓடலில் சாப்பிட்டுச் செல்லலாம்'' என்ருன். அவன் ஒற்றன் என்பதை விழிகளால் அறிந்தேன். ''நான் எனது கால்ஸா மதாசாரப்படி தொழுகை நடத்திப் பிறகே உணவு கொள்வேன்; நண்பர் எனக்காகக் காத்திருப்பார்'' என்று ஒரு வண்டியேறி ஊர்க்கோடிக்கு விரைந்தேன். அங்கிருந்து பாரிசுக்குப் புறப்பட்டேன். வண்டி நிலையத்தில் நண்பர் காத்திருந்து அழைத்துச் சென்றனர்.''

பால பாரதிக்கு அங்குரார்ப்பணம் செய்தது செவ்வாய்க் கிழமை. நான் புதன் கிழமை நல்ல நாளாயிற்றே என்றேன். ''என் வாழ்வில் செவ்வாயே அதிட்டநாள்; நான் லண்டனிலிருந்து கப்பலேறியது செவ்வாயே. செவ்வாய் என்னைக் காட்டிக் கொடுக்கவில்லை'' என்று மேற் சொன்ன சம்பவத்தைச் சொன்ஞர் ஐயர்.

22. பாரிஸில் ஐயர்

பாரிஸ் வந்து சில மாதங்களுக்குப் பிறகே ஒற்றர் ஐயரைக் காண முடிந்தது. அப்போதும் ஐயர் வெளியே போகும்போது ஒரு கோலம், உள்ளே யிருந்தபோது ஒரு கோலமா யிருந்தார். இப்போது பாரிஸ்தான் புரட்சிக்காரர் நிலயம். அங்கே மாதாம் காமா வீட்டிலேயே

ஐயர் சௌகரியமா யிருந்தார். சியாமாஜி கிருஷ்ணவர்மா வும் அவருக்கு வேண்டியதைச் செய்தார். திருமலாச்சாரி யாரும் ஒற்றர்த் தொழிலை எற்றி யெறிந்து, போலீசுக்குத் தப்பி அங்கே வந்தார். காமா வீட்டைச் சுற்றிக் கண் கொட்டாக் காவல் இருந்தது. ஐயர் உள்ளேயே பிற் காலத்திற்கு வேண்டிய தயாரிப்புகளைப் பலமாகச் செய் தார். தாடி வெகு நீளமாக வளர்ந்து போனது. ஐயர் அசல் மேனாட்டுப் போர்க் கலை பயின்றார். துப்பாக்கி வித் தையிலும் படை நடத்தும் திறமையிலும் பக்காவானார். அனைத்தினும் முதன்மையாக இஸ்லாமியப் பக்கிரிபோல் நடிக்கக் கற்றார். பாத்தியா பழகினார். சிறிது உருதுப் பாடல்களை தெளிவாகச் சொல்லப் பழகினார். பேசவேண் டியதெல்லாம் சுத்தமாக மனப்பாடம் செய்து கொண் டார்.

ஒரு நாள் மாலை, சியாமாஜி "புறப்படு மார்சேல்ஸ்; மோட்டார் கொண்டு செல்" என்றார். காமாவும் ஐயரும் அவசரமாகப் புறப்பட்டனர். "காலை ஐந்து மணிக்கே... தெரியுமா" என்றார் சாமாஜி. "சரி" என்று எல்லாரும் புறப்பட்டனர். நாமும் செல்வோம்.

23. சாவர்கார் வீரம்

இரண்டு மாதங்கள் ஆயின. சாவர்க்காரை ஜாக்சன் கொலைக்காக விசாரணை நடத்த, கப்பலில் மிகவும் கவன மாக இந்தியாவிற்குக் கொண்டு செல்லுகிறார்கள். சாவர்க் காரைச் சுற்றி சார்ஜண்டுகள் கண்ணில் திரி போட்டுக் காக்கின்றனர். மார்செல்ஸில் கப்பல் நங்கூரம் போட் டது. அதி காலை, சாவர்கார் வெளிக்குப் போக உத் தரவு கேட்டார். சார்ஜெண்டுகள் அவரை மலஅறையில் விட்டு வெளியே காத்திருந்தனர். உள்ளே போன ஆசாமி அறைக் கதவை நன்றாகத் தாழிட்டார். அடியில் பார்த் தார். துவாரம் இருந்தது. நுழைந்து பார்த்தார். சட்டை

நடுக்கியது. சட்டையைக் கழற்றிப் போட்டார். துவாரத்தில் புகுந்தார். அதற்காகவே அவரைக் கடவுள் அவ்வளவு மெலிவாக்கினர் போலும்! துவாரத்தில் உடம்பு தலை சென்றது; தொபுக்கென்று கடல் நீரில் குதித்தார்; முக்களித்தார்...ஒரு பர்லாங் சென்ற பிறகு தலை தூக்கினார். மறுபடி முக்களித்தார். இவ்வாறு ஆசாமி வெகு தூரம் சென்ற பிறகு, இங்கே சார்ஜெண்டுகள், "ஐயா எவ்வளவு நேரம் குளத்திற் கிருப்பாய், வா வெளியே" என்கின்றனர்; பேச்சில்லை. "உனக்கென்ன காலராவா? வா உடனே". மௌனம். "அட இழவே, இன்னுமா பேதி?" சத்தமில்லை. "உனக்கென்ன கழிச்சல்! திற கதவை..." என்று தட்டினர், சத்த மிட்டனர்...பதிலில்லை...ஆசாமி அங்கேயே விறைத்துப் போனானோ என்றும் சந்தேகித்தனர். அச் சமயம் மேல் தளத்தில் "ஹ ஹ ஹ, முண்டப் பைத்தியம் முக்குளித்துச் செல்லுதடோய்" என்றோர் சத்தம் கிளம்பியது. சார்ஜெண்டுகள் கடலை நோக்கிப் பார்த்தனர்; தலை தெரிந்தது... "ஐயோ, திருடன் திருடன்; தப்பி விட்டான். அட பரமசிவே! இவனை மலஅறையில் விட்டதே பிசகு" என்று குபீரென்று குதித்து நீந்தித் துரத்தினர். ஆள், உயிரைப் பிடித்துக் கொண்டு கரை சேர்ந்துவிட்டார். சார்ஜெண்டுகளும் வேலை போய்விடுமே என்ற ஆத்திரத்தால், வெகு வேகமாய் நீந்திக் கரை சேர்ந்தனர். ஆசாமி முன்னே ஓடுகிறார்...இரண்டு பர்லாங் ஓடினால் எமனாலே கூட அவரைப் பிடிக்க முடியாது. அங்கே ஐயரும் காமாவும் மோட்டார் வைத்துத் தயாரா யிருக்கின்றனர். நிர்வாணப் பைத்தியம் என்று கண்டவர் கை கொட்டி நகைக்கின்றனர். "திருடன்! திருடன்! பிடி பிடி" என்று சார்ஜெண்டுகள் உயிரைப் பிடித்துக் கொண்டு ஓடி வருகின்றனர். ஒரு பிரெஞ்சு போலீஸ்காரன் சாவர்க்காரைப் பிடித்து நிறுத்துகிறான்; அதற்குள் ஐயரும் காமாவும்

நண்பரும் வருகிறார்கள். சார்ஜெண்டுகள் “ஐயா, இவன் எங்கள் கைதி. இவனை எங்களிடம் தந்துவிடுங்கள்” என்கிறான். பிரெஞ்சு போலீஸ்காரன் அப்படியே தந்துவிடுகிறான். ஐயரும் காமாவும், “ஹோ! இது பிரெஞ்சு எல்லை. எமது நண்பர் இப்போது பிரான்ஸில் இருக்கிறார். அவரை ஆங்கிலேயரிடம் தருவது சட்ட விரோதம்” என்று மன்றாடினர். “நீ போய்யா” என்று சார்ஜெண்டுகள் சாவர்க்காரைத் தூக்கிச்சென்று கவனமாகப் பாதுகாத்து, இந்தியா சேர்ந்தனர். கொல்லைக்குப் போகும் போதுகூட இந்த ஆசாமியைக் கவனிக்கவேண்டுமென்று ஒற்றர் பாடம் கற்றனர். கப்பலில் சாவர்க்காரைச் சித்திரவதை செய்தனர்; சாவர்க்காரும் அஞ்சா நெஞ்சுடன் அவர்களை எதிர்த்து வாயை அடக்கினார். அந்தக் கதையை ஐயரே பிறகு சொல்லுவார்.

கைக்கெட்டியது வாய்க்கெட்ட வில்லையே என்று ஐயர் கனவருத்தப்பட்டு, பாரிஸ் வந்ததும் பத்திரிகைகளில் கிளர்ச்சி செய்தார். “பிரெஞ்சு எல்லையைத் தொட்ட கைதியை ஆங்கிலேயரிடம் தருவது குடியரசு நீதிக்கே விரோதம்” என்று குடியரசுத் தலைவருக்கு எழுதி மன்றாடினார். அவர் ஆங்கில அரசைக் கேள்வி கேட்டார். எல்லாருக்கும் பொதுவில், ஹேக் கமிடிக்கு இச்சம்பவத்தைத் தீர்மானிக்க விட்டுவிடுவோம் என்றது ஆங்கில அரசாங்கம். ஹேக் கமிடிக்குப் பலமான ஆட்களை அனுப்பி பிரெஞ்சு போலீஸ் செய்தது நியாயம் என்ற தீர்ப்பைப் பெற்றது. சாவர்க்காரை பம்பாயில் விசாரித்துக் குற்றம் சுமத்தி அந்தமானுக்கு அனுப்பித் தீர்த்தனர். பிறகு சிலகடிதங்களே சாவர்க்கார் இதயத்தை எதிரொலித்துக் கொண்டிருந்தன. இந்து சமுதாயம் செய்த புண்ணியத்தாலேதான் சாவர்க்கார் திரும்பி வந்து விடுதலையும்பெற்று, இன்று வீரசாவர்காராக நாடெங்கும் தர்மாவேசப்பணி செய்து விளங்குகிறார். ஐயர் இப்போ

திருந்திருந்தால், சாவர்காருக்கு எவ்வளவோ உதவியா யிருக்கும். இந்து மகாசபையிடம் ஐயருக்கு உயிர். என்ன செய்வது? ஐயரின் வாழ்க்கையை இனித் தொடர்வோம்.

24. பார்ஸி கனவான்

ஒரு நாள் இரவு மூன்றுமணி. ஊர் உறங்குகிறது. ஒரு பார்ஸி கனவான் மாதாம் காமாவிடம் கட்டுக் காயிதங் களைத் தபாலிற் போடத் தருகிறான். இருவரும் ஏதோ இரகசியம் பேசுகிறார்கள். போதுமான நோட்டு களைக் கச்சையில் வரிந்து கட்டிக் கொள்ளுகிறான் கன வான். கைப்பெட்டியில் ஏதோ சில உடைகளை வைத்துக் கொள்ளுகிறான். கையில் ஒரு பிரம்பும் செய்தித்தாளும் வைத்திருக்கிறான். இருவரும் வாசலுக்கு வருகின்றனர். சுற்றிப் பார்க்கின்றனர். மாதாம் காமா அன்பு சொல்லி "எல்லாம் நான் பார்த்துக் கொள்ளுகிறேன், நேராக போம்" என்கிறாள். கனவான் தயாராயிருந்த ஒரு மூடு வண்டியில் புறப்பட்டு ரயிலேறுகிறான். ஸ்டேஷனில் நண்பர் அவனுடன் இரகசியம் பேசிப் பிரிகிறார். மறு நாட்காலை ஒற்றர் உளவு பார்க்கின்றனர். ஐயரைக் காணோம்; தப்பிவிட்டார்! எங்கும் தந்திகள் பறக் கின்றன. அப்போது ஐயர் பிரேஜிலுக்கு (Brazil) முன்பே புறப்பட்டுப் போய்விட்டதாக மனைவிக்கு எழுதிய ஒரு கடிதம் அவர்கள் கையில் சிக்குகிறது. உடனே எல்லா ஒற்றரும் தங்கள் கவனத்தை, கொலம்பஸ் கண்டு பிடித்த கண்டத்தை நோக்கித் திரும்புகின்றனர்.

25. ரோமில் ஐயர்

ஒற்றர் கண்ணில் மூன்றுமுறை பொடி தூவினார் ஐயர்! ஐயர் எங்கே? இதோ ரோமாபுரியின் கலையழகையும் சிலையழகையும் கண்டு கண்டு உள்ளங் குளிருகிறார்! இப்படித்தானே தமது தமிழ்நாடும் ஒரு காலம் இருந்த

தென்று எண்ணுகிறார். இந்த நாட்டார் நமது பாண்டிய சோழ மன்னர் சேவகத்தில் ஒரு காலம் இருந்ததை நினைக்கிறார். மறுபடியும் நமது நாடு நாயகம் பெற வேண்டுமென்று உணர்ச்சி மேலிடுகிறார். ஐயருக்கு லத்தீனும், பிரெஞ்சும் தெரியுமாதலால், இத்தாலிய மொழி சாதாரணமாக விளங்கலாம். இத்தாலிய புத்தகக் கடைக்குப் போகிறார் ஐயர். அங்கே தாந்தேயின் "திவீனு கொம்மேதியா" Divina Commedia (திருக் காட்சி) என்ற அரிய காவியத்துடன் ஓர் இத்தாலி-ஆங்கில அகராதியையும் வாங்கி இரண்டையும் கட்டிப் புதுவைக்கு அனுப்புகிறார். யார் விலாசத்திற்கென்பதைப் பிறகே அறிவோம்; இப்போது நேரமில்லை.

26. கான்ஸ்தாந்திநோபிள்

பார்ஸி கனவானாகிய ஐயர், மறுபடியும் கப்பலேறுகிறார்.

கான்ஸ்தாந்திநோபிளில் ஒரு சந்தேகப் பேர்வழி குறுக்கிடுகிறான். மூச்சுவிட்டால், ஒரு பேச்சுப்பேசினால், சட்டை இப்படி அப்படி விலகினால் ஆள் அம்பலம். ஐயர் நிதானமாகப் பெட்டியைத் திறந்து, ஒரு பழைய கணக்குக்கட்டைப் பார்த்துக்கொண்டு, 'ஏக், தோ, தீன்' என்று ஏதோ வாயில் கணக்கு மென்றுகொண்டிருந்தார். உருதுவில் 'ரஸ்டம் சேட்' என்றடித்த ஒரு தனிச் சீட்டையும் கையில் வைத்திருந்தார். "சரி, இவர் பார்ஸி வியாபாரி" என்று வந்த பேர்வழி சென்றுவிட்டான். கைரோ வந்தது. ஐயர் இறங்கி, கைப்பெட்டியுடன் ஊருக்குள் சென்று, முன்பே குறித்திருந்த ஓர் இடத்தில் தங்கினார்.

27. அல்லாஹு அக்பர்!

அங்கிருந்து மெக்காவுக்குச் சில இஸ்லாமியர் புறப்பட்டனர். அவர்களுடன் ஒரு பக்கிரியும் வந்து கப்பலேறினான். கப்பல் செங்கடலில் விரைந்தது. மெக்கா யாத்திரை

43194 V2:51y7 M81 3147

செய்து இந்தியாவுக்குவரும் பிரயாணிகள் ஏராளமாக ஏறினர். அவர்களிடையே பயபக்தியுள்ள ஒரு பக்கிரியைக் காண்கிறோம். அவனைச் சில விழிகளும் தள்ளியிருந்து கவனிக்கின்றன. ஆள் சும்மா இருக்கவில்லை. சும்மா "பிஸ்மில்லா" ஜபம் செய்கிறான்! மெக்காவைப் பார்த்து ஐந்து வேளையும் மண்டிபோட்டு "இலா இலாஹி இல்லல்லாஹு அலேஹு வஸல்லம்... அல்லாஹு அக்பர் ......ர்ர்!" "என்று இனிய குரலில் பாதியா ஓதுகிறான். இஸ்லாமியப் பிரயாணிகள் அவனுடன் உருதுவில் ஏதோ பேச்செடுக்கின்றனர். "போலோ பிஸ்மில்லா. அல்லாஹோ அக்பர்! துஸ்ரா நாம் ஹம்கோ அச்சா லக்தா நை" என்று மீண்டும் தொழுகையில் ஆழ்ந்து, அவர் பேச்சை அடக்கிவிடுகிறான். அவர்களும் நல்லவர், "அச்சா, ஸச்சா பக்கீர்" என்று, அவனுக்கு ரொட்டி தருகின்றனர். அவன் ஸாலாமுடன் வாங்கி உண்கிறான். ஏடனைத் தாண்டியாயிற்று; பம்பாய் வருகிறது. பக்கிரியின் அல்லாஹோ அக்பர் வலுக்கிறது. பம்பாய்த் துறைமுகத்தில் ஓர் இஸ்லாமியர், பக்கிரியை அழைத்துச் செல்லுகிறார். சில நாட்கள் அந்தப் பக்கிரியைக் காணோம்; நாம் திகைக்கிறோம். நாஸிக், நாகபுரி, பூனா முதலிய இடங்களிலெல்லாம் அலசிப்பார்க்கிறோம்; பலிக்கவில்லை. எங்கே பக்கிரி? அதோ கொளும்புத் துறைமுகத்திற்குக் கப்பல் வருகிறது. அதில் "மீண்டும் அல்லாஹோ அக்பர்" பலமாகக் கேட்கிறது. ஆனால் இங்கே ஓர் ஆள் பக்கிரியைக் குறித்துப் பார்க்கிறான். பக்கிரி மெக்காவை நோக்கி அல்லாஹு அக்பர் போட்டுக் கொண்டே தியானத்தில் ஆழ்ந்துவிடுகிறான். வந்த ஆள் "இது, ஏதோ மதப்பைத்தியம்" என்று சென்றுவிடுகிறான்.

28. புதுவை சேர்ந்தார்

புதுச்சேரி பியரில் (துறைமுகப் பாலம்) ஒரு பெஞ்சில் சில சுதேசிகள் (அரசியல் வாதிகள்) இந்துஸ்தானியில்

ஏதேதோ இரகசியம் பேசிக்கொண்டே அன்றுவரும் கப்பலைப் பார்த்து நிற்கின்றனர். யாரையோ அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். ஜோராகச் சட்டை போட்டு ஐரோப்பிய மோஸ்தரில் வரும் ஒரு கனவானையே அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். எதிர்பார்த்த நண்பர் வரவில்லை. மறுபடியும் ஏதோ இரகசியம் பேசிக்கொண்டு வீட்டிற்குச் செல்லுகின்றனர். இப்போது புதுவையில் கவிக்குயில் சுப்பிரமணிய பாரதியார், மண்டயம் ஸ்ரீநிவாசாசாரியார், அரவிந்தர் முதலிய தேசபக்தர் இருந்தனர். கடலூரிலிருந்து ஓர் இஸ்லாமியர் புதுவைக்கு வருகிறார். சிறிது நேரத்திற்கெல்லாம் அவர் ஸ்ரீநிவாசாசாரியார் வீட்டுமுன் நின்று, உள்ளே ஆவலாகப் பார்க்கிறார். "ஆசாரியாருடன் தனித்துப் பேச வேண்டும்; கொஞ்சம் கூப்பிடம்மா" என்கிறார் துருக்கர். தகவல் கேட்டு, ஆசாரியர் மாடியிலிருந்து ஓடி வருகிறார். ஆளைப் பார்த்து விழிக்கிறார். "தந்தேவந்ததோ" என்று இஸ்லாமியர் கேட்கிறார்; செய்தி விளங்கியது. "வாருங்கள், வாருங்கள்" என்று இஸ்லாமியரை ஆசாரியார் உள்ளே அழைத்துச் செல்லுகிறார். அங்கே பாரதியார் இருக்கிறார். உண்மையறிந்து, எல்லாரும் வியக்கின்றனர், மகிழ்ந்து பொங்குகின்றனர். ஆனந்தக் கண்ணீர் சொரிகின்றனர். ஏன்? ஐயர் புதுவைக்கு வந்துவிட்டார்!

29. குல்லாக் கதை

பார்ஸி கனவான் யார்? நமது ஐயரே! பக்கிரி யார்? நமது ஐயரே! ஐயர் பிறகுதான் அரவிந்தரைப் பார்த்தார். ஆஹா, ஆஹா! இதென்ன துமாஸ் நாவலில் வரும் அர்த்தாக்னன் சாமர்த்தியமும், சிவாஜி காலத்திலிருந்த மஹாராஷ்ட்ர ஒற்றர் சாமர்த்தியமும், ஐயர் சாமர்த்தியத்திற்கு எம்மட்டு என்று வியக்காதவர் இல்லை. [ஐயர் கெய்ரோவிலிருந்து தலையில் வைத்துவந்த துருக்கிக் குல்லா, குருகுலத்தில் இருந்தது. அதை எனக்கு அவர்

மகன் கிருஷ்ணமூர்த்தியே "இந்தோ பாருங்கள் ஐயா, ஐயா" என்று சிரித்துக் கொண்டே காட்டினன். அதை அவர் புத்தக சாலையில் நெப்போலியன் கடிதங்களுக்கு மேலே மறைவாக வைத்திருந்தார். அந்த அருமையான குல்லாவை நான் ஒருநாள் தலையில் போட்டுக் கொண்டு, கார்லலின் பிரெஞ்சுப் புரட்சி படித்துக் கொண்டு, என்னை மறந்திருந்தேன். திடீரென்று மெல்லிய சிரிப்புக் கேட்டது. திரும்பிப் பார்த்தேன், ஐயர்! உடனே குல்லாவை எடுத்த இடத்தில் வைத்துவிட்டு, "இந்தக் குல்லாவே இன்று உங்களுடன் வசிக்கும் பாக்கியத்தை எனக் கீந்தது; ஆதலால் அதை உச்சிமேல் வைத்துக் கொண்டாடினேன்! சுதந்திர இந்தியக் காட்சிசாலையில், இக் குல்லா முதல் இடம் பெறவேண்டும்" என்றேன். பிறகு சாப்பிட உட்கார்ந்தோம். ஐயர் மறுபடியும் "இன்ன கைத்துக் குல்லாக் கதை தெரியுமா? என்று தொடங்கினர். "தங்கள் வாயினல் கேட்கவேண்டும்" என்று மன்றாடினேன். மேற்சொன்ன அதிசயச் சம்பவத்தை மிகவும் நிதானமாக, எவ்விதமான வியப்பும் இன்றியே சொன்னர். "பம்பாயில் இறங்கி, எங்குச் சென்றீர்கள் என்று கேட்டேன். "உள் நாட்டில் சில முக்கியமான கா்ரியங்கள் இருந்தன." என்று பேச்சை நிறுத்தினர். ஐயர் நாஸிக் சென்றது* மட்டும் உண்மை. அல்லாஹபாத் காங்கிரஸிற்குச் சென்றதாகச் சொல்லுவர். அந்த விஷயம் தெளிவாகத் தெரியவில்லை. ஐயர் விரும்பி யிருந்தால் சென்றிருப்பார். வட இந்தியாவையும் வட்ட மிட்டிருப்பார். ஆனல் அவர் ஜூலை மாதம் பாரிஸ் நகரை விட்டுப் புறப்பட்டு, செப்டம்பர் மாதமே புதுவைக்கு வந்தார். அப்போது காங்கிரஸ் கூடியிருக்க நியாயமில்லை. எமன் $ விழிகளைத் தப்பி வந்த ஐயரை ஸ்ரீ ஆசாரியார் வீட்டில் விட்டு, நாம் வரகனேரிக்குச் செல்வோம்.

---

* அப்போது சாவர்கார்-விசாரணை நடந்தது. அவர் கப்பலிலிருந்து தப்பிய புகழ் உலகெல்லாம் தெரிந்து வியக்கிறது என்பதை ஒரு சீட்டு மூலம் ஐயரே அறிவித்தார்.

$ ஐயர் புதுவைத் துறையில் இறங்கவில்லை; அங்கே ஏராளமான ஒற்றர் இருப்பது அவருக்குத் தெரியும். ஆதலால், கடலூரில் இறங்கியே ரஸ்தா வழியாக வந்தார்.

30. துன்பக் கண்ணீர்!

இந் நிலையில் ஐயர் குடும்ப நிலை யென்ன? பிரமசாரியும், சந்நியாசியும் இப்படித் தியாகம் செய்திருந்தால் தனி ஆளோடு போகும், கவலையில்லை. குடும்பம் ஒன்று இருக்கையில் இவ்வளவு வைராக்கியமான தேசவெறி இருப்பது மிகவும் அபூர்வமாகும். பங்கிம் சந்திரர் இயற்றிய ஆனந்தமட வீரர்போல, ஐயர் தேசவிரதம் பூண்டார். "நமது மணி சீமைக்குப் போயிருக்கிறன்; இனிக் கஷ்டம் விடிந்தது. "ஜாம் ஜாமென்று பாரிஸ்டர் வேலையில் பணம் பணமாக அள்ளிக் கொட்டுவான்" என்று தாயார் மனப்பால் குடிக்கிருள். "பையன் புத்தி சாலி, பாரிஸ்டர் தேறியதும் திருச்சியில் ஒரு பெரிய பங்களா கட்டி, மோட்டார் வாங்கி, லக்ஷம் லக்ஷமாகச் சம்பாதித்துப் பெருவாழ்வு வாழ்வான்" என்று பகற் கனவு காண்கிருர் தந்தை! இளம் மனைவி, "நமது கணவர் நாளையே பாரிஸ்டர் தொழிலில் சீரும் சிறப்புமாக வாழ் வார். நமது பெயருக்கேற்றபடியே எல்லாச் சௌபாக்யங் களையும் அனுபவிக்கலாம். இனி நமக்குக் குறையில்லை" என்று பிரிவுத் துயரையும் சற்று மறக்கிருள். "உனக் கென்னடி யம்மா கணவன் பாரிஸ்டராகி நாளையே கோட்டை கட்டப்போகிருர். நீதான் பாக்யலக்ஷ்மி" என்று உறவினரும் தோழிமாரும் துதிபண்ணும்போது, மனைவிக்கு மனங்குளிருகிறது. இன்பக் கனவுகள் நாளுக்கு நாள் வளர்கின்றன. ஐயரின் நாலுவயது மகள், பட்டு, ஐயரைப் பார்த்ததில்லை; "சீமையப்பா" என்ற பெயரைத் தான் அறிவாள். "அம்மா! சீமையப்பா எப்படி யிருப்பா? எப்போ வருவா? எனக்குப் பக்ஷணம் கொண்டு வருவாரோ?" என்று கேட்கிருள். "நிரம்பக் கொண்டு வருவாரடீ கண்ணே; நீ சமர்த்து" என்று ஒரு முத்தமிட் டுத் தாயார் குழந்தையை மகிழ்விக்கிருள். குழந்தையும்

சீமையப்பா கனவில் ஆழ்ந்திருக்கிறது. லண்டனிலிருந்து 1908 மார்ச்சு மாதம் வரையில், அன்பு ததும்பும் கடிதங்கள் வருகின்றன. அவற்றை அன்பு ததும்பப்படித்து, மனைவி தன் கொழுநன் பிரேமையின்பத்தில் மூழ்கிகிற்கிருள்.

மாந்தர் எண்ணமெல்லாம் பலிக்கிறதா? பூக்கும் மாம் பூக்களெல்லாம் கனியாகின்றவா? ஆடிக்கால மரம்மாதிரி, மனிதக் கனவுகளை ஒவ்வொன்ருக சுகதுக்கச் சூருவளி பறித்துக்கொண்டு செல்லுகிறது. 1908 ஜூன்மாதம் முதல் லண்டனிலிருந்து வரும் கடிதங்களின் ஸ்வரமே மாறியது. "தியாகமே மனிதவாழ்வின் பயன், வீடு பெரிதா, நாடு பெரிதா? நாடே பெரிதெனக்கொண்டு பாரத தேவிக்கே எனது வாழ்வைப் பலிதானம் ஆக்கிவிட்டேன். நீங்களும் தேசபக்தியை வளர்க்கவேண்டும். நாம் வீர வாழ்வை மேற்கொள்வோம். ராணி லக்ஷ்மீபாயைப் போலிருக்கவேண்டும்" என்ற தோரணையில் கடிதங்கள் வந்தால், புதிதாக இந்த விஷயங்களைக் கேட்பவருக்குத் தூக்கிவாரிப் போடாதா? மனைவி முதலில் மனம் கலங்கிஞள். பிறகு "நமது மணளர் நம்மை அப்படியெல்லாம் கைவிட மாட்டார்; அவர் என்ன சொல்லுகிருரோ அதைச் செய்வோம்" என்று மனந்தேறிஞள். தமது குழந்தை நன்ருகப் பேசுகிறதென்று கேள்விப்பட்டார் ஐயர். "பட்டு, நீ தினம் எழுந்ததும் 'வந்தே மாதரம்' சொல்லவேணும்." என்று அருமையாகக் கட்டளையிட்டார். பட்டுவுக்குச் சீமையப்பாமேல் உயிர். "அம்மா! நான் அப்படியே செய்கிறேன்; அப்பாவுக்கு எழுது" என்று உத்தரவிட்டு, குழந்தை காலை மட்டுமன்று, சதா வந்தே மாதர ஜபம் செய்ய ஆரம்பித்துவிட்டது. இச் சமயம் லண்டன் ஆபத்து இவர் வீட்டு வாசலுக்கே வந்துவிட்டது. இக் குடும்பத்தையே ஒற்றர் வளைத்துக்கொண்டு கண்கொட்டாமல் கவனித்து வந்தனர். இவர்கள் தும்மு

வது இருமுவதுகூட அவர்களுக்குத் தெரியும்; தந்தை, தாமுண்டு வேலையுண்டு என்றிருப்பவர், "ஹா, கெடுத்தானே குடியை, தேசமாம், தியாகமாம், வீரமாம்! ஐயோ, பிள்ளையார் பிடிக்க அனுமாராய் முடிந்ததே. இதற்கா இவன் லண்டன் சென்முன்! என்னகாலம்! ஏதோ கிராமத்தில் இரண்டாம்பேருக்குத் தெரியாமல் அமைதியாக, மானமாக வாழ்ந்துவந்தோம். இவனுல் நமக்கு ஒற்றர்தொல்லை வந்ததே" என்று பொருமுகிமுர். இச் சமயம் பட்டு, வந்தேமாதரத்தைப் பலமாகச் சொல்லுகிருள். குழந்தைக்கு அதுவே மந்திரமும், விளையாட்டும், பாட்டுமானது. காலையில், எழுந்து பிஞ்சிளஞ்செல்வி 'அம்மா! வந்தேமாதரம்' என்னும்போது எவ்வளவு இனிமையாயிருக்கும்! ஐயர் இருந்தால், அக்குழந்தையைத் தழுவிக் கொஞ்சுவார். தாத்தாவோ "ஹூம் சொல்லக் கூடாது. திறக்காதே வாயை. போலீஸ்காரன் பிடித்துக் கொண்டுபோய் மொச்சைக்கொட்டைப் பாராவில் போட்டுவிடுவான்" என்று குழந்தையை மிரட்டுகிமுர்; அதட்டுகிமுர், கண்டிக்கிமுர், வாயைப் பொத்துகிமுர். பட்டு, தாத்தா மிரட்டலுக்குப் பயப்படவில்லை. ஐயர் மகளல்லவா? அவள் "வந்தேமாதரம் வந்தேமாதரம்" என்று பிடிவாதமாகச் சொல்லி வந்தாள். தாத்தா, "அப்படிச் சொல்லக் கூடாது" என்று மீண்டும் கண்டித்தார். "ஏன் தாத்தா! வந்தேமாதரம், வந்தேமாதரம்ஞ, தாயே நமஸ்காரம் என்றுதானே அர்த்தம். அதைச் சொன்னுல் என்ன தப்பிதம்? சீமையப்பா அதைச் சொல்லவேணும்னு எழுதியிருக்கிமுரே. உனக்குக்கேட்கப் பிடிக்காட்டா, நான் வேணும்ஞ மனசுக்குள்ளே சொல்லிக்கிறேன். வந்தேமாதரம், வந்தேமாதரம்" என்று ஐயர் குழந்தை சொன்ன பதிலை, நமது நாட்டில் ஒவ்வொரு குழந்தையும் அறியவேண்டும். "அப்பனைப்போலவே பெண்ணும் பிடிவாதம்" என்று தாத்தா முணுமுணுத்தார். பட்டு வந்தே

மாதரம் சொல்லும்போது காதைமூடிக்கொண்டு அவர் வேறுபக்கம் திரும்பிச் செல்வார். பட்டுவின் தேசாபிமானம் தாத்தாவின் சுயாபிமானத்தை வென்றது!

31. "பிதுரார்ஜிதம் வேண்டாம்"

பாக்யலக்ஷ்மி அம்மாளுக்கு வீடுபிடிக்கவில்லை; கவலை பெருத்தது. இளம் உள்ளம் குழந்தையுடன் 'நாளை என்ன நேரிடுமோ' என்று தவியாய்த் தவித்துக்கொண்டிருந்தது. இச்சமயம் லண்டனில் 'இந்திய வீட்டு' வாலிபரின் வீரப்பாய்ச்சல்கள் வலுத்தன. அவற்றிற்கேற்றபடி இந்தியாவில் அடக்குமுறைகள் சண்டதாண்டவமாடின. சாதாரணமாக வந்தேமாதரம் என்றாலே கண்காணிப்பு. அதிலும் பலாத்கார இயக்கத்தில் ஈடுபட்டவர்க்கு வரும் இடர்களைச் சொல்லிமுடியாது. "மகன் இனி நமக்கு உதவமாட்டான். இவன் பண்ணும் காரியத்தால் நமக்கும் சனியன் பிடிக்கும்போலிருக்கிறதே. புரட்சிக்காரர் சொத்துக்களைப் பறிமுதல் செய்வார்களே. இருக்கிற ஆஸ்தியும் நாஸ்தியானால் என்ன செய்வது?' என்று பதறினார் தகப்பனார். வக்கீல்களை யோசனை கேட்டார். மகனுக்கு உடனே ஓர் அவசரக் கடிதம் எழுதினார். "நீ ஏதோமாதிரி திரிகிறாய்; எங்களுக்குப் பிடிக்கவில்லை. நீ எக்கேடு கெட்டுப்போ. இளையபிள்ளை பேருக்கே சொத்தை எழுதிவைக்கப் போகிறேன். எனக்கு இருக்கிற சொத்திற்கும் ஆபத்து வரும்போலிருக்கிறது. நீ உடனே "என்னு குடும்ப ஐவேஜிக்கும் எனக்கும் எவ்வித பாத்தியமும் இல்லை. அது எனது தகப்பனாரின் சுயார்ஜிதம் என்று ஒரு பத்திரம் எழுதியனுப்பவேண்டும்" என்று வற்புறுத்தினார். லட்சம்லட்சமாக வருமானம்வரும் பாரிஸ்டர் பட்டத்தையே துரும்புபோலெடுத்தெறிந்து, உடல் பொருளாவியெல்லாம் பாரததேவியின் வீரவேள்விக்கே அருதியாக வழங்கிய ஐயர், இதற்கெல்லாம் கலங்குவாரா? தந்தை தமது செல்வத்தை இளையமைந்தனுக்கே தர

விரும்பினர். ஐயர் என்ன செய்தார்? கம்பன் வாக்கினல் அவர் உணர்வை அளப்போம்:

"மன்னவன் பணியன் ருகில்,
நின்பணி மறப்பேனே? என்
பின்னவன் பெற்ற செல்வம்
அடியனேன் பெற்ற தன்றோ?
என்னிதின் உறுதி? அப்பால்
இப்பணி தலைமேற் கொண்டேன்;
மின்னெளிர் கானம் இன்றே
போகின்றேன்; விடையுங் கொண்டேன்?"

இராமர் மகுடந் துறந்து தம்பிக்கே அரசை விட்டுத் தந்தைசொல் தாங்கிக் காட்டிற்குப் போனர். ஐயரும் அமைதியாகப் பட்டம் பொருள் அனைத்தையும் துறந்து, பிதுரார்ஜிதத்தையும் தூசிபோல் ஒதுக்கி, "நான் மன்னவன் பணி செய்வதில்லை. சன்னது பெற்று, இனிப் பிரிட்டிஷ் கோர்ட்டில் ராஜ விசுவாசம் பூண்டு, பணி செய்யப் போவதில்லை. இதோ உன் பணி செய்கிறேன். எனக்குரிய சொத்தையும் என் தம்பி அனுபவிக்கட்டும். அது நானே சொத்தை யாள்வதற்குச் சமானமாகும். நான் வீர விரதம் பூண்டேன்; தியாக மென்னும் காட்டிற் புகுந்தேன். அதில் எத்தனையோ ராக்ஷஸ பலங்களை எதிர்த்துப் போராடவேண்டி யிருக்கும். அவ்வாறே செய்யத் துணிந்தேன்" என்று மறு தபாலிலேயே தந்தையின் கட்டளையை மனமார நிறைவேற்றினர். இச் சமயமே ஐயர் பரீக்ஷையில் தேறிப் பட்டத்தைப் பதரென ஒதுக்கித் தள்ளி, முதல் ஒத்துழையாதாராக விளங்கினர். "நான் எனது நாட்டிற்குப் பூரண சுதந்திரம் வேண்டுகிறேன். பிரிட்டனுக்கும் அதற்கும் உள்ள பந்தத்தை அறுத்தெறிய உறுதி கொண்டுள்ளேன். ஆதலால் ராஜ விசுவாச சத்தியம் செய்து, சட்டத் தொழில் செய்து பிழைத்தல் எனது கொள்கைக்கும் மனச் சாட்சிக்கும் விரோ

தம்" என்று கண்டிப்பாக விளக்கினர். ஐயோ கைக் கெட்டியது வாய்க்கெட்ட வில்லையே என்று அந்த ஏழைக் குடும்பம் வருந்தியதை அவரவர் அனுபவித்தால் தெரியும்!

32. பட்டு பறந்தாள்

ஒற்றர் தொல்லைக்குப் பயந்து, பாக்கியலக்ஷ்மியம் மாள் பட்டுவுடன் அத்தான் வீட்டில் அடைக்கலம் புகுந்து மறைவாக வசித்தாள். கையில் பணமில்லை. வற்றிய குளத்தில் அன்னம் வருமா? லண்டன் செய்தி தெரிந்ததும் உறவினர் அபிமானம் எல்லாம் பறந்து போனது. "அப்படியாமே, சர்க்காராமே, போலீஸாமே, சன்னது வேண்டானுட்டாராமே, வீரமாம் வந்தேமாதரமாம்...இது என்னடீ!" என்று ஊரில் பேசத் தொடங்கினர்.

இந்த நிர்க்கதியான சந்தர்ப்பத்திலா சாவும் சோதிக்க வேண்டும்? அருமை குழந்தை பட்டுவுக்கு வயிற்றுக் கடுப்பெடுத்தது. வைத்தியரைக் கூப்பிட்டுப் பார்ப்போ மென்றால் பயம். யாருக்கு? அம்மாளுக்கன்று, அத்தா னுக்குத் தான். புரட்சிக்காரர் மனைவிக்கு இடந் தந்த குற்றத்திற்காகத் தம்மைப் போலீஸார் சிறையிட்டால் என்ன செய்வது?" என்று பயப்படுவது அக்காலத் தில் சகஜந்தான். கால நிலை அவ்வளவு கடுமையா யிருந் தது. வைத்தியரைக் கூட்டி வந்தால், ஆள் இருப்பது தெரிந்துவிடு மல்லவா? ஆதலால் கடுப்பால் தவிக்கும் குழந்தையின் துன்பத்தைப் பார்த்துக் கொண்டே பெற்ற தாய் தெய்வத்திற்கு முறையிட்டழுதாள். மாந்தர் மன மும் இளகவில்லை. தெய்வமும் ஏனென்று கேட்க வில்லை. "சீமையப்பா, தினம் நான் வந்தேமாதரம் சொல்லு கிறேன். வந்தேமாதரம்...வந்தேமாதரம்..." என்று குழந்தை பிரக்ஞையற்றது. பிஞ்சுடல் தாய்மடியில் விறைத்துப் போனது. ராணா ப்ரதாபசிங் வறு

மையால் வருந்தினன். அச் சமயம் ஓர் அதிதி வந்தான். ராணு மகள் சம்பாவதி தான் இரண்டு நாள் பட்டினிக்குப் பிறகு சாப்பிடப் போன ரொட்டியை அதிதிக்குத் தந்து, பசியால் துடித்து உயிர் நீத்தாள். தேசத்திற்காக உயிர் கொடுத்த இந்த வீரச் சேய்களை நாம் நினைக்கவேண்டும். மாத்யூ ஆர்னல்ட் எழுதிய "ஸோரபும் ருஸ்தமும்" என்னும் சோகக் காவியத்தைப் படித்தவருக்கே, பட்டுவை யிழந்த தாயின் துயரம் இம்மட்டென்று தெரியும். இறந்த மகன்முன் தந்தை ருஸ்தம் புலம்பிக் கண்ணீர் வடித்தான். நிர்க்கதியாக, மருந்து கொடுக்கக் கூட வகையில்லாமல் இறந்த மகள்முன், தாய் வடித்த கண்ணீரை அளக்க முடியுமா? இத்தகைய உத்தமியர் கண்ணீரெல்லாம் பாரத தேவியின் பாதாபிஷேக நீர் என்றே மதிப்போம். ஆம் கண்ணீர் விட்டுத்தான் நமது சுதந்திரப் பயிர் வளர்ந்தது.

33. கடிதங்கள் கலக்கின

புண்ணில் எரி பாய்ந்தது போலே மகளைப் பறி கொடுத்த துக்கத்தில் மற்றொரு துன்பம் புகுந்தது. கர்சான் வில்லி கொலை, ஸாவர்க்கார் சிறைவாஸம், ஐயரின் அக்ஞாதவாசம் எல்லாம் வீட்டிற்குத் தெரிந்தன. சரி இனிக் கணவனை உயிரோடு பார்க்க மாட்டோம் என்று மனைவி, அம்பு பட்ட அன்னம் போலத் தவித்தாள். அத் தவிப்பை இனி வந்த கடிதங்கள் அதிகமாக்கின. பாரிஸிலிருந்து அம்மாளுக்கு அடிக்கடி ஐயர் கைபெழுத்திட்ட கடிதங்கள் வந்துகொண்டே யிருந்தன. "நான் இனி இந்தியாவிற்கு வர முடியாது." என்றொரு கடிதம் வரும். "என்னை இனி எதிர்பார்க்க வேண்டாம்" என்றொன்று தொடரும். "நான் பிரான்ஸிலேயே இருக்கத் தீர்மானித்து விட்டேன்" என்றொரு செய்தி வரும். இப்படி அம்மாளைக் கடிதங்கள் கலக்கின. முடிவில் "நான் பாரிஸில்

தான் இனி வசிக்கப் போகிறேன். முடிந்தால் நீயும் இங்கே வரவேண்டியது." என்றோர் கடிதம் வந்தது.

"வாரா தொழியான் எனும் வண்மையினால்
ஓரா யிர கோடி யிடர்க்கு உடையேன்."

என்னும் கம்பன் வாக்கே பாக்கியலக்ஷ்மியம்மாள் நிலைமை யானது. இன்று வருவார் நாளை வருவார் என்றேங்கி எதிர்பார்த்த நாள் போய், 'வரவே மாட்டார்' என்ற கலக்கம் வந்தது. "சரி, நீ என்னிடம் வா" என்றதும் கலக்கம் விட்டது. மனம் பாரிஸுக்குப் போகத் துடித் தது. யார் கொண்டு விடுவர்? பணம்? வழித் துணை? அவரை லண்டனுக் கனுப்பிய தயாளுவே இச் சமயம் அம்மாளுக்கும் இரங்கி "சரி புறப்படுவோம்" என்று முன்னின்றார். பயணத்திற்கு எல்லாம் தயாராய் விட் டன. அந்தோ அச் சமயம் பசுபதி ஐயருக்கே ஒரு விபத்து நேர்ந்தது! குதிரை சவாரி செய்தபோது, கீழே விழுந்து கால் பிசகிப் போயிற்று. பட்டகாலி லேயே படுகிறது......வினைப் புண்! பயணம் நின்றது. இச் சமயம் "வாவா, வா" என்று ஐயர் கடிதங்கள் மேன்மேலும் வற்புறுத்தின. மனம் எங்கே வேண்டுமா னாலும் போகும். இதோ பாரிஸுக்குப் போயிற்று! ஸ்தூல சரீரமல்லவா கப்பலேறிச் செல்ல வேண்டும்... அதற்கு வழி? இல்லை. மறுபடியும் பிரிவுத் துயரைப் பொறுத்துக் கொண்டு, அம்மாள் வாடிப் போனாள். பிறகு "நான் தென்னமெரிக்காவிலுள்ள பிரேஜிலுக்குப் போகி றேன்; இதோ புறப்பட்டு விட்டேன். அங்கே தாராள மாகக் குடி யேறலாம். தமது தென்னிந்தியர் சிலரையும் சேர்த்து அப்பா அனுப்பட்டும்" என்று பலமாக அடுத் தடுத்து, பிரேஜில் குடியேற்றக் கடிதங்கள் வந்துகொண் டிருந்தன. இறுதியில் ஒரு கடிதம் இடிபோல் வந்தது. அஃது ஐயர் கடிதமன்று: "உன் கணவனை நான் வெகு தூரதேசத்திற்கு அனுப்பி யிருக்கிறேன். எங்கு நான்

அனுப்பி யிருக்கிறேன் என்று நீ கேட்கக் கூடாது. பொறுத்துக் கொண்டிருக்க வேண்டும்." என்று ஸ்ரீமதி காமா பாரிஸிலிருந்து எழுதினாள்.

மனைவியின் மனம் இடிந்து போயிற்று. ஐயரை இனி மானஸீகமாகத்தான் பார்க்க முடியும்- நமது பாக்கியம் அவ்வளவுதான் என்று துக்கசாகரத்தில் ஆழ்ந்தினாள் பத்தினி.

" துயிலெனக் கண்கள் இமைத்தலும் முகிழ்த்தலும்
[துறந்தாள்
வெயிலிடைத் தந்த விளக்கென வொளியிலா மெய்யாள்;
மயிலியற் குயில் மழலையாள், மானிளம் பேடை
எயில் எயிற்றுவெம் புலிக்குழாத் தகப்பட்ட தன்னாள்."

என்று அசோக வனத்தில் சத்தியாக்கிரகம் இருந்த சீதையைக் கம்பன் சோகச் சித்திரமாக வரைந்து காட்டினான். அவ்வாறே ஆயிரம் கவலைப் புலிகள் சூழ வருந்தினாள் அம்மாள். அம்மாளுக்குத் தெய்வ பக்தி அதிகம். தனது துயர்களை முறையிட இனி ஒருவனே உண்டு...சர்வாந்தர்யாமியான பரமாத்மனே...! அவனிடமே தனது துக்கமெல்லாம் முறையிட்டாள் அம்மாள். துன்பத்திற்கும் எல்லை யுண்டு.

34. "புதுச்சேரிக்கு வா"

தியாகிகளைப் பகவான் எவ்வளவுதான் சோதிப்பான்!

இதோ சோதனை தீர்ந்தது. 'ஐயராவது இனி வருவதாவது. என்றிருந்த சமயத்தில், வயிற்றில் பால் வார்த்தது போல, ஒரு கடிதம் வந்தது. "நான் புதுச்சேரிக்கு வந்திருக்கிறேன். புறப்பட்டு வா..." ஆ...கலி தீர்ந்தது. உயிர் வந்தது?

" இருந்துபசியால் இடர் உழந்தவர்கள் எய்தும்
மருந்துமென லாகியது அறந்தவரை அண்மும்

விருந்துமென லாகியது ; வீயும் உயிர் மீளும்
மருந்து மென லாகியது வாழிமணி வாழி ;"

என்று அந்த மணிக் கடிகத்தை ஆழி கண்ட தேவிபோல் கண்ணில் ஒற்றிக் கொண்டாள். நமது வீர மணி, சுப்பிர மணி வாழி, வாழி ! அம்மாள் உடனே ஐயரிடம் போய்ச் சேர்ந்தாள் !

மேற்சொன்ன கடிதங்களின் உண்மை யென்ன? "வரமாட்டேன், பாரிஸில் இருப்பேன்; நீ வா...பிரேஸி லுக்குப் போய் விட்டேன். முடிவில் தூரதேசத்திற்கு..." என்று வந்த கடிதங்களெல்லாம் என்னவாயின ? பாரிஸை விட்டுப் புறப்படு முன்பு, காமாவிடம் ஐயர் ஒரு கட்டுக் கடிதங்களைத் தந்தார். அக் கடிதங்களே அம்மாள் பெற் றவை. தாம் சூயஸ் வழியாகப் புதுவை செல்வதை ஒற்றர் அறியக் கூடாது. என்ன வேஷம் போட்டாலும் அகப் பட்டுக் கொண்டால், அந்தமான் அல்லது தூக்குமேடை தான் கதி. தமது கடிதங்களை ஒற்றர் உடைத்துப் பார்க் கின்றனர். இந்தியா செல்லப் போவதில்லை என்றால், அந் தப் பக்கம் நாடமாட்டார்கள். பாரிஸிலே இருப்பேன் என்றால், அந்த நகரத்திலேயே ஐயரைக் கண்காணிப்பர். பிரேஸில் என்றதும் இங்கிலாந்திலிருந்து அமெரிக்கா செல்லும் மார்க்கத்திலேயே கண்ணு யிருப்பர். இந்தியா மார்க்கத்தில் கவனமில்லாதிருப்பர். இதுவே ஐயர் செய்த தந்திரம்.

ஆங்கில எத்தருக்குச் சரியாக தமிழ் எத்தரான ஐயர் புதுவையில் வந்து குதித்தார். ஐயர் மூன்று இடத்திற் குத் தகவல் எழுதினர். ஒன்று மனைவிக்கு. மற்றொன்று தம்மை உலகெங்கும் வலை போட்டுத் தேடி ஏமாந்து நிற் கும் சர்க்காருக்கு. மூன்றாவது தன்னை ஆதரித்த அன்னை காமாவுக்கு. "சை, பிரேஜில் மார்க்கமல்லவா தேடி ஏமாந் தோம் ; பேர் வழி இங்கல்லவா இருக்கிறார்" என்று

சர்க்கார் அறிந்து, வியந்து சினந்தது. இனி ஐயரின் புதுவை வாழ்க்கையில் நடந்த பயங்கரமான சம்பவங் களைக் காண்போம்........

35. ஐயரின் தேசபக்தி

நீங்களெல்லாம் ஏழை படும்பாடு என்னும் நாவலைப் படித்திருப்பீர்கள். அதில் ஜாம்வல்ஜான் என்னும் தயாள வீரன் சமூகக் கொடுமையாலும் ஒற்றர் கொடுமையா லும் பட்ட பாட்டை மயிர் கூச்சலெடுக்கக் காண்பீர்கள். அதைவிடப் பன்மடங்கு பயங்கரமான வியப்பைத் தரும் ஐயரின் புதுவை வாழ்வு. ஜாம்வல்ஜான் இடம் மாறி இடமிருந்து, ஏராளமான பணம் வைத்துக்கொண்டு தப் பிப் பிழைத்தான். ஐயர் இருந்த இடத்தில் இருந்து கொண்டு, பரம ஏழையாய், தேச பக்தியே ஆறுதலாய் வாழ்ந்து, எத்தனையோ இடர்களைப் பொறுத்து வென்றார். ஐயரை ராணு பிரதாப், குரு கோவிந்தன் போன்ற வீர ருடனே வைத்து எண்ண வேண்டும். புதுவையிலும் ஐயர் இரண்டு நோக்கத்துடனே யிருந்தார். ஒன்று, முதன்மையாகக் கலை வளர்த்துத் தமிழ்ப் பணி புரிதல்; மற்றொன்று தமக்கியன்ற தேசப்பணி செய்தல்.

ஒருநாள் கம்ப ராமாயணத்தில் நாகபாசப் படலம் படித்துக் கொண்டிருந்தோம். அதில் ஹனுமான் தன் னைக் கட்ட வந்த இந்திரசித்தைப் பார்த்துச் சொல்லு கிறன் :

“நாளுக் கெல்லையும் நிருதராய் உலகத்தை நலியும்
கோளுக் கெல்லையும், கொடுந்தொழிற் கெல்லையும், கொடியீர்
வாளுக் கெல்லையும் வந்தன. வகைகொடு வந்தென்;
தோளுக் கெல்லையொன் றில்லையென் றுறுதியாய்ச் சொன்னன் !”,

என்ற பாட்டை நான் படித்ததும், ஐயர் தோளை ஒரு குலுக்குக் குலுக்கிக்கொண்டு, அந்த மாதிரியான உறுதி

நமது ஜனங்களுக்கு இருக்க வேண்டும். முன்னே வாளைத்தான் நம்பி யிருந்தோம். வேறு வழி நமக்குத் தோன்றவில்லை, மஹாத்மாவின் சத்தியாக்கிரகத்தால் அந்த வாளுக்கும் எல்லை வந்துவிட்டது. அதனால் நமது புஜபலம் பயனற்றதென்பதில்லை. ஆத்ம சக்தியுடன் புஜ பல பராக்ரமும் நமக்கு இருக்க வேண்டும். எதிரியிடம் தர்மம் இருக்குமட்டும், நமது பக்ஷம் நியாயம் இருக்குமட்டும், ஆத்ம பலத்தைக் கொண்டு உரிமை நாட்டுவோம். ஆனால் எதிரி, இவர்கள் சொத்தை அஹிம்ஸாவாதிகள் என்றெண்ணாமல், அர்ஜுனன் பீமன் ஹனுமான் முதலிய இதிஹாச புருஷர்களைப் போன்ற பலவான்களாகவும், அசகாய சூரர்களாகவும் நம்மவர் இருக்க வேண்டும்" என்றார். அதுவே ஐயர் கொள்கை. ஐயர் வைரவுறுதி கொண்டவர். தருமம் தவறாதவர், உயிர் போனாலும் அதர்ம வழியில் கால் வைக்க மாட்டார்; தருமத்தைக் காக்க உயிர் தரவும் அஞ்ச மாட்டார். அச்சம் என்பதே அவர் அகராதியில் இல்லை, திலகரின் மனவுறுதி, மஜீனியின் அபார தேசாபிமானம், கரிபால்டியின் தைரியம், நெப்போலியனின் தன்னம்பிக்கை, கிராம்வெல்லின் துணிவு, ஸன்யாத்ஸன்னின் உத்யமம், ராணாபிரதாபின் தேசாவேசம், முதன்மையாகக் குரு கோவிந்தனின் தருமாவேசம் இவையெல்லாம் ஐயரிடம் நிரம்பக் காணலாம்.

36. ஐரோப்பியருடன் கலையுறவு

ஐயரை நன்றாக அறியவேண்டுமானால் அவரது விசாலமான அன்பை அறியவேண்டும். சர்வஜனப்பிரேமையிலும் ஐக்கியத்திலும் ஐயர் ஆர்வங்கொண்டவர். ஹிந்து, முஸ்லிம், கிறிஸ்து, பார்ஸி, விதேசி என்ற வேறுபாடில்லாமல், அவர் அனைவரையும் மதிப்பார்; அன்புசெய்வார். அவர் ஆங்கிலேயரை வெறுக்கவில்லை. ஆங்கிலக்கவிகள், கலைவாணர், புலவர், மேனாட்டு வீரர், தத்துவஞானிகள்,

விஞ்ஞானிகள் இவர்களிடம் அவருக்கு அபாரமான மதிப்பும் அன்பும் உண்டு. அவர் கம்பனை வியப்பதுபோலவே, ஷேக்ஸ்பியர் ஹோமர் தாந்தே முதலிய கவிகளையும் வியப்பார். "வசனநடையில் ஆங்கில பிரெஞ்சு ஜர்மன் நூல்களுக்கு இணையேயில்லை. அந்தமாதிரி நடையழகு இனிமேல்தான் தமிழில் உண்டாக வேண்டும்" என்பார். நெப்போலியனையும் கிராம்வெல்லையும், ஸீஸரையும் அவர் உச்சிமேல் வைத்துப் போற்றுவார். மார்கோனி, எடிசன் போன்ற விஞ்ஞானிகளைக் கொண்டாடுவார். ஒருநாள் புக் ஆஃப் நாலெட்ஜ் என்றநூலில் மின்சாரப்பகுதியைப் படித்துக்கொண்டிருந்தேன். ஐயர் "பாரதி, இதை முழுதும் தர்ஜுமாப்பண்ணி அப்படியே பாலபாரதியில் வெளியிடவேண்டும். ஆ! இதைப்போன்ற நூல்கள் என்று நமது தாய்மொழியில் உண்டாகப்போகின்றன. இந்த விஷயத்தில் நாம் ஆங்கிலேயரிடம் கற்றுக்கொள்ள வேண்டியவை அனந்தம்" என்றார். ஏதாவது அழகான பேனா, பென்சில் பெட்டிகள் ஆயுதங்கள் முதலியவற்றைக் கண்டால், "நிபுணர்கள், நிபுணர்கள்........ வெள்ளைக்காரரின் தொழில் திறமையைக் கண்டு நமது உள்ளம் பிரமித்து நிற்கிறது. பௌதிக ரசாயன கணித யந்திர சாஸ்திரங்களை நாம் அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும்" என்பார். பால பாரதிக்குக் காகித பேல் வருங்காலத்திலெல்லாம், நமது தேசத்தில் இந்தத் தொழில்களெல்லாம் நடக்கவேண்டும். தகுந்த வாலிபர்களை நமது குருகுலத்திலிருந்தே ஐரோப்பா, அமெரிக்காவுக்கு அனுப்பி, காகிதம், தீப்பெட்டி, மின்சாரம், நெசவு முதலிய பல தொழில்களில் நிபுணராக்கி அத்தொழில்களை இங்கே நடத்தச் செய்ய வேண்டும்" என்பார். கிப்பனையும், மிஷ்லேயையும் ஹாசலையும் கண்டு வியந்து "இந்த மாதிரி நமது நாட்டுச் சரித்திரத்தை எழுதிவெளியிட வேண்டும்" என்பார். ஆதலால் ஐரோப்

பியரிடமும் அவர் கலைகளிடமும் ஐயருக்கு எத்தகைய விரோத பாவனையும் கிடையாது. பிறகு அவர் எதை வெறுத்தார்? அவர் வாயினாலேயே ஒருதரம் தமது புரட்சிக் கொள்கைகளையும், புரட்சியைத் தடுக்க ஒரே வழியையும் ஐரோப்பியரைப்பற்றிய தமது மனப்பான்மையையும், விளக்கினார். கேளுங்கள் :

நமக்கு யந்திரக் கலைகளையும் ரசாயன பௌதிக சாத்திரங்களையும் யந்திரச் சிற்ப வேலைகளையும் இன்னும் நவ நாகரிகம் வேண்டும் கருவிகளையும் ஐரோப்பியர் நன்றாகச் சொல்லித் தரட்டும். யந்திரத் தொழில் நடத்த நமக்குத் துணையா யிருக்கட்டும். அவர்களுக்குச் சம்பளம் தருவோம். அவர்களை ஹிந்துஸ்தானம் இரண்டு கைகளாலும் வரவேற்கும். அவர்கள் கொடுக்கும் கல்விக்கும் செய்யும் தொழிலுதவிக்கும் முக்காலும் நன்றி செலுத்துவோம். ஆனால் அரசியல் கடிவாளத்தைத் தமது கையில் வைத்துக்கொண்டு, நமது உரிமையைக் கேட்கும்போதெல்லாம், அடக்குமுறைகளைப் பிரயோகித்து, ஐரோப்பிய உத்தியோகஸ்தரால் நம்மை மேல் கிளம்பாமல் அடித்துக்கொண் டிருக்கிறார்கள். நமது சுதந்திர உணர்ச்சியையும் சீர்திருத்த வேகத்தையும் கருவிலேயே அழிக்கத் தந்திரம் செய்கிறார்கள். ஹிந்துஸ்தானத்தைக் காக்க பிரம்மாவே வெள்ளைக்கார உத்தியோகஸ்தரை சிருஷ்டித்து, தான் வேறு ஜோலியாய்ப் போய் விட்டான் என்று சிலர் எண்ணுகிறார்கள். நம் நாட்டில் நம்மவரையே மாற்றாந்தாயின் அன்போடு நடத்தினால் நாம் விழித்திருந்து, நமது உரிமையை நிலைநாட்டத்தானே வேண்டும்? இன்றேல் நாம் பேடிகள் போலாவோம். இந்தியர்களும் நம்மைப்போன்ற மனிதர். அவர்களுக்கும் சுதந்தரம் பிறப்புரிமையாகும். அதை மனப் பூர்வமாக வழங்க வேண்டும் என்று ஆங்கிலேயர் உணர வேண்டும். படிப்படியாக பிரித்தானிய பார்லிமென்டின்

இச்சைப்படி சீர்திருத்தங்கள் விரிவாக்கப்படும் என்ற ஆஷாடபூதி வார்த்தைகளெல்லாம் போய்விட வேண்டும். புரட்சி எண்ணங்களை அகற்ற ஒரு வழிதான் உண்டு. அது இங்கிலீஷ் சரித்திரத்திலேயும் செதுக்கப்பெற்றுள்ளது—ஒவ்வொரு நாட்டிற்கும் இயல்பான உரிமையைத் தருவதேயாம். உரிமையை மறுத்தால் மனிதனுக்குள் உள்ள சுதந்தரவுணர்ச்சி குமுறி எழுகிறது. அவ்வாறே எழுந்து முப்பது லக்ஷம் ஜனங்கள் கொண்ட நியூ இங்கிலாந்து, இங்கிலீஷ் சைன்யங்களை முறியடித்து சுதந்திரமான ஐக்ய நாட்டை அமெரிக்காவில் நிலை நாட்டியது. அதுமுதல் இங்கிலாந்தும் ஒருபாடம் கற்றுக்கொண்டது. குடியேற்ற நாடுகளில் ஜனங்கள் ராஜீய உரிமைகளைச் சற்று உரத்த குரலில் கேட்கத் துவங்கியதும், அவர்கள் கேட்கும் உரிமைகளை அவர்களுக்கு உடனே கொடுத்துவிடவேண்டும் என்று இங்கிலாந்து தீர்மானம் செய்து கொண்டுவிட்டது. கானடா, ஆஸ்திரேலியா, தென்னுப்பிரிக்கா, முதலிய ஐரோப்பியர் நிறைந்த நாடுகளுக்கு அவர்கள் சுயாட்சி வழங்கியிருக்கிறார்கள். அந்த முறையை இந்த நாட்டிற்கும் கையாண்டாலொழிய இங்கே சமாதானம் நிலவுவது அரிதாகும். வெள்ளைத் தோலுள்ள குடியேற்ற நாட்டார்தாம் சுதந்திரம் பெற உரியவர்கள்; மற்ற நாட்டினர் அடக்குமுறைச் சவுக்குப் பெற வேண்டியவர்களே என்ற நினைவை ஆங்கிலேயர் தமது அறிவினின்றும் நீக்கிவிட வேண்டும். இந்தியரும் மனிதரே. அவர்களுடைய சுதந்திர உணர்ச்சி கொழுந்துவிட்டெரியத் துவங்கி விட்டது, சர்க்கரையான வார்த்தைகளால், ஆடம்பரமான தீர்மானங்களால், அரச குடும்பத்தினரைப் பொம்மை காட்டுவது போலக் கொண்டு வந்து காட்டுவதால், அரச குடும்பத்திற் சேர்ந்த ஒருவரை ராஜப் பிரதிநிதியாக நியமித்துக் காட்டுவதால், இந்தியரின் கண்ணைத் துடைத்து ஏமாற்றும் நாள் என்றுவது இருந்

திருந்தாலும் அந்த நாள் இனித் திரும்பாது. இந்தியா வின் பூர்ண அதிகாரத்தை இந்தியரிடமே ஒப்புவித்துவிட ஆங்கிலேயர் அதிவேகமாக முயலக் கடவர். அப்போது தான் நாட்டில் சமாதானமும், இந்தியர்களுக்கும் ஆங்கி லேயர்களுக்கும் இடையே பரஸ்பர விசுவாசமும் பிறக்கும்."

இதுதான் ஐயரின் அரசியற் கொள்கை. இக் கொள்கையை நிறைவேற்றவே முதலில் அவர் பலாத் காரத்தை நம்பினர். பிற்காலம் முற்றிலும் அஹிம்ஸா தருமத்தையே போற்றினர். அதுவும் ஒரு தலைவரைத் தாங்கியே அவர் பணி செய்தார்.

37. சுற்றிலும் ஒற்றர்

ஐயர் புதுவையில் இடர்க் கடலை நீந்தினர் என்றே சொல்லவேண்டும். அதை நீந்தும் மனத்திட்பம் அவ ருக்கே உண்டு. ஐயர், பாரதி, அரவிந்தர் ஆகிய மூன்று நவ பாரத மணிகள் புதுவையை அலங்கரித்தனர். இவர்கள் வீரக் கலையும், கவிதைக் கலையும், யோகக் கலை யும் போல, நமது தமிழகத்திற்குச் சோபையளித்தனர். எனினும் அக்காலம் இவர்களை அறியவில்லை. "அவர்களால் ....சுதேசிகள்........... நமக்கென்ன" என்று போவார்கள் ஜனங்கள். முதன் முதலில் புதுவை புகுந்த தேச பக்தர் பாரதியாரே. அவருக்கு முன்னெல்லாம் கடனுக்குத் தப்பும் பேர்வழிகளே இங்கே வந்து அடைக் கலம் புகுந்தனர். பாரதியாருக்குப் பிறகு ஸ்ரீ அரவிந்தர் வந்தார். பிறகு ஐயர் வந்தார். இன்னும் சிலர் வந்த னர். இவர்களை ஒற்றர் சூழ்ந்து கொண்டிருந்தனர். இவர்களை எப்படியாவது புதுவையை விட்டுக் கிளப்ப ஆங்கிலப் போலீசார் பகீரதப் பிரயத்தனம் செய்தனர். "ஐயர் கர்ஸான்வில்லிக் கொலையில் சம்பந்தப்பட்ட பயானகர், அவரைத் தம்மிடம் தரவேண்டும்" என்று

கேட்டனர். பிரெஞ்சு சர்க்கார் மறுத்தது. இவர் களுக்குப் பாதுகாப்பு தந்த பிரெஞ்சுக் குடியரசை நன்றி யுடன் வாழ்த்துவோம். புதுவையைத் தாம் விலைக்கு வாங்கியாவது தேசபக்தரைப் பிடிப்பதெனப் பார்த்தனர் ஆங்கிலேயர். அதற்கெல்லாம் குடியரசு இணங்கவில்லை.

கையில் பணமில்லை. ஆதரிக்க உற்ற துணைவரில்லை. சுற்றிலும் ஒற்றர், கண்ணுறங்காக் காவல். சற்றே ஏமாந்தால் ஆளைத் தூக்கிச் சென்று பிரிட்டிஷ் எல்லையில் கைது செய்வர். இவ்வளவு ஆபத்துடன் குடும்பச் சுமை வேறு. ஒருநகரில் இருந்துகொண்டு, இத்தனை இடர்களை வென்று நாட்டிற்கே வாழ்ந்த இந்த வீரர்களைக் கண்டால் அலிக்கும் ஆண்மை பிறக்கும். ஆசாரியார், பாரதி, ஐயர் இவர்களெல்லாம் ஒரு குடும்பம்போல ஒட்டுறவாக வசித்து வந்தனர். இவர்கள் ஒருவருக்கொருவர் ஆறுத லாகவும் ஆதரவாகவும் இருந்தனர். பாரதியார் ஐயர் வீட்டிற்கு அடிக்கடி வருவார்; பாடுவார்; குழந்தை களைக் கொஞ்சுவார்; விளையாடுவார்; வீரமாகவும் வேடிக் கையாகவும் வெட்டுநடை பேசுவார். ஐயர் நல்ல சட்டை, அங்கவஸ்திரங்கள் வைத்திருந்தால் எடுத்துப் போட்டுக்கொண்டு கண்ணாடியில் பார்ப்பார். ஐயர் கர்லாப் போட்டு, கஸரத் பஸ்கி செய்து, தசையை முறுக்கிவிட்டு வளர்ப்பதைக் கண்கொட்டாமல் பார்த்திருப்பார். இரு வரும் தேசீய விஷயங்களைப்பற்றிப் பேசுவர். பராசக் தியை வழிபடுவர். வீரர் பிறந்த நாட்களைக் கொண்டா டுவர். ஐயர் கம்பனையும், வள்ளுவரையும், மேனாட்டுப் புலவரையும் ஆராய்வார். ஏராளமான ராணுவ நூல்களைப் படிப்பார். நாட்டு விடுதலைக்கு வேண்டிய யோசனை களைச் செய்வார். அவரைப் பார்க்கத் தேசபக்தர் வருவர். அவர்களை உபசரித்து வேண்டியவைதைச் செய்வார். ஒற்றர் கண்கொட்டாது நிழல்போலத் தொடர்ந்தும், ஐயர் உதய சூரியனைப் பார்க்கக் கடற்கரை செல்லத் தவறமாட்

டார். பொன்னு முருகேசம் பிள்ளை வீடு, வரதப்பர் வீடு, கலவை சங்கரஞ்செட்டியார் வீடு இவற்றில் ஐயரும் நண்பரும் கூடுவர். இவர்கள் இருந்த ஈசுவரன் தருமராஜா கோயில் தெரு ஒற்றர் சூழ்ந்திருக்கும். சில உள்ளன்பர் கள் ஐயருக்கும் பாரதியாருக்கும் தக்க உதவி செய்தனர். ஐயரைப் பார்க்க வருவோருக்கெல்லாம் ஒற்றர் கடாக்ஷமும் கிடைக்கும். இதுதான் புதுவையிற் புகுந்த தேச பக்தர் நிலைமை.

38. தேச வைராக்கியம்

அரவிந்தருக்குப் பதினைந்து ஒற்றரும் ஐயருக்குப் பத்து ஒற்றர்களும் காவல். இக்காவலோடேதான் ஐயர்தமது கலைவாழ்வையும், வீரவாழ்வையும் நடத்தினர். ஐயர் புதுவைக்கு வந்த சில நாட்களுக்கெல்லாம் பாக்கியலக்ஷ்மி அம்மாளும் வந்து சேர்ந்து, அவருடன் சுக துக்கங்களைத் தாங்கினள். ஐயர் தேச பக்தியில் அவர் பத்தினியும் ஐக்கியப்பட்டாள் என்றே சொல்ல வேண்டும். ஐயர் மனவுறுதியைப் பலர் சோதித்தனர்.

சூசையப்பர் கலாசாலையில் ஐயருக்கு உபாத்தியாயர்களா யிருந்த பரிதிரிமார்கள் பெட்ராம், ப்ருவோட் என்பவர்கள். அவர்கள் தமது மேதாவி மாணவனின் அறிவாற்றல்களை யுணர்ந்து மெச்சுவோர். "இனி அரசியலில் சிறிது காலமாவது தலைப்பதில்லை என்று ஒரு வார்த்தை சொல்லும்; பிரிட்டிஷ் சர்க்கார் மனத்தை நாங்கள் இளக்குகிறோம்; நீர் புதுவையை விட்டு வெளியே வந்து எல்லாரும் போலவே வாழலாம்" என்று இருவரும் மன்றாடினர். "என்ன இடர்கள் வந்தாலும், உயிரே போனாலும், தேச சுதந்திரத்திற்கென்றே நான் உழைப்பேன். அடிமையா யிருக்க இணங்கமாட்டேன்" என்று கண்டிப்பாகச் சொன்னார் ஐயர். ஐயர் மைத்துனர் பசுபதி ஐயரும் அவ்வாறே சொல்லிச் சொல்லி, அதே பதிலைச் சுடச்சுடப் பெற்றார். பசுபதி ஐயருக்குப்

புதுவையில் ஒரு கடை உண்டு. அவர் அதை மேற்பார்த்துக்கொண்டால், லாபத்தில் காலக்ஷேபம் தாராளமாக நடத்தலாம் ; வேறு வம்புகளுக்குப் போக வேண்டாம்" என்று உபதேசித்தார். "நான் வீர சுதந்திரத்திற்காக என் வாழ்வை அர்ப்பணித்திருக்கிறேன். என் சொந்த ஜீவனத்திற்காகக் கடை வைத்துக் காலம் கழிக்கமாட்டேன்" என்று ஐயர் கண்டிப்பாகச் சொல்லி விட்டார். ஐயர் பிறரிடம் கையேந்த மாட்டார். எப்படியோ பணம் வரும். ஐயர் அறிவாற்றல்களையும், சத்குணத்தையும், வீரத்தையும், அவர் நெஞ்சில் கொதித்தெழுந்த தேச வெறியையும் நாடெல்லாம் அறியும். ஐயரிடம் விசுவாசம் பூண்ட சிலர் பகிரங்கமாகப் பணம் உதவினர். சிலர் இரகசியமாகப் பேர் தெரியாமல் தக்க ஆட்கள் மூலம் பணம் அனுப்பினர். ஆந்திர ஜமீன்தார்கள் சிலர், ஐயருக்கு வீரக் காணிக்கை செலுத்தினர். மாதாம், காமா ஐயருக்கு 50, 100 அனுப்பி வந்தாள். பெயர் ஊர் தெரியாத இடத்திலிருந்தும் பணம் வரும். ஐயர் பெயரைச் சொல்லிப் பணம் வசூலித்துச் சாப்பிட்டவரும் உண்டு. இந்தப் பணத்தையெல்லாம் வைத்துக்கொண்டு ஐயர் ஹாயாகச் சாப்பிட்டுக்கொண்டு நிர்விசாரமா யிருக்கலாம். அதுதான் இல்லை. பணம் வரவர ஐயர் ராணுவப் புத்தகங்கள் வாங்கினர். ஆயுதங்கள் வாங்கினர். தம்மைப் போல வருந்தும் தேச பக்தருக்கு அள்ளிக் கொடுத்தார். பிறவூர்களுக்கு அனுப்பும் சாமான்களுக்கெல்லாம் செலவுக்குத் தந்தார். தாம் வறுமை பூண்டு, மிகவும் செட்டாகவே வாழ்ந்தார். புதுவையில் ஐயர் பிரெஞ்சை அபிவிருத்திசெய்துகொண்டு, நெப்போலியன் எழுதிய வரலாற்றுக் குறிப்புகளையும், கடிதங்களையும், ஓயாமல் ராணுவ நூல்களையும் ஆராய்ந்தார். அக்காலம் ஐயர் தீவிரமான காளி உபாசனை செய்தார்.

39. உஷார்!

எப்படியாவது ஐயரை பிரிட்டிஷ் எல்லைக்குக் கொண்டு வரவேண்டுமென்று ஒற்றர் கும்பல் அல்லும் பகலும் முயன்றது—நித்திய கண்டம் பூரணாயுசுதான்............ எப்பொழுது என்ன ஆபத்து வரும், எந்த நிமிஷம் பிரிட்டிஷ் ஒற்றர் ஐயரைத் தூக்கிச் செல்வர் என்று சொல்ல முடியாத நிலைமை. ஐயர் உயிருக்கு ஆபத்து வீட்டுக்கு எதிரேயே கண்ணும் காவலுமா யிருந்தது. அவர் மனைவியையும் அந்த ஆபத்து மன்னிக்கவில்லை. இரவில் மடியில் சுழல் துப்பாக்கி வைத்துக்கொண்டு, ஒருவர் மாற்றி யொருவர் விழித்து உஷாரா யிருப்பார். ஐயர் வெளியே சென்று வரும்போது இந்த நாள் இத்தனை தடவை கதவு தட்டுவேன், இன்ன பெயர் சொல்லிக் கூப்பிடுவேன் என்று மனைவியிடம் சொல்லி வைப்பார். அந்தச் சங்கேதப்படியே செய்வார். அவ்வாறு கதவு தட்டிப் பெயர் சொன்னாலேதான் அம்மாள் கதவைத் திறப்பாள். தாம் வந்ததை அறிவிக்க ஐயர் “துப்” என்று வாசலில் காறி யுமிழ்ந்து, அடையாளம் காட்டுவார். அம்மாள் கணவன் குரல் கேட்டுக் கதவு திறப்பாள். அப்படிக் காறியுமிழும் பழக்கம் ஐயருக்கு இறுதிமட்டும் இருந்தது. இவ்வளவு கவனமில்லாவிட்டால், தடதடவென்று யாராவது ஒற்றர் கதவைத் தட்டித் திறந்தவுடன் உள்ளே புகுந்து விஷமம் செய்வர். ஐயர் உஷாருக்குப் பெயர் பெற்றவர். அடக்கமாக, அமைதியாக, நிதானமாக, மனவுறுதியுடன் ஆபத்தைத் தாண்டும் சமர்த்தர். தேர்தல் சமயங்களில் புதுவை அதல குதலப்படும். தடியெடுத்தவனெல்லாம் தண்டல்காரனாவான். கட்சிச் சண்டைகள் பலமா யிருக்கும். தெருவெல்லாம் கூச்சலும் ரகளையுமா யிருக்கும். அக்காலம் ஐயர்போன்ற தேசபக்தருக்கும் ஆபத்துக்கள் அதிகரிக்கும்.

40. மணியாச்சியில்

இச் சமயம் அடக்குமுறைகள் தாங்காமல், நாட்டில் ஆங்காங்கு புரட்சிகள் நடந்தன. அவற்றைக் கண்டுபிடித்துக் கடுமையாகப் புரட்சிக்காரரை அரசாங்கம் தண்டித்தது. திருநெல்வேலி, ராமநாதபுரம் ஜில்லாக்கள் மறவர் நாடல்லவா? அங்கே புரட்சி விதையை விதைக்கச் சிலர் இரகசியமாக உழைத்தனர். எங்கிருந்தோ எப்படியோ அவர்களுக்கு ஆயுதங்களும் கிடைத்தன. அபிநவ பாரத சங்கம் ஒன்று ஏற்பட்டு, கிராமந்தோறும் வீர முழக்கம் செய்தது. 1911-ம் ஆண்டு அப்புரட்சி இயக்கம் விம்மி வெடித்துச் செத்து வீழ்ந்தது. அதைப்பற்றி செடிஷன் கமிட்டி அறிக்கை சொல்லுவதாவது:

"வ. வே. சு. ஐயர் புதுச்சேரியில், இந்திய வாலிபருக்குத் துப்பாக்கிப் பயிற்சி யளித்தார். 6—1—1911ல், முதல் மூன்று மாதம் ஓய்வில், வாஞ்சி ஐயர், வ. வே. சு. ஐயருடன் வந்திருந்து, துப்பாக்கி சுடப் பயின்றார். மற்றவர்களுக்கும் தக்க சமயத்தில் புதுச்சேரியிலிருந்து துப்பாக்கிகள் வரும் என்று சொன்னார்." என்ன நடந்ததோ நமக்குத் தெரியாது. 1911-ம் ஆண்டு ஜூன் மாதம் 17-ம் தேதி மணியாச்சி ஜங்ஷனில் சிதம்பரம் பிள்ளை சிவா முதலியோரைத் தண்டித்த கலெக்டர் ஆஷ் ரயிலில் இருந்தார். "படார்" என்றொரு சத்தம் கேட்டது. கலெக்டர் குண்டுபட்டு இறந்தார். அவரைச் சுட்ட வாஞ்சி, தானும் ரயில்வே கக்கூசில் சுட்டுக் கொண்டு இறந்தான் என்பர். அந்த இடத்தை இன்னும் பார்க்கலாம். தூத்துக்குடியில் ஆஷ் துரையை அடக்கம் செய்து, அவன் நினைவிற்காக ஒரு மண்டபம் கட்டியிருக்கிறார்கள். அதில் ஒரு கல்லில் "கலெக்டர் ஆஷ், ஒரு கொலைகாரனால் கொடுமையாகச் சுடப்பெற்று இறந்தார்" என்று எழுதியிருக்கிறது.

இச் சம்பவம் நாட்டை ஸ்தம்பிக்கச் செய்தது. அர சாங்கத்தார் வெகுண்டெழுந்தனர். "ஐயரே இந்த அரசியற் கொலைக்குக் காரணம் என்று சாதித்தனர். புது வையில் அபாயமான இடர்கள் ஐயரைச் சூழ்ந்தன. வெளியே சென்றால் வருவது எம்பிரான் புண்ணியந்தான். ஐயரைத் தூக்கிச் செல்லவே ஒற்றர் தமது நண்பருடன் கூட்டமாகச் சேர்ந்து வட்டமிட்டனர். ஏழை படும் பாட்டில் ஐவருக்குத் தப்பிய ஜாம்வல்ஜான் போலே ஐயர் தந்திரமாக ஒற்றர் கண்ணில் பொடி தூவி, தைரிய மாக நடந்தார். இவர்கள் செய்யும் சூழ்ச்சிகளை ஐயர் எப்படியோ கண்டு பிடிப்பார். அதற்காகவே வெளியே சுற்றுவார். ஐயர் இக்காலம் பட்ட இடர்களில் சில வற்றை இங்கு வர்ணிப்போம்.

41. பிள்ளையாருக்குப் பின்னே!

ஒரு சாயங்காலம் ஐயர் வழக்கம் போலே உலாவச் சென்று வீட்டிற்கு வந்துகொண்டிருந்தார். ஒற்றர் அதுதான் சமயம் என்று அவரைச் செந்தூக்காய்த் தூக்கி வண்டியில் ஏற்றி பிரிட்டிஷ் எல்லையில் கொண்டு தள்ள உறுதி கொண்டு பலமாகச் சூழ்ந்தனர். ஐய ருக்கு விஷயம் தெரிந்தது. வீட்டிற்கு வரும் வழி யில் ஒற்றர் நிற்கின்றனர். ஐயர் விருட்டென்று வேறு தெரு வழியாகப் பாய்ந்தார். வெள்ளைக்காரத் தெருவில் உள்ள பிள்ளையார் கோயிலுள் நுழைந்தார். யானை முக னுக்குப் பின்னே ஒளிந்து கொண்டார். பெரிய பிள்ளை யாராதலால் பின்னே ஆள் இருப்பது தெரியவில்லை. இர வில் பட்டர் "சுமுஹாய நம; ஏக தந்தாய நம" என்று அருச்சனையை நடத்தினர். பிள்ளையாருடன் பின்னு விருந்த ஐயர் மேலும் அர்ச்சனை மலர்கள் வீழ்ந்தன. எல்லாரும் கணேசப் பெருமானை வணங்கிச் சென் றனர். ஐயரைத் தேடித் தேடி ஏமாந்த ஒற்றரும் வீட் டிற்குச் சென்றனர். அன்றிரவு முழுதும் அங்கிருந்து

மறுநாள் திருப்பள்ளி எழுச்சியில் ஐயர் வெளியே வந்து வீட்டுக்குப் போனாராம்.

42. பாடையில் யார்?

மற்ெருரு நாள் ஐயர் தமது நண்பர் ஒருவரைப் பார்க்கச் சென்றிருந்தார். ஒற்றர் புலிக் கூட்டம் போல வீட்டை வளைத்துக் கொண்டனர். ஐயர் எப்படியோ அறிந்தார். வீட்டை விட்டு வெளியே வரவில்லை. தலை நீட்டினல் ஆபத்து, "பிடிபட்டார் ஐயர்" என்று ஒற்றர் குதூகலிக்கின்றனர். அப்போது "ஐயோ அப்பாடா அப்பாடா, போனையா போனையா.......ஐயையோ அப்பப்பா,' என்று மாரடிப்புச்சத்தம் கேட்டது! வீட்டுக்குள்ளிருந்து ஒரு பாடை பிணத்துடன் நன்ருக மூடி வெளியே வந்தது. பிணம் சுடுகாட்டை நோக்கிச் செல்லுகிறது. இருட்டு; நண்பர் ஒரு சந்தில் நிற்கின்றனர். பாடையிலுள்ள பிணம் கையை அசைக்கிறது. உடனே அதைக் கீழே வைக்கின்றனர். விருட்டென்று நீல மணி மின்னல் போலே ஐயர் எழுந்து, குறுக்கு வழியில் பாய்ந்து வீடு சேர்கிருர். எப்படி யிருக்கிறது சமாசாரம்! ஒற்றர் முன் சொன்ன வீட்டு முன் பழி போட்டுவிட்டு ஏமாந்து சென்றனர். ஜாம்வல்ஜான் கன்னி மடத்திலிருந்து ஒரு சவப் பெட்டியில் மறைந்து வெளிவந்து, மீண்டும் தோட்ட வேலைக்காரன் போல் உள்ளே சென்ற சம்பவத்தைப் படித்தால் ஐயர் சாமர்த்தியத்தை நாம் வியப்போம்.

சில நாட்களில் ஐயர் எங்கிருக்கிருர் என்றே மனைவிக்குத் தெரியாது...கவலை, திகில்! சிலசமயம் நம்பிக்கையான நண்பர்மூலம் ஐயர் செய்தியனுப்புவார். சில சமயம் தாம் இருக்கும் இடம் யாருக்கும் தெரியக்கூடாதெனச் சும்மா இருப்பார். அவர் வருமட்டும் அம்மாள் மனம் பதறித் தவிப்பாள். இந்த மாதிரி எத்தனையோ சம்பவங்

கள். அனைத்திலும் ஐயர் ஒரே நிதானப் புத்தியுடன் பதருமல், பொறுமையாக நடந்தார். அன்னிபாலன், சீஸர், நெப்போலியன், கரிபால்டி, ராணு பிரதாப், குருகோவிந்தன் போலே வீர ரத்தம் ஊறும் அவர் உள்ளம், இந்த ஆபத்துக்களைக்கண்டு உற்சாகங்கொள்ளுமாம். "ஆபத்தை ஜயிப்பதே ஆண்மை. அதில் மட்டற்ற இன்பமுண்டு. கோழைத்தனமே துன்பம்" என்பார் ஐயர். ஐயர் திறமையைச் சோதிக்க இரண்டு சம்பவங்கள் நடந்தன. அவை அளவுகடந்த அபாயமானவை. கேளுங்கள்.

43. ஐயையோ சூனியம்!

ஐயரிடம் பருவதம் என்ற நம்பிக்கையான வேலைக்காரி இருந்தாள். ஐயரிடம் அவளுக்கு உயிர். ஒற்றர் அவளை மிரட்டினர்; அடித்தனர்; ஒருநாள் மூக்குத்தியைப் பிடித்திழுத்து வருத்தினர். "100, 200 தருகிறோம்; ஐயர் உளவைச்சொல்" என்று ஆசை காட்டினர். பருவதம் "எனக்கு எதற்கையா பணம்? உன் பணம் குப்பைக் குச்சமானம்" என்று உதறித் தள்ளினள். என்ன வந்தாலும் கலங்காமல் ஐயருக்குத் துணை செய்தாள். பிற்காலம் இப் பெண் பரதேசிக் கோலத்துடன் ஊர் ஊராகச் சுற்றினாள். சமீபத்தில் திருச்சிக்கு வந்து பாக்கிய லக்ஷமி அம்மாள் ஆதரவில் இரண்டு மாதம் இருந்தாள். ஐயரின் புதுவை வாழ்வில் பருவதத்திற்கும் இடமுண்டு.

ஒருநாட் காலை பருவதம் கொல்லைக் கிணற்றில் தண்ணீர் இறைத்தாள். ஒரு ஜாடி தென்பட்டது: "ஐயையோ சூனியம்! அம்மா யாரோ சூனியம் வைத்திருக்கிறார்கள்" என்று அவள் கூவினள். (ஐயருக்குச் சூனியம் வைக்கப் பகைவர் வேலை செய்தது உண்மை) அதற்காக ஒருவன் எதிரிகளிடம் பெருந் தொகை வாங்கிக் கொண்டான்; சூனியக்காரன் ஐயர் பின்னல் வந்து காலடி மண்ணை எடுத்துச் சென்றான்; ஐயரைப் பார்த்து மந்திரம் ஜபித்து

"பிடி ஜக்கம்மா" என்று பொடி தூவினன். ஐயர் இவற்றைப் பார்த்துச் சிரித்து "சரி செய்து பார்" என்ருர். சூனியம் பலிக்கவில்லை. ஆனல் எதிரிகள் ஐயருக்குச் சூனியம் வைக்கும் மிரட்டல் பலமாயிருந்தது.

பருவதம் கூவியதும் பாக்கிய லக்ஷமி அம்மாள் வந்து பார்த்தாள்; வாளி விட்டு மெதுவாக ஜாடியை எடுத்தாள். அரக்கை உடைத்துத் திறந்தாள். அதற்குள் புரட்சி கூட்டத்தார் ஜாப்தா, ஐயர் காளி பூஜை செய்து வெள்ளைக்காரரைப் பலி கொடுப்பதாக ஒரு கார்டு அளவு ஆர்ட் காகிதத்தில் அச்சிட்ட படம், இன்னும் புரட்சி சம்பந்தமான பல சாமான்கள் இருந்தன. காலையில் ஐயர் எழுந்து வந்து பார்த்தார்; ஜாடியுடன் சாமான்களை மாஜிஸ்திரேட்டிடம் கொண்டு சென்று, ஒற்றரின் அக்கிரமங்களைச் சொன்ஞர். அதிகாரிகள் இனி அவ்வாறு நடக்காமல் பார்த்துக் கொள்வதாக வாக்களித்தனர்.

கமக்கமாக இப்படிச் செய்து ஐயர் நிம்மதியாயிருந்தார். அன்று மாலை பிரிட்டிஷ் போலீசார் ஐயர் வீட்டில் புகுந்து பலமாகச் சோதனை போட்டனர். சட்டிப் பானைகளை யெல்லாம் கொட்டிப் பார்த்தனர். பெட்டிகளை யெல்லாம் திறந்து கவிழ்த்துப் பார்த்தனர். சந்து பொந்து இடுக்குகளி லெல்லாம் கவனமாக நோக்கினர்கள். மலையைக் கெல்லி எலிகூட வரவில்லை. ஒன்றும் கண்டு பிடிக்கவில்லை. முடிவில் இறங்குடா கிணற்றில். இறை கிணற்றை என்று ஒருவனை ஏவினர். ஐயர் "கிணற்றைத் தூர்வை எடுக்க வேண்டும். எங்களுக்கோ பணம் காசில்லை. தாராளமாக அடி மட்டும் இறைத்துப் பாருங்கள்" என்ருர். கிணறும் தூர்வை யெடுத்தாயிற்று. கல்லும் சகதியும் தவிர வேருென்றையும் காணேம். வந்தவர் ஏமாந்து சென்றனர். பிறகு செய்தி யறிந்து வெட்கினர். கிணற்றில் அன்று ஏதாகிலும் அகப்பட்டிருந்

தால் ரகளை செய்து ஐயரை குற்றம் சாட்டியிருப்பர். மஹாகாளி காப்பாற்றினாள்.

44. நியாயமா?

ஐயர் சதுரங்கத்தில் நிபுணர். எதிரியின் காய்களை இரக்க மில்லாமல் வெட்டி வெட்டித் தள்ளுவார். அது போலவே எதிரிகளின் சூழ்ச்சிகளையும் அவர் விழித்தி ருந்து வீணாக்குவார். எந்த உபாயமும் பலிக்க வில்லை. முடிவில் எப்படியாவது ஆஷ்கொலை சம்பந்தமாக இவ ரைப் பிடித்துவிட வேண்டுமென்று முயன்றனர். சின்ன பாபு சமுத்திரத்திற்கு இவரைக் கொண்டு வந்தால் போதும். பிறகு அவர்கள் பார்த்துக் கொள்வர். எப்ப டியாவது ஐயரைப் பிடித்துக் கொடுப்பவருக்கு ரூ. 10,000 இனும் தருவதாக வாக்களித்தனர். அதைப் பலர் வாங்க மறுத்தனர். பணம் வாங்கிக்கொண்டு ஒரு உண்மையான தேச பக்தனைக் காட்டிக் கொடுக்கும் சுயநலப் பேடி உண்டா? அப்படியும் ஒருவன் இருக்கிறான் என்று காட்ட ஒரு ஆள் ஒப்புக் கொண்டான் — வல்லபதாஸ். பணமல்லவா? பதினாயிரம் ரூபா பலமாக வேலை செய் யத் தொடங்கியது. ஐயருக்கு அன்று முதல் எங்கும் ஆபத்துத்தான். ஐயர் இதை அறியாமல் இருப்பாரா? உடனே அதே ஆளிடம் சென்றார். "நீர் என்னை மோசம் செய்ய எதிராளிகளிடம் பணம் வாங்கிங் கொண்டீரா? அது நியாயமா?" என்று நேருக்கு நேராகக் கேட்டார். ஐயரின் வீரத்தைக் கண்டும் ஆளுக்கு உணர்ச்சிவரவில்லை. மமதைமிஞ்சி, "ஆமாம் ஐயா. எந்த ஊரிலிருந்தோ இங்கே வந்து இப்படி யெல்லாம் செய்தால் நான் ஏன் உங்களைப் பிடித்துக் கொடுக்கக்கூடாது? உங்கள் சமு சாரமும் மைத்துனியும் கூடத் வெடி குண்டு செய்கிறார்க ளாமே?" என்று அப் பதங்கன் கேட்டான். "நீ சொல் வது கொடியபொய்; தவறு" என்று மறுத்தார். வல்லப தாஸ் மனமிளகவில்லை. பொய்யும் வஞ்சகமும் மமதைக்

குத் தோழரல்லவா? ஐயர் தமக்கு இயல்பான தீக்கண் பார்வையை ஒரு நிமிஷம் அந்த ஆளின் முகத்தில் செலுத்தினர்; "சரி உங்களால் ஆனதைச் செய்யுங்கள்" என்று வீட்டிற்குத் திரும்பினர். இன்னும் சொல்ல முடியாத தொல்லைகள் ஐயரைத் தொடர்ந்தன. அவற்றில் ஒன்றை மட்டும் இங்கே விவரிப்போம்.

ஏழை படும் பாட்டில், ஜாவரைத் தப்ப ஜாம்வல்ஜான் இரவில் ஜோசத்துடன் கன்னியர் மடச் சுவற்றில் ஏறிக் குதித்த சம்பவத்தை இப்போது நினைத்துக் கொள்ளுங்கள். இதோ ஐயரின் சௌரியத்தையும் பாருங்கள். ஆதி காலத்தில் தாணுஜியும், பாஜியும் காட்டிய சூரத் தனத்தை இதோ ஐயரிடம் காணுங்கள்.

45. காலிகளுக்கு ஒரு வேட்டு

எலக்ஷன் காலம். வழக்கம் போலே புதுவையில் ...களே நடக்கிறது. இரவு எட்டரை மணி இருக்கும். அப்போ சுபத்திரை, நாற்பது நாள் குழந்தை, தூளியில் தூங்கு கிறுள். மினுக்கு மினுக்கென்று விளக்கெண்ணெய் விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. ஐயர் சாப்பிடுகிறுர். பாக்யலக்ஷ்மி அம்மாள் அன்புடன் பரிமாறுகிறுர்.

தட தட தட தடார், தடார் என்று இடிமுழக்கம் போல் பலர் கதவைத் தட்டுகின்றனர். "வாடா வெளியே உன்னைக் கொன்று போட்றேன்..." திற கதவை. அய்யர் செத்தார்...என்று கள் வெறியேறிய குரல்கள் போதையில் உளறுகின்றன; அலறுகின்றன. ஐயர் மனைவி கண் ஜாடை காட்டினுள். ஐயர் சட்டென்று கையைக் கழுவினர். குப்பென்று விளக்கணைத்தார்; உரல் எந்திரம் முதலிய கனமான சாமான்களைக் கொண்டுவந்து ஓசைப் படாமல் கதவுக்கு அண்டைக் கட்டினர். உடனே வீட்டை விட்டுத் தப்ப ஏற்பாடு செய்தார். வெளியே கூடிய களிப்புலவருக்குப் பொறுக்க

வில்லை. "ஐயரை உடனே வெளியே வரச்சொல்..." என்று வெறி முழக்கம் செய்தனர். "ஐயர் சாப்பிடுகிறார்; கொஞ்சம் பொறுங்கள்" என்று கதவண்டை வந்து பாக்யலக்ஷ்மி அம்மாள் பதில் சொன்னார். அம்மாள் ராஜ நாடி துடிக்கிறது. "ஐயோ என்ன நேருமோ பகவானே" என்று மனம் பதறுகிருள்; குழந்தைத் தாய். வெளியே கலாட்டா அதிகரித்தது. "சரி, சரி சோறு போடு... இன்றைக்குத்தானே கடைசியாகச் சாப்பிடப் போகிறார்...சோறு போடு... சாகப் போகிற பிணத்துக்குச் சோறு போடு...அண்ணே உசாராயிரு. ஆள் எங்காச்சும் டபாச்சிடுவான்..." என்று வெறியர் கூவுகின்றனர்; "நிரம்பச் சாப்பிட்டுட்டு வா" என்று ஒருவன் கொக்கரித்தான்.

இருட்டு...குழந்தை அழ ஆரம்பித்து விட்டது. ஐயர் அதைச் சமாதானம் செய்தார். குழந்தையைக் கையில் எடுத்துக் கொண்டு சுவரேறினார். "பாக்யம் ஏறு" என்றார். அம்மாள் பலஹீனமா யிருந்தாள். சுவர்மேல் ஏற முயன்றாள். ஒரு முறை. இரு முறை. மும்முறை...கால் தவறியது ஏற முடியவில்லை. காலிகள் கதவில் நகரா அடிக்கின்றனர். "வாடா வெளியே" என்று வாய் முரசடிக்கின்றனர்.

ஆபத்து உடலுக்குப் புதிய பலத்தைக் கொடுத்து விடுகிறது. தீப்பிடித்த வீட்டினின்று நோயாளிகூடத் தனக்கு மிஞ்சிய சுமையைத் தூக்கிக் கொண்டு ஓடுகிறானல்லவா? நீங்கள் ஒரு கோழிக்குஞ்சைப் பிடிக்கத் தேடுங்கள். உடனே இறக்கையைப் படபட வென்று அடித்துக் கொண்டு தாய்க்கோழி உங்களைத் துரத்தியடிக்கும். அதற்குப் புத்திரவாஞ்சையால் புதிய பலம் வந்துவிடுகிறது. ஆபத்து ஒருவனுக்கு அசாதாரணமான பலத்தையும், தைரியத்தையும் அளிக்கிறது. அதே ஆபத்து உடல் சோர்வுற்ற பாக்யலக்ஷ்மி அம்மாளுக்கும் புதிய

பலந் தந்தது. அம்மாள் எப்படியோ சுவரில் ஏறினாள். ஐயர் சொன்ன படியே ஒருமாடி, இரண்டாமாடி, மூன்றுமாடியேறி, ஒரு நண்பர் வீட்டுக் கூரைக்குத் தாவினாள். "அகிலாண்டேஸ்வரி காப்பாற்றினாள்" என்று தைரியம் கொண்டாள். ஆ! அங்கும் ஒரு சோதனை. அங்கே ஒரு மாதுளஞ் செடி. அதில் குழந்தையின் உடல் உறைந்தது. மாதுள முட்கள் நாலு மாதக் குருத்தான அக் குழந்தையின் உடலைக் கொஞ்சம் கிழித்தது. அந்தோ மாதுளம் பழத்தை உரித்தது போலே குழந்தையுடல் இரத்தமானது. "விய்யா விய்யா" என்று குழந்தை அலற ஆரம்பித்தது. தாய் தந்தையருக்கு வந்த ஆபத்து அதற்குத் தெரியுமா? ஐயர் தமது கையிலிருந்த சுபத்திரையின் வாயை மூடி அழுகையை எப்படியோ நிறுத்தினார். இரண்டு பேரும் மேலே சென்றனர். வீட்டுக்காரரை எழுப்பினர். ஐயர் அவர்களிடம் மனைவியைச் சற்று பார்த்துக் கொள்ளச் சொல்லி, மறுபடியும் மாடிகளைத் தாண்டி, வீராவேசத்துடன் தமது மனையிற் குதித்தார். அந்த ஆபத்திலும் ஐயருக்குப் புத்தகாபிமானம் போகவில்லை. தமக்கு அருமையான புத்தகங்களை அப்புறப்படுத்தினார். இதற்கிடையில் கள் வெறியர் கூத்து பேய்க் கூத்தானது..."அண்ணே ஹ.ஹ.ஹ! ஐயர் நம்ம கிட்ட சிக்கிக் கிட்டாரு. இனித் தப்பவா...அதெல்லாம் நடக்காதடி... புச்சேரியாக்கும்" என்று அட்டகாசம் செய்கிறார்கள். படார் படாரென்று கதவில் போர்முர சடிக்கிறார்கள். கதவைத் திறக்க வேண்டியதுதான்; ஐயரைச் செந்தூக் காய்த் தூக்கிச் செல்வர்; எது வேண்டுமானாலும் செய்வர்...கேட்பார் யார்?

இப்போது ஐயர் என்ன செய்தார்? சிறிதும் பதறாமல், மனம்சிதறாமல், தமது சுழல் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு மேல் மாடிக்கு ஏறினார். அங்கிருந்து வாசலில் கொக்கரிக்கும் வெறியரைப் பார்த்தார். ஐயோ நமது

பாரத மக்கள் இப்படி நிலைகெட்டு மதிகெட்டுப் போனார்களே...என்று விசனித்தார். ஆகாசத்தை நோக்கித் துப்பாக்கியை நீட்டினார். டபார், டபார், டபார்...மூன்று வேட்டுகள் பறிந்தன. ஆயிரம் காக்கைக் கோர் கல்! "அடே துப்பாக்கிடா ஓடு! ஓடு!" என்று அத்தனை வெறியரும் சின்னாபின்னமாகச் சிதறிப் பதறி யோடினார்கள்.

46. குறள் மொழிபெயர்ப்பு

இப்படியெல்லாம் இடற்புயல்கள் 1914-ம் ஆண்டு வரையில் ஐயரைச் சூழ்ந்தன. ஐயர் வீரத் திமிங்கிலம் போலே அவற்றாடு நீந்தினார்...பராசக்தி துணை செய்தாள்—அனாத ரக்ஷகி.

1914ம் ஆண்டு ஜர்மன் யுத்தம் எரிமலைபோலக் குமுறியெழுந்து, குண்டுமாரி பொழிந்து; ஐரோப்பாவை அதலகுதலப் படுத்தியது. கைசரின் மிருக பலத்தை உலகெல்லாம் அச்சமுடன் நோக்கியது. வங்காளக் குடாவில் எம்டன் வந்தது! ஒற்றர்வேலை தொடங்கி விட்டது. இச்சமயம் பிரிட்டிஷ் சர்க்காருக்குப் புதுவை தேச பக்தரிடம் சந்தேக மூண்டானது. "இவர்கள் ஏதாயினும் எதிரிகளுக்குச் சாதகமாகப் புரட்சியைத் தூண்டுவார்களோ" என்று அது நினைத்தது. ஐயரின் அறிவையும் தைரியத்தையும் மெச்சிய பிரெஞ்சு கவர்னர் "அவரை யாரும் தொந்திரவு செய்யாதபடி எச்சரிக்கை செய்தார். இருப்பினும் பிரிட்டிஷார் பிரெஞ்சு சர்க்காருடன் பேசி, ஐயரை அல்ஜீரியாவுக்குத் துரத்த வேண்டுமென்று ஏற்பாடு செய்தனர். இவ் வதந்தி ஐயருக்கு எட்டியது. உடனே பேனாவை எடுத்தார். "எச்சமயம் நம்மை நாடு கடத்துகிறார்களோ தெரியவில்லை. இருக்கும் நாட்களைப் பயன் படுத்தித் தமிழுக்கு நிலையான ஒரு வேலை செய்து வைப்போம் என்று உறுதி பூண்டார். தலைமேல் அரசாங்கத்தாரின் உத்திரவு தொங்கிக்

கொண்டிருக்கிறது. நமக்கானால் ஒன்றும் தோன்றாமல் திக்பிரமை பிடித்திருக்கும். ஐயர் சற்றும் கலங்காமல், நிதானமாக, திருக்குறளை அழகாக பைபிள் நடையில் மொழி பெயர்த்து முடித்தார். 'இனி வருவது வருக,' என்றிருந்தபோது பிரெஞ்சு கவர்னர் ஐயரை அழைத்து 'நீங்கள் புதுவையை விட்டு எமக்குச் சொந்தமான அல்ஜீரியா சென்றிருங்கள். உங்களுக்கு வேண்டியதைத் தருகிறோம்" என்றார். "எங்களுக்குக் கணக்காக ரூ. 20,000செல்வாகும். தந்தால்செல்லுகிறோம்" என்றார் ஐயர். ஐயரின் தைரியத்தையும் பெருந்தன்மையையும் மெச்சிய குவர்னர், "இங்கேயே இருந்து விட்டுப் போங்கள்" என்று உத்தீர்விட்டார். இச் சம்பவம் ஐயர் குறள் முன்னுரையிலும் காணப்படும்.

இத்துடன் ஐயரின் புரட்சி வாழ்க்கைக்கு மங்களம் பாடி விடலாம்...இனி ஐயரைப் கலை யுலகிலேயே பெரும் பாலும் சந்திப்போம்.

47. கம்ப நிலையம்

பஞ்சகாலம், வறுமையில் வறுமை. ஆதரிப்பார் இல்லை.

இனி ஐயர் புத்கங்கள் எழுதி அதில் வருவதைக்கொண்டு காலந்தள்ளத்தொடங்கினர். ஆனல் பிழைப்பல்ல, கலை வளர்ச்சியே அதன் முக்கிய நோக்கம். ஐயர் புதுவையில் கம்பனை ஆழ்ந்து ஆராய்ந்தார். அந்நூலை உபகதைகள்நீக்கி, பதம் பதமாகப்பிரித்து, எல்லாருக்கும்தெளிவாகவிளங்கும் படி புதியபதிப்பாக அச்சிட முயன்றார். புதுவை அறிஞர் சிலர் அவருடன் ஒத்துழைத்தனர். அத்துடன் ஐயர் அரிய இனிய தளிர்நடையில் சிறுகதைகள் எழுதினர். மங்கையர்க்கரசி காதல், கமலவிஜயம், காங்கேயன், குளத்தங்கரை அரசமரம், எதிரொலியாள், அழேன்ழுக் கேன் முதலியவை அவர் புதுவையில் எழுதிய கதைகள். லைலி மஜ்னுன், அனர்கலி இரண்டும் அவர் குருகுலத்தில்

எழுதியவை. இக்கதைகளெல்லாம் புத்தகவடிவில் இரண்டு பதிப்புகள் வெளிவந்துள்ளன. தவிர சந்திரகுப்த சக்கிரவர்த்தி சரிதையை அவர் எழுதினர். எமர்ஸனிலிருந்து "தன்னம்பிக்கை" என்னும் பகுதியை மொழிபெயர்த்தார். புக்கர்வாஷிங்டன் வரலாற்றை எழுதினர். அவருடன் பாரதியாரும் இலக்கியத்தொண்டில் ஈடுபட்டார். ஆசாரியாரும் அரிய நூல்களை எழுதினர். எல்லாரும் சேர்ந்து தமது நூல்வெளியீட்டிற்காகவே கம்பநிலையம் என்ற பிரசுராலயத்தை நிறுவித் தீவிரமாகக் கலைப்பணி புரிந்தனர்.

அக்காலமே ஐயருக்கும் எனக்கும் கடிதப்போக்குவரத்து நடந்தது. எனது நாடகங்கள் பாடல்கள் சிலவற்றையும் அவர் பார்வையிட்டார். அவரது கம்பராமாயணம் பாலகாண்டத்தைப் பார்த்ததும் "தமிழுக்கு ஒரு புதிய சக்தி பிறந்துள்ளது. இலக்கணப்புதர்களில் சிக்கி உருத்தெரியாதிருந்த கம்பன், இன்று சிக்கறுந்து சுதந்திரமாக நம்முன் புலப்படுகிருன். பாலகாண்டம் சிறிது தமிழறிந்தோரும் படிக்கும்படியாக இருக்கிறது. இந்தமாதிரியே மற்றக் காண்டங்களையும் தாங்கள் பதிப்பிக்க வேண்டும்" என்று ஐயருக்கு எழுதியிருந்தேன். இத்தமிழ் உறவால் ஐயருக்கும் மனவுறவேற்பட்டது. என்னுடன் உபாத்தியாயராக இருந்த இருவர், ஐயருடன் கல்லூரியில் பயின்றவர்கள். அவர்கள் ஐயரைப்பற்றி ரசமாகப் பேசுவார்கள். அப்போது ஐயர் காமாக்ஷியம்மன் கோயில்தெருவில் வசித்தார். அச்சமயம் ஐயருக்குச் சமயத்தில் பணவுதவி செய்தவர், சிங்கப்பூர் அண்ணாமலை முதலியாராவார்.

ஐயர் அந்தண்மைமிக்க அந்தணர். ஹிந்துதருமத்தின் கோட்பாடுகளில் அணுப்பிசகாமல் நடப்பவர். அத்துடன் தேச சுதந்திரத்திற்குப் போராடும் உண்மையான புஜபலபராக்ரமம் மிக்க க்ஷத்ரீயர். அவ்வளவுதான? ஐயர் பொருளாதார சாத்திர நிபுணர். வியாபாரதந்திரம் முற்

றிலும் தெரிந்தவர். அதுதானு? அத்துடன் தாம்கொண்ட பணியைச் சாதிக்கும் வீரத் தொண்டர். ஆதலால் ஐயர் கம்பநிலையம் வெற்றிபெற நடந்தது என்று சொல்லத் தேவையில்லை. அதற்கு மாதமாதம் சந்தாவாகப் பொருள் அனுப்பியோரும் உண்டு. கம்பநிலையத்திற்கு ஓர் அச்சகமும் நிறுவினர். தமது கையிலிருந்த பணத்தை ஐயர் அதற்குக்கொடுத்தார். மீதி ஆசாரியார் உதவினர். அந்த அச்சகமே பிற்காலம் குருகுலத்திற்கு வந்தது. கம்பநிலையத்தில் வெளியான சிலநூல்களைக் குருகுலத்திலும் வைத்து விற்றனர். கம்பநிலையப்புத்தகசாலை ஒன்று குருகுலத்தில் செழித்தது.

48. மஹாத்மா தரிசனம்

இக்கலைவாழ்வின் பெருக்கத்தில் ஐயர் நாட்டை மறக்கவில்லை. அவரது தேசபக்திக்கு மற்றோர் உருவம் கொடுக்க 1917ம் ஆண்டு மஹாத்மாகாந்தி புதுவைக்கு வந்துசேர்ந்தார். ஐயர் பக்திசிரத்தையுடன் மஹாத்மாவைக்கண்டார். அஹிம்ஸா தீக்ஷைபெற்றார். அன்றுமுதல் ஐயர் இறுதிகாலம்வரையில், காந்தியடிகள் கொள்கையையே பின்பற்றி நின்றார். சாவர்க்கார் உறவால், கத்தி பிடித்த ஐயர், மஹாத்மாவின் அருளால் இராட்டினம் சுழற்றத் தொடங்கினர். பெரிய படைவலியுடைய பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை நிராயுதபாணிகளாய், வறுமை மடமையிருளில் வாடும் ஏழையிந்தியர் பலாத்காரத்தால் எதிர்க்க முடியாது. மஹாத்மா செல்லும் சாந்தவழியே வழி என்பதை ஐயர் நன்றாக உணர்ந்துகொண்டார்.

"கொடியவெந் நாக பாசத்தை மாற்ற
மூலிகை கொணர்ந்தவன் என்கோ?
இடி மின்னல் காக்கும் குடைசெய்தான் என்கோ?
என்சொல்லிப் புகழ்வதிங் குனையே!
விடிவிலாத் துன்பம் செயும் பராதீன
வெம்பிணி யகன்றிடும் வண்ணம்,

படிமிசைப் புதிதாய்ச் சாலவும் எளிதாம்
படிக்கொரு சூழ்ச்சிநீ செய்தாய்...
பாரத தேசந்தன்னை வாழ்விக்க வந்த காந்தி
மஹாத்மாநீ வாழ்க, வாழ்க"

என்று ஐயர் காந்தியை நினைக்கும்போதெல்லாம் பாட்டு முனங்குவார். "தென்னாப்பிரிக்காவிலும் கெய்ரோவிலும் காந்தி பெற்ற வெற்றியைக்கண்டேன். அப்போதே அவரிடம் பற்றிருந்தது. லண்டனில் அவரைப் பார்த்தபோது சத்தியவான், தேஜஸ்வி, என்று நினைத்தேன். அப்போது கத்தியில் நம்பிக்கையிருந்த காலம். அதற்குமேல் ஆத்ம சக்தியொன்று உண்டென்று மஹாத்மா விளக்கினர். தமது சாத்வீக எதிர்ப்பைப்பற்றியும் யோசிக்கும்படி தூண்டினர். அதில் நம்பிக்கை வரப் பத்தாண்டுகள் ஆயின. மஹாத்மாவின் வழியால், இரத்தம்சிந்தாது நமது காரியம் முன்னேறும் எனத்தெரிந்ததும் மனம் அவரையே தலைவராகப் பின்பற்றியது. "மஹாத்மா இணையற்ற தலைவர்" என்று ஐயர் ஒருமுறை சொன்னர். ஆனல் பிற்காலம், "நாட்டின் பாதுகாப்பிற்கு க்ஷாத்ர பலம் இல்லாமல் தீராது; அதையும் நாம் வளர்க்கவேண்டும். இந்தக்கன்னத்தில் அடித்தால், அத்தக்கன்னத்தையும் காட்டும் காலம் மலையேறியது. பலவானுக, தீரனுக, தருமவானுக இருக்கவேண்டும்" என்பார்.

49. விடுதலை

Savarkar's advice to Gandhi accepted

தமிழ் நாடு முழுதும் ஐயரைக் கண்போல் மதித்தது. "வ. வே. சு. ஐயர்" என்றால் எங்களுக் கெல்லாம் உடல் பூரிக்கும். அவர் வரலாற்றைக் கேட்க உள்ளம் துள்ளும். அவரைக் காணக் கண்கள் துடிக்கும். அத்தகைய மஹானை எத்தனை நாள் தமிழர் பிரிந்திருப்பர்? தமிழன்னைக்குக் கருணை பிறந்தது; தமிழருக்கு யோகம் பிறந்தது. ஐயர் கத்தியை மறந்து சாந்த சக்தியைக் கடைப் பிடித்ததை அரசாங்கத்தாரும் நன்கறிந்தனர். இனி பலாத்

காரப்புரட்சியில் இவர் ஈடுபடமாட்டார் என்பதை உணர்ந் தனர். 1919-ஆம் ஆண்டு ஜெர்மனி தோற்றது; வெர் சேல்ஸ் உடன்படிக்கை நடந்தது, இந்தியாவில் மாந் தெகு செம்ஸ் போர்டு சட்டம் அமுலுக்கு வந்தது. அச்ச மயம் அரசியல் குற்றவாளிகளுக் கெல்லாம் பொது மன் னிப்பளித்து, மன்னர் பிரான் ஒரு விளம்பரம் விடுத்தார். அதன்படி புதுவையிலுள்ள தேசபக்தர் பிரிட்டிஷ் எல்லைக் குத் தாராளமாக வரலாம். அதைக் கேட்டதும் பாரதி யார் ஒரே ஓட்டமாகத் திருப்பாதிரிப்புலியூரை நோக்கி ஆனந்தபரவசத்துடன் பாய்ந்தார். சின்னபாபு சமுத்திரத் தில் அவரைப்பிடித்து வைத்துப் பிறகு விட்டார்கள். ஐயர் நிதானமாக, வருங்காலத்தை ஆராய்ந்தார். நண்பர், ஐயரை அழைத்தனர். அச் சமயம் ஒத்துழையாமை இயக்கம் தொடங்கியது. "சரி நமக்குத் தேசப்பணியுள்ளது" என மகிழ்ந்தார் ஐயர். இன்னுமென்ன? தேச பக்தனுக்கு அவரைப் பத்திராதிபரா யிருக்க அழைத்தனர். "சரி நமது எழுதுகோலுக்கும் வேலை கிடைத்தது" என மகிழ்ந்தார் கலைவள்ளல்! ஐயர் சென்னை வந்து சேர்ந்தார். தமிழர் உள்ளம் இன்பத்தால் சிலிர்த்தது; "வருக வருக, அசகாய சூரனே! வீரனே, ஒள்ளிய கலை வாணனே, தெள்ளிய நடையோய் வருக, வருக! தமிழரை உய்விக்க வருக!" என்று எமது நெஞ்சம் ஐயருக்கு நல்வரவேற்புக் கூறி யது. இனி ஐயரைச் சிறிது வட நாட்டில் கண்டு, பிறகு தேச பக்தன் காரியாலயத்தில் சந்திப்போம்.

50. காசி யாத்திரை

1920-ஆம் ஆண்டு ஐயர் நமது புண்ணிய பூமியை வலம் வந்தார். வடநாட்டில் உள்ள புகழ் பெற்ற திருத் தலங்களும் சரித்திரப் பிரசித்தி பெற்ற ஊர்களும் அவர் மனதைக்கவர்ந்தன. பம்பாய், நாசிகை, பஞ்சவடி, சபர் மதி, புனா, ஹரித்வாரம், மதுரை, அயோத்தி, ஆக்ரா முத லிய இடங்களைப் பார்த்துக் கொண்டு, அவர் காங்கிரி குலத்

தில் ஒருவாரம் தங்கி அதன் நடை முறைகளைக் கவனித்தார். அப்போதே தமிழ்க் குருகுலம் அவன் உள்ளத்தில் உருவானது. பிறகு தில்லி, மதுரை, கயா முதலிய க்ஷேத்திரங்களைப் பார்த்து, ஐயர் காசிக்கு வந்தார். காசியில் நண்பர் ஆதிமூர்த்தி ஐயரை வணக்கமுடன் வரவேற்றார். அப்போது ஆதிமூர்த்தி ஐயருக்குச் சூட்டிய பாமாலை பாலபாரதியில் வெளிவந்திருக்கிறது. அதில்,

"மறையிருந்த திருவாயும், மதியிருந்த மளவலியும்
வைரம் பாய்ந்து,
நிறையிருந்த தேசாபி மானமெனும் நெருப்பிருந்த
நிலையும், நேரப்
பொறையிருந்த தவவலியும், கலைவலியும்
புவிமுழுதும் புகழ மீண்டும்
சிறையிருந்த வ.வே.சுப் பிரமணியன்
திரும்பினன் ஜயங்கொண் டிங்கே!"

என்ற வாக்குப் பொருத்தமா யமைந்தது. இங்கே சிறை என்பது, புதுவையில் பத்து ஆண்டுகள் ஐயர் இருந்ததைக் குறிக்கும்.

ஐயர் காசியில் பிராயச்சித்தம் செய்து கொண்டார். அவ்வாறு செய்யும்படி பந்துக்கள் வற்புறுத்தினர். நெருப்பிற்குச் சுத்தி செய்ய வேண்டுவதில்லை. ஐயருக்குப் பிராயச்சித்தம் வேண்டுவதில்லை என்றாலும், பழைய வாழ்க்கையை விட்டுப் புதிய வாழ்க்கையை மேற்கொண்டதற்கு அஃதோர் அடையாளமாகும்.

காசி விசுவேசுவரனைத் தரிசித்து, ஐயர் மனங்குளிர்ந்தார். அச்சமயம் காசியில் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் நடந்தது. (30-5-1920). அப்போது தான் பஞ்சாப் படுகொலையைப் பற்றி ஹண்டர் கமிட்டி அறிக்கை வெளிவந்திருந்தது. அதைப் பற்றித் தலைவர் ஆராய்ந்தனர். அங்கே லோகமான்ய திலகரும் பிரசன்னமாயிருந்தார். புதுவையை விட்டு வந்த பிறகு, இப்

போதே அவர் இந்தியத் தலைவர்களைப் பார்த்தார். ஐயர் திலகரிடம் பரம பக்தி பூண்டவர். "தீரன், சூரன், மஹா மேதாவி, ஞானி, புலவன், அபிநவ சிவாஜி." என்று திலகரை அவர் புகழ்வார். ஐயர் திலகரைப் பார்த்துப் பெரு மகிழ்ச்சி கொண்டார். ஆனால் பேச முடியாமல் போயிற்று. திலகர் அவசரமாகப் புறப்பட்டு விட்டார். ஆ! அதுவே திலகரைக் கடைசி முறை கண்டது. பிறகு அவர் நீரிழிவினால் காலமானார்.

"காசியில் இரண்டு சங்கற்பம் செய்து கொண்டேன்; ஒன்று தமிழ்க் கலை வளர்ச்சி; மற்றொன்று குருகுல ஸ்தாபனம்," என்றார் ஐயர்.

வட இந்தியா யாத்திரை முடிந்து சென்னைக்கு வந்ததும், ஐயர் "தேச பக்தன்" ஆசிரியரானார்.

சென்னையில் ஐயர் திருவல்லிக்கேணி பிள்ளையார் கோயில்தெருவில் முதலில் குடியிருந்தார். பிறகு பைகிராப்ட்ஸ்ரோடில் ஒரு மாடி வீட்டில் இருந்தார். தேசபக்தனில் அவருக்கு மாதம் நூறு ரூபாய்தான் கொடுத்து வந்தனர். அதுவும் அவருக்குச் சரியாகக் கிடைத்ததில்லை. காரியாலயத்தில் கசமுசல்கள் ஏற்பட்டுப் பிறகு, அப் பத்திரிகை நின்றது. ஐயருக்கு ஆறுமாதச் சம்பளம் 'பாக்கி! அந்தோ! சென்னையிலும் ஐயர் வறுமையால் வாடினார்... ஆனால் தேசபக்தனுக்கு அவர் எழுதுகோல் நிரந்தரமான புகழளித்தது. அக் காலம் அவர் வாழ்க்கையைப் பற்றிச் சிறிது விஸ்தரிப்போம்.

51. "தேச பக்தன்"

ஐயர் சென்னையில் சத்தியாக்கிரஹ இயக்கத்திற்கே தொண்டு செய்தார். திரு. வி. கலியாண சுந்தர முதலியார் தேச பக்தனை அருந்தமிழ்ச் செல்வமாக்கினார். அவர் நீங்கிய பிறகு, ஐயர் அப்பத்திரிகையை வீரமும் கலையும் துலங்க, ஆங்கிலப் பத்திரிகைகளும் வியக்கும்படி

நடத்தினர். அச்சிலும் மேடையிலும் ஐயர் ஒத்துழை யாமை முழக்கம் செய்தார். ஐயரின் தலையங்கங்கள் நியூ இந்தியாவில் மொழி பெயர்த்து வந்தன. ஐயர் சென்னைப்பட்டணத்தில் வரகநேரி ஏழை வைதிகர் போலக் கட்டுச் செட்டாக எளிய முறையில் வாழ்ந்தார். தேச பக்தனுக்கு வேண்டிய கலைக் கட்டுரைகளை வீட்டிலேயே எழுதினர். மாலையே இந்துப் பத்திரிகையைப் படித்து மறுநாள் எழுதும் தலையங்கத்தை யோசித்து வைப்பார். காலை பத்து மணி சுமாருக்கு பைகிராப்ட்ஸ் ரோடிலிருந்து கடற்கரை வழியாக ஜார்ஜ்டௌனை நோக்கிக்குஞ்சரநடை பயிலும் ஒரு திருவுருவைக் காணலாம். பஞ்ச கச்சம் வைத்துக் கட்டிய கதராடை, பூப்போட்ட கதர் அங்க வஸ்திரம், தோள் பை, அதற்குள் கட்டுரைகள், புத்தகங்கள், காலில் மிதியடி. இவ்வளவே அவர் அணிகள். நெற்றியில் விபூதி பூசியிருக்கும்; புருவ நடுவே சந்தனப் பிறை காணும்! அதன் நடுவே குங்குவப் பொட்டு இரத்தினம் பதித்தது போலிருக்கும்; அடர்ந்த தாடியுடன் கூடிய இக்கோலம், பரம சாதுவான ஒரு ரிஷியை விளக்கும்; தலை நடு வகுடெடுத்து வாரிவிட்டிருக்கும். கூட வரும் அன்பருடன் அவர் உயர்ந்த விஷயங்களைப் பற்றி இனிமையாகப் பேசுவார். அவரே நமது ஐயர்! ஐயர் சட்டை போட மாட்டார். "அது நமது உஷ்ண பிரதேசத்திற்கு அனுவசியம்" என்பார். ரிக்ஷாவிலும் ஏறமாட்டார். "ஒரு மனிதன் நம்மை வண்டியில் உட்கார வைத்து மாடுபோல் இழுத்துச் செல்வது மனதிற்குச் சங்கடமா யிருக்கிறது" என்பார். நடந்து செல்வதில், அதிலும் கடற் காட்சிகளைப் பார்த்துக் கொண்டே நடந்து செல்வதில், அவருக்கு மிக்க மகிழ்வுண்டு.

ஐயர் பத்திரிகை நிலையத்தில் ஏகாக்கிரத்துடன் தமது கடமையைச் நிறைவேற்றினர். அவருக்குத் தலையங்கப்

பக்கத்தின் எழுத்துப் பொறுப்புத்தான். நிர்வாகப் பொறுப்புகள் காமத், ஸ்ரீ ஆசாரியார் முதலியோரிடம் இருந்தன. ஐயர் வந்ததும் எல்லோரையும் முகமலர்ந்து நோக்கி, துணை ஆசிரியர்களுக்கு வேண்டிய வேலைகளைக் குறித்து, பிறகு தமது பீடத்தில் அமர்ந்து, கடமை தொடங்குவார். கடமை முடித்தே எழுந்திருப்பார். முதலில் தபாலைக் கவனித்துவிடுவிடுவென்று பதில் எழுதித் தள்ளுவார். (ஐயர் கடிதங்கள் சுருக்க விளக்கமா யிருக்கும்; அதிகம் எழுத மாட்டார்.) பிறகு ஆங்கிலப் பத்திரிகையைப் புரட்டி, நாட்டு நிலையை யறிவார். ராய்டர், அஸோஸியேட் பிரஸ் தந்திகள் வரும். இவற்றைத் தலைப்பிட்டு மொழி பெயர்க்கத் துணையாசிரியருக்கு அனுப்புவார். மஹாத்மா செய்தி, ஒத்துழையாமை நிலைமை, அரசாங்கச் செய்தி, சிறை சென்ற வீரர் நிலை, நாற்றிசை நடப்பு, பார்லிமெந்து நடப்பு, உலகச் செய்தி, தமிழ் நாட்டுச் செய்தி—என்று செய்திகளைப் பாகுபடுத்திக் கொடுப்பார்; பத்திரிகைகளிலிருந்து வேண்டிய குறிப்புகளை எழுதிக்கொள்வார். பிறகு ஐந்து நிமிஷம் சிந்திப்பார். உடனே பேனாப் பறக்கும். தலையங்கம், உபாங்கம், மற்ற அபிப்பிராயங்கள், விசேஷக் குறிப்புகள் அனைத்தையும் செவ்வையாக எழுதி, எழுத எழுத அச்சிற்கு அனுப்பிக்கொண்டே யிருப்பார். தாம் புனைந்த தனிக் கட்டுரைகளையும் அனுப்புவார். தமது வேலை முடிந்ததும் துணை ஆசிரியர்களைக் கவனிப்பார். பிறகு அச்சுத் தாட்கள் வந்துகொண்டே யிருக்கும். அவர் முடிவாகப் பார்த்தே ஒவ்வொரு வரியும் அச்சேறும். மாலை நான்கு மணிக்கெல்லாம் அச்சு வேலை முடிந்து போகும். நாளை வேலைகளைத் துணைவருக்குக்குறித்து, ஐயர் பொதுப் பணிக்குக் கிளம்புவார். நண்பரைப் பார்ப்பார்; அரசியல் கூட்டங்களைக் கூட்டுவார்; அன்று ஹிந்துவை அப்போதே படித்து முடிப்பார்.

52. ஐயர் பேச்சு

பொது நல இயக்கங்களிலெல்லாம் ஐயர் ஈடுபட்டுழைப்பார். கடற்கரைக் கூட்டங்களி லெல்லாம் ஐயர் தவறுமல் பேசுவார். அக்காலம் எஸ். ஸ்ரீநிவாச ஐயங்கார், சத்தியமூர்த்தி, பாரதியார், சிங்காரவேலு, ஹரிசர்வோத்தம ராவ், பிரகாசம், ராஜாஜி, இராமநாதன், இராமசாமி நாயக்கர், வரதராஜுலு நாயுடு, திரு. வி, கலியாணசுந்திரமுதலியார், டாக்டர்ராஜன், சுரேந்திரநாத் ஆர்யா, நாகேசுவர ராவ், பட்டாபி சீதாராமையா, கொண்ட வேங்கடப்பையா முதலிய தலைவர் பேசினர். ஐயர் அரசியற் கூட்டத்தில் தவறுமல் பேசுவார். அழைப்பிருந்தாலும் இல்லாவிட்டாலும் காலால் நடந்துசென்றே ஐயர் தேசீயக் கூட்டங்களிற் கலந்து கொள்வார். "எனக்கு 144 போட்டுடாதே ராமநாதா!" என்று ஐயர் வேடிக்கையாகப் பேசி, உபந்யாசம் செய்ய முந்துவார்; தேசப்பணியில் அவருக்கு அத்தனை ஆர்வம். ஐயர் எழுத்தில், ஹோமர் முதல் கம்பன் மில்தன் வரையில் எல்லாப் புலவர்களும் விளங்குவர். ஐயர் பேச்சு மிக்க எளிய நடையில், வெகு நிதானமாக வார்த்தை அளந்து, நிரம்ப வடமொழி வைத்து அர்த்த புஷ்டியாயிருக்கும். அவர் பேசும்போது அங்க சேஷ்டைகள் இரா. சிலையிலடித்த பாரத்வாஜர் மாதிரி யிருக்கும் அவர் தோற்றம். அவரும் பாரத்வாஜ கோத்திரர்தாம். எதிரிகளுக்கு அவர் நிதானமாக அசைக்க முடியாதபடி மரியாதையாகப் பதிலுரைப்பார். யாரையும் அவர் "அடா புடா" என்று பேச மாட்டார். "கதர் கட்டியவன் கழுதை; புக் மஸ்லின் கட்டியவன் புத்திசாலி, அஹிம்சைப்பித்தர் அலிகளுக்குச் சமானம்; காந்தி பச்சை யோகி" என்றெல்லாம் அக்காலம் ஒத்துழையாமை இயக்கத்தைக் கேலி செய்தனர் சிலர். அவர்களுக்கு ஐயர்

அமைதியாகச் சமாதானம் சொன்னர். "நம்மிலேயே சிலருக்கு, நமது நாட்டைப் பார்த்தால் பிடிக்கவில்லை. தேசம் நமது வீடு. அதை நினைக்கும்போது நமக்கு உள்ளன்பு பிறக்க வேண்டும். தாயை மறக்கும்சேய்உண்டோ? மஹாத்மா தந்தை போல, நாட்டிற்குப் பாடு படுகிருர். தகப்பனுரை அலக்ஷியம் செய்யும் பிள்ளைகளை என்னவென்பது? நமது நாடு பிறருக்கு அடிமையா யிருப்பதை நினைத்தால், சவுக்கடி பட்டது போலே உணர வேண்டும். நமது அடிமைத் தளையை அறுத்தெறிய நமது ஹிருதயம் பாய்கிறது. அதற்கு வழி மஹாத்மா காட்டி யிருக்கிருர். இப்போது சத்தியாக்கிரஹமும், பரிபூரண அஹிம்ஸையுமே நமக்கு வழி. வேறு கதி யில்லை. நமக்கு ஆயுத பலமில்லை; ஒற்றுமையும் குறைவு. ஆளுக்கொரு கட்சி பேசுகிருர்கள். தெர்மாபோலியில் சேர்ந்து நின்று தேசத்திற்காகப் போர்புரிந்த லியோனிதன் வீரர் போலே, நாம் மஹாத்மாவின் தலைமையில் ஒன்று சேர்ந்து அஹிம்ஸா தரும விரதம் பூண்டு, தேசத்திற்காகத் தியாகம் செய்வோம். கதர் உடுத்துவது நமது மானத்தை நாமே காப்பதாகும்; நமது நாட்டை விட்டுப் போகும் கோடிக்கணக்கான பொருளைக் காப்பதாகும்; ஏழை எளியவருக்குக் கஞ்சி வார்த்த புண்ணியமாகும். அதைச் சிலர் கையால் நேர்த்தி பார்த்து, முரடு என்கின்றனர். அவர்கள் வீட்டிலுள்ள அன்னலக்ஷ்மியை அலக்ஷியம் பண்ணி, விலைச் சோறுண்பவர்களுக்குச் சமானமாவார்கள்! நமது பஞ்சைச் சீமைக்கனுப்பி, அங்கிருந்து வரும் ஆடையை விலைக்கு வாங்கி உடுத்துவது மேலா? அல்லது நமது பஞ்சை நாமே இங்கே இராட்டினத்தில் நூற்றுக் கைத்தறியில் நெய்தணிவது மேலா? யோசித்துப் பார்த்தால் நமது ஆடையை நாமே நூற்று நெய்தணிவதே மேல் என்று யாரும் சொல்லுவார். இந்தச் சாமான்யமான விஷயங்களுக்கெல்லாம் எதிர்செய்து, கட்சி கட்டிக்

கொண்டிருந்தால், நாம் முன்னேறுவதெப்படி? யோசித்துப் பாருங்கள். நமது ஆடையை நாம் அணிவது பெருமையல்லவா? இது சிலருக்குத் தெரியாமல் இருப்பது ஆச்சரியமா யிருக்கிறது'' என்று இவ்வாறு நிதானமாகப் பேசி அமர்வார். காஞட்டுக் கோமான் வந்தபோது, காங்கிரஸ் பகிஷ்கரித்தது. அதற்காக ஐயர் தீவிரமாக வேலை செய்தார். திருவல்லிக்கேணியில் கொஞ்சம் இந்து முஸ்லிம் சச்சரவு உண்டானது. ஐயர் இருவரையும் சமாதானமாக்கினர். இத்துடன் தேசபக்தன் காரியாலயத்தார் போஜ சரித்திரம் நடத்த ஏற்பாடு செய்தனர். அதில் ஐயர் முனிவர் வேஷம் போட்டார். ஐயர் சாதாரணமாக வந்து நின்றாலே முனிவர்தாம்! ஒத்திகைகளுக்கு அவர் சரியான நேரத்தில் வந்து விடுவார்.

ஐயர் தேச பக்தனில் இருந்த போது எனக்கு இரண்டுகடிதங்கள் எழுதினர்: ''பத்திரிகையுடன் அரசியல் பிரசார வேலையும் சேர்த்து நேரத்தை ஆக்ரமித்து விடுகின்றன. அதனல் தங்களுங்கு உடனே பதில் எழுத முடியவில்லை. தங்கள் நாடகங்கள் மிகவும் இனிமையாயிருக்கின்றன, நாடக இலக்கியத்தைத் தாங்கள் வளர்க்கவேண்டும். ஷேக்ஸ்பியரின் ஹாம்லெட்டும் ஒதெல்லோவும் ரோமியோ யூலியத்தும் தங்களுக்கு ஆதர்சகிரந்தங்களாகும். தங்கள் விருத்தங்களில் பதங்களைப் பிரித்துப் பிரித்து எழுத வேண்டும். இன்றேல் ''கருவி ஆதி'' என்பது ' கருவியாதி'' என்று ஆய்விடும். பாரத சக்தி காம்பீர்யமாயிருக்கிறது. கம்பனை நன்ருகக்கற்ற தாங்கள், உயர்ந்த காவியங்கள் புனைவது ஆச்சரிய மன்று. நல்ல கவிதைகள் மில்தனின் ஆவேசம் பெறவேண்டும். தங்களுக்குப் பராசக்தி கலாநைபுண்யத்தை அனுக்ரகிக்கப்படும். நாள் போவதே தெரியவில்லை. தேசத்திற்காகவே நாட்கள் அர்ப்பண மாகின்றன என்று நினைக்கும் போது, மனம்

திருப்தி யடைகிறது. தேச பக்தன் தலையங்கங்கள் தங்களுக்கு மகிழ்ச்சி தருவது பற்றி ஸந்தோஷம்!" என்று எழுதினர்.

தேச பக்தன் சிறிது காலமே நடந்தாலும், அது பத்திரிகை உலகிற்கு ஓர் ஆதர்சம் காட்டியது. "இந்தியா"வுக்குப் பிறகு முழுத் தேசாபிமானத் தமிழ்ப் பத்திரிகை தேச பக்தனே எனில் மிகையாகாது. ஐயரின் வீர வாசகங்கள், கலா விமர்சனங்கள் எல்லாம் உள்ளத்தை அள்ளின. ஐயர் புத்தக மதிப்புரை எழுதுவதே ஒரு தனிக்கலை. நாடக லக்ஷணத்தை அவர் நாலைந்து வரிகளில் எனக்குக் கற்பித்தார்: "பேச்சுக்கள் நீளமாயிருக்கக் கூடாது; சுருக்க விளக்கமாயிருக்கவேண்டும். நடை மிகத் தெளிவாயிருக்க வேண்டும். மனோக்ஞமா யிருக்கவேண்டும். காட்சிகளில் நவரசமும் ததும்ப வேண்டும். காதலும் வீரமும் கருணையும் பிரதானமா யிருக்கவேண்டும். பயானகம் இடையிடையே வந்து, இன்னும் இன்னும் என்று ஜனங்கள் எதிர் பார்க்கும்படி காட்சிகள் அமைய வேண்டும். கீர்த்தனங்கள் அங்கத்திற்கு ஒன்று இரண்டு போதும். விருத்தங்கள் அதிகமா யிருக்கலாம்" என்று அவர் எழுதினர். தேசபக்தனில் நான் ஒரு புத்தக விளம்பரம் கொடுத்தேன். இரண்டே வாரம் வந்ததும் அது நின்று விட்டது. ஏன் என்று எழுதிக் கேட்டேன். "எனது சம்பளப் பாக்கியே இன்னும் வராமல் இருக்கிறது; நிர்வாகம் அப்படி" என்றெழுதினர். சிறிது காலத்திற் கெல்லாம் பத்திரிகை நின்று போனது.

அச் சமயம் அவர் எழுதாத ஒரு தலையங்கத்திற்காக அவரைக் கைது செய்தனர். "பத்திரிகையில் வருவதற் கெல்லாம் பத்திராதிபரே பொறுப்பாளி; போடு ஒன்பது மாதம்" என்று ஐயரைத் தண்டித்தனர். சத்தியாக்கிரகியாதலால், ஐயர் எதிர்வாத மில்லாமல் தண்டனையைப் புன்

னகையுடன் ஏற்ருர். அன்பர் மனங் கலங்கினர். மனைவி மக்கள் ஐயருக்கு நமஸ்காரம் செய்தனர். போலீஸார் ஐயரை வண்டியில் ஏற்றினர். சிம்மம் போலே வீரத் திரு முகத்தில் 'பாரத மாதாவுக்காக நாம் சிறை செல்லு கிறோம்' என்ற மகிழ்ச்சிபொங்கப் பொறுமைப் புன்னகை யுடன், ஐயர் சென்ருர்! அவரைப் பல்லாரி சிறையில் "ஏ" வகுப்பில் வைத்தனர்.

53. சிறை வாழ்க்கை

ஐயர் எந்த இடத்தில் இருந்தாலும், நேர்மையாக நடந்து கொள்வார். சிறையில் அணுப் பிசகாமல் சிறை விதிகளை அனுஷ்டித்து நடந்தார். சிறையதிகாரிகளும் ஐயரை நன்ருகக் கவனித்தனர். சாப்பாடு பரவாயில்லை. சாதாரண ஆடையே அணிந்திருந்தார். ஜெயில் உடையில்லை. நாளெல்லாம் கம்ப ராமாயணத்தையே ஆராய்ந்து, "ஏ ஸ்டடி ஆஃப் கம்பன்" (A Study of Kamban!) என்னும் அற்புதமான ஆங்கில நூலை எழுதி, வந்தார். ஐயருக்கு ஆங்கிலக்கவிதா சக்தியுண்டு என்பதை அந்நூலே விளக்கும். ஐயர் சிறையிலிருந்து ஸ்ரீ, ப. ஆதி மூர்த்திக்கு எழுதிய கடிதத்தின் சாரமாவது:—

"அன்புள்ள சகோதர! நான் இங்கிருக்கும் சங்கதி யைத் தாங்கள் பத்திரிகைகள் மூலம் அறிந்திருக்கலாம். இன்னும் ஆறு மாதம் இங்கே இருக்க வேண்டும். அவை யும் இம்மூன்று மாதங்களைப் போலவே இலக்கியப்பணி யிற் செல்லும் என்றே எதிர்பார்க்கிறேன். தங்கள் சரீர நிலை எப்படி யிருக்கிறது? தங்கள் குழந்தைகளுக்கு அவரவர் பெயருக்கேற்ற குணங்கள் வளர்க. எனக்குப் பிராயச் சித்தம் செய்து வைத்த நண்பரை விசாரித்த தாகச் சொல்ல வேண்டும். தங்களால் எனக்கு ஒரு உப காரம் ஆகவேண்டி யிருக்கிறது. நான் "ஸ்டடி ஆஃப் கம்பன்" எழுதி வருகிறேன். அதற்கு வால்மீகி, துளசி

தாஸ் ராமாயணங்களுக்கும் க்ரிபித் செய்த மொழி பெயர்ப்பு வேண்டி யிருக்கிறது. திலகரின் கீதா ரஹஸ்ய மும் வேண்டும். வருவித்துத் தருவோர் வேறில்லாமை. யாலும், தற்காலம் என்னிடம் பணம் மிகவும் சொற்பமா யிருப்பதாலும், காசியில் இந்நூல்கள் அகப்படுமாதலாலும் தங்களுக்குச் சிரமம் கொடுக்கிறேன். சிறையினின்று வெளி வந்ததும் விலையை அனுப்பி விடுகிறேன்.

"கீதாரஹஸ்யம் ஹிந்தி தர்ஜுமா (ஹிந்தி பிரசார புத்தகசாலையில் கிடைக்கலாம்) ரூ, 3—4—0

க்ரிபித்ஸ் வால்மீகி (லஜாக் அண்ட் கோவில் கிடைக்கும். ரூ. 10—0—0

சக்ரவர்த்தி சடர்ஜி அண்ட் கோ, (காலேஜ் ஸ்குயர், கல்கத்தாவில் அகப்படும்) ரூ. 5—0—0

க்ரிபித் துளஸிதாஸ் ராமாயணம் (லஜாக் அண்ட் கோவில் கிடைக்கும்) ரூ. 5—0—0

"விலையில் ரூ. 3—12—0 வியாபாரிகளுக்குத் தள்ளிக் கொடுப்பார்கள் என்று நினைக்கிறேன். தபால் செலவு அறிந்து பணத்தை அனுப்பி, என் பெயருக்கு ரிஜிஸ்தர் தபாலில் புத்தகங்களை அனுப்பச் சொல்லலாம்.

"கம்பனில் 100 பக்கம் முடித்திருக்கிறேன். இப் பொழுது லக்ஷ்மணனுடைய குறை விமர்சனத்தில் இருக் கிறேன். புத்தகம் 500 பக்கம் வரையில் போகும். உதா ரணப் பாட்டுகளை ஆங்கிலக் கவியாகவே பெரும்பாலும் செய்ய முயன்று வருகிறேன். அது வடநாட்டு வித்வான் களுக்கும், தமிழ் நாட்டவரில் தமிழை மறந்தவர்களுக்கும் கம்பனுடைய பெருமையைக் கூடியமட்டும் வெளிப் படுத்திக் காட்டும் என நம்புகிறேன். நாட்டிலுள்ள குழப்பங்களெல்லாம் அடங்கி, நமக்கு நல்ல காலம் சீக்

கிரம் கிடைக்க வேண்டுமென்று, ஜகதீசுவரியைப் பிரார்த்திக்கின்றேன். வந்தே மாதரம்! வ. வே. சு. ஐயர்.

என் விலாசம் :

V. V. S. Ayyar,
No. 65, "Central" Jail, Bellari.

ஐயரின் 'ஸ்டடி ஆப் கம்பனை' அவர் இரண்டு மூன்று முறை நகாசு செய்து, ஒவ்வொரு பாத்திர விமரிசனத்தையும் மூலத்தைப் படிக்கச் சொல்லி, ஆங்கில மொழி பெயர்ப்பைப் படித்துக் காட்டுவார். "கம்பர், வால்மீகி, ஷேக்ஸ்பியர், ஹோமர் முதலிய மஹாகவிகளை ரசனைச் சுவையில் மிஞ்சி விட்டான்" என்று ஐயர் அடிக்கடி சொல்லுவார். இராமன், சீதை, லக்ஷ்மணன், பரதன், குகன், வாலி, சுக்கிரீவன், ஹனுமான், அங்கதன், இராவணன், சூர்ப்பணகை, விபீஷணன், இரணியன், இந்திரசித்து முதலிய பாத்திரங்களை ஐயர் தேர்ந்தெடுத்து, கம்பன் கவிகளைக்கொண்டு அழகாக விளக்கி யிருக்கிறார். உலக மஹா கவிகளைவிடக் காட்சி ஜோடிப்பிலும், பாத்திர வர்ணனையிலும், கலைச் சுவையிலும், விவாதத்திலும் கம்பன் எப்படி ஒருபடி மேலாக விளங்குகிறான் என்பதை அவர் தமது நூலில் உள்ளங்கை நெல்லிக் கனி போலக் காட்டி யிருக்கிறார்.

பல்லாரிச் சிறையில் ஐயர் எழுதிய தினசரிக் குறிப்புகளை என்னிடம் காட்டினார். பெரும்பாலும் கம்பனைப் பற்றிய குறிப்புகளே. தெலுங்கு பாஸ்கர ராமாயணத்தைப்பற்றிச் சில குறிப்புகள் அதில் இருந்தன. தவிர மாணவர் நிலைமை, குரு குலக் கல்வி, பாரத்வாஜ ஆசிரமம், மாடேன் ரிவ்யூ போன்ற நல்ல கலைப் பத்திரிகை, ஆசிரமத்திற்கு காவேரிக்கரையில் அல்லது தாமிரவருணிக் கரையில் நிலம் என்றெல்லாம் அதில் குறிப்புகள் இருந்

CONNEMARA PUBLIC LIBRARY

தன. "சித்தர் பாடல் 1857" என்றோர் குறிப்பிருந்தது. அதை விளக்கச் சொன்னேன். நமது சுதந்திர யுத்தத்தையும் அதில் நம்மவர் பட்ட கோரமான கஷ்டங்களையும் சித்தர் மெட்டில் பாடி, தெருப் பிச்சைக்காரருக்கெல்லாம் சொல்லி வைத்துத் தேசாபிமானத்தைப் பரப்ப வேண்டும் என்றார். அதன்படியே புத்தகத்தைக் கொடுத்துச் சில கட்டங்களைக் காட்டிப் பாட்டுக் கட்டச் சொன்னார்.

54. ஆசிரமம்

சிறையிலிருந்து வெளிவந்ததும் ஸ்ரீ தாரநாதரின் துங்கபத்திரா ஆசிரமத்திலிருந்த தமது மனைவி மக்களை அழைத்து வந்தபோது, ஐயர் சிற்பச் செல்வம் நிறைந்த ஹம்பி, விஜயநகரம் முதலிய புகழ்பெற்ற பழம்பதிகளைச் சுற்றிப் பார்த்தார். ஆந்திர தேச முன்னேற்றத்தை நேராகக் கண்டறிந்தார். பிறகு தமது குடும்பத்துடன் வரகனேரிக்கு வந்து சேர்ந்தார். சிலகாலம் திருச்சி காங்கிரஸ் வேலையில் ஈடுபட்டிருந்தார். அதன்பிறகு குருகுலம் நாட்ட மேற்கொண்டு, இடம் பார்த்தார். சென்னை கோடம்பாக்கம், மன்னார்குடி, வெண்ணாத்தங்கரை முதலிய சில இடங்களைப் பார்த்தும் திருப்தியாகவில்லை. அச்சமயம் கோயிற்பட்டி மகாநாட்டிற்கு ஐயரைத் தலைமை வகிக்க அழைத்தனர். ஐயர் தலைமை வகித்ததும், 144 வந்து சேர்ந்தது. அதன்பிறகு கல்லிடைக்குறிச்சிக்கு ஐயர் வந்தார். அச்சமயம் அவ்வூர் போர்டு ஸ்கூல் ஒத்துழையாமை இயக்கத்தில் புகுந்து, அதன் உபாத்தியாயர்களெல்லாரும் சேர்ந்து அதைத் திலகர் வித்தியாலயமாக்கித் தேசீய முறையில் கல்வி யளித்தனர். அத் திலகர் வித்தியாலயத்திற்கு ஐயரைத் தலைவரா யிருக்க வேண்டினர். அதுவே குரு குலத்திற்கு முதற் படியானது. வித்தியாலயத்தை ஒட்டித் தமிழ்க் குருகுலம் ஏற்படுத்தி, அதை நிர்வகிக்க பாரத்துவாஜ ஆசிரமம் கண்

டார் ஐயர். கல்லிடைக்குறிச்சி திலகர் வித்தியாலயத்தில இருந்த எல்லாச் சாதனங்களும் குரு குலத்திற்குப் போயின. பாட முறைகளெல்லாம் பெரும்பாலும் தற் காலக் கல்வி முறையை ஒட்டியே நடந்தன. மாணவர், காலை மாலை துவைத்துக் குளித்து, இந்து தருமத்திற்குரிய அனுஷ்டானங்களைச் செய்து, தோத்திரங்கள் பாடி, தேச வணக்கம் செய்து வந்ததே விசேஷமான நடை முறைகளாம். கல்லிடைக்குறிச்சியில் சேர்ந்த பிரமசாரி கள் அனைவரும் பிராமணப் பிள்ளைகள்; எல்லாரும் ஒன்ருகத்தான் அமர்ந்து உண்டனர், கற்றனர்; ஆடினர்; பாடினர். அடிக்கடி அருகிலிருக்கும் கலியாண அரு விக்கு மாணவர் ஆசிரியருடன் செல்வர்; தாமிரவருணி யில் நீராடுவர். தமிழ், ஹிந்தி, சம்ஸ்கிருதம், ஆங்கிலம், இந்நான்கு மொழிகளும் கல்லிடைக் குருகுலத்தில் மாண வர் கற்றனர். அம்மாணவரிற் சிலர் சேரமாதேவி குரு குலத்திற்குச் சென்றனர்.

ஐயர் இயற்கையழகு சூழ்ந்த இடத்தில் தனியாகக் குருகுலம் காணவேண்டுமென்று சிந்தித்தார். குற்ரு லம், கலியாண அருவி, பாணதீர்த்தத்திற்குப் போகும் வழியில் உள்ள மணிமுத்தாநதிச் சோலை இவைகள் ஐயர் உள்ளத்தைக் கவர்ந்தன. இடம் வாங்கப் பணம் வேண் டுமே! தாகூருக்கும் மாளவியாவுக்கும் சிரத்தானந்தருக் கும் வடநாட்டார் உதவிசெய்தது போல, ஐயருக்குத் தமிழர் உதவி செய்திருந்தால், தென்னுட்டில் இப்போது சாந்திநிகேதனம் எழுந்து நின்று நிலவி வாழும்! அக்காலத் தமிழகம் குருகுலப் பெருமையை அறியவில்லை. "இடம், நல்ல இடம்" என்பதே இப்போது ஐயர் ஆர்வம். அச் சம யம் சேரமாதேவியில் ஓர் அழகான இடம் விலைக்கு வந்தது. தாமிர வருணிக்குத் தெற்கே மூன்று மைல் தூரத்தில் மற்ரெரு நல்ல இடம் விலைக்கு வந்தது. ஐயன்வாய்க்காலி லிருந்தும், புகைரத நிலயத்தினின்

றும் சுமார் ஒரு மைல் தெற்கே செல்ல வேண்டும். அந்நிலத்திற்கும் தெற்கே ஒருமைல் தூரத்தில் கொளுந்தி ஞமலை உள்ளது. ஆசிரமத்துக்குத் தக்க சோலையுடன் சுமார் முப்பது ஏக்கர் நிலம் எளிதாகக் கிடைத்ததென்று ஐயர் மகிழ்ந்தார்! அந்த இடத்தை ஸ்ரீ தி. ரா. மஹாதேவையரும், உள்ளூர் ஓவர்சியர் இராமகிருஷ்ண ஐயரும் விலைபேசித் தீர்மானித்தனர். விலை சுமார் ரூ 3000-ம். பணம்? பத்திரிகைகளில் இதற்குள் குருகுல நடைமுறைகளும், அதன் பெரும் பயனும், பத்தி பத்தியாக வெளிவந்தன. ஸ்ரீ. அ. ரங்கசாமி ஐயங்கார் மிகவும் அன்புகொண்டு குருகுலத்தைப்பற்றி அனுப்பிய வேண்டுகோள்களையும், அறிக்கைகளையும், கட்டுரைகளையும், நூல் விளம்பரங்களையும் வெளியிட்டுதவினர். இந்துவிலும் சில கட்டுரைகள் வந்தன. அவற்றை எல்லாம் பார்த்த தமிழர் சிலருக்கு ஐயர் பணியில் அபாரமான ஆர்வம் பிறந்தது. அவர்களில் ஒருவர், கானடுகாத்தான் வை. சு. ஷண்முகஞ் செட்டியார். "நான் வாங்கித் தருகிறேன் இடம்" என்று ரூ. 3000-ம் உதவினர். அதைக்கொண்டே நிலம் வாங்கி ஐயர் மாணவருடன் சுபவேளையில் சேரமாதேவிக்கு வந்துசேர்ந்தார். இதுகாறும் சொன்னவை ஐயரைப் பற்றிப் பெரும்பாலும் கேட்டவை; சிலவே கண்டவை. இத்துடன் முதல் பாகத்தை நிறுத்திக் கொள்ளுகிறேன். ஐயரைப் பற்றி நான் நேரில் இருந்து பழகிக் கண்ட விஷயங்களைப் பின் வரும் "தமிழ்க் குருகுலம்" என்ற தலைப்பில் விளக்குகிறேன். இதில் கண்டவை, பெரும்பாலும் அக்காலம் நான் எழுதி வந்த நாட் குறிப்புகளின் தொகுப்பாகும். இடை இடையே ஐயரின் வாக்குகளும் மிளிரும்.

இப்பகுதியுடன் ஐயர் அரசியல் வாழ்வு, அவரது கலைவாழ்வில் ஐக்கியமாய்விடுகிறது.

---

2. தமிழ்க் குருகுல சேவை

1. சேரமாதேவி குருகுல அமைப்பு

சேரமாதேவி குருகுல வளர்ச்சி, ஒரு தனிச் சரிதையாகும். புக்கர் வாஷிங்டன் துஸ்கிக் கலாசாலையை அமைத்தது போலவே, தன்முயற்சியால் குருகுலம் அமைந்தது. குருகுல நிலத்தில் கிழக்கே சில ஏக்கர் நஞ்சை நிலம்; நெல் சாகுபடியாகும். தெற்கே பெரிய நிலம் புஞ்சைப்பயிருக் குதவும்; செவ்வல்மணல், துவரை போடலாம். வடக்கேயுள்ள பகுதியில் சில தென்னை மரங்களும், மாமரங்களும், கூந்தற்பனைகளும் உண்டு. ரஸ்தா ஓரத்தில் நெடுக ஆலமரங்கள் உண்டு. அவற்றை யொட்டி முள்வேலி போட்டிருந்தது. தோட்டத்தின் கிழக்கே வயலோரத்தில் ஒரு பெரிய நடைகிணறுண்டு. நிலத்தின் தென்புறமும் ஒரு பெரிய நடைகிணறிருந்தது. இக்கிணற்றுநீர் பாய்ந்துதான் விவசாயம் நடக்கவேண்டும். அதுவே குடிக்க, குளிக்க, சமைக்க உதவும். அது நீர்த்தடமு மாகும். குருகுலத்தின் வாசலில் இருந்த அடைப்பைத் திறந்தால், ஒரு கூரைக் குடில் காணும்: அது சுமார் பத்தடி அகலம், பதினைந்தடி நீளம் இருக்கும். அதுவே முதன் முதலில் அமைந்த கட்டிடம். அப்போது குருகுலம் எங்கும் புல்முளைத்துப் புதர்மேவியிருந்தது. மரங்களெல்லாம் கவனிப்பாரின்றி வாடிக்கொண்டிருந்தன. இங்குமங்கும் பாம்பு தாராளமாக உலாவும். மழைக்காலத்தில் தேள்களும் ஜலமண்டலிகளும் பூரான்களும் சடுகுடு பாயும். இரவில் நாங்கள் பஜனை செய்து படுக்கவேண்டியதுதான்; நரிக்கூட்டங்கள் சற்று தூரத்தில் "ஊள் ஊள்" என்று பஜனை பண்ணத்தொடங்கும்!

ஆசிரம மரங்களில் ஏராளமான புட்கள் 'கிசிகிசி' யென்று காலையும் மாலையும் பள்ளிக்கூடம் நடத்தும். அஃது ஆறு தலாயிருக்கும். முதலில் ஒரே சிறு குடியிலே இருந்தது. அதிலேதான் ஐயர் ராயசவேலை எல்லாம் நடத்திவந்தார். பிரமசாரிகள், புத்தகம், வேண்டிய துணிகளெல்லாம் அங்கேதான். ஆசிரியரும் அங்கேதான். இப்படிப் பதினைந்தடிக் குடிலில் சிலநாட்கள் சென்றன. பிறகு மற்றொரு பெரிய ஓலைவீடு அமைந்தது; அதில் மாணவர் வசித்தனர். இதனிடையே முதலில் குருகுலத் தரையைச் செப்பனிட்டு மணல் கொண்டு வந்து கொட்டினோம். காலை ஐந்து மணிக்கெல்லாம் ரஸ்தாவுக்கு மேற்கேயுள்ள வாய்க்கால் மணலைச் சட்டி சட்டியாக அள்ளிவந்து தென்னை மரங்களுக்குப் போட்டோம். வகுப்பு நடக்கும் இடம், விளையாடும் இடம் இவற்றில் பரப்பினோம். சாப்பிடும் இடத்தைச் சாணம்போட்டு மெழுகிச் சுத்தம் செய்தோம். நடமாடும் இடங்களை எல்லாம் புல் செதுக்கிப் புதர்நீக்கி, உழவாரப்பணி செய்வோம். இவையே குருகுலத்தில்ஒவ்வொருநாளும் முதல்வேலை. சில நாட்களுக்குப் பிறகு கிணற்றருகே மூங்கில் வரிச்சுக்களாலும் மலைப்புற்களாலும் ஆன ஒரு குடில் எழுந்தது. அக்குடிலில் ஒரு இல்லற உபாத்தியாயர் இருந்தார்; அவரே மாணவர் துணைக் கொண்டு குடில் வாயிலில் கரியடுப்புவைத்து, குக்கரில் சமைத்துப் போட்டார். கிணற்றோரத்தில், மரத்தடியிலே தான் எல்லாரும் அமர்ந்துண்டோம். திருஷ்டிதோஷம் பார்ப்பதில்லை; சமபந்திதான். அதன்பிறகு, ஐயரின் முதற் கவலை புத்தகங்களைப் பற்றித்தான். தனக்குக் கட்டிடம் கட்டுவதற்கு முன்பே, ஐயர் தமது புத்தகங்களுக்குக் கட்டிடம் எழுப்பினர். ஆசிரம வேலியோரம் புத்தகசாலை யெழுந்தது. அஸ்திவாரம் கெட்டிச் செங்கல், மேல் வரிசையெல்லாம் மூங்கில் பிளாச்சிகள்; சுவர் கிடையாது; மேலே கள்ளிக்கோட்டை ஓடுகள் போட்ட புத்தகசாலை

அமைந்தது. அது மூன்று அறைகளாக வகுக்கப் பெற்றது. வடகோடி அறையில், மூங்கிலாற் செய்த பரண் அலமாரில் சுமார் 3000-ம் புத்தகங்கள் அடக்கப்பெற்றன. அந்த அறையில் நிற்க மட்டுந்தான் இடமுண்டு. அதற்கு வெளியே ஓர் அறை உண்டு; அதிலேதான் மாணவர் உட்கார்ந்து படித்தனர்; ஐயர் எழுதினர். அங்கேயே ஒரு பீரோவில் கம்ப நிலயம் புத்தகசாலை இருந்தது; விற்பனை நடந்தது. அந்த அறைக்கடுத்து, தென்புறம் காரியஸ்தர் அறை இருந்தது. அதிலேதான் நான் அமர்ந்து பால பாரதிக் கணக்குகளைப் பார்ப்பது, ஆசிரமத்திற்கு வரும் கடிதங்களையும் மணியார்டர்களையும்வாங்கி வைப்பது, மற்ற எழுத்துவேலைகளைச் செய்வது. இந்தக் கட்டிடத்தைச் சுற்றிலும் காரைத் திண்ணை நாற்புறமும் உண்டு. அதிலும் மரத்தடிகளிலுமே வகுப்புகள் நடந்தன. இக்கட்டிடம் முடிந்த பிறகு, புதிதாகச் சமையலறை கட்டினர். கிழக்கே ஒருபெரிய இடத்தில், ஒருநீளமான உள்; வெளியே சாப்பிடத் திண்ணை; தட்டி மறைவு. இவ்வளவு தான் சமயலறை. அது முடிந்த பிறகு, ஐயருக்கென்று அதன் மேல் தளத்திலேயே ஒரு மாடி அமைத்தது. அந்த மாடியிலேதான் ஐயர் வசித்தார். அங்கே ஒரு சிறிய சதுர அறையில், ஐயர் ஓர் ஆசனப்பலகையில் கிழக்குச் சுவரோரம் முன்னே ஒரு கைப்பெட்டி வைத்து பத்மாசனத்தில் அமர்ந்து, காலை எட்டு மணி முதல் பன்னிரண்டு மணி வரையில் எழுதிக்கொண்டிருப்பார். அந்த அறைக்கு முன்னே மூங்கில் தட்டியடித்த தாழ்வாரம். அதிலேதான் ஐயர் பாடம் சொன்னர்; பனிக்காலத்தில் படுத்தார். அதற்கு வெளியே நாற்புறமும் குறடுகட்டிய நிலாமுற்றம். வேனிற்காலத்தில் அங்கேதான் இரவில் கதை, தோத்திரம், கம்பராமாயணம் எல்லாம் நடந்தன. அத்திறந்த வெளியிலேதான் ஐயர் மெத்தைவிரித்துப் படுப்பார். அதினின்று படிகளில் இறங்கினல் கீழே ஒரு

சிறிய அறை இருக்கும். அதிலேதான் ஆசிரமத்திற்கும் அச்சகத்திற்கு வேண்டிய சாமான்களெல்லாம் சேகரித்து வைப்பது. மேஜை நாற்காலியே ஆசிரமத்திற் கிடையா. ஆசனப்பலகையும் ராயஸப் பலகையுமே (டெஸ்க்) உண்டு. மேற்சொன்ன ஆசாரியர் கட்டிடம் எழுந்தபிறகே, அச்சகத்திற்கு அதன் முன்னே ஓர் ஓட்டுக் கட்டிடம் அமைந்தது. அக்கட்டிடத்திலேதான் ஒரு பழைய ஈகிள் அச்சு யந்திரம், ஒரு டிரெடில், அச்சு வரிசை கள், பைண்டிங் சாமான்கள், பாலபாரதிக்கு வேண்டிய சாமான்கள் எல்லாம் ஒழுங்காக வைக்கப் பெற்றிருந்தன. இக் கட்டிடங்களெல்லாம் எழுந்து சிலமாதங்களுக்குப் பிறகு, ஆசிரமத்தின் தென் பக்கம் உயரமான பரண்வைத்த ஒரு கூரைக் கட்டிடம் எழுந்தது. அதில் சில பெரிய மாணவர் இருந்தனர். அதற்கு முன் அவ்விடம் பெரிய மைதானம். அதைத்தாண்டி இன்னும்இரண்டொருமாதங் களுக்குப் பிறகு, மாணவர் படிக்க,வைக்க, இருக்க, தனி யாகவே ஒரு நீளமான மண்சுவர்க் கட்டிடம் ஓலைக்கூறை யுடன் எழுந்தது. அதுதான் குருகுலப் பள்ளிக்கூடமானது. அக்கட்டிடத்திற்குக் கிழக்கே ஒரு கிணறுண்டு; அதற்குத் தெற்கே மற்றொரு கூரைக்குடில் எழுந்தது. அதிலே தான் இரண்டு தறிகள் நாட்டிக் கதர்நெசவு நடந்தது. அதனருகே மற்றொரு கட்டிடம எழுந்தது. அதில் ஆசிர மத்திற்கு வரும் விருந்தாளிகள் தங்கினர்; மாணவரும் இருந்தனர். இந்தக் கட்டிடங்களெல்லாம் எழுந்த போதே கிணற்றடியில் இருந்த பழைய பர்ணசாலையைப் புதுப்பித்து, ஐயர் எனது தவத்திற்காக அளித்தார். அதிலேயே நான் இருந்து வந்தேன். மாணவரெல்லாரும் அங்கேதான் மணிப்படி வந்து செல்வர். ஓர் ஊதல் ஊதி னல், புருப் வரும், போகும். ஆசிரமத்தின் வடகோடியில் தன்னந்தனியே ஒரு கூரைவீடமைந்திருந்தது. அதிலே ஓர் உபாத்தியாயர் வசித்தார். இவ்வளவுதான் ஆசிரம

அமைப்பு. இக்கட்டிடங்களுக்கு வேண்டிய செங்கற்க ளெல்லாம் ஆசிரம வாசிகளே அறுத்துச் சூளை வைத்த னர். சுண்ணும்புக் காளவாயும் ஆசிரமத்திற்குத் தெற்கே போடப்பெற்றது. இக்கட்டிடங்கள் அமைக்க, ஆசிரமம் அனந்தகிருஷ்ண ஐயரும் உள்ளூர் ஓவர்ஸியர் இராம கிருஷ்ண ஐயரும் தேகப்பிரயாசைப் பட்டனர். அச்சுக் கூடத்திற்கும் புத்தகசாலைக்கும் இடையே உள்ள மணல் வெளியிலேதான் பொதுக்கூட்டங்களும், பஜனைகளும், ஆடல்பாடல்களும் நடந்தன. என் கட்டிடத்தின் கிழக்கே கிணறும் நெல்வயலும்; மற்றப்பக்கமெல்லாம் மாமரங்களும், தென்னை மரங்களும் இருந்தன. மற்றக் கட்டிடங்களின் முன்பும் இரண்டொரு மரங்கள் இருந் தன. எப்போதும் பறவைப் பாட்டு எனக்குச் செவி விருந் தளித்தது.

2. குருகுல நோக்கம்

தமிழர்களைக் கால்ஸா, சீக்கியர் போலச் சிங்க வீர ராக்கவே ஐயர் குருகுலங் கண்டார். அவர் நாளைக்குப் பத்துத் தடவையாவது "தீரனாக வேண்டும்" என்னும் வார்த்தை சொல்லாமல் இருக்க மாட்டார். "தீரமே" அவர் ஜபம். அடிமை வாழ்வும் அன்னியக் கல்வியும் பாரத தருமத்தைக் குலைத்தன; நமது நாட்டிற்குரிய ஆசார அனுஷ்டானங்களை யெல்லாம் கெடுத்தன; அறத் தைச் சிதைத்தன. தேஜசும், ஓஜசும் நிறைந்த, எழில் பெற்ற, ஆத்மவீரர் நாட்டில் அரிதாயினர். சுதர்மம் பாழ்பட்டது. பர தருமம் புல்லுருவிபோ லடர்ந்து, நமது பலத்தை உறிஞ்சியது. பாரத ஜாதி தாழ்வுற்று, வீழ்வுற் றது. நாட்டிற்கும், வாழ்விற்கும் சம்பந்த மில்லாத அன் னியக் குப்பைகளை யெல்லாம் மூளையில் வாரி யடைத்துப் பரீட்சைக் காகிதத்தில் கொட்டித் தீர்த்துப் பட்டம் பெற்று, பட்டாக்களைத் தூக்கிக் கொண்டு அடிமை

வேலைக்கு அலைவதே நம்மவர் தலையெழுத்தானது! அந்த அரைகுறைக் கல்வியும் நூற்றுக்குப் பத்துப்பேருக்கு மேல் கற்பாரில்லை. நாடு, வறுமை, மடமை, அடிமை யிருளில் ஆழ்ந்து கிடந்தது. நாட்டிற்குரிய கலைகளெல்லாம் நாளுக்கு நாள் தேடுவாரற்று நலிந்தன.

நாட்டிற் குரிய கல்வி செழிக்க வேண்டும். நாட்டுக் கலைகள் நல்ல வளர்ச்சி பெறவேண்டும். நமக்குரிய அத்யாத்மக் கலையுடன் மேனாடு பெருமை கொள்ளும் இயற் கலையிலும் நாம் தேர்ச்சி பெற்று, பண்டை நலமும் புது நலமும் ஒருங்கே வாய்ந்து உலகில் தலை நிமிரவேண்டும். காவியம், ஓவியம், இலக்கியம், தத்துவம், மருத்துவம், பௌதிகம், ரசாயனம், தாவரம், சரித்திரம், பூகோளம், யந்திரக் கலை, கைத் தொழில் முதலிய அனைத்திலும் தேர்ந்து, நாட்டைக் காக்கத் தக்க வீரப் பயிற்சியும் பெற்ற நிபுணரைப் படைக்க வேண்டும். அவர்கள் கச்சேரி வாசலில் மனுச் செய்து தொங்காமல், உலகில் சுயேச்சையாக ஒரு தொழிலோ, வாணிகமோ செய்து மானமாகப் பிழைத்து, தேசத்திற்கும் பணிபுரிய வேண்டும். குரு கோவிந்தன் சிவாஜி போன்ற வீர மணிகள், கம்பர், காளிதாஸன், வியாஸர், வால்மீகி, துளசிதாஸர் போன்ற மகா கவிகள், தியாகையர் தீக்ஷிதர் போன்ற சங்கீத ரத்தினங்கள், ரவி வர்மா மைகேல் ஆஞ்சலு போன்ற சைத்திரிகர், கார்க்கிலிப், ராக்பெல்லர், ஹென்ரி போர்டு போன்ற கோடீசுவரர்கள், கொலம்பஸ், வாஸ்கோடி காமா, காப்டன் குக் போன்ற உலக யாத்திரிகள், மஜினி, திலகர் போன்ற தேசாபிமானிகள், எதிஸன், போஸ், ராமன் போன்ற விஞ்ஞானிகள்—நமது தமிழகத்தில் எழுந்து விளங்க வேண்டும். இதுவே எனது கனவு என்பார் ஐயர். இதைப் பற்றி முன்பே ஒரு கடிதத்தில் குறித்திருந்தார்: கலை, வீரம், சுதந்தரம் இவையே ஐயர் பல்லவியாம். "அபிநவநாளந்தா, தக்ஷ

சீலம் ஸ்தாபிக்க வேண்டும். தேசீயக் கலைகளுக்குப் புன ருத்தாரணம் தரவேண்டும். நிபுணர்களை உண்டாக்க வேண்டும். நமது கொள்கைக் கேற்றபடி ஒரு நல்ல மாஸிகை நடத்த வேண்டும்” என்பதே ஐயர் என்னிடம் முதன்முதல் சொன்ன வார்த்தைகள்.

3. பாரத்வாஜ சங்கமும், தொண்டரும்

இந்த நோக்கங்களை நிறைவேற்றவே ஐயர் தமது கோத் திரப் பெயரால் “பாரத்வாஜ சங்கம்” ஏற்படுத்தினர். ஐயர், “தங்கள் கோத்ரம் என்ன?” என்ருர். “ஸகோத் திரந்தான், பாரத்வாஜந்தான்” என்றேன். “சரியாய்ப் போயிற்று. தாயும் காமாக்ஷி; கோத்திரமும் பாரத்வாஜம்; பெற்ருேர் இட்ட பெயர்களும் ஒன்று. நாம் ஒன்று சேரு வோம்...ஸகோதரர்!” என்ருர். பாரத்வாஜ ஆசிரமத்தில் சுமார் எட்டுப் பேர்கள் சேர்ந்தனர். அதில் முதன்மை யானவர்கள், தி. ரா. மஹாதேவ ஐயர், நான், அனந்த கிருஷ்ண ஐயர், சுப்பையர், கிருஷ்ணமூர்த்தி ஐயர், கும்ப லிங்கம் பிள்ளை, நாராயண அய்யர் முதலியோர். “இச் சங் கத்தின் சார்பில் எல்லா மாணவருக்குமே உபநயன சமஸ்காரம் செய்து, ஜாதி வேற்றுமையை விட்டு விடுவது. எல்லாரும் பிறகு ஒரு குலமாகவே இருப்பது” என்று ஐயர் முடிவு கட்டினர். இதில் சேர்ந்தவர்கள் எல்லோ ருமே ஐயருக்கு அரிய பணி செய்தனர்; குருகுலத்திற்கு வஞ்சமில்லாமல் உழைத்தனர். (1) ஸ்ரீ தி. ரா. மஹாதேவ ஐயர், பெரிய தியாகி, சிதம்பரம் பிள்ளை காலம் முதல் தேசத் தொண்டில் ஈடுபட்டவர். முதலில் போலீஸ் இன்ஸ்பெக்டரா யிருந்து, பிறகு வக்கீல் தொழிலில் நல்ல சம்பாத்தியம் பெற்றவர். மஹாத்மாவின் ஒத்துழையாமை இயக்கத்தில் குடும்பத்துடன் ஈடுபட்டவர். மஹாதேவ ஐயர் பத்தினி விசாலாக்ஷியம்மாள், கல்லிடை டாக்டர் சங்கரய்யர் பத்தினி இலக்குமி அம்மாளுக்கு, நெருங்கிய

உறவு. இருவரும் நாட்டுப் பணியிற் சிறந்து விளங்கினர். விசாலாக்ஷியம்மாள் அடிக்கடி குருகுலத்திற்கு வந்து, மாணவருக்கு அன்புடன் தொண்டு செய்வாள்.

(2) மஹாதேவ ஐயர் புதல்வர் இராமானந்தன், சத்தியானந்தன் என்னும் இருவரும் குருகுலத்தில் தலை மாணுக்கராக விளங்கினர். மாணவ மணியான இராமானந்தன் எப்போதும் ஐயருடனேயே இருந்து வந்தான். குருகுலக் கல்வியை நன்ருகப் பயன்படுத்திக் கொண்டவரில் இராமானந்தனை முதன்மையாகச் சொல்ல வேண்டும். மஹாதேவ ஐயர் இவ்வாறு குடும்பத்துடன் குருகுலத்திற்குப் பணி செய்ததுடன், செட்டி நாடுகளுக்கும், மலேயாவுக்கும் சென்று, பணம் வசூலித்தார். குருகுலக் கணக்குகளையெல்லாம் இம்மி பிசகாமல் அவரே வைத்து வந்தார். அவர் செய்த உதவியை எந்நாளும் மறக்கக் கூடாது. ஐயருக்கு மஹாதேவர் மீது அத்யந்த பிரியம், மதிப்பு, மரியாதையுண்டு.

(3) அனந்தகிருஷ்ணஐயர்: ஐயருடன் நெடுநாள் இருந்த வீரர். தமது மனைவியுடனே அவர் ஆசிரமத்தில் வாழ்ந்தார்; தமிழ் நன்ருக எழுதுவார். ஓயாமல் உடலை வளைத்துப் பாடுபடுவார். பயிர் வேலை, கட்டிட மராமத்து, செங்கல் சுண்ணும்பு சூளை வைத்தல், சந்தைக்குச் செல்லல் முதலிய வேலைகளெல்லாம் அவர் கையில் இருந்தன. (4) சுப்பையர் பள்ளிக்கூட உபாத்தியாயராயிருந்து குருகுலத்திற் சேர்ந்தவர். மாணவருக்குக் கல்வி புகட்டும் வேலையை அவர் கவனித்தார். அவர் பார்யையும் மகனும் குழந்தையும் குருகுலத்திலேயே இருந்தனர். அவர்களுக்குத் தனிக் கட்டிடம் அமைந்திருந்தது. (5) கிருஷ்ணமூர்த்தி: சிவாவின் சீடர்; ஆவேச தேச பக்தர்; ஹனுமான் போலே எந்த வேலையிலும் சலியாமல் உழைப்பார். அவர் சமையல், அச்சகக் காரியம், சுற்று வேலைகள் அனைத்தையும் கவனித்து வந்தார். அவர் தாமே அச்சுக் கோக்கவும்,

அச்சடிக்கவும் கற்றுக் கொண்டு பலநாள் பழகிய நிபுணன் போலே வேலை செய்து வந்தார்.

(6) கும்பலிங்கம் பிள்ளை: நாஞ்சை நாட்டு மலையாளி. குருகுலத்திற்கு வந்தே தமிழ் கற்றார். ஆங்கிலத்தில் நல்ல மேதாவி. திருக் குலத்தாரிடம் மிகவும் அன்பு கொண்டவர். அவரே குருகுலத்திற்கு நாஞ்சை நாட்டு மாணவர் நால்வரையும், ஒரு திருக்குலப் பையனையும் அழைத்து வந்தார். அவர் உண்மையான கல்வித் தொண்டர். அஞ்சா நெஞ்சு படைத்த சமரஸ வாதி; நல்ல நண்பர்.

(7) ஜி. ராமச்சந்திர ஐயர் என்பார் குருகுலத்திற்கு அரிய தொண்டு செய்தவர்.

(8) நாராயண ஐயர் கடைசி மாதங்களில் வந்தார். அருமையான குணமுள்ளவர்; அடையாற்றில் படித்து, பி. டி. பட்டம் பெற்றவர். வஞ்சமற்ற உழைப்பாளி; மகா சாந்த சீலர்; மாணவரை உயிர்போல் நேசிப்பவர். அவர் பள்ளிக்கூடப் பொறுப்பு முழுதும் வகித்தார்.

இவர்களைத் தவிர, (9) முத்தையர் என்னும் தமிழ் வித்துவானும், சமுஸ்கிரதத்திற்கு (10) வேங்கிடாஜல சாஸ்திரிகளும் இருந்தனர். முத்தையர் சங்கப் பரீட்சை தேறினவர்; பிடில் வித்துவான். அவர் தமிழும், சங்கீதமும், பிடிலும் சொல்லிக் கொடுத்தார். சாஸ்திரிகள் சமுஸ்கிரதம் மட்டும் எல்லாருக்கும் சொல்லிக் கொடுத்தார்.

(11) கள்ளபிரான் என்னும் அன்பர் எல்லாருக்கும் இந்தி சொல்லிக் கொடுத்தார். இடையிடையே சிலர் வந்து கணக்கு, சரித்திரம் முதலிய பாடங்கள் கற்பித்ததுண்டு. தமிழ், ஆங்கிலம், ஸயன்ஸ், சாரணப் பயிற்சி, உடற் பயிற்சி, பாலபாரதி வேலை, இலக்கியத் தொண்டு இவையே என் பங்கிற்கு அமைந்த பணிகளாயின. எந்தச் சமயம் எந்த வேலை ஏற்பட்டாலும், மகிழ்வுடன் செய்வ

துண்டு. மாணவரை நான்கு மாதத்திற் கொருதரம் சுமார் 100 மைல் கால்நடையாக அழைத்துச் சென்று நடை பள்ளிக்கூடம் நடத்துவது எனது பொறுப்பாயிருந்தது.

குருகுலத்தில் குடியிருந்த பெண்மணிகளும் மாணவருக்குத் தாய்மார்போலே அன்புடன் பணி புரிந்தனர். இவ்வாறு குருகுல வேலையில் ஈடுபட்டவர்க ளெல்லாரும் அதையே தமது சுதர்மமாகச் செய்தனர். குருகுலப் பணிமட்டுமன்று; நாட்டுப்பணியும் இவர்கள் ஏராளமாகச் செய்தனர்.

குருகுலத்தில் சேர்ந்த மாணவரும் மிகவும் கருத்துடனே கற்று, குணமுடன் நடந்தனர். வேதாரண்யம் நடராஜன், இராஜபாளையம் ராஜு, ராமானந்தன், சத்தியானந்தன், ஐயர் மகன் கிருஷ்ணமூர்த்தி, கல்லிடைக்குறிச்சி கோமதி சங்கர தீக்ஷதர் மகன் கோ. மஹாதேவன், சுப்பையர் மகன், மன்னார்குடி சுப்பிரமணியன், வைத்தியநாதன், ஓமலூர் ராமசாமி, நாஞ்சை நாட்டிலிருந்து வந்த ஐந்து மாணவர், முத்துக்குமாரசாமி, ராமநாதன், மலையாளம் ராகவன், பர்மா மாணவர் இருவர், தைப்பிங் மாணவன் ஒருவன், இலங்கையிலிருந்து சிலர், 'ஈரோடிலிருந்து ஒரு சேட் பையன்—இவ்வாறு பலதிசை மாணவர் குருகுலத்திற் சேர்ந்து பயின்றனர். ஐயர் மகள் சுபத்திரா, கே. ஜீ. சேஷையர் பேத்தி சங்கரி, இந்த இருவரே ஆசிரம மாணவிகள். ஐயர் மகன் கிருஷணமூர்த்தி, நடராஜன், சங்கரன், மகாதேவன் இந் நான்கு பேரும் பெரும்பாலும் என்னுடனேயே இருந்தனர்.

4. குருகுல வரவு செலவு

பள்ளிக்கூடம், அச்சுக்கூடம், பாலபாரதி, நெசவுச்சாலை, விவசாயம் முதலிய எல்லா வேலைகளிலும் மாணவர் ஆசிரியர் அனைவரும் ஈடுபட்டனர். இவற்றிற்கெல்லாம்

பொருள் வேண்டுமே? நாங்கள் பொருளாதாரத்திற்குப் பட்டபாடு தெய்வமே அறியும். குருகுலத்திற்கு ரெயில்வே உண்டியல் வசூலிக்கச் சில அன்பர் முன்வந்தனர். வெங்கு வையர், ராமச்சந்திர ஐயர், பெருமாள் இம் மூவரும் அவருள் முதன்மையானவர்கள். இவர்கள் காலை உணவருந்தி, ரயில் ஏறி, காசு காசாக வசூலித்து வருவர். நாளைக்குச் சுமார் மூன்று ரூபா வரும். ஐந்திற்கு மேற் போகாது. நான்கு மாதங்களுக் கொருமுறை நான் பிரமசாரிகளைக் கால்நடையாகவே ஊர் ஊராக அழைத்துச் செல்வேன். அப்போது தெருத் தெருவாகத் தேசீய கீதங்களைப் பாடிக் கொண்டு, பணம் வசூலித்தேன். நாளைக்கு இருபது முப்பது வசூலாகும். அவ்வாறு வசூலித்த தொகை சுமார் ரூ. 2000 ஆகும். ஐம்பது சேர்ந்ததும் ஐயர் பேருக்கு மணியார்டர் அனுப்பினேன். மற்றும் சில நகரத்தாரிடமும் பணம் வசூலித்ததுண்டு. டாக்டர் ராஜன் போன்ற நண்பர், ஐயருக்கு மாதா மாதம் ஏதாவது அனுப்பினர்கள். தமிழ்நாடு காங்கிரஸ் ரூ. 5000 கொடுத்துதவியது. அதை ஐயர் அப்படியே பாங்கில் போட்டிருந்தார். "தேசீயப் பணத்தைத் தீராத பக்ஷத்திலே தான் தொடுவது" என்று சொன்னர். எஸ். சீனிவாச ஐயங்கார் நிரம்ப வாக்களித்துக் கொஞ்சம் பணம் தந்தார். குருகுலம் நீடித்திருந்தால், அவர் அதிகம் கொடுத்திருப்பார். நான் ராமேசுவரம் மகாநாட்டிற் கலந்து கொண்ட போது, சீனிவாச ஐயங்கார் குருகுலத்தைப் பற்றி மிகவும் பாராட்டிப் பேசி, "ஐயர் ரிஷிக் குட்டிகளைத் தயாரிக்கிறுர்" என்றுர். குருகுலத்தை ஆதரித்து, ஒரு தீர்மானமும் நிறைவேறியது. மலையாளத்திலிருந்து சிலரும், சுங்கை சிப்புட் வீராசாமி என்பவரும் அடிக்கடி பணம் அனுப்பினர்; கோயமுத்தூர் கிருஷ்ண ஐயர், வா. வெள்ளா ராமசாமி சாஸ்திரியார், மலேயா நண்பர் சிலர், ஐயருக்குத் தம்மால் இயன்றதை அனுப்பினர்கள். சிலர் புத்தகங்கள் அனுப்பினர்கள்.

சிலர் பிரமசாரிகளுக்கு ஆடைகள் அனுப்பினார்கள். சிலர் நெல் அனுப்பினர். இந்த மாதிரி நாலா பக்கமும் இருந்து வந்த பணத்தைக் கொண்டுதான், குருகுலத்தை ஐயர் நிர் வகித்தார். ஐயர் மிகவும் செட்டாகவே வாழ்ந்தார். தமது குடும்பத்திற்கு இருபத்தைந்து ரூபா தான் அவர் அனுப்பி வந்தார். அது போதாமல் திருச்சியில் பாக்கியலக்ஷ்மி அம் மாளும் சுபத்திரையும் கவர்கள் செய்து கொஞ்சம் மேல் வரும்படி சம்பாதித்துக் கொண்டனர்.

ஆசிரியர்களுக்கு எக்குறையுமில்லாமல் அவர் தேவை யான தெல்லாம் உதவி வந்தார். ஆசிரமத்தில் அனந்த கிருஷ்ண ஐயரும், சுப்பையரும், நாராயண ஐயரும் குடும் பத்துடனே இருந்தனர். இவர்களுக்கு வேண்டியதை யெல்லாம் தட்டில்லாமல் ஐயர் தாராளமாகத் தந்தார்; மாணவரை ஒரு தகப்பனுரை விட அதிக அன்புடன் பாது காத்து வந்தார். மாணவர் மாதம் பன்னிரண்டு முதல் பதி னுறு ரூபா வரையில் கொடுத்து வந்தனர். நாலைந்து பேர் இனமாகவே படித்து வந்தனர். பணமுடை ஏற்பட்ட போதெல்லாம் ஐயர் சென்னைக்குச் செல்வார். நண்ப ரிடம் கேட்டு ஒரு பெருந்தொகை கொண்டு வருவார். ஐயர் எப்போது வெளியே சென்று வந்தாலும், இரண்டு தோள்களிலும் பெரிய பெரிய பைகள் சுமந்து வருவார். ஒரு பை நிரம்பப் புத்தகங்கள் அவசியம் இருக்கும்; யாராவது அரிச்சுவடி கொடுத்தாற்கூட ஐயர் சந்தோஷ மாக வாங்கி வருவார். சிறந்த இலக்கியங்கள் கிடைத்தால், ஒரு பர்லாங்கில் வரும்போதே புன்னகைத்து, அருகே வந் ததும், “குலிஸ்தான் கொண்டு வந்திருக்கிறேன்!” என்று மூட்டையை இறக்குவார். மற்றொரு பையில் கனிகள், சில்லறைச் சாமான்கள், மாணவருக்கு வேண்டிய சாமான்கள் இருக்கும். பணம் எப்போதும் ஒரு நீளமான பையில் போட்டு இடுப்பைச் சுற்றி ஓசைப் படாமல் கட்டி இருக்கும். ஒரு பெரிய குடும்பத்திற்குப் பாடுபடுவது

போலவே ஐயர், குருகுலத்திற்கு அல்லும் பகலும் கருத்துடன் பாடுபட்டார். ஒருநாள் இரவு சுமார் எட்டு மணிக்குக் கொளுந்திருமலையை நோக்கிச் சென்று உலாவி வந்தோம். அப்போது மாணவர் பாடிக் கொண்டிருந்தனர். குருகுலத்தில் அங்கு மிங்கும் ஹரிகேன் விளக்குகள் எரிந்தன. "குருகுலம் ரம்யமான காட்சி யளிக்கிறது. நாடு இப்படித்தான் இரவாயிருக்கிறது. தாங்கள் இன்று ஓர் இடத்தில் விளக்கெரியச் செய்தீர்கள். எங்கும் விளக்கெரிந்து நாட்டில் இருளே இல்லாமல் ஓட்ட வேண்டும்" என்றேன்!

"செய்ய வேண்டும். குருகுலம் பார்க்கப் பார்க்க நன்ருயிருக்கிறது. இந்த இடத்தில் ஒரு தக்ஷசீலத்தைக் காண வேண்டும். ஐரோப்பியர் பெருமை பேசும் யந்திரத் தொழில்களை யெல்லாம் நாம் இங்கே செய்ய வேண்டும். இப்போது பாட்டொலி கேட்பதே போல, இன்னும் மூன்ருண்டுகளில் அல்லும் பகலும் பல தொழிலோசை கேட்க வேண்டும். கல்வியும் தொழிலும் ஆத்ம தருமத்துடன் ஐக்கியமாகி, நாட்டிற்குப் புதிய சக்தியை அளிக்க வேண்டும்" என்ருர்.

5. குருகுல உணவு

முதலில் உழைப்பு, பிறகே உணவு. உடல் வியர்க்க உழைத்து, நல்ல பசி வந்து சாப்பிட வேண்டும்; செல்வத் தொந்தி கூடாது. நாக்கை அடக்க வேண்டும். எளிய உணவே நல்லது; அதிலும் இயற்கை உணவே மேலானது என்பது ஐயர் கொள்கை. அவர் "ஸஹன சக்தியும் ஜீரண சக்தியும்" அதிகம் வேண்டு மென்பார். இந்த நோக்கத்தைக் கொண்டே ஐயர் ஆசிரம உணவை வகுத்தார். ஆசிரமத்தில் கொஞ்ச நாள் இயற்கை வைத்தியர் கி. இலக்ஷ்மண சர்மா, தமது குடும்பத்துடனே வந்திருந்து, எல்லாருக்கும் இயற்சிகிச்சை கற்பித்தார். அநேகமாக அவர் சொன்ன உணவு முறையே ஆசிரமத்தில்

அனுஷ்டானத்திற்கு வந்தது. எனது உணவு பெரும் பாலும் நிலக்கடலே, வாழைப்பழம் இரண்டேயாம். ஐயர் அத்துடன் தயிர் சாப்பிடுவார். இரவில் கனிகள் சாப்பிடு வார். சில நாட்கள் கேப்பை அடை தட்டிச் சாப்பிடுவ துண்டு. ஆசிரியர் சிலர், கேப்பை, பருப்புக் கீரை இரண் டையே சாப்பிட்டனர். காலேயில் மாணவருக்கு வாழைப் பழமும், கடலேயும், மோரும் தருவர். சுமார் பதினேரு மணிக்குக் கேப்பைக்களி, பருப்பும் காய்கறிகளும் போட் டுப் பொரித்த கூட்டு, மோர் இம் மூன்றும் உண்பர்; அரி சிச் சாதமும் உண்டு. சாயங் காலம் ஆறு மணிக்குச் சில நாட்கள் சமையல் உண்டு; சில நாள் தண்ணீர் கொட்டிய சாதமும் மோரும், தொட்டுக் கொள்ள ஒரு கூட்டுமாகச் சாப்பிடுவர். ஆனல் வீட்டில் பல தின்பண்டங்களும் சாம் பாரும் ரசமும் வைத்துத் தீட்டிய மாணவருக்கு, இந்த எளிய உணவு முதலில் பிடிக்கவில்லே; நாக்கைப் பழக்குவது எளிதாயில்லே. புளி மிளகாய் வெங்காயம் இம் மூன்றும் ஆசிரமத்திற்குள்ளே வருதல் கூடாது. சில சிறுவர் ஏங்கிப் போயினர். தோத்திரம் நடக்கும் போது 'அங்கிங் கெனுதபடி எங்கும் பிரகாசமாய்; ஆனத்த பூர்த்தியான கடவுளே! எங்களுக்கு நல்ல அறிவும், பலமும், திருவும் வீரமும் பெருக, அருள் புரி!'' என்று நாங்கள்' கடவுளே மனமாரத் தொழுவோம். ஒரு பையன், "கடவுளே! எனக்கொரு மிளகாய்ப் பழம் அருள் புரி'' என்று மனத் திலேயே தொழுது, ஒரு நாள் பளிச்சென்று வாய்விட்டுச் சொல்லியும் விட்டான்; நைப்பாசை விடவில்லே.

கேப்பைக்களி சில மாணவருக்குப் பிடிக்கவில்லே. தீபாவளியன்று கேப்பையில் வெல்லம் போட்டுக் கிண்டி மாணவருக்கு அளித்தனர். எல்லாரும் சாப்பிட்டனர். சில மாணவர் ஜாடையாகக் கேப்பைக் களியைத் தாழ் வாகப் பேசினர். ஒரு மாணவன்,

"அன்றும் இன்றும் கேப்பைக்களி;
அடைமழைக்கும் கேப்பைக்களி;
தீராத கேப்பைக்களி
தீவாளிக்கும் கேப்பைக்களி!"

என்று தெம்மாங்கு பாடிவிட்டான்! அந்தத் தெம்மாங்கைப் பாடிப் பாடிச் சிறுவர் சமையலைக் கேலிசெய்து வந்தனர். ஒருநாள் இரண்டு மாணவர் சேர்ந்து கேப்பைக்களித் தெம்மாங்கை உரத்துப் பாடிச் சென்றனர். ஐயர் கவனித்தார்: "ஹூம், ஹஹ" என்று சினமும் சிரிப்புங் கொண்டார். அன்று இரவு சாப்பிட்டதும் உணவைப் பற்றிப் பேசினர்! "நமது நாட்டிலே இந்தக் கேப்பைக் கூழ் கூடக் கிடைக்காமல், கோடானு கோடி ஜனங்கள் பட்டினியிருக்கிறார்கள். இந்தக் கேப்பையைச் சாப்பிட்டு அரோக திடகாத்திரத்துடன் வயல் வரப்புக்களில் பகலெல்லாம் வேலை செய்யும் ஏழைகளைப் பாருங்கள். நல்ல பசி இருந்தால் எதைப்போட்டாலும் செறிக்கும். கல்லைக்கூட ஜீரணிக்கும்வயதில், நீங்கள் கேப்பையைச்சாப்பிட முடியவில்லை என்பது அதி யாச்சரியமா யிருக்கிறது" என்றார். ஆனால் சில நாட்களில் உணவு மாறியது. சமையலுக்கு ஒரு நல்ல ஆள் அமர்த்தினர் ஐயர். சாதம் கூட்டு, மோர்க்குழம்பு, சகிதம் இரண்டு வேளை சுடச் சுட உணவும், காலையில் பழையதும் மாணவருக்குத் தந்தனர். "பழையது சாப்பிட்டுத்தான் நாங்களெல்லாரும் திடமா யிருந்தோம்; அது நல்ல பழக்கம்" என்பார் ஐயர். பிற்காலம் பணம் வரவரச் சாப்பாடும் மிகவும் நயமாயிருந்தது; யாதொரு குறையும் சொல்ல முடியாது. யாத்திரை சென்ற போதும் பிரமசாரிகள் குருகுல ஒழுங்குப்படி பஜனை செய்து, அரிசி வசூல் பண்ணி, சமைத்தே உண்டனர்.

6. குருகுலப் பாடங்கள்

1. **தமிழ்:** தற்காலக் கல்வி முறையில் உள்ள நன்மை யெல்லாம் குருகுலக் கல்வி முறையில் இருந்தன. தற்காலக் கல்வி முறையில் உள்ள தீமைகளுக் கெல்லாம் அது ஈடு செய்தது. குருகுலத்தில் தமிழ் மொழியைக் கொண்டே எல்லாப் பாடங்களும் நடந்தன. தமிழுக்கே ஐயர் முதன்மை யளித்தார். தற்காலப் பள்ளிக்கூடங்களில் மேலே போகப் போகத் தமிழில் அசட்டையும் 'தமிழ் அவசிய மில்லை; ஆங்கிலமே போதும்' என்னும் மயக்கமும் மாணவருக்கு ஏற்படுகிறது. குருகுலத்தில் ஒவ்வொரு மாணவனும் ஒவ்வொரு நாளும், "நான் தமிழில் இவ்வளவு முன்னேறி யிருக்கிறேன்; இன்ன பொருளை அறிந்தேன்" என்று சொல்லுவான். முற்காலம் வேதம் உபநிடதங்களைச் சந்தை சொல்லியே எளிதாகப் பாடம் செய்தனர். அப்படி சில பாசுரங்களைப் பாடம் செய்த பிறகு, மற்றதெல்லாம் எளிதாக வரும். இது, 'கேட்டுச் சொல்லல்' என்னும் முறை பற்றியது. இக் காலம் 'பார்த்துச் சொல்லல்' என்னும் முறையைத் தழுவுகின்றனர்! ஐயர் பழைய குருகுல முறைகளையே பின்பற்றினார். தற்காலம் ஓர் ஆண்டில் கற்பதை, குருகுல மாணவர் ஒரே மாதத்திற் கற்றனர்! நன்னூல், நிகண்டு, ஆத்திசூடி முதல் கம்பராமாயணம் ஈருக உள்ள காவியங்கள் தேவார திருவாசகங்கள், திருவாய்மொழி, இவற்றை யெல்லாம் ஒருவன் ஓர் அடி சொல்லி, மற்ற அனைவரும் அதைத் திருப்பிச் சொல்லும் முறையாக மாணவர் பாடம் பண்ணினர். குருகுல மாணவர் பல பாடல்கள் பாடம் செய்தனர். வழி நெடுக ஏதாயினும் பாடிக் கொண்டே செல்வர். சும்மா கிராமபோன் மாதிரிக் குருட்டுப் பாடமன்று, பாட்டின் பொருளை ஆசிரியர் நன்ருக விளக்குவார். பொருளுடன் திருப்பித் திருப்பி இருபது முப்பது தடவை சொல்லும்போது பாட்டு மாணவர் உயிரில்

ஊறிப் போகும். நன்னூல், நிகண்டு, ஔவை பாடல்கள், நாலடியார், திருக்குறள், குமரேச சதகம், கம்பராமாயணம், மணிமேகலை, பாரதி பாடல்கள், திருவாசகம், தேவாரம், திருவாய்மொழி முதலிய உயர்ந்த நூல்களை வகுப்பு வாரியாக மாணவர் பயின்றனர். இவற்றுடன் எல்லா மாணவரும் அழகாகக் கட்டுரை எழுதினர். மாணவர் தினசரிக் குறிப்புகள் எழுதவேண்டும். பிரயாணம் செய்தபோது தாம் கண்டவற்றைக் குறிப்பில் எழுதிக் காட்ட வேண்டும். குறித்த பொருளைப் பற்றித் தெளிவாகப் பேசவேண்டும்.

2. ஆரியம்: தமிழுக்கடுத்தபடி ஆரியம் எல்லாருமே கற்றனர். "பாரத நாட்டுக் கலைக்கு ஆரியம் ஒரு திறவு கோலா யிருக்கிறது. ஐரோப்பியருக்குக் கிரீக்கு லத்தீன் எப்படியோ, அப்படியே நமக்கு ஆரியம். ஆதலால் அனைவரும் அம்மொழியைக் கற்க வேண்டும்" என்பார் ஐயர். அதற்காக வேங்கடாசல சாஸ்திரியார் என்வொருவட மொழிப் புலவரை ரூ. 20 சம்பளம் கொடுத்து ஏற்படுத்தினர். முதலில் சப்தம் நிகண்டு பாடம் பண்ணி, பிறகு போஜ சம்பு, விக்ரம்மார்க்க சரித்திரம், நீதி சதகம், பர்த்ரஹரி சதகம், சிவானந்த லஹரி முதலிய பாடங்களைப் படித்து, பிறகு பஞ்ச தந்திரம், தசகுமார சரித்திரம், முதலிய வசன இலக்கியங்களைப் பயின்று, பிறகு இரகு வம்சம் குமார சம்பவம், சாகுந்தலம், ம்ருச்சகடி, அதன் பிறகு வால்மீகி ராமாயணம், வியாஸ பாரதம், உபநிஷத், கீதை முதலிய பெரிய நூல்களைக் கற்றுப் புலவராக வேண்டு மென்று ஆசாரியார் திட்டம் போட்டார். தமிழ்ப் பாடல்களைப் போலவே மாணவர், சமுஸ்கிரதப் பாடல்களையும் திருப்பித் திருப்பிச் சொல்லி மனப்பாடம் செய்திருந்தனர்.

3. மூன்றுவது ராஷ்டிரபாஷை: ராஜாஜி வந்து தமிழ் நாட்டில் இந்தியைக் கட்டாய பாடமாக வைப்பதற்கு

முன்பே, ஐயர் "எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் இந்துஸ்தானியைக் கட்டாய பாடமாக்க வேண்டும்" என்றார். இரவில் படுத்துக் கொள்ளு முன்பு ஐயர் கொஞ்ச நாள் 'மை ஜாதா ஹூம்...ஆப் க்யா கர்தேஹைங்" என்று ஹிந்துஸ்தான் சம்பாஷணை நடத்தினர். பிறகு கள்ளபிரான் என்ற இந்திப் புலவர் வந்தார். ஆசிரம மாணவர் அனை வருமே நன்றாக இந்தி பேசப் பயின்றனர். இந்திப் பாடல்களை இனிமையாகப் பாடினர். வட நாட்டில் பொதுவாக வழங்கும் தேசிய கீதங்களைக் குருகுல மாண வர் இனிமையாகப் பாடினர். இந்தி பேச, எழுத, படிக்க ஓவ்வொரு மாணவனுக்கும் அவசியம் தெரியவேண்டு-மென்று ஐயர் வற்புறுத்தினர்.

4. **நான்காவது ஆங்கிலம் :** ஐயர், மேல் வகுப்புகளுக்கு ஆங்கிலம் போதித்தார். மற்ற வகுப்புகளுக்குத் தக்க ஆசிரியர் இருந்தனர். பள்ளிக்கூடங்களில் ஓராண்டில் கற்கும் ஆங்கிலத்தைக் குருகுல மாணவர் நான்கு மாதங் களிற் கற்றனர். சில மாணவர்களுக்குத் தாகூர், ஷேக்ஸ் பியர் முதலிய புலவர் வாக்குகளைப் படித்து, நான் விளக்கி வந்தேன். அவற்றை அவர்கள் நன்றாக அறியும் திறமை பெற்றனர்.

5. **கணக்கில் ஐயர் நிபுணர் :** மாணவர் கணக்கில் கெட்டிக்காரரா யிருக்க வேண்டுமென்று கருதினர். எல்லாருக்கும் அங்கே எண்சுவடி குழிமாற்றுப் பாடமா கும். மாணவரே சந்தைக்குச் சென்று கணக்காகச் சாமான்கள் வாங்கி வந்தனர். க்ஷேத்ர, பீஜ கணிதம் மட்டும் ஆரம்பிக்க வில்லை. மற்றப்படி யுள்ள தற்காலக் கணக்குகளை மாணவர் கற்றனர். கணக்கறிவிற்கு அடிப் படை எண்சுவடிதான்.

6. **சரித்திரம் :** கதை சொல்வது போலே நடக்கும்.

7. பூகோளம் : வெளியே அழைத்துச் சென்று இயற்கைக் காட்சிகளைக் காட்டி, மாணவன் மனதிற்கு உற்சாகமாகப் பூகோளம் சொல்லித் தருவர். பூத வேதி நூல்கள் சொல்லித் தர வேண்டுமென்று ஐயர் புத்தகம் எழுதச் சொன்னார். முன்பே எழுதியதைக் காட்டினேன்; ஆனால் அப் பாடங்களுக் கேற்ற கருவிகளை வாங்கப் பணமில்லாமல் போயிற்று. "இப்போது உடலுறுதி" என்று வெளி வந்துள்ள நூலையே, அக்காலம் மாணவருக்குச் சொல்லிக் கொடுத்தேன். அதை மாணவர், கருத்துடன் கற்றனர்.

8. சங்கீதம் : இது, எல்லாருக்கும் கற்பிக்கப்பெற்றது. சிலர் சிறப்பாக அதைப் பயின்றனர். நானும் வர்ணங்கள் பயின்றேன். சுபத்திரை பிடில் வாசிப்பை அபிவிருத்தி செய்தாள். நாடகம் பயின்றோம். அப்பர் நாடகம் ஒன்றே நடந்தது. மற்ற நாடகங்களை எழுதி வைத்ததே லாபம். ஐயர் நாடகக் கலைக்கு அரிய துணை செய்தார்; ஏராளமான நாடக நூல்களைப் படிக்கத் தூண்டினார்.

இப் பாடங்களின் பயனெல்லாம் சேர்ந்து, அவற்றினும் பன்மடங்கு அனுபவப் பயன்கள் எங்கள் யாத்திரைகளிலேயே கிடைத்தன. குருகுல யாத்திரை, ஓர் அரிய பெரிய சம்பவம். தற்காலம், சென்னை, ஸ்ரீரங்கம் முதலிய இடங்களிலுள்ள பள்ளிக்கூடங்கள், தொலையிலுள்ள ஊர்களுக்கு யாத்திரை சென்று வருகின்றன. ஆனால் அவை வழிச் செலவுக்கும் சாப்பாடு சௌகரியங்களுக்கும் வேண்டியதைக் கையில் எடுத்துச் செல்லுகின்றன. குருகுல யாத்திரை முற்றிலும் வேறானது.

7. குருகுல ஒழுக்கம்

தற்காலக் கல்வி முறையில் ஒழுக்கக்குறையே, பெருங் குறையாகத் தெரிகிறது. அப்பழுக்கில்லாத நடையை

ஐயர் மாணவருக்குப் பயிற்றினர். காலை நாலரை மணிக்கே மாணவர் மணிச்சத்தம் கேட்டு எழுந்திருந்து திருப்பள்ளி எழுச்சி பாடினர். உடனே ஹரிகேன் விளக்கை ஏற்றிக்கொண்டு, ஒரு சிறு மண்வெட்டியுடன் தென்புறமுள்ள ஒதுக்கமான இடத்துக்குச் சென்று, மண்வெட்டியால் குழிபறித்து அதில் மலஜலங் கழித்தனர்; காலை எழுந்ததும், குடல் சுத்தம் செய்யும் பழக்கம் பல நோய்களைத் தீர்க்கும். அப்பழக்கம் இல்லாமலே பலர் மலச்சிக்கலாலும், பலச்சிக்கல்களாலும் வருந்துகின்றனர். காலை குடல் சுத்தி செய்வதை ஆசாரியார் மிகவும் வற்புறுத்தினர். "கொல்லைக்குப் போனுயா?" என்று ஒவ்வொருவரையும் அவர் கேட்பார். "இல்லை" என்றுல் "போ! இருந்துபார்" என்று விரட்டுவார். புதிதாகப் பழகும் மாணவர் சிலர் குழிபறித்துத் தூங்கிவிழுந்து வருவர்! அவர்களைக் கவனித்துத் திருத்துவார் ஐயர். குடல் சுத்தியானதும், ஆசிரம மாமரத்தில் இலைப்பறித்து, எல்லாரும் பல்விளக்குவார்கள். அஃதானதும் ஆளுக்கொரு கூடை எடுத்துக்கொண்டு, எதிரே வாய்க்காலிலிருந்து மணல் அள்ளிவந்து மரங்களுக்குக் கொட்டுவர்; தேகப்பயிற்சி செய்வர். எல்லாரும் ஆசிரமத்தைச் சுத்தம் செய்வதுண்டு. பிறகு அவரவர் அறைகளைச் சுத்தம் செய்வர். இதானதும் ஒர "ஊதல்"! மாணவரெல்லாரும் வரிசையாக நிற்பர். சிறிது உடம்பு வளைத்துக் கசரத் தண்டால் நடக்கும்; பிறகு எல்லாரும் வரிசையாக எண்சுவடி, குழிமாற்று, நல்ல பாட்டுகள், நிகண்டு இவைகளைச் சொல்லிக்கொண்டே ஐயன் வாய்க்காலுக்குப் போவோம். சில நாட்கள் தாமிரவருணி ஆற்றிற்கும் செல்வோம். சில நாட்கள் ஐயரும் வருவார்; சிலநாட்கள் வரமாட்டார். மாணவரை நான் நடத்திச் செல்வேன். சில ஆசிரியரும் கூட வருவர். மாணவர் நன்ருகத் தேய்த்துக் குளிப்பர். சனிக்கிழமை தவராமல் எண்ணெய் தேய்த்து வாய்க்கா

வில் முழுகுவர். நன்ருக நீந்திக் குளித்து விபூதி திருமண் இட்டுக்கொண்டு, சந்தி ஜபம் செய்து, ஒருவர் அன்றையத் தபால் வாங்கி வருவார். எல்லாரும் தேவார திருவாசகங் கள், திருவாய்மொழிப் பாசுரங்கள் இவற்றைப் பாடிக் கொண்டே மீண்டும் ஆசிரமத்திற்குச் செல்வோம். அங்கே முதலில் தோத்திரம் நடக்கும். பிறகு மேல் மாடியில் ஆசாரியார் முன்னே, மாணவர் கூடுவர். ஐயர் சில நாட்கள் இராமாயணம், பாரதம் முதலிய புண்ணியக் கதைகள் சொல்வது போலவே, மாணவருக்கு இந்திய சுதந்திரக் கதைகளை உருக்கமாகச் சொல்லிவந்தார். வேத ரிஷிகளின் பெருமை, இராமாயண பாரத இதிஹாஸங் களின் சிறப்பு, வியாஸர், வால்மீகி, கம்பர், போன்ற மஹாகவிகளின் மாண்பு, குருகோவிந்தன், பிரதாபசிங்கன், சிவாஜி, ராஜராஜன் போன்ற வீரர் பெருமை, அசோகன் போன்ற மன்னர் பெருமை, இவற்றை யெல்லாம் மாண வர் உள்ளத்திற் படும்படி ஐயர் எளிய இனிய நடையில் கொஞ்சிக் கொஞ்சிப் பேசுவார். அத்துடன் தேசத் துரோகிகளை மிகவும் கண்டித்துப் பேசுவார். “துரோகிகளாலே தான் நமது தேசம் அன்னியருக்கு அடிமையானது. அலெக்சாந்தருக்குப் பாதை காட்டினன் ஓர் இந்திய அதமன். குருகோவிந்தன் புதல்வரான ஜராபர் பத்தேஹ்கிங்குகளைப் பகைவர்கையில் வஞ்சமாகப் பிடித்துக் கொடுத்தவன்; ஓர் இந்தியப்பதர். பிரதாப சிம்மனுக்கு எதிராக, அவன் சகோதரனே பகைவர் பக் கம் சேர்ந்துக்கொண்டான்; அவன் ஒரு புல்லுருவி. இன்னும் நமது நாட்டில் தேசத் துரோகிகள் பலர் இருக் கிருர்கள். நம்மவரைப்பற்றியே அன்னியரிடம் கோளேற் றும் குண்டுணிகளாலேதான் நாம் இந்தக்கதிக் காளா ஞேம்” என்று ஐயர் சொல்லும்போது, தேசத்துரோகி கள்மேல் நமக்குப் படுகோபம் வரும். சரித்திர வகுப்பு சுமார் அரைமணி நேரம் நடக்கும். பிறகு மாணவர்

காலை உணவுகொண்டு, வகுப்புக்களுக்குச் செல்வர். வகுப்புகள் பெரும்பாலும் மரநிழலில் நடக்கும். சீதோஷ்ண ஸ்திதி ஒத்துக்கொள்ளா விட்டால், திண்ணைகளில் நடக்கும். என்னிடம் வரும் மாணவர் எப்போதும் என் பர்ணசாலைக்குள்ளிருந்தே படிப்பர். இயற்கையைப் பார்த்துப் படிக்கவேண்டிய பாடங்களுக்கெல்லாம் அவர்களை மலைக்கும், தோட்டந் துறவுகளுக்கும் அழைத்துச் செல்வதுண்டு. ஆசிரியர் வேஷ்டி அங்கவஸ்திரம் இரண்டே அணிவர். யாரும் சட்டை போடுவதில்லை. ஐயர் சட்டை போடவே மாட்டார். மாணவர் இடுப்பு வேஷ்டி, ஒரு துண்டு அணிவர். ஓலைத் தடுக்குகளில் உட்காருவர். எல்லா மாணவரும் பாடத்தைக் கவனமாகவே பயின்றனர். பதினொன்றரை மணி அடித்ததும், வகுப்புகள் கலையும். மாணவர் உடம்புதேய்த்து வட்டமாக நின்று கடவுள் வணக்கம் பாடுவர்; சிறிது தியானிப்பர். உடனே சமயல்கட்டிற்கு வருவர். இலை தைப்பர், சுற்று வேலை செய்வர்; நீர் கொண்டு வருவர். அல்லது வட்டிலைக் கழுவிவருவர். எல்லாரும் சமமாக உட்கார்ந்தே குருகுலத்தில் சாப்பிட்டனர். ஐயர் சமபந்தியை முழுதும் ஆதரித்தார். திருஷ்டிதோஷத்தை நீக்கிய முதல் தென்னிந்திய பிராமணர், ஐயர் என்றே சொல்ல வேண்டும்! குருகுலத்தில் சமையல் மட்டும், அதற்கென முன்வந்த பெண்மணிகளும், அந்தணரும் செய்து வந்தனர். முதலில் கிணற்றருகே மரத்தடியில் எல்லாரும் ஏகமாய் அமர்ந்து உண்டோம். அப்போது பாரத சமாஜத்திலிருந்து ஓர் இஸ்லாமியத் தொண்டரும், மற்றும் இருவரும் வந்து சில மாதங்கள் இருந்தனர். ஐயர் அந்த இஸ்லாமியர் பக்கத்திலே தான் உட்காருவார். நாங்கள் அவருக்கு எதிரே சாதிமத வேறுபாடே பாராமல் உட்காருவோம். கட்டிடம் அமைத்தபிறகு, சமையல் உள்ளே நடந்தது. மாணவர் எல்லாரும் திண்ணையில் வரிசையாக உட்கார்ந்து

உண்டனர். ஐயரும் நானும் துவாதசியன்றே அங்கே உட்கார்ந்துண்பது ; மற்ற நாட்களில் கடலை கனி மோர் உணவு; இவைகளை மாடிமேல் உண்பதுண்டு. மாண வர் இலையைக் கவனித்து, வயிறு கொள்ளுமட்டும் நன்ரு கச் சாப்பிடுவர். அந்த வாழ்க்கைக்கே நல்ல பசியெடுக்கும். சாப்பாடானதும், மாணவர் அவரவர் உண்ட இடத்தைச் சாணம்போட்டுச் சுத்தம் செய்வர் ; பாத்திரங்களைக் கழுவுவர் ; மாவிலைபோட்டுப் பல்விளக்கிச் சுத்தமாகத் தத்தமது குடில்களுக்குச் செல்வர். கொஞ்சம் இளைப் பாறியதும், சுமார் இரண்டு மணிவரையில் மாணவர் நூல் நூற்பர். எல்லாருமே குருகுலத்தில் நாளைக்கு ஒரு மணி நேரமாவது அவசியம் (சுமார் 40, 50 எண் நூல் வரையில்) நூற்று வந்தோம். நூலைச் சிட்டம் போட்டு, இரண்டு மணிக்கு நெசவு சாலைக்கு அனுப்புவோம். அங்கே திரு வடத்திற் சுற்றி, குழலிற் கோத்துச் சில மாணவர் நெய் வர். நெசவு சொல்லிக் கொடுக்க ஒரு தொழிலாளி அமைந்தான். ராமானந்தனும் சத்தியானந்தனும் ராம சாமியும் நன்ருக நெய்தனர். நானும் சில நாட்கள் தறி யோட்டி வந்தேன். அப்படிநெய்த ஆடைகள் குருகுல மாணவருக்குப் பயனுயின. மூன்று மணிக்கு மீண்டும் பாடங்கள் தொடங்கும். ஐந்து மணிக்கெல்லாம் சங்கீத வகுப்புடன் பாடங்கள் முடியும்.

அதன் பிறகு மாணவர் சாரணப் பயிற்சி செய்வர், பந்தாடுவர், பலீன்சடுகுடு ஆடுவர், தோட்ட வேலை செய் வர், வயல் வேலை செய்வர், நீர் இறைப்பர், பல தொழில் களில் வண்டு போல ஈடுபட்டிருப்பர். மணி ஆறு அடித் ததும், எல்லா மாணவரும் கிணற்றடிக்கு வந்து உடம்பு தேய்த்துக் கொண்டு விபூதி பூசி, அனுஷ்டானங்களை முடித்து, பஜனை செய்யத் தொடங்குவர். இனிமையான தேசீயப் பாடலும், பக்திப் பாடலும் முழங்கும். வாய்ப் பாட்டு ஜாலரா இவ்வளவுதான் ; சுருதி மிருதங்கம்

இல்லை. எனினும், அந்தப் பாடல்களில் இருந்த உருக்கம், பெரிய வித்வான்கள் கச்சேரிகளிலும் இருப்பதரிது! அச் சமயம் எனது அனுஷ்டானம் தியானங்களை முடித்து பராசக்திக்குக் கவி மாலை சூட்டுவேன். சில மாணவர் என்னுடன் பாடுவர். தீபாராதனை காட்டும் போது ஐயர் ஜபம் முடித்து வருவார். ஐயர் கிணற்றடியில் சந்தி ஜபம் செய்வார்.

பஜனையானதும் மாணவர் அவரவர் வட்டில்களைச் சுத்தமாக்கிக் கொண்டு வந்து வரிசையாய் அமர்ந்து, உண்பர். பிறகு கொஞ்சம் இங்குமங்கும் கதை பேசி உலாவி வந்து, விளக்குப் பாடம் படிப்பர். சுமார் ஒன்பது மணிக்கு, ஐயர் அனைவரையும் கூட்டி ஏதாவது நல்ல கதை சொல்வார்; வீரரைப் பற்றிப் பேசுவார்.

பின் மாதங்களில் "வீரர் சங்கம்" ஒன்று ஏற்படுத்தினோம். நான் அதற்குக் காரியதரிசி யானேன். வாரம் ஒரு முறை இரவு ஒன்பது மணிக்குச் சங்கம் கூடும். ஆனால் அதில் மாணவர் கலந்து கொள்வதில்லை. வாரம் ஒரு வீரர் வரலாற்றைப் பற்றிப் பேசுவோம். * ஐயர் அச் சமயமே தமது கருத்துரைகளைத் தாராளமாகச் சொல்லுவார். தமிழரிடையே குரு கோவிந்தர்களை உண்டாக்க வேண்டுமென்பதே அவர் ஆர்வம்: "சாதுர் வர்ணத்தில், பிராமண்யம் அநேகமாக மறைந்து போனது. போலிப் பார்ப்பனரே இப்போதிருக்கிறார்கள். அவர்களால் நாட்டிற்குப் பயனில்லை. நம்மை, தராசு பிடித்த வியாபாரிகள் ஆளுகிறார்கள். நாம் முன்னேற வேண்டுமானால் அர்ஜுனன் போன்ற வீரமும், தொண்டும் நம் வாழ்வில் சேர வேண்டும். க்ஷத்திரியனும் தொண்டனுமே நமக்கு வேண்டும். ஆதலால், நாம் "தாஸசிம்

---

* நான் தமிழ்-ஆரிய, ஆங்கில, பிரெஞ்சு வீரரைப் பற்றிப் பேசுவேன்; அவ் வீரர் வரலாற்றை எழுதி வைத்திருக்கிறேன்.

ஹன் !'' என்ருெரு புதிய ஜாதியை உண்டாக்குவோம். குரு கோவிந்தன் செய்தது போலவே, இரும்புச் சட்டியில் பானகம் வைத்து, வாளால் கலக்கி அமிர்தம் சாப்பிட்டு, தேசத்திற்குத் தொண்டு செய்ய தர்மாவேசத்துடன் விரதம் பூணுவோம்!'' என்பார். ஐரோப்பாவில் மத்திம கால ஷிவாலியர் என்னும் வீரர்களைப் பற்றி அடிக்கடி அவர் சொல்லுவார். நெப்போலியன், ஹனி பாலன், ஸீஸர், அலெக்ஸாந்தர், பிரதாப், குரு கோவிந் தன், சிவாஜி, ராஜராஜன், கரிகாலன், நெடுஞ்செழியன், செங்குட்டுவன் முதலிய வீரர்களைப் பற்றிப் பேசுவோம். தற்கால தேச வீரரான திலகர், மஹாத்மா முதலியவர் களைப் பற்றி அடிக்கடி பேச்சு நடக்கும். * சில நாட்கள் இரவில் தீபப் பிரதக்ஷிணத்துடன் பஜனை நடக்கும். ஐயரும் அமர்ந்து கேட்பார். நவராத்திரி ஒன்பது நாளும், என் பர்ணசாலையில் பாட்டு முழங்கும். ஒருநாள் குருகுல ஸ்தாபன நாளைக் கொண்டாடி, இரவு பதிஞெரு மணி வரையில் பஜனை செய்தோம், எல்லாம் முடிந்ததும் ஐயர் பின்வருமாறு பேசினர் : '' நமக்குச் சக்தி வேண்டும். உடலுறுதியுடன் மனோ தைரியமும், உத்யமமும் நிரம்ப வேண்டும். இந்தக் குருகுலத்தி லிருந்து வீரர்கள் வெளி வந்து, பாரத மாதாவின் கைங்கர்யம் செய்ய வேண்டும். பராசக்தி யருளுக'' இவ்வாறு இரவு நல்ல போதாகப் போக்கி, உடனே சற்றே தியா னித்து மாணவர் வெட்ட வெளியில் மணலில் பாய் விரித்துப் போர்வை போர்த்துத் தனித் தனியாகப் படுப் பர். அதிகப் பனி மழை யானலே உள்ளே படுப்பர். ஐயர் யாரையும் பத்து மணிக்குமேல் விழித்திருக்கச் சம் மதியார் ; அவரும் பத்து மணிக்கே உறங்குவார். ஆனல் அக் காலம் கள்ளர் பயம் இருந்தது. ஆசிரமத்தில் வேலை செய்த ஒருவனே, ஓர் ஆட்டைத் திருடிச் சென்ருன். ஆசிரமத்தில் ஒரு மாடு இருந்தது, இறந்தது. இன்னும்

பல காரணங்களை உத்தேசித்து, காவல் ஏற்படுத்தினேம். நான் இரவில் எப்போதும் விழித்திருந்து தியானமும் கவிதையுமா யிருப்பதுண்டு. அவ்வப்போது ஆசிரமத்தை ஒரு சுற்றுச் சுற்றி வருவதும், மாண்வர் படுக்கு மிடங்களைக் கவனிப்பதும் உண்டு; அது போதாது. அதிகமான காவல் வேண்டி யிருந்தது. கிருஷ்ணமூர்த்தி, ராஜு, ராகவன், மணி, நடராஜன், மஹாதேவன் முதலியோரை மாற்றி மாற்றி விளக்குடன் ஆசிரமத்தைச் சுற்றிக் காவல் காக்கச் செய்தோம்; அதன் பிறகு திருட்டில்லை. என் பர்ண சாலையைச் சுற்றிப் பாம்புகள் ஓடும். பர்ணசாலை நாலு பக்கமும் மூங்கில் பிளாச்சி யடித்துத் திறந்தே யிருக்கும். ஆனல் பாம்புகள் உள்ளே வருவதில்லை. மாணவர் படுக்கும் இடத்திலும் எந்தப் பூச்சியும் வருவதில்லை. யாரையும் தேள் கொட்டினதில்லை. அது குருகுல வாழ்வில் ஓர் ஆச்சரியம். நாம் தீங்கு நினைக்காவிட்டால், எதுவும் நம்மைத் தாக்காது என்பதே உண்மை! ஆனல் அடிக்கடி பாம்பு வேட்டை யாடுவதுண்டு. ராஜு அடிக்கடி பாம்பைக் கொன்று வருவான். "நீ க்ஷத்திரியன்; உனக்குப் பாபமில்லை" என்பார் ஐயர்! அச்சம் என்பதே யார் மனத்திலும் இல்லை. "தேசம், தேசம்" என்றே ஒவ்வொருவர் உள்ளமும் துடிதுடிக்கும். அத்தகைய உயர்ந்த வீரப் பயிற்சியைப் பெற்றனர் மாணவர்.

8: பாரதி திருநாள்

குரு குலத்தில் மஹா கவிகள் திருநாளும், தேச வீரர் திருநாளும் அமோகமாகக் கொண்டாடினேம். பாரதியார் திருநாளே முதலில் நடந்தது.

ஒருநாள் நானும் வீரவிளக்கு வ. வே. சு. ஐயரும், சாயங்காலம் தியான காரியங்களை முடித்துவிட்டுக் கனியுண்ண உட்கார்ந்தோம். அப்போது சிட்டுக் குருவிகள் 'சிவ்சிவ்' வென்று தாவிக் குதித்து ஒன்றையொன்று கட்டித் தழுவிக் கொஞ்சிக் குலாவிக் கொண்டிருந்தன.

நான் ; ஆஹா ! இக் குருவிகளின் வாழ்வின்பம் நமக்கு வராதா ? நமக்கும் சிறகு முளைக்காதா ?

“ சிட்டுக் குருவியைப் போல்—ஒரு
சிக்கின்றி வாழேனே ?
கட்டுகளை யுதறிக்—குயிலெனக்
காவியம் பாடேனே ?’.

ஐயர் : அப்படிப்பட்ட வாழ்க்கை கவிகளுக்குத் தான் உண்டு ; இதோ சிறகு முளைத்துத்தானே தங்கள் மனம் இப்படிப்பட்ட பறவையுடன் பறக்கிறது ! இதே மாதிரியே சுப்பிரமணிய பாரதியின் உள்ளமும் சுயேச்சையாகப் பறக்கும். “ விட்டு விடுதலை பெற்றிடுவாய்— அந்தச் சிட்டுக் குருவியைப் போலே ” என்பதை அவர் ஆவேசமாகப் பாடிக் கூத்தாடுவார்.

நான் : ஆம் ! அவர் அன்று இறக்கை யில்லாமல் கூத்தாடினர் ; இன்று அவர் கருடன் போலப் பறந்து புகழ்வானத்தில் பாடியாடுகிறார்.

ஐயர் : உண்மை; உடல் இருக்குமட்டும் அவர் புகழ் வானை எட்டிப் பார்க்கவில்லை ; சாவு, அவருக்குச் சிற களித்து விட்டது.

நான் ; ஆம் ! அவரை நான் “ கவிக் குயில் ” என்றே அழைப்பது. அது இன்றே பொருத்தமா யிருக்கிறது. அக்குயிலுக்குச் சொல்லே சிறகு ; உண்மையே உயிர். அக்குயில் இன்று நமது உள்ளத்தில் அகவுகிறது.

ஐயர் : இன்னும் போதிய மட்டும் தமிழர் அவரை அறியவில்லை. இப்போதுதான் அவர் நூல்கள் வெளி வருகின்றன. இன்னும் உயர்ந்த பதிப்பு வரவில்லை. வங்காளத்தில் தாகூருக்கு ஜயந்தி கொண்டாடுவது போலத் தமிழர் நமது வரகவிகளுக்கும் ஜயந்தி உத்ஸவம் கொண்டாட வேண்டும். இந்த வருஷந்தான் கம்பர் திருநாள் நடத்தினர்கள்.

நான்: சரியான வார்த்தை.........இதோ! ஆவணி மூலம் வருகிறது. அடுத்த வாரம் பாரதி நாள்.

ஐயர்: அவஸ்யம்............பாரதி திருநாள் கொண்டாடுவோம். அன்று பஜனை ஊர்வலம் நடத்துவோம். இங்கே வீரவேலைகள் செய்வோம். சாயங்காலம் பிரசங்கம், இரவு பஜனை நடக்கட்டும்.

* * *

பாரதி திருநாள் குருகுலத்தில் நடந்த தினத்தன்று காலையில், ஐயரும் நானும் மாணவரை அழைத்துக் கொண்டு பாரதி பாடல்களைப் பாடிக்கொண்டே தாமிர பருணிக்குச் சென்று நீராடி, ஆடைகளையுலர்த்தி அணிந்து கொண்டு, சேரமாதேவி தெருக்களைச் சுற்றி பஜனை செய்தோம்; ஒவ்வொரு தெருவிலும் நான் நின்று பாரதியாரைப்பற்றியும் அவர் பாடல்களைப்பற்றியும் ஐந்தைந்து நிமிஷம் பேசினேன். தெருவுக்கொரு பாட்டாகப் பாடிச் சென்றோம். அன்று பிரார்த்தனை வேளையில் தமிழர்களை மேன்மைப்படுத்த இறைவனை வேண்டிக் கொண்டோம். மதியத்தில் சோறு, பருப்பு, கூட்டு, மோருடன் நல்ல விருந்து நடந்தது. சாப்பிட்ட பிறகு, எல்லாரும் நூல் நூற்றோம்—ஆளுக்கு 100 கஜம். மாலை நான்கு மணி யடித்ததும், நான் ஊதினேன். மாணவர் ஓடி வந்தனர். நான் அப்போது மாணவருக்குச் சாரணப் பயிற்சியும் கற்பித்தேன். அவர்களை ஒழுங்காகக் கபாத்து வாங்கிப் பிறகு கோதாவுக்கு அழைத்துச் சென்றேன். அங்கே குஸ்தி, சிலம்பம் முதலிய ஆடல்கள் நடந்தன. அன்று வெளியூரிலிருந்து ஒரு வீர வாலிபர் வந்திருந்தார். அவருடன் ஆசிரம பிரமசாரி ஒருவர் முண்டாத் தட்டி குஸ்தி போட்டு அவரைக் குப்புறப் புறட்டிவிட்டார். அதைப் பார்த்ததும் ஐயருக்கு ஆனந்தம் பொறுக்க முடியவில்லை! "தீரன் அப்படி யிருக்க வேண்டும்; வலிவு கொண்டவன்தான் மனிதன்; வாளால் அறுத்தாலும் மாயா உடல் வேண்டும்" என்றார்!

மாலை ஆறு மணிக்குச் சுற்றூர்களிலிருந்தும் உள்ளூரிலிருந்தும் சுமார் நூறுபேர் வந்திருந்தனர். அவர்களை பால பாரதி அச்சுக்கூடத்தின் முன் மணலில் அமர்த்தினோம். எங்கள் சந்தி ஜபம் முடிந்தது; மணியடித்தது. ஐயர், "பாரதி இன்று பேச வேண்டும்" என்றார். "சித்தம்; தாங்கள் தலைமை வகிக்க வேண்டும்" என்றேன்.

ஐயர் தலைமை வகித்தார்; நான் பாரதியாரைப் பற்றி இரண்டரை மணி நேரம் பேசினேன். அந்தப் பேச்சை, "கவிக்குயில் பாரதியார்" என்னும் என் நூலில் சேர்த்திருக்கிறேன்; பார்த்துக் கொள்ளுங்கள். பேச்சு முடிவில் ஐயர், "நமது பாரதி, அந்தப் பாரதியின் மகிமையையும் மேதையையும் நன்றாக விளக்கி விட்டார். இப்படிப்பட்ட விமர்சனத்தை அந்தக் காலம் பாரதி கேட்டிருந்தால் மிகவும் குதூகல மடைந்திருப்பார். இருந்தமட்டும் அவரைத் தமிழர் கவனிக்காமல் போனது விசனிக்கத் தக்கது............இன்று பாரதியை நினைக்கையில் எத்தனையோ சம்பவங்கள் நம் முன் நிற்கின்றன!" என்றார்.

இரவில் பாரதியார் பாடலும் எனது பாடல்களும் பாடிப்பக்கவாத்தியங்களுடன் பஜனை நடந்தது. அச்சமயம் "கவியும் காலனும்" என்ற ஒரு பாட்டுப் பாடினேன்.

கவிமலர் மாலை—சூடக்
காதலனைத் தேடிப்
புவியெல்லாந் திரிந்தேன்—எவரும்
பொருட் படுத்தவில்லை—

என்று பாடியதும், இதை வைத்துக்கொண்டு அந்தக் காலம் பாரதியார் ஆதரவில்லாமல் பாடியதைப்பற்றி ஐயர் பேசினார். பாட்டே பாரதி, பாடப் பாட நாம் அவரைப் போற்றுவதாகும்.

9. திலகர் ஜயந்தி

அடுத்தது திலகர் தினம் வந்தது. திலகர் என்ருல் "மஹானு பாவன், லோகமானியன், சுதந்திர வேகந்தந்த சக்தி மான்" என்பார் ஐயர். புதுவையி லிருந்தபோது திலக ருக்கும் அவருக்கும் 1915-16ல் கடிதப் போக்கு வரத்து நடந்தது. ஐயரிடம் திலகருக்கு நல்ல மதிப்புண்டு. தில கர் தினத்தை வெகு விமரிசையாகக் கொண்டாடினேம். காலை பஜனை தியானம் எல்லாம் வழக்கம் போலே நடந்த துடன், மதியம் பெரிய விருந்து நடந்தது. ஆனால் அன்று பொதுக் கூட்டமில்லை. சில காரணத்தால் "அது வேண் டாம்" என்ருர் ஐயர். ஆசிரம வாசிகள் மட்டும் புத்தக சாலையில் கூடினர். ஐயர் பேசினர். "திலகர், உலக சரித் திரத்திலேயே ஒப்பற்ற வீரர்; சிவாஜியே மற்ெருரு உரு வில் புதியதோர் சக்தி கொண்டு வந்தார் என்று சொல்ல லாம். பயம் என்பதே அவர் கிட்ட வரமுடியாது. சர்க் கார் அடக்கு முறைகளை யெல்லாம் அவர் பூச்சாண்டி போலப் பார்த்து நகைத்தார். அவர் மஹா மேதாவி; ஸம்ஸ்கிருதத்தில் கரை கண்ட வித்வ சிரோமணி. நமது பாரத தருமத்தை அணுத் தவருமல் அனுஷ்டித்த ஆசார சீலர். உண்மையான ஹிந்து தருமம் அவரிடம் குடி கொண்டிருந்தது. பெர்கூசன் கல்லூரி ஏற்படுத்தி, அவர் ஏராளமான கல்விப் பணி புரிந்தார். அக் கல்லூரியில் அவர் வெறும் பட்டதாரிகளை மட்டும் படைக்கவில்லை. நாட்டிற்குத் தொண்டு செய்த வீர சிங்கங்களைப் படைத் தார். அடிமைத் தளையை அறுத்தெறிய அவர் அஞ்சா நெஞ்சுடன் முன்னின்ருர். அதனல் எவ்வளவோ கஷ்ட நஷ்டங்களைத் தாங்கினர். நாட்டிற்குப் புதிய உணர்ச்சியும், எழுச்சியும் தந்தார். ஸ்வராஜ்யம் நமது பிறப்புரிமை என் பதை ஹிந்து ஜாதியின் இரத்தத்தில் ஊறச் செய்தவர் தில கரே. அவர் இன்னும் எவ்வளவோ காரியங்கள் செய்து

நமக்கு விடுதலை யளித்திருப்பார். அவரைப் பின் பற்றக் கோடானு கோடிப்பேர் தயாராயிருந்தனர். ஆனல் நமது துரதிர்ஷ்ட வசமாக அவர் மறைந்து விட்டார். ஒவ்வொரு இந்தியன் உள்ளத்திலும் திலகர் வீரம் வாழ வேண்டும். வாழ்க திலகர் நாமம்!" என்று முடித்து, பாரதி பேசட்டுமே என்ருர். நான் அரைமணி நேரம் பேசியதும் கூட்டம் கலைந்தது. திலகரைப் பற்றி முன்பே என் கருத்துக்களைச் சொன்னேன். முடிவில் ஐயரை ஒரு நிமிஷம் நான் பார்த்தேன். "திலகர் இறக்கவில்லை; அவர் இதோ நமது அன்பு ஐயருள் புகுந்திருக்கிருர்; ஐயரிடம் திலகர் மட்டுமன்று குரு கோவிந்தனே விளங்குகிருன்; அகில தேசாபிமானிகளின் வடிவாகவே ஐயரைப் பணிவோம்" என்று நான் பேசினேன்! அதன் பிறகு குஸ்திப் பந்தயம் நடந்தது. மதுரையிலிருந்து பாரத சமாஜம் சிதம்பர பாரதி வந்திருந்தார். அவர் முண்டாத்தட்டி கோதாவில் இறங்கினர். அவருடன் குஸ்திபோட ஆசிரம பிரமசாரி ராஜபாளையம் ராஜு, தொடை தட்டி மார் புடைத்துக் கோதாவில் இறங்கினன். ஐயருக்கு வெகு சந்தோஷம்! அவர் இருவரும் மல்லாடுவதைக் கண் கொட்டாமல் சாந்தமாகப் பார்த்திருந்தார். அவர்கள் பிடிகளை யெல்லாம் கூர்ந்து கவனித்தார். ராஜு வெற்றி பெற்ருன். எல்லாரும் உற்சாகமாகக் கைதட்டினேம். நான் என் அறைக்குச் சென்றேன். அச்சமயம் ஐயர் அங்கே வந்தார்: "ராஜு நல்ல பிடிபிடித்தான்; குஸ்தி நல்ல விளையாட்டு. அந்தப் பிடியைத் திமிர, என்ன செய்ய வேண்டும் தெரியுமா?" என்று என் கையில் தமது முழங் கையினல் ஓர் அழுத்து அழுத்தினர். அப்பாடா...வலி...நான் இரண்டடி நகர்ந்து கொள்ள வேண்டி இருந்தது. "எதிராளி கிட்ட வரவொட்டாமல் தடுக்க முழங் கையினல் எப்படித் தள்ள வேண்டும், முட்டில் எப்படிக் கொடுக்க வேண்டும், காலைத் துடையில் எப்படி உதைத்து ஆளை மல்லாக்கத் தள்ள வேண்டும்" என்றெல்லாம் காட்டி, பிரமசாரிக

ளுக்குப் பழைய சம்பிரதாயப் படியே சிலம்பம், குஸ்தி, ஜப்பானிய முறைப்படி ஜியுஜித்ஸு எல்லாம் பழக்க வேண்டும் என்று உற்சாகமாகப் பேசினர். அவருடைய உடல்வலிமை எனக்கு அப்போதுதான் தெரிய வந்தது.

10. வில் வித்தை

அப்போது "இதெல்லாம் தனியாட்களை வெல்லச் சரி தான்; கழுத்திலும் அக்குளிலும் பிடரியிலும் பிடித்து ஆளைச் சரி பண்ணலாம். ஆனல் நமது தேச விடுதலைக்கு வேண்டிய பலத்தைச் சேர்க்க, ஆயுதப் பயிற்சியும் வேண்டு மன்றோ? எத்தனை நாள் இப்படித் துப்பாக்கி முனையில் கூட்டுக் கிளி போலப் பயந்து கொண்டிருப்பது" என்று சொன்னேன். "என்ன செய்வது? நாட்டின் நிலைமை அப்படி யிருக்கிறதே! இப்போது நாம் துப் பாக்கி பிடிக்க முடியாது; சட்டம் குறுக்கே வருகிறது. ஆனல் வில் தெறிக்கலாம்" என்றார். "அதுவாயினும் செய்து, பழைய வீர வுணர்ச்சியைக் காப்போமே" என் றேன். "ஆஹா செய்யலாம்" என்றார். மறு நாள் முதல் ஆசிரம வாசிகள் மூங்கிலால் வில்லுக் கட்டி அம்பு செதுக்கித் தனுர் வித்தை பழகினோம். பீரங்கி முன்னே எங்கள் தனுர்வித்தை பலியாதென்பது தெரியும். இருந் தாலும் வில்லை நினைக்கும்போது விஜயன் ஞாபகம் வருமல் லவா? நாம் அவன் சந்ததிகள்; இதைப் போன்ற வில் லைக் கொண்டே அர்ஜுனன் பாரதப் போர் வென்றான் என்ற உணர்ச்சி வருமல்லவா? அதற்கே விற் பிடித் தோம். ஆனல் நாணை அழுத்தி எவ்வளவு பலமாக விட்டா லும் எங்கள் அம்பு ஐம்பதடிக்கு மேலே கிளம்புவதில்லை. நான் ஒருநாள் வில்லுத் தெறித்துக் கொண்டிருந்தேன். மேலே அறுபதடிக்கு மேல் என் அம்பு செல்ல வில்லை. அப் போது சிரித்துக் கொண்டே ஐயர் வந்தார்: "இதென்ன கொஞ்ச தூரம்போய் விழுந்து விடுகிறதே. இராமர் ஏழு மரங்களைத் துளைத்தார்; மலையைத் துளைத்தார் என்பதெல்

லாம் இந்த வில்லைக் கொண்டா?" என்றேன். "இப்படித் தாருங்கள்" என்று மன்னர் நாணை ஓர் இறுக்கு இறுக்கி வளைத்துக் கணைபூட்டி ஒருவகையாக இழுத்து மேலேவிட்டார். விருட்டென்று அம்பு சுமார் 100 கஜத்துக்கு மேல் பறந்து அவர் மாடியில்போய் விழுந்தது! மற்றொரு கணையைக் கொண்டு ஒரு மரத்தைக் குறி வைத்து அடித்தார். டொக்கென்று கணை மரத்தின்வயிற்றில் தைத்தது, "இந்த மாதிரிப் பழகப் பழக வில்வித்தை மிகவும் ஸ்வாரஸ்யமாயிருக்கும்" என்றார். "நீங்கள் துரோணசாரியாராயிருந்து, எங்களை அர்ஜுன ராக்குங்கள்" என்றேன். ஆனால் ஸ்வாரஸ்யம் நாளுக்கு நாள் குறைந்து போனது; நாங்களும் வில்லைக் கீழே வைத்து விட்டோம்.

11. குருகுல ஜயந்தி

குருகுல ஜயந்தி கொண்டாடினோம். அன்று வழக்கம் போலவே விருந்து விளையாட்டெல்லாம் நடந்தன. இரவு நெடுநேரம் பஜனை நடந்தது. எனது பாடல்களையும் பாரதி பாடல்களையும் பாடினோம். தீபப்பிரதக்ஷிணம் சுற்றினோம். அச்சமயம் நான் தேசீய வீரர் வாழ்த்துப் பாடினேன்.

வரம்பெற்ற கவிதையைப்போல்
வாழ்க குரு குலமே!—என்றும்
வாழ்க குரு குலமே!—எங்கள்
வா வேசு ஐயர் புகழ்—
வளருங் குருகுலமே!

என்று தேசபக்தர் ஆவேசமாகப்பாடி நடனம் செய்தோம். "சரியாய்ப் போயிற்று" என்று ஐயர் சிரித்துக் கொண்டார்! பஜனை முடிவில், "இப்படிப்பட்ட ஆவேசப் பாடல்களெல்லாம் குருகுலத்திற்குப் பெரிய ஆசீர்வாதமாகும். குருகுலம் நலந்தா, தக்ஷசீலம்போலே ஓங்கவேண்டும். அதற்கு நாம் எவ்வளவோ இன்னும்

ஏற்பாடுகள் செய்யவேண்டும். இன்று நாம் எல்லாரும் சேர்ந்து பராசக்திக்கு ஹிருதயபூர்வமாக முறையிட்டிருக்கிறோம். அம்பிகை அருளால் பிரமசாரிகளுக்கு வீர்யமும், பலமும், ஞானமும், தேஜசும் ஓங்கட்டும். இங்கே நாம் ஏராளமான தொழில்கள் நாட்டப்போகிறோம். அதற்கான செல்வச் செழிப்பை அம்பிகை அருளட்டும். வீரர்களைப் படைக்கவேண்டும். இப்போது நாடு சாத்வீக தர்மத்தை அனுஷ்டிக்கிறது. மஹாத்மாவைப் பின்பற்றி இருக்கிறது. நாமும் சித்த சுத்தியுடன் அவ்வாறு செய்வோம். ஆனால் அஹிம்ஸா விரதம் பூண்டவர்கள் தேகத்தைச் சொத்தையாய் வைத்துக் கொள்ள வேண்டுமென்பதில்லை. அர்ஜுனன் பீமன் ஆகிய இதிஹாஸ வீரர்போன்ற பலமும், கட்டுமஸ்தான தேகமும் நமக்கு வேண்டும். போர்க்கலையும் நாம் கற்கவே வேண்டும். எதிலும் நிபுணராயிருக்கவேண்டும். நாளடைவில் உங்களுக்கு அவற்றையெல்லாம் சொல்லிக் கொடுக்கத் தக்கவர்கள் வருவார்கள். எல்லாம் பராசக்தி செயல்" என்று முடித்தார். இரவில் சுமார் அரைமணி நேரம் நவபாரதப் பேச்சுக்கள் பேசினோம். "பாரதி, தங்கள் பாடல்களில் உண்மையான ஜீவகளையுள்ளது. அவற்றை விரைவில் அச்சிடுவோம்" என்று ஐயர் அன்று சொன்னார். பிறகு அவர் துயில்கொண்டார்!

12. நரசிம்ம ஜயந்தி

நரசிம்ம ஜயந்தி பலமாக நடந்தது. இரவில் ஐயர் திடீரென்று கம்ப ராமாயணத்தைத் தூக்கிக்கொண்டு வந்தார். சுமார் 7-மணி இருக்கும். எல்லாரும் அச்சுக்கூடத்திற்கு முன்னே கூடினோம். அன்று தி. ரா. மஹாதேவ ஐயரும் இருந்தார். இரணியப் படலத்தை நான் செய்யுள் செய்யுளாகப் பலராகங்களில் படித்தேன். ஐயர் ஒவ்வொரு வரிக்கும் அழகாகப் பொருள் சொல்லிவந்தார். கம்பன்

வாக்குகளில் இரணியப் படலமே அர்த்தபுஷ்டியான மணி வாக்கு என்பது ஐயர் கருத்து. "மற்றப் பகுதிகளெல்லாம் மறைந்தாலும், இப்படலம் ஒன்றே கம்பன் கவித் திறமையைப் பேசும்" என்ருர். அப்படலத்தை ஐயர் ஆங்கிலத்தில் மிகவும் அழகாக மொழிபெயர்த் திருக்கிருர். அன்று செய்யுள் படித்து வருகையில் ஐந்தாறு செய்யுட்களுக்குப் பொருள் கூறியபோது அவர் வீராவேசம் அடைந்தார்.

பிரகலாதன் நாராயண மந்திரத்தை விடமாட்டேனென்கிருன்; குருவுக்கு உபதேசம் செய்யத்தொடங்குகிருன். குரு இரணியனிடம் "சிந்தையாலும் நினைத்தற்கு அடாதன செப்பினன் மைந்தன்" என்று முறையிடுகிருன். "அப்படி என்ன சொன்ஞன் ?" என்று வினவுகிருன் இரணியன்,

"உரகம் அன்னசொல் யான்உனக் குரைசெயின்உரவோய்
நரகம் எய்துவன் நாவும்வெந் திடும் என நவின்ருன்"

என்கிருன் ஆசிரியன். அதைப் படித்ததும் பொருள் கூறிவிட்டு "இப்படிப்பட்ட அதர்ம உபாத்தியாயர்களால் தான் நாட்டில் கோழைத்தனம் பெருகிக் கொடுங்கோல் வளர்கிறது. மாணவருக்கு நேர்மையான உண்மையைச் சொல்லித் தானும் நேர்மையாக நடப்பவனே, ஆசிரியன் ஆவான்" என்று கல்வி முறையையும், ஆசிரியர் ஒழுக்கத்தையும் அழகாகச் சொன்ஞர்.

"கண்ணினும் கரந்துளன் ; கண்டு காட்டுவார்
எண்ணிறைந் திடும் உணர் வாகி, உண்மையால்
மண்ணினும் வானினும் மற்றை மூன்றினும்
எண்ணினு நெடியவன் ஒருவன், எண்ணிலான் !"

என்று வரும் செய்யுட்களைப் படிக்கும்போது "இவையெல்லாம் உபநிஷத்துக்கள், கம்பன் ஒரு மஹரிஷி" என்

பதை இவை குறிக்கின்றன. இப்பாடல்களை யெல்லாம் நாம் வேதமாகக் கொள்ளவேண்டும். ஈசம், கடம், கேனம், முண்டகம் ஆகிய உபநிஷத்துப் பொருள்களைக் கம்பன், இக் கவிகளில் எவ்வளவு அழகாக விளக்குகிருன் பாருங்கள்!" என்று விரிவுரை கூறி, "எண்ணினும் நெடியவன் ஒருவன் எண்ணிலான்" என்று கையை உயர்த்தி வானுயரக்காட்டி, 'ஒருவன்' என்பதைச் சுட்டி, எண்ணிலான் என்று நட்சத்திர மண்டலத்தைக் காட்டி ஞர்! காட்சி கம்பீரமா யிருந்தது.

"சாணிலும் உளனோர் தன்மை அணுவினைச் சதகூறிட்ட
கோணினும் உளன்; மாமேருக் குன்றினும் உளன்; நின்
[நின்ற
தூணினும் உளன்; நீசொன்ன சொல்லினும் உளன்;
[இத்தன்மை
காணுதி விரைவின் என்ருன் 'நன்றெ'னக் கனகன் நக்
[கான்!"

இப்பாட்டிலுள்ள நாடகச்சித்திரத்தையும், ஆழ்ந்த பொருளையும், எளிய நடையையும் பற்றி வெகு நேரம் பரவசமான வியாக்கியானஞ் செய்தார். "பிளந்தது தூணு மாங்கே; பிறந்தது சீயம்; பின்னே வளர்ந்தது திசைகளெட்டும்" என்ற கம்பீரமான பாட்டைப் பாடும்போது கம்பன்கவி எப்படி வானேங்கி உயர உயரக் கருட்வேகத்துடன் பாய்கிறது என்று வியந்து போற்றினர்! அடுத்து வரும் பயங்கரக் காட்சிகளும், இரணியன் மார்பைச் சிங்கம் கிழித்தலும், ஐயருக்கு வெகு குதூகலமளித்தன! மாலை ஆறரைமணிக்குத் தொடங்கி, இரவு சுமார் ஒன்பது மணிக்கே இரணியவதைப் படலம் முடிந்தது. அதன் பிறகு நாங்கள் மாடிமேலிருந்தோம். அப்போது "எபிஸோட் ஆஃப் ஹிரண்யா" (Episode of Hiranya) என்று அவர் ஆங்கிலத்தில் எழுதிய கம்பன் ஆராய்ச்சியைப் படித்தார். அப்படலம் எவ்வளவு இனிமையோ,

அவ்வளவு இனிமையாகவே ஐயர் மொழி பெயர்ப்பு இருந்தது! ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தால் தமிழ் எவ்வளவு கம்பீரமாக விளங்கு மென்பதை ஐயரே உலகிற்கு நன்ருக விளக்கினர். இக் கலையில் அவரை ஒப்பாரும் மிக்காரும் இலர் என்றே சொல்ல வேண்டும்.

13. நவராத்திரி

குருகுலத்தில் நவராத்திரி உற்சவம் அமோகமாக நடத்தினேம். எனது பர்ணசாலைக்கு முன்னே மாணவர் கீற்றுமுடைந்து கொட்டகை போட்டனர்!. இரவில் பராசக்தி வழிபாடு, அர்ச்சனை, தீபாராதனை அங்கே நடந்தது. பிறகு பக்திரசம் ததும்பும் பஜனை நடந்தது. ஆளுக்கொரு பாட்டு பாடினர்கள். சேர்ந்தும் பாடினர்கள். தாளம், கடவாத்தியம், பிடில், ஹார்மோனிய சுருதி இத்தனையும் சேர்த்து, அந்த இரவில் பஜனை செய்யும்போது நம்மையறியாது பரவசமுண்டாகும். ஐயர் பாடமாட்டார், தாளமும் போடமாட்டார். சிலைபோல் அமர்ந்து அனைத்தையும் ரசித்துக்கொண்டிருந்து, முடிவில் இரண்டொரு வார்த்தை சொல்வார். முதல் முதல் அவர் இருந்த அறையிலேயே நான் பஜனையும், ஆராதனையும், தீப நடனமும் செய்தேன். அன்று ஐயர் எங்களுடன் மிகவும் லாகவமாக நடனம் ஆடினர். அதை முன்பே சொன்னேன். சரஸ்வதி பூஜையன்று புத்தக சாலையில் அர்ச்சனை தீபநைவேத்யங்கள் தோத்திரப் பாடல்களுடன் அமோகமாக நடந்தன. மறுநாள் ஆயுத பூஜையும் இனிது நிறைவேறியது. அன்று ஐயர் தமிழ்க் கலை வளர்ச்சியைப்பற்றி இரண்டொரு வார்த்தை பேசினர்; அவை பால பாரதி விக்ஞாபனத்தில் உள்ளன.

பொங்கல், தீபாவளி முதலிய விசேஷ நாட்களிலும் ஆசிரமத்தில் சிறப்பான கொண்டாட்டம் நடக்கும். ஐயருக்குச் சங்கீதத்திலும் நடனத்திலும் வெகு பிரியம்.

அவற்றினும் குஸ்தி, சிலம்பம், கரடிவித்தை யென்றால் வெகு உற்சாகம். உள்ளூரில் ஒருநல்ல வைணிகர் இருந்தார். அவர் இரண்டு முறை ஆசிரமத்திற்கு வந்து யாழ் விருந்தளித்தார். தியாகராஜ கீர்த்தனைகள் அவர் வெகு நயமாக வாசித்தார். எல்லாம் முடிந்ததும் ஐயர் வித்வானுக்கு நன்மொழி கூறினார். அன்றிரவே இதைப்பற்றி டுடேக்கு ("To-day") எழுத வேண்டும் என்றார். அவ்வாறே, ஆசிரமத்தில் வீணைக் கச்சேரி நடந்தது. 'இன்னார் வாசித்தார்; இப் புராதனக் கலையைத் தமிழர் போற்ற வேண்டும். ஆசிரமத்தில் சங்கீத கலைக்கு ஒரு சிறப்பான இடம் தந்துள்ளோம்' என்று பத்திரிகையில் வந்தது. ஒரு நாள் பாலக்காட்டிலிருந்து ஒரு சாண்டோ வந்து சேர்ந்தார்; அந்தணர், மகா பலசாலி; கழைக்கூத்தாடிகளைப் போலே அவர் வித்தை காட்டினார். அவரை ஐயர் சுமார் பதினைந்து நாட்கள் வைத்து ஆதரித்தார்.

14. கிணற்றைத் தூர்வை யெடுத்தல்

ஏதாயினும் பெரிய காரியங்களைச் சாதித்தால் ஐயருக்கு மனங் குளிரும். அன்று விசேஷமான கதைகள் சொல்வார்; பஜனைகள் நடக்கும். ஒருநாள் நாங்கள் குளிக்கும் ஏற்றக் கிணறு, சேர் நிறைந்து கொஞ்சம் நாற்றமெடுத்தது; அதில் தண்ணீர்ப் பாம்புகள் அதிகமா யிருந்தன. "இதைத் தூர்வை யெடுக்க வேண்டும்; ஆள் கிடைக்க வேண்டும்" என்று மெல்லச் சொன்னார். "ஏன், நாமே செய்யலாமே" என்றேன். "சரி, பிடி சாலை" என்று எழுந்தார்; எழுந்தோம்! நானும் ஆசிரமக் கிருஷ்ணமூர்த்தியும் மேலிருந்து ஏற்றத்தை இறைத்தோம். ஐயர் அனந்த கிருஷ்ணன், ராஜூ, ராகவன், சுப்பையர், மணி முதலியோர் கிணற்றில் இறங்கிச் சேற்றை யள்ளி யள்ளிச் சாலிற் கொட்டினர். கொட்டக் கொட்ட நாங்கள் மேலிருந்து இறைத்துக் கொண்டிருந்தோம். சுமார் எட்டு

மணி நேரத்தில் கிணற்றை முற்றிலும் தூர்வை யெடுத்து முடித்தோம். எல்லார் உடம்பும் சேர் நிறைந் திருந்தது. ஐயர் சல்லடம் கட்டியிருந்தார். நாங்களெல்லாரும் கோவணம் கட்டிக்கொண்டிருந்தோம். கிணற்று ஜலம் இறைத்தாயிற்று; குளிக்க வேண்டுமே, "புறப்படுங்கள் ஐயன் வாய்க்காலுக்கு" என்ருர் ஐயர். எல்லாரும் அப்படியே சேர்க் கோலத்துடன் புறப்பட்டோம். "வேலையின் பெருமையை நாம் உலகிற்கு விளக்க வேண்டும். இப்படியே நம்மைப் படம் பிடித்தால் நன்ருயிருக்கும். ஒரு காமிரா இல்லையே! இன்றைக்கு எல்லாரும் நல்ல காரியம் செய்தோம். இப்படித்தான் சலியாமல் பிடிவாதமாகப் பெரிய காரியங்களைச் சாதிக்க வேண்டும்" என்று வெகு குதூகலமாகப் பேசிக்கொண்டே சென்ருர். ஐயன் வாய்க்காலில் குளித்து நல்ல ஆடை யுடுத்தி, விபூதி பூசி சந்தி ஜபம், செய்ததும், இரவு 8 மணி சுமாருக்கு நிலாவில் எல்லாரும் தேவாரங்கள் பாடிக்கொண்டு ஆசிரமத்திற்கு வந்து சாப்பிட்டோம். "இன்று சாப்பிடும் சாப்பாடுதான் உண்மையான அமிர்தம்; உழைத்த பிறகு உண்பதே உண்பதாகும்" என்ருர் ஐயர். அன்றொரு திருநாள் கொண்டாடுவோம். இந்த மாதிரி பல திருநாட்கள் ஆசிரமத்தில் கொண்டாடினேம். ஏகாதசியன்று பட்டினி யிருந்து துவாதசிப்பாரணை செய்தோம். அன்றிரவு ஐயர் நல்ல கதை சொல்லுவார்.

15. காந்தி ஜயந்தி

எல்லாத் திருநாட்களையும்விட, மஹாத்மா காந்திக்குக் கொண்டாடிய திருநாளே, விசேஷமானது. மஹாத்மா என்ருல் ஐயருக்கு உள்ளம் சிலிர்க்கும். அடிகள் எப்படி ஆணையிடுகிருரோ அப்படியே, ஓர் உண்மையான சிப்பாய் போலே அவர் நடப்பார். அக்காலம் காங்கிரசில் சேர்ந்தவர் 2000 கெஜம் நூல் சந்தா செலுத்த வேண்டும்.

ஐயர் பகல் சாப்பிட்டதும் சர்க்காவை வைத்துக்கொண்டு பொறுமையாக நூலிழுப்பார். பக்கத்தில் உட்கார்ந்து என்னை இந்துப் பத்திரிகை படிக்கச் சொல்லிக் கேட்பார். நூல் தடிப்பாய் வரும்; அறும்; விடமாட்டார்; சுமார் 20-ம் நம்பர் நூல் 100 கஜம் இழுத்துத்தான் நிறுத்துவார். ஐயர் இறுதி மட்டும் நூற்பதை விடவில்லை; நூற்சந்தா செலுத்தி வந்தார். அவர் சந்தாவை நாங்கள் நூற்றுக் கொடுத்திருப்போம். அவர் சம்மதிக்க மாட்டார். "எனக் கேற்பட்ட கடமையை நானே செய்ய வேண்டும்" என் பார்.

1924-ஆம் ஆண்டு நமது நாட்டிற்கே பெரிய சோதனை வந்தது. முதல் ஒத்துழையாமை இயக்கம் அடங்கிற்று. அதுகாறும் ஒற்றுமையா யிருந்தவர்கள் ஒவ்வொருவராக வேற்றுமை பாராட்டத் துணிந்தனர். தேசபந்து தாஸர் ஸ்வராஜ்யக்கக்ஷி தனியாக ஏற்படுத்திக் கொண்டு நாடெங்கும் பிரசாரம் செய்தார். அவர் தமிழகத்திற்கும் வந்து அரங்கசாமி ஐயங்காருடன் சுற்றுப் பிரயாணம் செய்தார். காரைக்குடி வந்திருந்தபோது அவரைப் பார்த் தேன். பொதுக் கூட்டத்தில் வெகு துடுக்காகப் பேசி னர். தவிர அடிகள் குடல் நோயால் வருந்தி, சத்திர சிகிச்சை செய்து கொண்டு ஒரு கண்டம் தப்பினர். அச் சமயம் நமது முயற்சிகளை அடிக்கடி முறியடிக்கும் சமூகச் சண்டைகள் எழுந்தன. வட நாட்டில் இந்து முஸ்லீம் சண்டை கிளர்ந்தால், இரத்தம் சிந்தாமல் ஓய்வதில்லை. தில்லி, குல்பர்கா, நாகபுரி, லக்னோ, ஷாஜிஹான்புரி, அல்லா ஹபாது, ஜபல்பூர் இவற்றில் பிரமாதச் சண்டை உண்டா னது. இவற்றினும் கொடுமையான கோஹத்தில் இந்துமுஸ் லிம் போர் எரிமலை போலக் கிளர்ந்து பலர் உயிர் துறந் தனர். கோஹத்தில் உள்ளவர்கள் ஊரை விட்டே ஓடும் படி நேர்ந்தது. ஜனங்கள் பட்டபாட்டைக் கண்டு கருணை வள்ளலாகிய மஹாத்மாவின் உள்ளம் உருகியது.

குடல் நோய்க்குச் சத்திர சிகிச்சை செய்து கொண்ட பூமேனி என்றும் பாராமல், "பாரத மாதாவின் இரண்டு மக்களாகிய இந்து முஸ்லிம்கள் ஒற்றுமையாக வாழ வேண்டும். அந்த ஒற்றுமைக்காக ஆண்டவனுக்கு என் உயிரையே பலி தானம் செய்கிறேன்" என்று அடிகள் 21 நாட்கள் சல்லேஹன மிருந்தார். அதைக் கண்டு இந்திய சமுதாயமே குடல் நடுங்கிப் போனது. உலகமே பயங்கரமான வியப்புடன் மஹாத்மாவை நோக்கியது. கல்கத்தாவில் தலைவர்கள் கூடி இரண்டு சமுதாயத்திற்கும் ஒற்றுமையுண்டாகும் வழிகோலினர். மஹாத்மாவைத் தலைவராகக் கொண்டு, லாலாஜி, ஹகீம் அஜ்மல்கான், நரிமான் முதலியோர் சேர்ந்த ஒரு தேசீயப் பஞ்சாயத்து ஏற்படுத்தினர். இருவகுப்பினருக்கும் சமாதானம் உண்டாகும் உடன்படிக்கைகள் நடந்தேறின. மஹாத்மாவின் உபவாசத்தால் நாட்டில் ஒருவாறு ஒற்றுமை உண்டானது என்னலாம். இருபத்தோரு நாளையும் இருபத்தோரு கண்டமாக நாடு கருதியது. ஐயர் மனமோ வெளிக் காட்டாமல் உள்ளே வேதனைப்பட்டது. "நாம் காரியத்தில் மஹாத்மாவுக்குத் துணை நிற்போம்... இனிப் பேசி என்ன? சுற்றுங்கள் சர்காவை" என்றார் ஐயர். இருபத்தோரு நாளும் ஐயர் எங்களுடன் நூல் நூற்றார்; இடையிடையே உபவாச மிருந்தோம்; கடவுளை வணங்கினோம். அப்போது காலை மாலை வணக்கத்தி லெல்லாம் "இறைவனே! எங்கள் காந்திக்குத் தீர்க்காயுசும் உடலுறுதியும் காரிய சித்தியும் அருள் புரிவாயாக" என்று வேண்டுவோம். மஹாத்மாவின் பெருமைகளைப் பாடுவோம். பராசத்திக்கு வழிபாடுகள் நடத்துவோம். "இன்னும் நான்கு நாள், மூன்று, இரண்டு, அப்பா நாளைச் செய்தி நல்ல செய்தியா யிருக்க வேண்டும்" என்று ஐயர் காலை எழுந்ததும் சொல்லுவார். 1924-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24-ஆம் தேதி மஹாத்மா தமது உப

வாசத்தை விட்டுப் பாரணை செய்தார். நாடு முற்றிலும் புத்துயிர் பெற்று மகிழ்ந்தது! "பராசக்தி மஹாத்மாவைக் காத்தாள்" என்று ஐயர் குதித்தெழுந்தார்! காந்தியடிகள் ஆரஞ்சுப் பழ ரசம் சாப்பிட்டார். அந்த நாளை நாங்கள் உபவாச தினமாகக் கொண்டாடினோம். நாங்கள் மட்டுமன்று, சேரமாதேவியிலும் சிலர் உபவாசமிருந்தனர். முதனாளே நாங்கள் தாமிரவருணியில் நீராடினோம். ஐயர் சங்கற்பம் சொல்லி, திலகருக்கும் மஹாத்மாவுக்கும் வாழ்த்துச் சொல்லி, ஸ்நானம் செய்தார். புதிய கதர் அணிந்து, மேலே கதர் துப்பட்டா போட்டுக்கொண்டு கார்மேனிச் சிவன் போலே முன்னே நடந்தார்! நாங்கள் பின்னால் தேசியக் கீதங்கள் முழங்கிக் கொண்டே தொடர்ந்தோம்; ஊரில் அக்கிரகாரத்தைச் சுற்றினோம். தெரு முனைகளிலும் நடுவிலும் நின்று, "மஹாத்மா காந்தி 21 நாள் நமது ஒற்றுமைக்காக உபவாசமிருந்து நாளைப் பாரணை செய்கிறார். நமது சமுதாய ஒற்றுமைக்காகவும், மஹாத்மாவின் க்ஷேமத்திற்காகவும் எல்லாரும் நாளை உபவாசம் இருந்து இஷ்ட தெய்வத்தைத் தொழ வேண்டும்...நாளை மாலை ஆறுமணிக்குக் குருகுலத்தில் பொதுக் கூட்டம் நடக்கும்; எல்லாரும் வரவேண்டும்" என்று மஹா ஜனங்களை வேண்டிக் கொண்டோம். ஆசிரம வாசிகள் மறுநாள் ஜல பானம் செய்யவில்லை; எல்லார் முகத்திலும் புன்னகை தவழ்ந்தது! "நமது மஹாத்மா பிழைத்தார்!" என்ற சந்தோஷத்தில் பசி கூடத் தோன்றவில்லை!

மாலை ஆறு மணிக்குச் சந்தியா உபாசனை கிரமப்படி நடந்ததும், அச்சுக்கூடத்திற் கெதிரே பெரிய கூட்டம் கூடியது. சுமார் 100 பேர் வந்திருந்தனர்; அவ்வளவு தான் அந்த ஊரில் கூடும். மஹாத்மா படத்திற்குக் கதர் மாலை போட்டுப் பாடியதும், ஐயர் எழுந்து ஓர் அரிய

பிரசங்கம் செய்தார். அது இன்னும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது!

"மஹா ஜனங்களே, இன்று ஒரு சுபதினம்! நமது புண்யபூமியின் புனருத்தாரணத்திற்காக எழுந்த மஹாத்மா காந்தி, இருபத்தோருநாள் சல்லேகனம் இருந்து, இன்று பாரணை செய்தார். உலகில் சாந்தத்தையும், சத்தியத்தையும் நிலைநாட்ட எழுந்தருளிய மஹாத்மாவின் தபோபலந்தான் இப்போது நமக்கெல்லாம் க்ஷேமமளிக்கிறது. நமது சுதந்திரப் பசியைத் தணிக்க ஒரு கனியை பகவான் அளித்தார்! அது எங்கே நமக்கு லபிக்காமல் போய்விடுமோ என்று நாமெல்லாரும் சென்ற இருபது நாட்களாகப் பயந்துகொண் டிருந்தோம். பகவான் காப்பாற்றினார். அந்தக் காலத்திலே துருவன் விசுவாமித்திரன் முதலானோர் தவம் செய்தார்கள். அவர்களுடைய தவக்கனலைத் தாங்க மாட்டாமல், தேவர் வரந்தர முன்வந்தனர். மஹாத்மாவின் தவத்தைக்கண்டு உலகில் உள்ள பெரியார்களெல்லாரும் தவிதவித்ததைப் பார்க்கும்போது, அப்புராணக் கதைகள் ஓர் ஆழ்ந்த சத்தியத்தையே வற்புறுத்துகின்றன என்று நாஸ்திகரும் ஒப்புவார்கள். அடிகளின் பட்டினி, ரோமா ரோலான், ஹோம்ஸ் போன்றவர் இதயத்தையும் குலுக்கியிருக்கிறது. நமது நாட்டுத் தலைவர்களெல்லாரும் "வந்தது ஆபத்து" என்று கலங்கினர். மதன்மோகன மாளவியா, லாலா லஜபதிராய், மோதிலால் நேரு, அபுல்கலாம் அசாது, ராஜகோபாலாச்சாரியார் முதலியோர் அக்கினிப் பிரவேசம் செய்வதற்காகத் தீயை வலம்வந்த பரதனைத்தடுக்கக் கோசலாதேவி ஓடிவந்ததைப் போல தில்லிக்குப் பறந்தோடிச் சென்றார்கள்; அடிகள் விரதத்தைக் கடைப்பிடித்தே தீர்த்தார். மனித ஜாதிக்கே தாரகமாக விளங்கும் காந்திஜி உடலுக்கு அழிவு வந்துவிடுமோ என்று விசாரங்கொண்டிருந்தோம். ஆனால் தருமத்திற்கு அழிவில்லை. தவத்திற்குத் தோல்வியில்லை.

மஹாத்மா விரதத்தை வெற்றியுற முடித்தார். நமக்குப் போனவுயிர் வந்தது!

"தேவரும் பிழைத்திலர், தெய்வ வேதியர்
ஏவரும் பிழைத்திலர், அறமும் ஈறுஇன்றால்!
யாவது இங்கு இனிச் செயல் அரிது? எம்பிராற்கு
ஆவஎன் அடிமையும் பிழைத்தின்றும் அன்றோ?"

என்று சீதாபிராட்டியின் தவத்தைப்பார்த்து உருக்கத்தோடும் மனவுற்சாகத்தோடும் ஆஞ்சனேயப் பெருமான் சொல்லியதைப்போலப் பாரததேச மக்கள் அனைவரும் காந்தியடிகள் தவம் பூர்த்தியடைந்ததைக்கண்டு, பேரானந்தத்தோடு கூறத் துவங்கிவிட்டார்கள்! சக்திரகந்தி ஐம்பத்தேழு அசனம் நோற்றான். தேசபக்த சிகாமணியும் மஹா தியாகியுமான மாக்ஸ்வினி 70 நாட்கள் உபவாசமிருந்தான். இருபத்தோருநாள் உபவாசம் என்ன, அவ்வளவு பெரியகாரியமா என்று நாம் அவமதிக்கக்கூடாது. மூன்றுநாள் நாம் சேர்ந்தாற்போலப் பட்டினியிருந்து பார்த்தால், அப்பொழுது மஹாத்மா புரிந்ததவம் எத்துணை கஷ்டமானது என்று நமக்குத் தெரியவரும்!

மஹாத்மாவின் விரதம் பலித்திருக்கிறது. வட நாட்டுப் பத்திரிகைகள் பரஸ்பரம் குரோதம் உண்டாகும் வியாசங்கள் எழுதுவதை அப்பொழுதே நிறுத்திவிட்டன. நாட்டில் ஒரு சாந்த உணர்ச்சி பரவ ஆரம்பித்து விட்டது. ஒற்றுமை சபை கூடிற்று; இந்து முஸ்லிம் தலைவர் ஐந்து நாட்கள் ஆழமாக யோசனை செய்து, ஜாதி ஒற்றுமைக்கு இன்றியமையாத சில தீர்மானங்களைச் செய்து விட்டு, அத் தீர்மானங்களை நிறைவேற்றத் தங்கள் தங்கள் பிராந்தியங்களுக்கு வந்திருக்கிறார்கள். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் திரிகரண சுத்தியுடன் ஐக்கியப்பட்டு தேச சுதந்திரத்திற்காக உழைக்க வேண்டும். தர்மமாகிய தேரில் ஜகதீசுவரனை வைத்து நாம் பவனி வரவேண்டும். நன்றாக

முறுக்கேறிய ஐக்கிய வடத்தால் அத் தேரை இழுக்க வேண்டும். நமது முழு பலத்தையும் ஊன்றித் தேச சேவை செய்ய வேண்டும். இந்தப் புண்ணிய பூமியிற் பிறந்தவர்க ளெல்லாரும் பாரத மக்கள். எல்லாரும் ஒரு தாய் வயிற்றிற் பிறந்த பிள்ளைகளைப் போலே ஒற்றுமை யாக, ஏக குடும்பமாக, அன்யோன்யமாக வாழவேண்டும். அப்போதே மஹாத்மா காந்தியின் விரதம் பூர்த்தியாகும்". இந்தப் பிரசங்க முடிவில் காந்தி புகழ் பாடினோம்.

இந்தப் பிரசங்கத்தின் சுருக்கம் பாலபாரதி முதல் இதழில் வந்தது.

16. பெல்காம் காங்கிரஸ்

ஐயர், ஒரு மாதத்திற் கெல்லாம் பெல்காம் காங்கிரஸிற்குப் புறப்பட்டார். என்னையும் தாலுகா காங்கிரஸ் கமிட்டி, காங்கிரஸ் பிரதிநிதியாகத் தேர்ந்தது. ஐயர், "பாரதியும் வரலாமே" என்றார். "தாங்கள் போக வேண்டியது அவசியம். அங்கே மஹாத்மாவின் நிலையை எழுதுங்கள், போதும். நான் வருவதானால் ரூ. 100 அல்லவா செலவாகும். நாம் பணத்திற்கு படும் கஷ்டத்தில் இந்தச் செலவு வேறே செய்யலாமா? அந்த ரூபாய் நூறையும் கொண்டு ஒரு புத்தகம் வெளியிட்டு விடலாம்" என்றேன். "ஆஹா! அப்படியே செய்யலாம்" என்றார் ஐயர். இதை எதற்காகச் சொன்னேன் என்றால், ஐயர் தமது நண்பர் மனத்தை அறிந்து நடக்கும் மரியாதையைக் காட்டவே. காங்கிரஸ் என்றதும் எனக்கு 100, பாரதிக்கு 100 என்று செலவுக் கணக்குப் போட்டார். அந்த 100 ரூபாயைக் கொண்டுதான் ஒரு பாமலர் அச்சிட்டார் ஐயர். ஐயர் பெல்காமிலிருந்து எனக்கு நீண்ட கடிதம் எழுதினார். அதில் அவர் குறித்ததாவது :-

"பெல்காம் காங்கிரஸ், காங்கிரஸ் சரித்திரத்தில் முக்கியமான ஸ்தானம் வகிக்கும். நேற்று வரையில் இரண்டு குடித்தனம் செய்தவர்கள், இன்று ஒன்ருனர்கள். ஸ்வராஜ்யக் கக்ஷி மஹாத்மாவின் நூல் நூற்கும் திட்டத்தை ஒத்துக்கொண்டு விட்டது. மஹாத்மா ஸ்வராஜ்யக் கக்ஷியின் சட்ட சபைப் பிரவேசத்தை அங்கீகரித்தார். இனி காங்கிரஸில் பிளவிராது. மஹாத்மாவின் சக்தி அபாரமாயிருக்கிறது. அவருடைய மகத்துவம் நாளுக்கு நாள் பெருகி வருகிறது. காங்கிரஸை அவர் காலச் சிக்கனத்துடன் நடத்தினர். பேச்சு சுருக்கம், செயல் அதிகம். மஹாத்மா, சத்தியமே வடிவாக விளங்குகிருர். இந்து முஸ்லிம் ஒற்றுமை, தீண்டாமை விலக்கு, சுதேசி கதர் உடுத்தல், மது விலக்கு, பாஷைவாரியாக மாகாணங்களைப் பிரித்தல், ஹிந்துஸ்தானி கற்றல் முதலிய மாமூல் தீர்மானங்களே இந்தக் காங்கிரஸிலும் நிறைவேறின. என்ருலும், ஒவ்வொரு தீர்மானத்தின் பின்னும் மஹாத்மாவின் ஜய சக்தி வீசியது. மௌலான முகம்மதலி, கதரைப் பற்றி உருக்கமாகப் பேசினர்; காங்கிரஸ் அங்கத்தினர் ஒவ்வொருவரும் 2000 கஜம் நூல் நூற்றனுப்ப வேண்டும் என்ற தீர்மானம் ஆச்சரியமாக நிறைவேறியது. அன்னிபெசண்டம்மை கூட, தினம் அரைமணி நேரம் நூற்பதாக வாக்களித்தார் என்ருல் காந்தியடிகளின் சக்தியை என்னென்பது! நாம் ஆசிரமத்தில் அதிகமாக நூற்கவேண்டும். வந்தவுடன் கதர்த் தறிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். தை மாதம் "பால பாரதி" முழுப் பொறுப்பும், பாரதிமேல் விழுந்து விட்டது; பெல்காம் காங்கிரஸ் பிரசுரங்களை அனுப்பியிருக்கிறேன். ஆலோகனம் அவலோகனத்தில் எல்லா நடவடிக்கைகளையும் சுருக்கமாக எழுத வேண்டும். சில நல்ல புஸ்தகங்கள் வாங்கி யிருக்கிறேன். நாளை நாசிக் செல்லுகிறேன்; சீக்கிரம் அங்கே வருவேன். காரியங்களைக் கவனித்துக் கொள்ளவும்......"

காங்கிரஸ் முடிந்ததும் பஞ்சவடி ஸ்நானம் செய்து ஆசாரமாக ஐயர் விநாயக தாமோதர ஸாவர்காரரைக் கண்டார். சாவர்க்கார், அப்போது காவலில் இருந்தார். ஐயரைக் கண்டதும் வெகு ஆச்சரியமான அன்புடன் வரவேற்று உபசரித்தார். தாம் லண்டனில் பார்த்த ஐயரன்று; அப்போது வீரனைப் பார்த்தார்; இப்போது ரிஷியைப் பார்த்தார்!

சாவர்காரைச் சந்தித்த விவரம் கேட்டேன்; ஐயர் பின் வருமாறு சொன்னார்: "திலகருடைய தீரம், சாவர்காரிடம் இருக்கிறது; ஒப்பற்ற தியாகி. இன்னும் அவருக்கு மன வுறுதி தளரவில்லை. தமது சக்தியில் பெரிய நம்பிக்கை கொண்டிருக்கிறார். பானிபட் போர் முதல் நாளிது வரையில் நடந்த பாரத சரித்திரத்தை அரிய இலக்கியமாக எழுதியிருக்கிறார். சதா இலக்கியப் பணியில் ஈடுபட்டிருக்கிறார். அவருடைய "ஹிந்துத்வம்" என்னும் நூல் அற்புதமா யிருக்கிறது. அதையே அவர் கொள்கை யென்னலாம். அவர் எண்ணம் பூரா ஹிந்து ஜாதியின் புனருத்தாரணத்திலேயே ஈடுபட்டிருக்கிறது. 'ஹிந்துக்களை ஒரு தீரர் கூட்டமாக்க வேண்டும். பழை கலைகளையும் காப்பாற்றிப் புதிய கலைகளையும் பயில வேண்டும். ஹிந்துக்களின் ஜனத் தொகையைப் பெருக்க வேண்டும்' என்பது அவர் கொள்கையாகும். சாவர்க்கார் இந்து மகா சபைக்காக அற்புதமான பணி புரியப் போகிறார். ஈசுவர கிருபையால் அவருக்கு விடுதலை கிடைக்க வேண்டும். காங்கிரஸில் நடந்த ஹிந்து மஹா சபைக் கூட்டத்தைப் பற்றிச் சொன்னேன். தேசத்தில் பெரும் பகுதியான நமது ஜாதி பரிதபிக்கும் நிலையில் இருக்கிறது; துர்ப் பலமாயிருக்கிறது. இது நாளடைவில் அன்னிய பலங்களுக்கு இரையாகி வருகிறது. "ஹிந்துக்கள் பலரும், ஒற்றுமையும் வீரமும், மஹா பாரத வீரரைப் போன்ற திறமையும் பெறவேண்டும். சத்தி யியக்கம் பரவி, பிற மதம்

புகுந்த இந்துக்களை நம்முடன் சேர்த்துக் கொள்ளவேண்டும். ஹிந்து தர்ம சங்கங்கள் ஊர்தோறும் ஏற்படுத்த வேண்டும். காங்கிரஸை விட இக் காரியம் நமக்கு முக்கியமானது" என்றார். ஆசார சீர்திருத்தங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். பிறகு அவரை விட்டுப் பிரியவே மனம் வரவில்லை. அவ்வளவு அன்புள்ள ஆத்மா!" என்று முடித்தார்.

ஐயர் திருவண்ணாமலை மாகாண மகா நாட்டிற்குச் சென்று வந்த பிறகும், "ஹிந்து ஜாதியின் புனருத்தாரணமே எனக்கு முதன்மையான காரியம் என்று தோன்றுகிறது. நமது உட் கலகங்களும் வேற்றுமைகளும் ஒழிந்தாலொழிய உய்வில்லை" என்றார்.

திருச்சி, சென்னையில் நடக்கும் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திற்கெல்லாம் ஐயர் போவார். தேசத்தின் பெயரால் தலைவர் என்ன செய்யச் சொன்னாலும் சரி, முதலில் அதைச் செய்து முடிப்பார். ஆனால், மாகாண, தேசீய காங்கிரஸ் சபைகளில் ஐயர் ஏன் அதிகமாகப் பேசவில்லை என்று கேட்கலாம். மாகாண சபைகளில் ஏதாயினும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றப் பேசியிருப்பார். காங்கிரஸ் மஹா சபையில் அவர் பேச மிகவும் உரிமைகொண்டவர். மற்றத் தலைவர்களைப் போலே ஏன் முந்திக் கொண்டு ஐயர் மேடை யேறவில்லை? இது எனக்கே வியப்பா யிருந்தது. "தாங்கள், பெல்காம் காங்கிரஸில் பேசினீர்களா?" என்றேன். "மஹாத்மா ஒருவர் பேசினாற் போதாதா? பிரெஞ்சுக் குடியரசுப் படையில் நெப்போலியன் ஒருவன் பேசினாற் போதாதா? மற்றவர்களெல்லாம் வீர வுணர்ச்சியுடன் தலைவர் பேச்சைச் செயலில் அல்லவா காட்ட வேண்டும். மஹனீயர்கள் பேசுகிறார்கள். நாம் நடப்போம். பேசச் சொன்னால் பேசுவோம்" என்றார். ஐயரின் அடக்கம் ஓர் அற்புதம்!

பெல்காமிலிருந்து வந்ததுமே ஆசிரமத்தில் கதர் விளைவிக்கத் தொடங்கினர். திருவண்ணாமலை மஹா நாட்டிலிருந்து வந்ததுமே, ஜாதீய ஒற்றுமைக்கானதைச் செய்யத் தொடங்கினர். ஐயர் செவி கொடுப்பார்; ஆனல் வெகு நிதானமாக யோசித்தே, சொல்லைக் கொடுப்பார்.

17. ஐயரின் அன்பு

ஐயர் வீரமே உருக்கி வார்த்த தேசாபிமானி. அரும் பெருந் தலைவர்களில் ஐயர் ஒருவர். என்றாலும், தான் 'வீரன், தலைவன்' என்ற செருக்கு அவரிடம் மருந்திற்குக் கூடக் கிடையாது. 'இவரா ஐயர்' என்று நாம் வியக்கும்படி சர்வ சகஜமாக, பவ்யமாக நடந்து கொள்வார். சொல்வதை உருக்கமாகக் கேட்பார்; நல்லதை நடந்து காட்டுவார். சிறிய விஷயங்களிற் கூட ஐயர் அப் பழுக்கில்லாம லிருப்பார். பெரிய காரியங்களைத் தாம் நடத்திக் காட்டும் நிலைமை வருமட்டும், வாயளக்க மாட்டார். தான் கதர் உடுத்தியே 'உடுத்து கதர்' என்பார். தான் நூற்றே, பிறரை நூற்கச் சொல்லுவார். முதலில் தான் இயற்கை வழி நின்றே, பிறரையும் அப்படிச் செய்யத் தூண்டுவார். ஐயர் தமது உதாரணத்தாலேயே பிறரைச் சீர்திருத்தப் பார்ப்பார். ஐயர் சொல்லை விடச் செயலில் மேன்மையானவர். குளிப்பது, ஆடை துவைப்பது, பல் விளக்குவது, வெளிக்குச்சென்று வருவது, சுத்திசெய்து கொள்வது, சந்தி ஜபம் செய்வது, பரா சக்தியை வணங்குவது, இனிமையாகப் பேசுவது, அமைதியாக நினைப்பது, நிதானமாக நடப்பது, சுசிருசியாக நின்று மென்று உண்பது, நல்ல இலக்கியங்களைப் படிப்பது, காலத்தை உபயோகிப்பது, உயர்ந்த நினைப்பில் இருப்பது—அனைத்திலும் ஐயர் நிறைவாக, பிறருக்கு உதாரணமாக நடந்து கொள்வார். இவை யனைத்தினும் எனக்கு அதிகமாக விளங்கியது, ஐயரின் உள்ளன்புதான்!

ஐயருக்குப் பிறகு இந்த உலகில் அவ்வளவு அன்பை நான் இன்னும் காண முடியவில்லை. நான் வழக்கமாகக் கடலையும் வாழைப் பழமுமே உண்டு வந்தேன்;—பகல் பன்னிரெண்டு மணிக்கே அதுவும். ஐயர் அன்புடன் அழைத்து வந்து உடனுண்ணச் செய்வார். அச்சமயம் அரிய விஷயங்களைப்பற்றிப் பேசுவார். இரவில் சில நாட்கள் நான் உபவாசமே இருப்பதுண்டு. அது வழக்கமாய்ப் போய்விட்டபடியால் ஆசிரம நண்பர் எனக்கு உணவு அனுப்புவதில்லை. நானும் கேட்பதில்லை. இதை ஐயர் எப்படியோ அறிந்துகொண்டார். ஒருதரம் திருச்சியிலிருந்து மாம்பழம், ஆரஞ்சு, முந்திரிப் பருப்பு எல்லாம் வாங்கி வந்தார். "பாரதி! மாடிக்கு வரலாமே" என்றார். சென்றேன். "தாகூரில் "கார்டினர்" எவ்வளவு நன்றாயிருக்கிறது, பார்த்தீர்களா! படியுங்கள் இதை!" என்றார். 'கவிதைத் தோட்டக்காரன் ராணியிடம் தனது பயனுள்ள சேவைகளைப்பற்றி வர்ணிப்பதைப் பார்த்தீரா?' கவிக்கு ஒரு சமுதாயத்தில் இவ்வளவு பணியுள்ளது. அதற்கேற்றபடி கவி திடமாயிருக்க வேண்டும். வேளா வேளையில் நன்றாகச் சாப்பிட வேண்டும்.........உட்காருங்கள்" என்று கட்டுப் பெட்டியைத் திறந்து கனிகளையும் பருப்பையும் எடுத்து வைத்தார். "பாரதி! நன்றாகச் சாப்பிட வேண்டும்" என்று அடிக்கடி உபதேசம் செய்தார். அந்த உபதேசத்தைச் சரிவரக் காப்பாற்ற முடிந்ததில்லை; என்றாலும், ஐயர் கவனித்துக் கொள்வார். தம்மை அண்டியவருக்கு ஐயர் தாய்போலுதவுவார்.

சாப்பாட்டைக் கவனிக்காமல் நாள் முழுதும் இலக்கிய வேலைகளும் பிற தொண்டுகளுமே செய்வது! பசித்த போது நிலக்கடலையே சாப்பிடுவது; இரவில் இளைப்பாறுவதில்லை. இப்படியிருந்த எனக்கு ஒருசமயம் பித்தக் காய்ச்சல் கண்டு சுமார் 106 டிகிரி வரையில் ஏறியது.

தான் வெளியே சொல்லாமல் சகித்துக்கொண்டே பால பாரதி புருப் பார்ப்பதும், கட்டுரை எழுதுவதும், மாணவருக்குப் பாடம் சொல்லுவதும், காய்ச்சலுடனேயே குளிப்பதும், பாடி ஆடுவதுமா யிருந்தேன். உணவு மட்டும் செல்லுவதில்லை. எப்படியோ என் உடல் நிலையை ஐயர் அறிந்துகொண்டார். "பாரதி, சாப்பிட வரலாமே" என்ருர். "பசியில்லை" என்றேன். "என் பசியில்லை? இங்கே வாருங்கள்" என்று உடம்பைத் தொட்டுப் பார்த்து விட்டார். "அடாடா! இதென்ன தாபஜுரமாய் அடிக்கிறதே; நல்ல காரியம் செய்தீர்கள்? சொல்லக் கூடாதா? உங்கள் பர்ணசாலையிலேயே படுத்திருங்கள்...........வாருங்கள்" என்று கையைப் பிடித்து அழைத்து வந்தார். நான் பாயில் படுப்பதே யில்லை: ஒரு சணல் நாற்காலியிலேயே (கான்வஸ் சேர்) இரவிலும் சாய்ந்து கொண்டிருப்பேன். "அது கூடாது, இதோ பாய் தலையணை; படுத்துக்கொள்ளுங்கள். இதோ தொட்டியில் ஜலம் நிறப்புகிறேன்" என்ருர். "ஒன்றும் வேண்டாம்; நீங்கள் இங்கே அருகில் உட்கார்ந்திருங்கள். சில பாடல்களைப் பாடுகிறேன்: கேட்டுக்கொண்டிருங்கள்; எல்லாம் சரியாய்ப் போய்விடும்" என்றேன். அப்படியே பாரத சக்தியிலிருந்து பக்திரசமாகச் சில பாடல்களைப் பாடிக்கொண் டிருந்தேன். ஐயர் கேட்டுக்கொண்டிருந்தார். இடையே என்து குரல் தளர்ந்தது........ "நிறுத்தும், சிரமப்படுத்திக் கொள்ள வேண்டாம்" என்ருர். அதற்குள் கி ரு ஷ் ண மூ ர் த் தி தொட்டியில் ஜலத்தை நிரப்பினன். நான் தொட்டியில் மல்லாந்தேன். ஐயர் தமது கையால் எனது வயிற்றை நன்ருகப் பிசைந்து பிசைந்து தேய்த்தார். "இதென்ன வயிற்றை ரொட்டி மாதிரி பிசைகிறீர்கள்? உங்கள் பலத்தை இன்றே அறிந்தேன்"........என்று தமாஷ்பண்ணி நகைச் சுவையுடன் பேசினேன்! ஐயர் நெடு நேரம் எனக்குச் சிகிச்சை

செய்தார். ஆனால் குடலில் சரக்குகள் அதிகமா யிருந் தன. ஏதோ அங்கே உறுத்திக்கொண்டிருந்தது. ஏதா கிலும் கட்டியோ என்று பயந்தேன். பி. ரா. ராஜமைய ருக்கிருந்தது போல் எனக்கும் குடலடைப்பிருந்தது. "இதெல்லாம் சாயாது! பலமாக எனிமா வைத்துக் கொண்டு தௌதி செய்ய வேண்டும்" என்றேன். ஐயர் இரவு எட்டு மணிக்கு உள்ளூர் டாக்டரை அழைத்து வந்து, எனிமா வைத்தார். அப்பா! நிலக்கடலைகள் பத்து முழுதாகக் குடலில் அகப்பட்டுக் கொண்டு இத்தனை விஷமம் பண்ணின! அவை விழுந்ததும் சற்றே நிம்மதி யானது. பிறகு தௌதிக்கு வெந்நீர் கொண்டு வரச் செய்தார். துணியும் தந்தார். பித்தத்தைக் கக்கினேன். அன்று முதல் பத்து நாட்கள் என்னை எந்த வேலையும் செய்ய விடவில்லை ஐயர். வேளா வேளைக்குக் கஞ்சியனுப் புவார். இரண்டு மணிக்கு வந்து ஆறுதலாகப் பேசிக் கொண்டிருப்பார். "பாரதி! பாடல்களை யெல்லாம் அச்சிட்டு விடுவோம்; நாடகங்கள் மிகவும் நன்று யிருக் கின்றன" என்றெல்லாம் சொல்லி தைரியப்படுத்துவார். காய்ச்சல் சுமார் ஆறு நாட்கள் அடித்தன.

சிவராத்திரி வந்தது. அச் சமயம் ஆசிரமத்தில் முன்னே தயாரித்த "அப்பர்" நாடகத்தை நடிக்க வேண்டுமென்று நினைத்தேன். நான் மகேந்திரவர்மன், சத்தியானந்தம் அப்பர், மணி குண்டன், இன்னும் மற்ற மாணவர் பல வேடங்கள் புனைந்தனர். யாரும் வேஷம் போட்டுக்கொள்வதில்லை. இயல்பாகக் குரலையும் அபி நயங்களையும் பாவனாரசங்களையும் கொண்டே நாடகங் களை நடத்துவதுண்டு. சிவராத்திரியன்று நாடகம் நடிக் கவே தீர்மானித்துப் புறப்பட்டேன். ஐயர், "பாரதி, பாரதி, இதென்ன?........முரண்டு செய்யாதேயும்........ உடம்பு சௌக்கியமாகட்டும். பிறகு எத்தனையோ நாட கம் எழுதலாம், நடிக்கலாம்........" என்று சொல்லி

என்னைத் தடுத்தார். "மன்னியுங்கள், மாணவருக்கு முன்பே சிவராத்திரியன்று அப்பர் நாடகம் நடத்துவதாக வாக்களித்து விட்டேன்; மாணவரை ஏமாற்றக் கூடாதல்லவா? தைரிய மிருக்கிறது, நடிக்கிறேன்" என்று சென்றேன். நடித்தே தீர்த்தேன். அன்று நாடகம் மிகவும் நன்கு யிருந்தது. ஆனால் மறுநாள் ஐயர் சொல்லைத் தட்டிய பலன் கிடைத்தது. காய்ச்சல் அதிக மானது. ஐயர் மறுபடியும் என் பர்ணசாலைக்கு வந்து, "இப்படி உடம்பை கெடுத்துக்கொள்ளலாமா? இனிக் கொஞ்ச காலம் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்; வாருங் கள் மறுபடியும் தொட்டி ஸ்நானம் செய்யலாம்" என்று தொட்டியில் படுக்க வைத்துச் சிகிச்சை செய்தார். ஐயர் அடிவயிற்றை அழுத்திய அழுத்தமே போதும். ஒருவாறு உடம்பு சௌக்கியமானது. அதன்பிறகு "இனி நிலக்கடலை வேண்டாம்........புஷ்டியாகச் சாப் பிடும்" என்று ஐயர் தாமும் பக்கத்தில் உட்கார்ந்து, சாப்பிடச் செய்தார். நெய் அதிகமாய் என் இலையில் விடச் சொன்னார். அக்காலம் ஆசிரமத்தில் ஒரு சமை யல்காரரை ஏற்பாடு செய்திருந்தார். அவர் பலே தமாஷ் பேர்வழி. குரல் நன்கு யிருக்கும். பாடிக்கொண்டே தான் அவர் காரியம் பார்ப்பார். சுமார் பதினைந்து நாட்கள், சமைத்த உணவே சாப்பிட்டேன். பிறகு என் இயற்கை உணவை ஐயர் மிகவும் கருத்துடன் கவனித் தார். பால பாரதி கணக்கு வழக்குகளில், தபால்களில் எனக்குத் துணை செய்ய 12 ரூபாயில் ஓர் ஆளை நியமித்துக் கொடுத்தார். இதெல்லாம் எதற்காகச் சொன்னேன் என்றால், ஐயர் பிறர்மனதை அறிந்து எவ்வளவு அன் புடன் நடந்துகொண்டார் என்பதைக் குறிக்கவே!

குருகுலத்தில் பையன்களுக்குத் தலை வலி, வயிற்று வலி, மலச்சிக்கல், காய்ச்சல் வரும். உடனே உபவாசம் போட்டு, சாயங்காலம் எனிமா எடுத்துக்கொள்ளச்

சொல்லுவார். கிருஷ்ணமூர்த்திக்கு இரண்டுதரம் காய்ச்சல் வந்தது. அவர் உடலை மறந்து அச்சுக்கூடத்திலும் சமையலறையிலும் உழைத்தார். ஐயர் அவர் அருகிலேயே இருந்து சிகிச்சைசெய்து, தக்க ஓய்வு கொடுத்துப் பிறகு வேலை செய்யச் சொன்னார்.

18. ஐயர் கண்டிப்பு

சிறு பையன்கள் தபசியைப் போலே வாயை அடக்க முடியுமா? சேட்டை செய்வர், கை நீளும்......மனித சுபாவத்திற்குரிய குற்றங்களெல்லாம் அச்சிறுவரும் செய்வர். மாணவர் பிழைகள் செய்தால் ஐயர் சும்மா விடமாட்டார். ஐயர் எங்கும் காதும் கண்ணுமா யிருப்பார். எத்தனையோ ஒற்றரை ஏமாற்றிய பேர்வழி யல்லவா? சாத்வீகந்தானே பேசுகிறார்; அவரை ஏமாற்றி விடலாம் என்று எண்ணியவரே ஏமாறுவர். கிணற்றடியில் மாணவர் குளிப்பர். ஒருவருடன் ஒருவர் கேலியாக ஏதாயினும் பேசுவர். "அடே சேஷு" என்பான் ஒருவன். "ஹு" என்றொரு உருமல் கேட்கும்.........ஐயர் எதிரே வந்து நிற்பார்!......"ஹு யாரையும் டாப் போட்டுப் பேசக் கூடாது. "சேஷா" என்றே கூப்பிட வேண்டும். "வாடா போடா" என்னக் கூடாது; வாரும், போம், என்ன வேண்டும். பெண்களானால் "வாடி போடி." என்னக் கூடாது .அது துச்சமான பேச்சு. "வாம்மா, போம்மா, என்ன வேண்டும்" என்பார். யாராவது பாதையில் காறியுமிழ்ந்தால் உடனே அதைக் கண்டித்து ஓர் ஓரமாகத் துப்பச் சொல்வார். கெட்ட பேச்சு காதில் விழுந்தால் போச்சு.........ஹு என்று வந்து பலமாகக் கண்டிப்பார். "ஐயர், இவன் இன்று கொல்லைக்குச் செம்பு கொண்டு போகவில்லை......இவன் செம்பைக் கழுவவில்லை.........இவன் இப்படிப் பண்ணினான்; அப்படிப் பார்த்தான்" என்

றெல்லாம் சிறுபையன்கள் புகார்ச் செய்வர்; அத்தனையும் கேட்பார். அந்தந்தக் குற்றவாளிகளைக் கூப்பிட்டு, "இப்படிச் செய்யலாமா? ஆசிரம விதிகளை நேர்மையாகக் கடைப் பிடிப்பதன்றோ பிரமசாரிக்கழகு? இனிமேல் அப்படிச் செய்யாதே" என்று கண்டிப்பார். பெரிய குற்றங்கள் நேர்ந்தால், அது நிவாரணமாகுமட்டும் ஐயர் பட்டினி கிடப்பார். ஓர் உதாரணம்: ஐயர் சென்னையிலிருந்து பெப்பர் மெண்ட் வாங்கி வந்தார். அதைச் சமையலறையில் ஓரிடத்தில் வைத்திருந்தார்—சிறு பையன்களுக்குத் தரவோ, என்னவோ தெரியவில்லை. நாக்கூறிய இரண்டு பொடிப் பையன்கள், ஒரு பிடி பெப்பர்மெண்டுகளை ஓசைப் படாமல் எடுத்து வாயில் போட்டுக் கொண்டு வெகு தூரத்தில் போய்நின்று வந்தனர். ஆசாரியர் பார்த்தார்; பெப்பர் மெண்டுகள் குறைந்திருந்தன. உடனே "இதை யார் எடுத்தது? நேராக என்னிடம் வந்து ஒப்புக் கொள்ளு மட்டும், நாம் சாப்பிடப் போவதில்லை. ஹூ இங்கே திருட்டு உதவுமா?" என்று ஐயர் பட்டினி இருந்தார்; மாலை ஆறுமணி. திருடிய பையன்கள் என்னிடம் வந்து, "ஐயா, உம்...உம்" என்று விழித்தனர். "நீங்கள் தாமே எடுத்தீர்கள்?" என்றேன். "தின்னவேணும் போலிருந்தது...உம்...உம்" என்றார்கள். ஐயரிடம் சொல்ல அவர்களுக்குத் தைரியம் இல்லை, பயம். "சரி, இருங்கள்" என்று நான் ஐயரிடம் ஓடினேன். "சற்றே உலாவி வருவோமே" என்று மலைப் பக்கம் கூட்டிச் சென்றேன். சிறு பையன்கள் ஏதோ செய்து விட்டார்கள். தங்களிடம் சொல்லப் பயந்து என்னிடம் பிழையை ஒப்புக் கொண்டார்கள். இனி நீங்கள் சாப்பிட வேண்டும்" என்றேன். "துஷ்ட பையன்கள்" என்று அவர்களை ஒரு வாட்பார்வை பார்த்து, உணவு கொண்டார். அந்தப் பார்வையே போதும். பையன்கள் பிறகு அக்குற்றம் செய்ததே யில்லை.

ஒரு நாள் இரண்டு பையன்கள் ஏதோ கெட்ட செய்கை செய்து விட்டனர். ஆசாரியாருக்குத் தெரிந்து போயிற்று. உடனே அவர்கள் இருவரையும் பட்டினி போட்டுத் தாமும் பட்டினி யிருந்தார். மறுநாள் பத்து மணிக்கு, புத்தக சாலையில் ஒரு கூட்டம் நடத்தினர். மாணவர் ஆசிரியர் எல்லாரும் கூடியிருந்தனர். குற்றம் செய்த பையன்கள் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டிருந்தனர். "பிரமசரியத்தின் அவசியத்தைப் பற்றி கொஞ்சம் பேசுங்கள்" என்று என்னைப் பணித்தார்; பேசினேன். நான் பேசியது யோக சித்தி பிரமசரியம் என்ற பகுதியிலுள்ளது. ஐயர், "கேளுங்கள்...கேட்டீர்களா? நமது பாரத தேசம் உத்தாரணமாக வேண்டுமானல், நாம் ஒவ்வொருவரும் ஒழுங்காக நடக்க வேண்டும்; நமக்குச் சக்தி வேண்டும். சக்தி பிரம்மச்சரியத்தினல் வரும் என்று அறிந்து கொண்டீர்களா? நாக்கையும் இந்திரியங்களையும் அடக்கியாள வேண்டும்" என்று உபதேசித்தார். அத்துடன் விட்டாரா? "குற்றவாளிகள் எழுந்து நில்லுங்கள், சொல்லுங்கள்: நாங்கள் செய்த குற்றத்திற்காக நேற்றெல்லாம் உபவாசமிருந்து வருந்தினோம்; இனி ஒழுங்காக நடப்போம்; இப்படிப்பட்ட பிசகு செய்யமாட்டோம் என்று சொல்லுங்கள்" என்றார். அப்படியே ஒப்புக்கொண்டு மாணவர் தப்பினர். பிறகு, ஐயர் உணவு கொண்டார். குற்றவாளிகளை ஐயர் நன்றாகச் சாப்பிடுங்கள்" என்று உற்சாகப் படுத்தினர்.

குருகுல ஒழுங்கைத் தவறி நடந்தால் ஐயர் சினப்பார். பழைய சம்பிரதாயங்களில் ஐயருக்குப் பிரியம் அதிகம். பழையது சாப்பிடுவது, சனி, புதன் எண்ணெய் தேய்த்துக் கொள்வது, சந்தி ஜபங்களை நன்றாகச் செய்வது, எச்சல் தீண்டல் பார்ப்பது—இவையெல்லாம் அவருக்கு முதன்மையாகத் தோன்றும். நான் தேங்காய்ப் பால் அல்லது வில்வப்பழமே தேய்த்து முழுகுவது வழக்கம்.

ஓர் ஆசிரம மாணவன் சனிக்கிழமை எண்ணெய் தேய்த்துக் கொள்ளாமல், மறுநாள் என் வழியைப் பின்பற்றினன். ஒரு சனிக்கிழமை மாப்பு; மறு சனிக்கிழமையும் அவன் எண்ணெய் தேய்த்துக் கொள்ளவில்லை... அன்று சாயங்காலம் நான் ஜபம் செய்து கொண்டிருக்கையில், அச்சுக்கூடத்திற் கெதிரே "பட் பட்" என்று சத்தம் கேட்டது. என்ன என்று கவனித்தேன்! "ஏன், எண்ணெய் தேய்த்துக் கொள்ளவில்லை. உம்...உம்..." என்று தலையில் நான்கு போடு போட்டார்? அந்தப் பையன் அலறிப் போய், "இனிமேல் தேய்த்துக் கொள்ளுகிறேனையா" என்று கிரமப்படி நடந்தான். ஐயருக்குக் கோபம் வரும்; ஆனல், அக் கோபம் எதிரி பின் குற்றத்தை அக்கணமே நீக்கும். குற்ற மொழிந்த பிறகு, ஐயர் மிகவும் பரிவுடன் பேசுவார்; ஒரு கதை சொல்லி ஆறுதலளிப்பார்.

ஐயரின் தாயுள்ளத்திற்கு ஓர் உதாரணம் சொல்லுகிறேன்: ஆசிரமத்தில் இரங்கோனிலிருந்து சுமார் ஏழு வயதுள்ள வேங்கடராமன் என்ற பையன் வந்திருந்தான். அந்தச் சிறுவன் அம்மாவை நினைத்துக் கொண்டு சில சமயம் அழுவான். பட்சணம் வேண்டும் போலிருக்கும்: முனங்குவான். ஒருநாள் இரவு, பையன் 'உம், உம், உம் அம்மா" என்று பெருங் குரலெடுத்து அழத் தொடங்கினன். ஐயர் அவனைப் பக்கத்திலேயே வைத்துக் கொண்டார். "அழாதே வெங்கட்ராமா, அழாதே" என்று சமாதானம் செய்து பார்த்தார்; பையன் ஓய வில்லை... பிறகு ஐயர், அவனை மடியில் வைத்துக் கொண்டு "ராரிரரோ ரார ரரோ, கண்ணே நீ கண்ணுறங்கு! என்று தாலாட்டுப் பாடத் தொடங்கினர். ஆசிரமம் முழுதும் உறங்கும் நிசி. நான் அப்போது பர்ண சாலையில் தியானித்துக் கொண்டிருந்தேன். "ராரிரரோ ராராரோ" பலமாகக் கேட்டது. கடகடவென்று சிரித்து, பையன் இருக்கும் இடத்திற்குப்

போனேன். ஐயர் நிலையைக் கவனித்தேன். "வெங்கட்ராமா, உன் அம்மா தானே இப்போது தாலாட்டுப் பாடுகிறாள்; பேசாமல் தூங்கு" என்றேன். ஐந்து நிமிஷம்சென்று பையன் ஒருவாறு அடங்கி உறங்கினான். "உங்களுக்கு இந்தத் தாலாட்டுப் பொறுப்பு வேறு வந்ததே...கொஞ்சம் விபரம் தெரிந்த பையன்களைச் சேர்த்தால் நல்லது" என்றேன். "அப்படியில்லை பாரதி, ஐரோப்பாவில் மூன்று வயதிலேயே குழந்தைகளை 'கிண்டர் கார்டன்' பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புகிறார்கள்; நாமும் ஏன்குழந்தைகளை இங்கே வளர்க்கக்கூடாது?" என்றார். அந்தப் பையன் ஒரு மாதத்திற் கெல்லாம் இரங்கூனுக்குத் திரும்பிப் போய்ச் சேர்ந்தான்.

ஐயர் பெண் சுபத்ரா மிகவும் அடக்கமாக நடந்து கொள்வாள்; அவளுக்குக் கருணையுள்ளம். எல்லாரிடமும் பிரியமாயிருப்பாள். ஐயர் மகன் கிருஷ்ணமூர்த்தி எப்போதும் துறுதுறுவென் றிருப்பான்; விஷமம் செய்வான்; சுறுசுறுப்பான மூளை. ஒருதரம் சொல்லிக் கொடுத்தால் எதையும் புரிந்துகொள்வான். தமிழில் விசேஷமாக அறிவுண்டு; ஆங்கிலமும் நன்றாய் வரும். உடலியல் நூலில் அவனுக்கு அக்கரை அதிகம். நன்றாகப் பாடுவான். ஆனால், அவனுடைய துறுதுறுப்பிற் கேற்ற வேலை தருவது கடினம். ஐயருக்குக் கிருஷ்ணமூர்த்தி மேல் மிகவும் பிரியம் என்றாலும், வெளியே காட்ட மாட்டார். மற்ற பையன்களைப் போலவே அவனையும் பார பட்சமில்லாமல் நடத்துவார். குற்றம் செய்தால் தமது மகனையே அதிகமாகத் தண்டிப்பார்; கண்டிப்பார். "இரத்தம் சிந்துகிறது பார்...துஷ்டன்!" என்று மிரட்டுவார். பையனோ, அப்பா கண் தன்னை இரத்த வாள் போலப் பார்க்கு மட்டும் பேசாமல் இருப்பான்; பயப்பட மாட்டான். ஐயர் அந்தப் பக்கம் சென்றதும், மெதுவாக இரு பதடி சென்று, பிறகு "பரிசுத்தமாக்குவாய் தேவி, யெம்

வாழ்வினை" என்று ஏதாயினும் பாட்டு ஒரு பிர்க்கா வாங்கிக் கொண்டே முன் போலச் சுபாவமாகச் செல்வான். 'பையன் எண்சுவடி படிக்கவில்லை; வடமொழி படிக்கவில்லை' என்றெல்லாம் ஐயர் நொந்து கொள்வார். அவர், அர்ஜுனன் போல் வீரனாக வேண்டும் என்று கருதுவார். பெல்காமிலிருந்து அவ்வாறு அவனுக்கு ஐயர் ஒருமுறை எழுதினார். கிருஷ்ணமூர்த்திக்கு எல்லா விஷயங்களும் தெரியும். தபால் வரும். ஐயருக்குத் தெரியு முன்பே, அப்பாவுக்கு என்ன செய்தி வந்திருக்கிறதென்பதை அவன் கண்டு கொள்வான். யாத்திரைகளுக்குச் செல்லும் போதே அவன் வெகு உற்சாகமாயிருப்பான். அக்காலமே அவனுடைய அறிவும், நல்ல தன்மைகளும் வெளிப்படும். ஐயர் "கிருஷ்ணமூர்த்தி எப்படி" என்று என்னைக் கேட்பார். தமிழ் நன்றாகப் படிக்கிறான்; ஆங்கிலமும் பரவாயில்லை; ஸயன்ஸில் கருத்திருக்கிறது. பேசும் விஷயங்களை மிகவும் தெளிவாகப் பேசுகிறான். ஊக்கம் நன்றாயிருக்கிறது" என்பேன். "அதெல்லாம் சரி...எண்சுவடி படிக்க வேண்டாமா? துஷ்டனாயிருக்கிறானே; துஷ்டத்தனம் செயகிறானே" என்று இழுத்து இழுத்துப் பேசுவார். "எல்லாம் வயது வந்தால் சரியாயிருப்பான்; உங்களுக் கேற்ற பிள்ளையாவான். அவன் துஷ்டத்தனம் செய்கிறானென்றால், அது அவன் குற்றமன்று: அவனது சுறுசுறுப்பான மனத்திற்கு நாம் சரியான வேலை கொடுக்காத குற்றமே. பாருங்கள் கிருஷ்ணமூர்த்தி நல்ல நிலைக்கு வருவான்!" என்றேன். "வரவேண்டும்" என்றார். இறுதி நாட்களில் ஐயர், எங்களுக் கெல்லாம் குரு கோவிந்தன் வரலாற்றை வாசித்ததுடன், தனியாகக் கிருஷ்ணமூர்த்திக்கும் குருவின் கதை சொல்லி, "அந்த மாதிரி இருக்க வேண்டும்" என்று உபதேசித்தார்.

ஐயர் பைனகுலர் வைத்துக் கொண்டு மாடியிலிருந்தே ஒவ்வொருவர் போக்கு வரத்துகளையும் கவனித்துத்

திருத்துவார். யாராவது "ஸார்" என்றால், "ஹூம் 'ஐயா' என்று கூப்பிட வேண்டும். அனாவசியமாக ஆங்கிலம் பேசக் கூடாது. தமிழர் தமிழிலேயே பேசவேண்டும்" என்றொரு உபதேசம் காற்றில் மிதந்து வரும்!

19. ஐயர் மரியாதை

ஆசிரமத்திற்கு வரும் அறிஞரையும் தேச பக்தரையும் ஐயர் வேண்டிய சௌகரியங்கள் அளித்து அன்புடன் உபசரிப்பார். திருகூடசுந்தரம் பிள்ளை, பிரகாசம், நாயக்கர், கணபதி சாஸ்திரிகள், வை.சு.ஷண்முகம் செட்டியார், சாது கணபதி பந்துலு, திருநெல்வேலி வக்கீல்கள் முதலியோர் அக்காலம் ஆசிரமத்திற்கு வந்தனர்; சில சர்க்கார் உத்தியோகஸ்தரும் அபூர்வமாக வருவர். அவர்களையெல்லாம் ஐயர் உபசரித்து, ரஸ்தாவரையில் சென்று வழியனுப்பி வருவார். தேசாபிமானிகள் வந்தால் சந்தோஷமாக வரவேற்றுத் தம்முடன் அமர்த்தி உண்ணச் செய்வார். சிவாவின் சிஷ்யர்கள் வருவதுண்டு. அவர்களில் மூவர் கடுநோயுற்றனர். அவர்களை ஐயர் ஆசிரமத்தில் இரண்டொருமாதம் வைத்து, இயற்கைச் சிகிச்சை செய்து பாதுகாத்து சௌக்யப் படுத்தி யனுப்பினர். ஐயரின் உள்ளத்திற்கனலும் அன்பைச் சிலர் அறிவதில்லை. ஒரு மகாநாட்டிற்குச் சென்றிருந்தேன். அங்கே குருகுலத்தைப் போற்றியும், ஐயருக்குத் தமிழர் எல்லா விதத்திலும் ஆதரவுகாட்ட வேண்டுமென்றும், ஒரு தீர்மானங் கொண்டுவந்தேன். தீர்மானம் நிறைவேறியது. ஆனால் இரண்டு தலைவர்கள், "ஆமாம், தேசத்திற்கு வீரத் தொண்டர் வேண்டிய சமயத்தில், இவர் அம்பிப்பயல்களைக் கட்டி மாரடிக்கிறாரே; இந்த விசுக்கான்கள், என்று பெரியவராகி நமது தேசம் வாழப்போகிறது? பேசாமல் காங்கிரஸ் தொண்டு செய்யச் சொல்லும் ஐயரை" என்று நீளமாகவும், கோபமாகவும் பேசினர். "ஐயா, நீங்கள் பெரி

யவர்கள். ஆனால், ஐயரை விடப் பெரியவர்கள் என்று சொல்லமாட்டேன், உங்களுக்கு எல்லாம் தெரியும்; ஐயரைவிடத் தெரியும் என்ன மாட்டேன். நீங்கள் வீரரை வேண்டுகிறீர்கள். வீரம் என்ற பேச்சைப்பேச யாராவது தகுந்தவரானால், அவர் ஐயரே யாவார்! இந்த மஹாநாட்டில் சுமார் இருபதினாயிரம்பேர் கூடினர். அத்தனைபேரும் குருகுலத் தீர்மானத்தை ஆதரித்தனர். நீங்கள் தீர்மானம் முடிந்த பிறகு இப்படிப் பேசுவது அழகில்லை" என்றேன். ஐயர் இதைக் கேட்டு, "அவரவர் பக்குவத்திற்குத் தக்கபடி பேசுகிறார்கள்; நாம் தெய்வத்திற்குப் பொதுவாக நமக்கு நல்லது என்று தோன்றுவதைச் செய்வோம்; தாராதரங்களைக் காலமே தீர்மானித்து விடும்" என்றார்.

சில துடுக்கான தேசபக்தவாலிபர், குருகுலத்திற்கு வருவர். "ஐயரே! தாங்கள் இப்படி யெல்லாம் செய்வது முழுப்பிசகு. இந்தச் சிறுவர் எப்போது வீரராகி நம் சுதந்திரத்திற்காகப் போர்புரிவர்? பேசாமல் பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட இளங்காளைகளைக் கூட்டி, இங்கே வீரப் பயிற்சி தாரும்...தேசத்திற்காகப் போர்புரிவோம். காந்தியின் சாத்வீகம் எங்கள் பொறுமையைச் சோதிக்கிறது" என்றெல்லாம் பேசுவர். ஐயர் நிதானமாக அவர் பேச்சைக் கவனிப்பார்; அமைதியாகப் பதில் சொல்லுவார்; "பலாத்காரத்தைப் பரீக்ஷித்துப் பார்த்து விட்டோம்; 1912 வரையில் அதன் ஆட்டம் இருந்தது; அதன் காரியம் தீர்ந்தது. இப்போது மகாத்மா நல்வழியில் நாட்டை நடத்துகிறார்; நமக்கோ ஆயுதங்கள் கிடையாது; ஒற்றுமை கிடையாது. ஆகாசக்கப்பலும் பீரங்கியும் வைத்து மிரட்டும் ஓர் அரசாங்கத்தை நாம் இரண்டு பேர் துப்பாக்கி பிடித்து அடக்கிவிட முடியுமா? அந்த எண்ணம் இப்போது பலிக்காது. முதலில் செத்துக் கிடக்கும் தேசவுணர்ச்சியை எழுப்புங்கள். நாங்கள் எங்களுக்கு இயன்ற துறையில் இங்கே தேசத்திற்காகவே பணி செய்கிறோம். வருங்காலத்

தமிழரை சிருஷ்டிக்கிறோம்; காங்கிரஸ் கட்டளைகளையெல்லாம் இந்தக் குருகுலத்தில் நிறைவேற்றியே வருகிறோம். நூற்றல், கதர் உற்பத்தி, இந்தி போதனை, தேசாபிமானப் பாடல்களைப் பாடல், தேசபக்தியை வளர்த்தல்—எல்லாம் இங்கே நடக்கின்றன. மேற்கொண்ட காரியத்தைப் பூரணமாக நடத்தினாலே போதும். இதோ எனது சேவை தேசத்திற்கு அவசியம் என்று தோன்றினால், இப்படியே வரத் தயார். பாலபாரதியும் குருகுலமும் இப்போது பராசக்தி அளித்த பணி. நீங்கள் வாலிபர்கள். தேசத்திற்கு வீரப் பணிசெய்ய உங்கள் உள்ளம் துடிக்கிறது. ஒன்று செய்யுங்கள்: பத்து தேசபக்தர் சேருங்கள். தோள்பையில் வேண்டும் சாமான்களைப் போட்டுக்கொண்டு புறப்படுங்கள். கிராமம் கிராமமாகச் சென்று தேசீயக் கீதங்களைப் பாடுங்கள். கூட்டங்கூட்டி, நமது நாட்டு நிலையையும் நமது கடமைகளையும் தெளிவாகச் சொல்லி, ஜனங்களுக்குத் தேசபக்தியை ஊட்டுங்கள். வருஷத்துக்கு ஒரு ஜில்லாவைக் கிராமம் கிராமமாகச் சுற்றி வாருங்கள் போதும்" என்பார். அவ்வாறே பாரத சமாஜத்தார் ஊர் ஊராகச் சுற்றி, பாரதி பாடல்களைப்பாடித் தேச பக்தியைப் பரப்பி வந்தனர்.

ஐயருடன், வெகு ஆவேசங்கொண்டு பேசச் சில இளங் காளைகள் வருவதுண்டு. அவர்களுக்குச் சாப்பாடு போட்டு, ஐயர்அச்சுக் கூடத்திற்கு இரவு அழைத்துச் செல்வார். அங்கே ஐயர் அமைதியாக "என்ன விஷயம்?" என்று கேட்பார். அந்தச் சாந்த மூர்த்திக்கு முன்னே ஆத்திரமெல்லாம் அடங்கிப் போகும். "இவர் முன் நமது ஆர்பாட்டத்தைக் காட்டுவதே பைத்தியக்காரத்தனம்" என்று தோன்றும். ஆனால் ஐயர் அவர்கள் உள்ளத்தையும் அறிந்து தக்க சமாதானம் சொல்வார்.

20. மலைமேல்

இக்காலம் நான் திருநெல்வேலி ஜில்லாவையும், திருவாங்கூர் சமஸ்தானத்தையும் ஊர் ஊராகச் சுற்றிப் பார்த்தேன். பல ஊர்களுக்கு என்னுடன் குருகுல மாணவரும் வந்திருந்தனர். எங்கள் பிரயாணம் மிகவும் இனிமையானதும் பல சம்பவங்கள் நிறைந்ததுமா யிருந்தது. அவற்றைக் குறித்து அவ்வப்போது நான் லோகோபகாரியிலும் இன்னும் சில பத்திரிகையிலும் எழுதி வந்தேன். ஆனால் அவை இப்போது அகப்படா. ஆதலால், மீண்டும் நினைவிலிருப்பதை எழுதுகிறேன். பல ஊர்களின் பெயர் மறந்து போனது. பல பெரியார் பெயரும் அப்படியே. உருவம் மட்டும் மனக்கண்முன் உள்ளது. பயன் வாழ்விற் கலந்துள்ளது.

நான் வந்ததும் ஐயர் எனது ஸயன்ஸ் புத்தகங்களைப் பார்த்து மெச்சி, "பாரதி பிரமசாரிகளுக்குப் பூகோளம், தேக சாஸ்திரம் இரண்டும் சொல்லித் தரலாம். தகுந்த கருவிகள் கிடைத்த பிறகு பௌதிக ரஸாயன நூல்கள் சொல்லித் தரலாம்" என்றார். அப்படியே உடலுறுதி சொல்லித் தந்தேன். முதலில் காயம் பட்டவருக்கு யுத்தகளத்தில் செய்யும் சிகிச்சை, தீ வீட்டிலிருந்து மனிதரைத் தூக்கி வரும் விதம், நீரில் விழுந்தவனைக் காப்பாற்றும் வகை, உடல் தசைகளைப் பழக்கும் பயிற்சிகள் அனைத்தையும் விளையாட்டாகவே சொல்லித் தந்தேன். அத்துடன் சாரணப் பயிற்சியும் நடந்தது. காயம் பட்டவன் போலே ஒரு பிரமசாரிக்குக் கட்டுக் கட்டி, கைக்குத் துணி கட்டி, டோலியில் வைத்துத் தூக்கிச் செல்லச் செய்தேன். ஐயர் இதையெல்லாம் மிகவும் சந்தோஷமாகப் பார்த்துக்கொண் டிருந்தார். சாரண விளையாட்டுகளையெல்லாம் உடனிருந்து கவனித்தார். பூகோள வகுப்பைத் தொடங்கினேன். எங்கே?

கொளுந்தினு மலை மேல். பிரமசாரிகளை வரிசையாக நிறுத்தி, ஐயரை வணங்கச் சொல்லிக் கொளுந்தினு மலைக்கு இட்டுச் சென்றேன். ஐயர் ஒரு பைனுகுலர் கொடுத்து, "மாணவருக்கு இதைக்கொண்டு எல்லாம் காட்டுங்கள்" என்ருர். தேசீய கீதங்கள் பாடிக்கொண்டே ஒரு பர்லாங் சென்ருேம். பிறகு சுற்றியுள்ள நிலத்தின் அமைப்பைக் காட்டி, மண்ணின் வகை, பூகோள வடிவங்கள் முதலியவற்றை விளக்கினேன். கொளுந்தினு மலையடிவாரத்தில் பெரிய பெரிய மரங்கள் உண்டு. வழ வழப்பான பாறைகள் உண்டு. அங்கே தங்கிச் சிறிது ஒளிந்து விளையாடச் சென்றேன். பிறகு மலையேறினேம். மலையைப்பற்றிய பூகோள நுட்பங்களை நேராகக் காட்டி விளக்கினேன். மாணவர் குறிப்பெழுதினர். மலை உச்சிக்குச் சென்ருேம். அங்கே இரண்டு பெரிய குகைகள் இருந்தன. இனிய தனி இடம். தவத்திற்கு ஏற்றது. அதைக் கண்டதும் எனக்குக் குகனைக் கண்டது போல் இருந்தது. அங்கே அமர்ந்து குழந்தைகளுக்குப் பூகோளத் தத்துவத்தை விளக்கினேன். பைனுகுலர் கொண்டு சுற்றியுள்ள காட்சிகளைக் காட்டினேன். பிறகு மேனுட்டில் விலிங்டன், காப்டன் குக், கொலம்பஸ், வாஸ்கோடிகாமா போன்ற யாத்திரை வீரர் செய்த செயல்களைச் சொன்னேன். அவர்களைப் போலே நாமும் உலகைச் சுற்றிப் புதிய இடங்களைக் கண்டு பிடிக்க வேண்டுமென்று பிள்ளைகளுக்குச் சொன்னேன். பிறகு அவரவர் விருப்பம்போலே மலையைச் சுற்றிப் பார்க்கக் கும்பல் கும்பலாக அனுப்பினேன். அரைமணி நேரம் கழித்து ஊதினேன். எல்லாரும் ஓடி வந்து வரிசையாக நின்ருர்கள். அனைவரையும் மெல்லக் கீழே அழைத்து வந்தேன். நாங்கள் ஆனந்தமாகத் தேசீய கீதம் பாடிக் கொண்டு வருவதைக் கேட்டு, ஐயர் ஆசிரம வாசலில் வந்து புன்னகையுடன் எங்களை உள்ளே அழைத்துச்

சென்றார். அதுமுதல் அந்த மலைக் குகையை நான் அடிக்கடி தியான நிலையமாகக் கொண்டேன். சுமார் இருபது முப்பது தடவை அங்கே தியானித்துப் பெரும் பயனடைந்தேன். ஐயரும் இரண்டு தடவை என்னுடன் வந்தார்.

21. ஆற்று மணலில்

முதல் கம்பன் திருநாள் திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் நடந்தது. ஐயரும் நானும் சென்றிருந்தோம்; தக்க புலவர், கம்பனைப் பற்றிப் பேசினர். கூட்டம் முடிந்ததும் இருவரும் தாமிரவருணி ஆற்று மணலுக்குச் சென்றோம். அந்த இரவு என் வாழ்வில் ஒரு பெரிய மாறுதல் நடந்தது. அன்றுதான் ஐயர் உள்ளமும் என் உள்ளமும் கலந்தன என்னலாம்.

அன்று நல்ல பட்டு நிலா. நான் ஒரு கல்லைத் தேடி, தேங்காய் உடைத்துக் கொண்டு வந்தேன். ஐயரும் நானும் தேங்காய் பழம் சாப்பிட்டு, ஆற்றில் கை கழுவித் தண்ணீர் குடித்து வந்து, கம்பனைப் பற்றிப் பேசிக்கொண் டிருந்தோம். அச்சமயம் வையாபுரிப் பிள்ளை, சேதுப் பிள்ளை, சாரங்கபாணி முதலியார் முதலிய சில நண்பர்கள் வந்தார்கள். எல்லாரும் ஐயரைச் சுற்றி வட்டமாக அமர்ந்து பேசினோம். எல்லாரும் கம்பன் கூட்டத்தில் பேசினவர்கள். ஐயர் காளிதாஸனையும் கம்பனையும் ஒப்பிட்டுக் கம்பனின் உயர்வைக் காட்டினார். ஸாகுந்தலத்திலிருந்து சில பாடல்களைச் சொன்னார். வையாபுரிப் பிள்ளையும் கம்பனில் சில செய்யுட்களைச் சொன்னார். சுமார் ஒரு மணி நேரம் பேசிவிட்டு எல்லாரும் பிரிந்தனர். ஐயரும் நானும் மீண்டும் ஒன்றரை மணி நேரம் அந்தத் தனிமையில் பேசினோம். அன்று நடந்த சம்பாஷணை எனது வாழ்வில் முதன்மையானது. அதன் சாரத்தை இங்கே சொல்கிறேன்:

22. செய்யுங்கள் தவம்

நான்: நீலவான். அதில் ஜோதியுள்ளம் போலச் சந்திரன் தவழ்கிறது. ஆறெல்லாம் உருக்கிய வெள்ளி போன்று சலசலத்தோடுகிறது; இந்தச் சலசலப்பிற்கிடையே வாழ்வுப் பாட்டு ஒலிக்கிறது. இந்தத் தனிமையிலேதான் அது தெளிவாக ஒலிக்கிறது. "மனிதா! தூங்காதே. இரவும் பகலும், என்னைப்போல இறைவன் புகழைப் பாடி மேன்மேலும் செல். செல்லும்போதே உனது வாழ்க்கை உலகிற்குப் பயனாகட்டும். தியாக புத்தியுடன் சிவநாமம் சொல்லிச் செல். மேடு பள்ளங்கள் வந்தாலும் தயங்காதே; செல்.........விதி விட்டபடி. ஒருநாள் நீ அகண்டக் கடலாகிய இறைவன் அருளை அடைவாய். ஒரு துறையிலேயே தூங்காதே. 'மேன்மேலும் சென்று, அகண்டமான ஒன்றை நாடு' என்கிறது இந்த ஆறு.........

ஐயர்: ஆம்! கண்டமான ஜீவர்களுக்கெல்லாம், அகண்டமான ஒன்றே இன்ப நிலையமாகும். ஆனால், அதை யடையும் வழியில் எவ்வளவு மேடு பள்ளங்கள் உள்ளன! இந்த ஆறு, பயிர்களையும் உயிர்களையும் ஊட்டத் தன்னையே தருவது போலவே, நாம் நம்மையே தேசப் பணியில் ஈடுபடுத்திக் கர்ம சுத்தியடைந்து இறைவனைத் தேடுகிறோம்.

நான்: "ஞாநீது ஆத்மைவ மேமதம்" என்கிறார் பகவான். எனக்குக் கர்ம மார்க்கம் ஞான மார்க்கத்திற்கு ஒரு துணையாகவே தோன்றுகிறது. அந்தக்கரண சுத்தி பெறவே, நிஷ்காம்ய கர்மம் வேண்டும். சுத்தி பெற்றவர்கள் அந்தர்யாமியையே நினைத்து, அவனைக் கலந்து அப்படியே வாழ்வதில் குற்றமில்லை.

ஐயர்: எல்லோருமே அப்படி உள்முகப் பட்டு விட்டால், தேச காரியம் நடக்க வேண்டுமே.......... ஆனல் அப்படி யிருப்பவர்கள் கோடியில் ஒருவர் கூட அரிது. அது உயர்ந்த நிலைதான். ஆனல், எனது வாழ் விற்கு அது பொருத்த மில்லாதிருக்கிறது. தேசம் என் முன் நிற்கிறது. பாரத தேவி கை விலங்குடன் என் முன் கண்ணீர் விட்டு நிற்கிருள். அவள் விடுதலைக்காகக் கல்விப் பொலிவும், தொழில் திறமும், வீரக் கனலும் கொண்டு நாம் போர்புரிய வேண்டும். மஹாத்மாவைப் போல நாம் தார்மீக சக்தியுடனும், தெய்வ பக்தியுடனும், கர்ம வீரத்துடனும் தேசப் பணி செய்ய வேண்டும்.........

நான்: அது சரிதான். ஆனல் துருவனைப் போலே உண்மையான தவம் பண்ணி, குரு கோவிந்தனைப் போலே சக்தி பெற்று, அச் சக்தியைச் சுற்றியுள்ளவருக் குப் பாய்ச்சிக் காலத்திற்கேற்ற காரியங்களைத் திருவருட் சக்தியாலே செய்தால் நல்லதென்று தோன்றுகிறது. 'செய்வது இயற்கை; நான் செய்கிறேன் என்பவன் மூடன்' என்கிருர் பகவான். முற்றிலும் அவனுக்கே ஆளாகி, அவனது ஆதேசத்தால் அவனது நிமித்த காரண மாகக் காரியம் செய்தால், அந்தக் காரியம் உண்மையான தெய்வீகப் பலனைத் தரும். காரியம், கர்த்தா, பலன் எல்லாம் அப்போது அந்தர்யாமியான இறைவனைச் சேரும். அவனே நம்முள் இருந்து அதை நடத்துவான்; இதுவே யோக யுக்தனுகக் கருமம் செய்வதாகும். சாதாரண மாந்தர் அரசியலை நடத்தினல், போர் போட்டி, பொருமை, ஆசை, ஆணவ வெறிகள் எழுந்து நடமாடும். யோகியானவன் செங்கோல் பிடித்தால் ஜனகனைப் போல் ஆள்வான். அவனே எல்லா உயிர் களிலும் இறைவனைக் கண்டு, எல்லாரிடமும் சமமான அன்பு வைத்து, தன்னலமில்லாமல், எல்லாம் 'சிவமயம், விஷ்ணுமயம்' என்னும் பாவனையுடன் ஆளவல்லவன்.

எனக்கு என்னமோ தவ சக்தி பெற்றவர்களாலேதான் நமது பாரத சமுதாயம் முன்னேறுமென்று தோன்று கிறது. இச் சமயம் எனது உள்ளம் அரவிந்தரைத்தான் நாடுகிறது.........பாரத சமுதாயத்தை அவரே தமது யோக சக்தியால் புதிய வாழ்வீந்து காப்பார் எனத் தோன்றுகிறது. அவருடைய ஆர்யாவைப் படித்த பிறகு எனக்கு அந்த நம்பிக்கை பலமானது; எனது உள்ளமும் எப்போதும் தவத்திற்கேற்ற தனிமையையே நாடுகிறது; யோகத்தையே விரும்புகிறது. நான் முற்றிலும் மோன மாகி இறைவனுடனேயே ஐக்கியப்பட்டு, அவன் இச்சை யையே (காற்று கதிர்போன்று) நிஷ்காம்யமாக, இயல்பாக நிறைவேற்றும் நாளை எதிர் பார்க்கின்றேன் :

ஐயர் : அது மிக உன்னதமான ஆதர்சம். சாமான்ய ருக்கு அது சித்திக்காது. பாரதிக்குத் தவசித்தி வரும். அதற்கேற்ற சாதனங்களெல்லாம் செய்கிறீர்கள். தங்கள் தனிமைக்கும் மோனத்திற்கும் பங்கம் வராமல், நான் பார்த்துக் கொள்ளுகிறேன். குருகுலப் பர்ணசாலையில் நடத்துங்கள் தவத்தை.........

நான் : குரு குலத்தில் தங்களுக்காகவே இருக்கி றேன். தங்களால் நான் பெற்ற பயன் அளப்பரிது; தாங்கள் என்னைத் தமிழருக்கு அறிமுகப்படுத்தி, எனது முன்னேற்றத்திற்கு ஒரு வழி செய்தீர்கள். இலக்கிய வளர்ச்சிக்குத் தாங்கள் செய்த உதவி எண்ணரியது. குரு குலத்தில் நானும் ஒரு மாணவனாகவே யிருந்தேன். தங் கள் அன்பினால் கம்பனையும், தாகூர், ஷேக்ஸ்பியர், ஓமர் போன்ற மஹா கவிகளையும் நான் அறிந்தேன். குருகுலத்தில் வடமொழி, இந்தி முதலிய மொழிகளை நன் ருகக் கற்றேன். பாரத சக்தியைப் புதிய வழிகளில் தங் கள் ஆவேசத்தால் அநேகமாக எழுதி முடித்தேன். இன்னும் ஒரு காண்டமே பாக்கி. தாங்கள் எனது சக்தி

உபாசனைக்கு ஒரு பாரத சக்தி உருவம் தந்தீர்கள். தவத்திற்குப் பர்ணசாலையும் அமைத்தீர்கள். எனது எழுதுகோலுக்குப் பால பாரதியைத் தந்து ஊக்கினீர்கள். நான் தங்கள் சரித்திரத்தை எழுதும்போது, மற்ற விஷயங்களையெல்லாம் விரிவாகச் சொல்லுவேன். ஆனால் எனக்குத் தாங்கள் செய்த பெரிய உதவிக்குப் பெரிய நன்றி காட்டித் தங்களுடன் நிகழ்ந்த சம்பாஷணைகளை யெல்லாம் எழுதி, உலகிற்குத் தங்கள் அருமை பெருமைகளை விளக்குவேன். இதுவே நான் தங்களுக்குச் செய்யத் தக்கது. ஆனால் அற்ப வேறுபாடுகளுக்காக ஒரு மகத்தான ஸ்தாபனத்தை உருக்குலைக்கும் கிளர்ச்சி நமது தமிழ் நாட்டில் நடப்பதைப் பார்த்தால், எனக்குத் துக்கம் நெஞ்சை அடைக்கிறது. தங்கள் நோக்கம் வானளாவியது. அதை அறியக் கூடத் தமிழ் நாட்டிற்குத் திறமை யில்லை. இந்த ஜாதியை இனி உய்விக்க வேண்டுமானால் மனித சக்தி போதாது. பராசக்தியின் அருளைப் பெற வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது.

ஐயர் : வாஸ்தவம். எனக்கும் சில நாட்களாக மனம் புலவாறு அலைகிறது. தமிழர்கள் குருகுலத்தை நடத்த விடமாட்டார்கள் என்றே தோன்றுகிறது. நான் விலகிக்கொண்டு இலக்கியப் பணி செய்ய உத்தேசித்திருக்கிறேன்.

நான் : எனக்குச் சித்தமெல்லாம் தவத்தில் ஆழ்ந்திருக்கிறது. சுமார் பத்தாண்டுகள் மௌன விரதமிருந்து, அந்தராத்ம ஐக்கியத்தில் யோக சமாதியில் ஆழ்ந்து, தெய்வக்கனலை வளர்க்கவே எனது ஆர்வம் துடிக்கிறது. தங்களுக்காகவே சேரமாதேவியில் இருக்கிறேன். எனது யோகக் கருத்துக்களைப் பால பாரதியில் விரிவாக எழுதித் தமிழருக்கு அந்தத் துறையில் ஆர்வம் உண்டாக்கக்

கருதுகிறேன். ஆனால் அதற்கு இன்னும் இடம் ஏற்பட வில்லை.........

ஐயர்: ஏன்? இப்போதுதான் பெரியார் வரலாறு, தார்மீக விஷயம், கீதை காட்டும் பாதை, குரான், பைபிள்சாரம் எல்லாம் எழுதி வருகிறீர்களே; போதாதா?

நான்: இவையெல்லாம் அரிச்சுவடிகள்; ஆழ்ந்த அத்யாத்ம அனுபவங்கள் கணக்கில்லாமல் உள்ளன. காலஞ் சென்ற பி. ஆர். ராஜம் ஐயர் போல், வேதாந்த சித்தாந்த அனுபவக் கட்டுரைகளை அழகான தமிழில் எழுதித்தமிழருக்குப் பேரின்பச் சுவையுண்டாக்க வேண்டும். கலை, தொழில், அரசியல், ஆத்மயோகம் நான்கும் பால பாரதியில் உரிய இடம் பெறவேண்டும். இக்காலம் எந்தப் பத்திரிகையை எடுத்தாலும் அரசியல் வம்பாகவே யிருக்கிறது. நிலையான கலைக் கட்டுரைகளும், கடவுளறிவு விளக்கமும், சாதன விளக்கமும் இல்லை. நமது நாடு அன்னியர் பிடியில் இருக்கிறது. அதை மீட்க வேண்டியது அவசியமே. அதைவிட அவசியம் மங்கிப்போன நமது அத்யாத்ம ஞானவொளியைத் தூண்டுதல். நமது சமுதாயம் ஆத்ம தருமத்தை அடிப்படையாகக் கொண்டது. அந்தத் தருமம் மறைந்ததாலேதான், அந்தண்மை, வீரம், கலைத்திறமை எல்லாம் எழில் குன்றின. நமது மஹரிஷிகள் அருளிய அத்யாத்ம யோகமே நமக்குக் கதியெனத் தோன்றுகிறது. குண்டு பீரங்கிகளுக்கு மேலான தெய்வ பலத்தை நாம் பெற வேண்டும். அந்தப் பலத்தை, அந்தப் பராசக்தியைப் பெற எனது உள்ளம் துடித்துக்கொண் டிருக்கிறது!

ஐயர்: பராசக்திதான் நமக்கு ஜயமளிக்க வேண்டும்.........உண்மை! சக்தி பெற்ற மஹான்களே நமது நாட்டிற்கு எல்லா நன்மைகளையும் செய்ய முடியும்.

நாங்களெல்லாரும் நிஷ்காம்ய கர்மம் செய்யவே முடியும். சம்ஸாரத்தில் அடிபடாமல், ஆஜன்ம யோகியா யிருக்கும் தாங்கள் யோகத்திலேயே ஆழ்ந்து, பரமாத்ம சித்தி பெற லாம். அவரவர் பக்குவத்திற்குத் தக்கபடி ஆத்மீக வளர்ச்சி பெறுவதை யாரும் தடை செய்ய முடியாது. பாரதிக்கு வேலைகளைக்கூடக் குறைத்து விட்டேன்; இனிச் செய்யுங்கள் தவம்!

* * *

அவர் "செய்யுங்கள் தவம்" என்றதும் எனக்குப் புதிய உணர்ச்சி எழுந்தது! அவரே எனக்கு ஆதேசமளிப்பது போலத் தோன்றியது. மிதுன ராசி உச்சிக்கு வந்தது; மணி பதினொன்றரை. பத்து மணிக்கு மேல் ஐயர் விழித் திருக்க மாட்டார். ஆகையால் அத்துடன் பேச்சை நிறுத்தி, நான் தியானம் செய்ய அங்கேயுள்ள ஒரு மண்ட பத்திற்குச் சென்றேன். ஐயர் ஏகாந்தமாகப் படுத்துறங்கி ஞர். நான் மண்டபத்திற்குச் செல்லும்போது ஓர் ஆசாமி சற்றுத் தொலைவிலிருந்து புறப்பட்டுச் சென்ருன்......... ஒற்றன் என்றறிந்தேன். நான் ஒரு மணி நேரம் தியா னித்த பிறகு, ஐயரைச் சுற்றிச் சுற்றி வட்டமாக நடந்து கொண்டே யிருந்தேன். எனது சிந்தனை முழுதும் தவத் திலேயே ஆழ்ந்திருந்தது. திருமூலர், சதாசிவப்பிரமேந் திரர் போன்று நீண்ட காலம் யோக சமாதியிலேயே இருக்க உள்ளம் துடித்தது. குருகுலத்திற்கூடப் பற்று இல்லை. அதை வெளிப்படையாக ஐயரிடம் சொன்னது. எனது மனத்திலிருந்து ஒரு பளு நீங்கியது போலத் தோன்றியது,

நான் நாலரை மணிக்கே ஆற்றில் குளித்து, பையி லிருந்த மடிவேட்டி யணிந்து, ஐயருக்குப் பற்குச்சி ஒடித்து வந்து வைத்து, அருணோதய சௌந்தர்யத்தைப் பார்த்தே தியானித்திருந்தேன். ஐயரும் எழுந்து பல்

விளக்கி ஸ்நானம் செய்து, சந்தி ஜபங்கள் பண்ணினார். சூரியோதயம் வரையில் நான் தியானித்தேன். ஐயர் என்னைப் பார்த்து நின்றார். "இந்தச் சூரியன் இருளைப் பிளந்து மெல்ல மெல்லப் பொன்னிறங் காட்டிப் பிறகு சோதி மயமாய் உதிக்கிறான், நான் பார்த்தமட்டில்; இந்த உதய சூரியனைவிட அழகான பொருள் இல்லை. அதையே நான் காணும் தெய்வமாகப் பாராட்டுகிறேன். அந்த மாதிரி மனவிருளைப் பிளந்து என் அகத்தில் அருட் சோதியிறைவன், அந்தர்யாமி உதித்து, அவன் ஒளியில் எனது ஜீவனை ஐக்கியம் செய்துகொள்ள வேண்டும்" என்றேன்.

"ஈஸ்வர கிருபையால் உங்களுக்கு அந்த நிலை வரட்டும்" என்றார் ஐயர்!

இருவரும் சூரியோதயத்தைப் பார்த்து, கோவில் தரிசனத்துக்குப் பிறகு வண்டி நிலையம் சென்று சேரமா தேவிக்குச் சீட்டு வாங்கி ஆசிரமம் சேர்ந்தோம். அன்று ஆற்று மணலில் நடந்த சம்பாஷணை எனது பிற்கால வாழ்விற்கு ஒரு வழி காட்டியா யிருந்தது.

* * *

23. ததாஸ்து !

நான் தாம்பிரவருணி ஆற்றோரங்களில் உள்ள தோட்டங் களிலும், கோயில்களிலும் ஒழிந்த வேளையெல்லாம் தியானிப்பது வழக்கம். திருநெல்வேலிக்கு வந்தால் சிந்தி பூந்துறைத் தோப்பில் என்னைப் பார்க்கலாம். காரியம் இருந்தால் திரிகூட சுந்தரம் பிள்ளை வீட்டில் இருப்பேன். அத்துடன் ஆற்று மணலில் இருந்த ஒரு மண்டபத்தில் இரவைக் கழிப்பேன். அச்சமயம் இரண்டொரு நாட்கள் சிவராம ஐயரும் என்னுடன் வந்தார். அவர் களங்கமற்ற நண்பர். குழந்தை போன்ற உளத்தர். சரித்திரத்தில்

நல்ல தேர்ச்சியுள்ளவர். குருகுலத்தில் இடையிடையே வந்து தொண்டு செய்து நாலைந்து நாள் இருந்து செல்வார். அவர் தமக்குக் கிடைத்த வீட்டுச் சொத்தைக் கொண்டு ஒரு விளையாட்டுச் சாமான் கடை வைத்து, நஷ்டப்பட்டார். பிறகு எங்கெங்கோ சுற்றி வேலையிலிருந்து சென்னையில் பத்திரிகைத் தொழிலிற் புகுந்தார். அவர் என்னைக் கண்டால் தமது எண்ணங்களை யெல்லாம் பொழிந்து தீர்ப்பார். இருவரும் ஆற்று மண்டபத்திற் படுப்போம்.

சேரமாதேவியிலேயே ஆற்றைத் தழுவி அழகான கோயில் இருந்தது. அங்கே முன்பு காவ்ய கண்டம் கணபதி சாஸ்திரிகளும் இருந்ததாகச் சொன்னார். அவரும் நானும் அந்த இடத்திற்கு ஒருநாள் சென்றோம். அவர் "இது தபஸ் செய்ய நல்ல இடம்" என்றார். கணபதி சாஸ்திரிகளிடம் எனக்கு அன்பதிகம். அவருக்கு நான் வணக்கமுடனே தொண்டு செய்தேன். அக்காலம் நான் பிரம்ம சூத்திரம், சங்கர பாஷ்யம் படித்துக்கொண் டிருந்தேன். அவரிடம் குருகுலச் சண்டையைப்பற்றிப் பேசும்போது, "எனக்கென்னமோ இதெல்லாம் பிள்ளைகள் ஒருவருக்கொருவர் 'நாயே குரங்கே உன்னோடு டூ' என்று கிள்ளிவிட்டுச் சண்டை போடுவது போலிருக்கிறது; என் மனம் இந்தச் சச்சரவுகளிற் செல்லவில்லை. மாந்தர் இயல்பைக் காணக்காண, எனது உள்ளம் நிவர்த்தி மார்க்கத்தையே நாடுகிறது. மஹர்ஷிகளை எனது நெஞ்சம் கூவுகிறது. கவிதைகளைக்கூட நான் விரும்பவில்லை. மஹான்களான முனிவர்கள் அருளிய வேத வாக்குகளை ஓதித் தெளிந்து, அவற்றை ஒரு குருவின் அடி நிழலில் இருந்து சாக்ஷாத்கரிக்க வேண்டுமென்றே எனக்குத் தோன்றுகிறது; அப்படிப்பட்ட இடம் இருக்கிறதா?" என்று நான் கணபதியாரைக் கேட்டேன், "நீங்கள் பேசாமல் திருவண்ணாமலைக்கு

வந்து விடுங்கள். நான் வேத சாஸ்திரம் சொல்லித் தரு கிறேன். அதன் சித்திக்கு மஹர்ஷிகள் சந்நிதியில் இருந்து தியானித்தாலே போதும்; சந்நிதானத்தில் நல்ல சக்தி யிருக்கிறது; வாருங்கள். உங்கள் வாழ்க்கைக்கு இந்தச் சச்சரவெல்லாம் பிடிக்காது என்பதை முன்பே தெரிந்து கொண்டேன்" என்றார் சாஸ்திரியார். அவர் வாக்கு பின்னால் பலித்தது. காவ்ய கண்டம் சாஸ்திரிக ளிடம் நான் பல ஆத்மீகக் கேள்விகளைக் கேட்டேன்; சுத்த சக்தி மந்திரத்தைப் பற்றிச் சொன்னேன். "தங்க ளுக்குக் கலையும் தவமும் வேண்டுமானால் 'ஓம் ஹ்ரீம் ஓம்' என்பதையும் சேர்த்து ஜபியுங்கள்" என்று மந்திர சாஸ்திர ரகசியம் பற்றி அவர் தெளிவாகச் சொன்னார்; அவருக்கு நான் வேண்டிய பணிவிடைகளைச் செய்தேன். குளிக்கத் தண்ணீர் இறைத்துக் கொடுத்தேன். பிறகு என்னிடம் இருந்த பெரிய ஆடையைக் கொடுத்து அணியச் செய் தேன். போகும்போது அந்த ஆடையைத் திருப்பிக் கொடுத்தார். "இது தங்களுக்கே யிருக்கட்டும்; இனி நான் ஒரு துண்டுதான் உடுத்தப் போகிறேன். இதோ இந்தச் சிறிய நாலு முழத் துண்டைத் தங்கள் கையால் ஆசீர்வதித்துக் கொடுங்கள்" என்றேன். அப்படியே தந்தார். "நல்ல சுத்தமும் வைராக்கியமும் இருக்கிறது. சாதனத்தில் முன்னேறுவீர்கள்" என்று ஆசி கூறினார். அன்றுமுதல் நான் ஏகாங்கியானேன். இரண்டு ஆடை கள் அணிந்ததே யில்லை. மனம் எப்போதும் அந்தர்யாமி யைக் கலந்தே யிருக்கும். கர்மங்கள் உதிக்க உதிக்க, அவற்றை நிறைவேற்றி, மறந்து விடுவதுண்டு. கணபதி சாஸ்திரிகள், வை.சு. ஷண்முகம் அவர்களுடன் மோட்டார் ஏறும்போது, "நான் ஒருநாள் தங்களிடம் வந்து வேதம் கற்று, மஹரிஷிகள் சந்நிதியில் யோகம் செய்ய இறைவன் அருளுக..........பகவானுக்கு எனது வணக்கத்தைச்

சொல்லவும்" என்றேன்; 'ததாஸ்து' என்று சொன்னார் காவிய கண்டர்.

அவர் காட்டிய ஆற்றங்கரைக் கோயிலுக்கு நான் நாலரை மணிக்கே புறப்பட்டுச் சென்று குளித்துத் துவைத்து, மடியாகத் தியானம் செய்து, சூரியோதயத்தைக் கண்டு மகிழ்ந்து திரும்புவேன்; இது எனது வழக்கமானது. மனத்திற்கு நிம்மதி வேண்டிய நாளெல்லாம் அதே இடத்தில்தான் இருப்பேன். கோயிலுக்குத் தெற்கே ஒரு திண்ணை மாதிரி கல்லால் கட்டியிருந்தது. அதன்முன்னே அகண்டமான ஆற்று வெள்ளம் ஓங்கார நாதத்துடன் செல்லுகிறது. அந்த வெள்ளத்தைப் பார்த்துக் கொண்டே எவ்வளவு நேரம் தியானித்தாலும் சலிப்பதில்லை; அந்த இடத்தின் பெயர் எனக்கு மறந்து போனது. அதற்கு எதிரே ஒரு கிராமம் உண்டு, அங்கிருக்கும் ஜனங்கள் மிகவும் நல்லவர்கள்; அங்கே சில துறவிகளையும் சந்தித்தேன். ஒருவர் சுந்தர ஸ்வாமிகளைப் பற்றிப் பேசினார்: அத்வைத முக்தியைப்பற்றி உபதேசித்தார். 'நெற்றியில் பொட்டு வைத்து இங்கே தியானித்து வா.........சித்தியாகும்' என்றார். யாத்திரை செல்லும் இடங்களிலெல்லாம் தவத்திற்கினிய சாந்தத்தை நான் தேடினேன். அப்படிப் பல சாந்தநிலையங்கள் என் முன் இருக்கின்றன.

24. மாணவருடன் யாத்திரை

எங்கள் யாத்திரையில் முதன்முதல் நான் பிரமசாரிகளைக் கலியாண அருவிக்கே அழைத்துச் சென்றேன். அதிகாலையில் எழுந்து, அனுட்டானங்களை முடித்து, வந்தே மாதர கீதம் பாடிக்கொண்டே ஆசாரியாரை மாணவர் வணங்கினர்; நானும் அவரை நமஸ்கரித்தேன். "அடடா!" என்றார். தகப்பனாரை மகன் வணங்குவது முறைதானே என்று மீண்டும் வணங்கினேன். அவரும் வந்தே மாதரம்

போட்டு எங்களை வழியனுப்பினர். எல்லாரும் பதினேரு மைல் நடந்து ஏழரை மணிக்குக் கல்லிடைக் குறிச்சி சேர்ந்தோம்; அங்கு ஸ்டேஷனுக்கு எதிரில் டாக்டர் சங்கரையர் மாளிகையுள்ளது. அங்கே தங்கிக் காலையுணவு அருந்தினேம். டாக்டர் மிகவும் தாராள மான கனவான். குருகுலத்தில் அன்புள்ளவர். அவர் மனைவி இலட்சுமி அம்மாள் அன்பு மயம். எங்களை நன்ருக உபசரித்தார். நான் தனியாக இரண்டு முறை அவர்கள் வீட்டில் சாப்பிட்டிருக்கிறேன். மாடியில் குடும்பம்; கீழே வைத்தியசாலை. சங்கரையர் பரோப காரி. தாம் எளிய முறையில் வாழ்ந்து, பொது நலத்திற்கு வேண்டிய உதவி செய்வார். இலட்சுமி அம்மாள் மகாத்மா இயக்கத்தில் ஈடுபட்டவர். பிரமசாரிகளை அவர் அன்புடன் வரவேற்பார். எப்போது கல்லிடைக் குறிச்சிக்கு வந்தாலும், குருகுல மாணவர் ஆச்சாரியர் எல்லாரும் அவர் மாளிகையிலேயே தங்குவர். அங்கிருந்து நாங்கள் பாபநாசம் சென்ருேம். கோயிலில் அன்னத் திற்குச் சொல்லி வைத்தோம். ஆனல் அக் கோயிலில் உப்பில்லா அன்னமே தந்தார்கள். பார்த்துக்கொள் வோம் என்று முதலில் மலைமேல் ஏறி அருவியில் குளித் தோம். ஆ! அந்த இடம் சுவர்க்கானந்தமா யிருந்தது.

ஐயரிடம் ஆசி பெற்று, நான் குருகுல மாணவர்களை அழைத்துக் கொண்டு பல இடங்களுக்கு யாத்திரை சென்று வந்ததுண்டு. அவ்விடங்களில் குறிப்பிடத் தக்கவை திருநெல்வேலி, திருச்செந்தூர், கிருஷ்ணன் கோயில், ஸ்ரீவைகுண்டம், ஆழ்வார் திருநகரி, தென் திருப்பேரூர், பாணதீர்த்தம், திருக்குற்ருலம், செங் கோட்டை, கன்னியாகுமரி, கோட்டாறு, பேச்சிப் பாறை, பத்மநாதபுரம், நெய்யாற்றங்கரை, திருவிதாங் கூர், குளச்சல். இந்த யாத்திரையின் முழு விவரம் ஆத்ம சோதனை என்னும் நூலில் வெளிவரும்.

நாங்கள் சென்ற ஒவ்வொரு ஊரிலும் பஜனை, பிரசங்கம், தேசியப் பிரசாரம், சீர்திருத்தத் தொண்டுகள் செய்தோம் ; குருகுலத்திற்குப் பணமும் வசூலித்தனுப்பினோம். அந்தந்த ஊரின் சரித்திரச் சிறப்பை நான் மாணவருக்குச் சொல்லி வந்தேன். அதற்குரிய விஷயங்களைக் கற்றும் கேட்டும் அறிந்தேன். எந்த ஊருக்குச் சென்றாலும் முதலில் கோவிலுக்கு, பிறகு பள்ளிக்கூடத்திற்குச் செல்வோம்; மாணவர்களுக்கு நான் பாடம் சொல்லித் தருவேன். அரைமணி நேரம் சன்மார்க்க விஷயமாகப் பேசுவேன். யாத்திரைகளால் நானும் மாணவரும் பெற்ற பயன் அளப்பரிது. இந்த யாத்திரைகள் மிகவும் வெற்றியும் பொருளும் தருவதைக் கண்டு ஐயர் ஆண்டுதோறும் இரண்டு மூன்று யாத்திரைகள் நடத்தி வரும்படி என்னைப் பணித்தார். நாங்கள் ஒவ்வொரு ஜில்லாவாகச் சுற்றி வரத் தீர்மானித்தோம். அடுத்த தடவை மதுரை ஜில்லாவில் பிரயாணம் செய்வதென முடிவு செய்தோம். ஆனால், ஐயரே விண்ணுலகிற்குப் பிரயாணமாகி விட்டார். என்ன செய்வது? நானும் என் அலுவலை நோக்கிப் பிரயாணமானேன்.

25. குருகுலப் போர்

குருகுலம் மிகவும் ஒழுங்காக நடந்துவந்தது. ஐயர் குருகுலத்தை மிகவும் விசாலமாக நடத்தத் தமது எண்ணங்களை எல்லோரிடமும் அறிவித்தார். "குருகுலம் நல்ல வளர்ச்சி பெற்று வருகிறது; ஆசிரியர்கள் கருத்துடன் கற்பிக்கின்றனர். மாணவர்கள் ஏகாக்கிரத்துடன் படிக்கிறார்கள். இப்போது தமிழ் உயர்ந்த முறையில் பயிற்றுகிறோம். மாணவர்கள் தெளிவான தமிழிலேயே எப்போதும் பேசுகின்றனர், எழுதுகின்றனர். உயர்ந்த வகுப்பிற்குக் கம்பனைப் பாடமாக வைத்திருக்கிறோம். அடுத்த ஆண்டு சங்கக் காவியங்களைக் கற்பிப்போம். சம்ஸ்கிருதம், இந்தி, ஆங்கிலம் மூன்றும்

போதியமட்டும் கற்பித்திருக்கிறோம். ஆங்கிலத்தில் நமது மாணவர்கள் நல்ல அபிவிருத்தி யடைந்திருக்கிறார்கள். இந்தியில் நன்றாகப் பேசுகிறார்கள். கணிதம், பூகோளம், இயற்கைப் பாடம், சரீர தத்துவம் முதலியவையும் கற்பிக்கிறோம். மாணவர் இயற்கையழகை ஒரு கவிபோலே ரசிக்கின்றனர். சங்கீதம் திவ்யமாக நடக்கிறது. நூற்றல், நெசவு, பயிர்த்தொழில் இவை சுமாரான வளர்ச்சி பெற்றிருக்கின்றன. ஒவ்வொரு மாணவனும் தனது ஆடைக்கு நூற்றுக்கொள்வான். இரண்டு மூன்று பேர்கள் தறி நெய்கிறார்கள். தேசச் சரித்திரத்தைக் கதை சொல்வது போலே ஸ்வாரஸ்யமாகப் புகட்டுகிறோம். அச்சுக்கூடத்தில் சில மாணவர் வேலை செய்கின்றனர். அவர்களுக்கு அச்சுக் கோக்க, அடிக்க, புத்தகம் கட்டத் தெரியும். பாலபாரதி வேலைகளை நமது மாணவர்களே பெரும்பாலும் செய்கின்றனர். இந்த மாதிரியே ஆசிரம காரியங்களிலெல்லாம் இளம் மாணவர் பங்கு கொள்வர்.'

ஆனால் செய்ய வேண்டியது அனந்தம். இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, அமெரிக்கா முதலிய நாடுகள் தொழிற் செல்வத்தால் குபேர நாடுகளாக விளங்குகின்றன. அத்தகைய தொழிற் செல்வத்தை இங்கே நாம் வளர்க்க வேண்டும். இங்கே உயர்ந்த முறையில் விஞ்ஞானம் சொல்லித்தர வேண்டும். பௌதிக ரசாயன சாஸ்திரங்களைப் பயிற்றி, சிற்பத் தொழில்களையும் சொல்லிக் கொடுத்து இங்கே யந்திரங்கள் நிர்மாணிக்க வேண்டும். இப்போது நாம் எதெதற்கு ஐரோப்பாவை எதிர்பார்த்திருக்கிறோமோ அதெல்லாம் இங்கேயே செய்ய ஏற்பாடாக வேண்டும். இயந்திர நிபுணர்களையும் சிறந்த சிற்பிகளையும் உண்டாக்கவேண்டும். 150 வருடத்திற்குள்ளேதான் இங்கிலாந்து இப்படி இயந்திர அற்புதங்களைச் செய்திருக்கிறது. பல நூற்றாண்டுகளாக வீர தீரரையும் மஹான்களையும் கொண்டு விளங்கிய நமது தேசத்

திலும் ஏன் அந்த விஞ்ஞான அற்புதங்களைச் செய்ய லாகாது? தமிழ் நாட்டு வணிகர் தமது லாபத்தில் ஒரு பங்கு இக்காரியத்திற்காகத் தருவது என்று வைத்துக் கொண்டால் போதிய பணமும் கிடைக்குமே.

டாக்டர் ராஜனைக் கேட்டிருக்கிறேன். உதவி புரிவ தாகச் சொல்லியிருக்கிறார். ஸ்ரீ மஹாதேவ ஐயர் மலாய் நாட்டிற்குச் சென்று பொருள் திரட்டுகிறார். அங்கே யுள்ள தனவணிகர் அன்புடன் முன் வந்து போதிய ஆதரவு காட்டி யிருப்பதாகவும் சுமார் 20,000 ரூபாய் இதுகாறும் சேர்ந்திருப்பதாகவும் எழுதுகிறார். அந்தத் தொகை வந்ததும், ஆசிரமத்திற்கு ஒரு நல்ல கட்டிடம் அமைத்து பௌதிக, ரசாயன, சிற்ப இயந்திரக்கலைகள் கற்பிக்கத் தொடங்குவோம்.............பராசக்தி அருள் புரிய வேண்டும்" என்று பேசி முடித்தார். ஐயர் பேச்சை நாங்களெல்லாரும் ஆமோதித்தோம்.

மறுநாள் தபால் வந்தது. மஹாதேவ ஐயர் கடி தத்தை ஐயர் முதலில் பிரித்துப் பார்த்தார்: "மலாய் நாட்டில் ஏதோ நமது குருகுலத்தைப் பற்றிப் புகார் கிளப்பி விட்டிருக்கிறார்கள். சமாதானம் சொல்லி வரு கிறேன்" என்று எழுதி யிருந்தது. கடிதங்களை யெல் லாம் படித்ததும் தமிழ் நாடு பத்திரிகையைப் பிரித்தோம். அதில் ஒரு பக்கத்தில் தமிழ் குருகுலத்தைப்பற்றி நீண்ட புகார் எழுதி யிருந்தது. "ஐயர் நல்லவர்தாம், படித்த வர், வீரர். அதற்காக நாம் அவர் குருகுலத்தில் நடக்கும் இந்த அடாத காரியத்தைப் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது........குருகுலத்தில் பிராமணப் பையன்கள் ஒருவகையாகவும் பிராமணரல்லாதார் பாரபட்சமாகவும் நடத்தப்படுகிறார்கள். பின்னவரை வெளியில் வைத்துச் சோறு போடுகிறார்கள். இந்தக் கொடுமை நடக்கு மட்டும், ஒரு பைசாக் கூடக் குருகுலத்திற்குக் கொடுக்கக் கூடாது" என்று விளாசித் தள்ளி யிருந்தது. மறுவாரம்

"இரத்தக் கண்ணீர்" என்றொரு உருக்கமான தலையங்கம் வந்தது. அதன் பிறகு, தொடர்ந்து பல கூரிய சொல்லம்புகள் ஐயர் மேல் பாய்ந்தன. தமிழ் நாடெங்கும் இதே பேச்சு : இதே கிளர்ச்சி.........டாக்டர் நாயர் காலத்தைப் போலே மீண்டும் பிராமண அப்பிராமண வாதமும் புகைச்சலும் சண்ட தாண்டவமாடின. ஐயருக்குத் தினுசு தினுசாகக் கடிதங்கள் வரும் : "ஐயா, நான் ரயிலில் போகும்போது தங்கள் ஆசிரமத்தைச் சேர்ந்த ஒரு தாடிக்காரர் பணம் கேட்டார். நாலணா போட்டேன் ; தாங்கள் பிராமணரல்லாதாரைக் கொடுமை செய்கிறீர்களாம். பார்ப்பனக் குருகுலத்திற்கு நான் பணம் தந்தது பிசகு. உடனே என் கால் ரூபாயை வாபஸ் செய்யாவிட்டால், பத்திரிகையில் எழுதி விடுவேன்........" "ஐயா, நீங்கள் பிராமணரல்லாதாரை ஒதுக்கி வைத்துத் தாழ்வாக நடத்துகிறீர்களாம். உங்கள் வைதிகக் கொடுமையை பொறுக்க முடியாது; பிராமணரல்லாதாரிடம் வாங்கிய பணமெல்லாம் மரியாதையாகக் கொடுக்கிறீர்களா, இல்லாட்டி சத்தியாக்கிரகம் நடத்தவா ?" "பார்ப்பன வ. வே. சு. ஐயருக்கு.........பணம் பணம் என்று மட்டும் கையை நீட்டி வாங்குகிறீரே; பணம் கொடுத்தவர் அந்தணரல்லார். அவர் மனம் புண்படும் படியாகச் செயலாற்றுவது நன்றியாகுமா? தமிழர் மனம் கொதிக்கிறது. இதோ படை திரண்டு வருகிறது. குருகுலத்தைத் தகர்ப்போம்.........இக் கடிதம் கண்டவுடனே அந்தணரல்லாதாருக்குச் செய்யும் கொடுமையை நீக்க வேண்டும். பெரும் படை திரண்டு கொண்டிருக்கிறது. திண்டுக்கல்லில் பாடியிறங்கியிருக்கிறது; தமிழர் தங்கள் மேல் சினங் கொதித்து வருகின்றனர்........." "சென்னை, சேலம், திருச்சி...... எங்கும் வீர வாலிபர் திரளுகின்றனர்.........திருவானைக் காவலிலிருந்து இதோ படை புடை பெயர்கிறது. குரு

குலப் போர் தொடங்கி விட்டது......குருகுல முற்றுகை அடுத்த வாரம். 'அதற்குள் தங்கள் நடை முறையைத் திருத்திக் கொள்ள வேண்டும்......" என்று தனியாகவும் பத்திரிகைகளிலும் ஐயருக்குத் தாக்கீதுகள் வரும். இவற்றினும் விநோதம் என்னவென்றால், ஐயர் அருமையாக நேசித்து, ஆசிரமத்தில் ஊட்டிப் பாதுகாத்த சில தொண்டர்கள், கண்டபடி பத்திரிகையில் எழுதியதுதான். இன்று அவர்கள் ஐயர் இட்ட வேலையைச் செய்யும் தொண்டராயிருப்பார். நாலைந்து மாதங்கள் ஆசிரமச் சோற்றைக் கவலையில்லாமல் சும்மா உண்டிருப்பார். அடுத்த வாரம் பார்த்தால், "குருகுலத்தில் பிராமணர் செய்யும் கொடுமை" என்றொரு கட்டுரை தீட்டி விடுவார். இந்த மாதிரிச் செய்த இருவரை ஐயர் கண்டிப்பாக "வெளியேறுங்கள்" என்று சொல்லிவிட்டார்; அவர்களில் ஒருவர் பாலபாரதி அடித்த பாரங்களை அடுக்க வருவார். அன்று வந்தார். "அனந்த கிருஷ்ணா! அவரை வெளியே போகச் சொல்; நமக்கு நன்றியுள்ள தொண்டரே வேண்டும்" என்று சொல்லி விட்டார். "நான் போகமாட்டேன், சத்தியாக்கிரகம் பண்ணுவேன்" என்றார் அந்த அன்பர். "வேலிக்கப்புறம் உங்கள் சத்தியாக்கிரகத்தை நடத்தும்" என்று அவரைத் தூக்கி வாசலுக்கு அப்புறம் கொண்டு போனார்கள். ஐயர் எவ்வளவு வேண்டுமானாலும் சொல் பொறுப்பார். ஆனால் தேசத் துரோகத்தையும், நம்பிக்கைத் துரோகத்தையும், பொய் வதந்திகளையும் தாங்கமாட்டார்.

இந்த மாதிரிக் கிளர்ச்சிகளால் மலாயாப் பணம் தடைப்பட்டு விட்டது. ஐயர் செய்திருந்த மகத்தான யோசனைகளெல்லாம் நடக்கவில்லை. ரூ. 20,000 வந்திருந்தால், அதைக்கொண்டு ஏதாவது ஒரு பெரிய தொழில் தொடங்கி சுமார் ஆயிரம் மாணவர் வேலை செய்து கொண்டே கல்வி கற்கும்படியான ஏற்பாட்டை ஐயர்

செய்திருப்பார். அத்துடன் சில நண்பரும் பெருந் தொகை வாக்களித் திருந்தனர்; தமிழருக்கு அதிட்ட மில்லை.

ஐயர் திருவண்ணாமலை மஹாநாட்டுக்குச் சென்று வந்தார். அது ராமசாமி நாயக்கர் தலைமையில் நடந்தது. மாடியில் மூட்டையை இறக்கிவிட்டு உடனே பாலபாரதி காரியாலயத்திற்கு வந்தார்; முதன்முதல் நான் கேட்ட கேள்வி, "மஹரிஷிகளைத் தரிசித்தீர்களா?" என்பதே. "ஆஹா! நமது தமிழ் நாட்டில் ஒரு ராமகிருஷ்ண பரமஹம்சர் அவதரித்திருக்கிறார். பாரதி அவரை அவசியம் பார்க்க வேண்டும்........அவர் தரிசனமே எனக்கு ஆறுதலைத் தந்தது!" என்றார். அடுத்த கேள்வி "ஏதாயினும் விதாயகம் ஏற்பட்டதா?" என்பது. "அதுதான் இல்லை. நாம் தணிந்து போனாலும் பயனில்லை. குருகுலத்தை வீழ்த்தவே கங்கணம் கட்டிக்கொண் டிருக்கிறார்கள்" என்று பரம துக்கத்துடனும், ஏக்கத்துடனும் பதிலளித்தார். ஆ! துரதிட்டம் பிடித்த தமிழகமே! உனது நன்மைக்காக ஓர் அரிய கலைக்கோயிலை எழுப்பினர் அருமை ஐயர்—வீரர், சூரர், மாசற்ற தீரர், புலவர் மணி ஐயர்.. அதைத் தகர்த்துக் குட்டிச் சுவராக்கத்தான் நீ கற்றுக் கொண்டாய்!

இனிச் சொல்லி யென்ன? தமிழருக்கு அவ்வளவு தான் கொடுத்து வைத்தது! வட நாட்டில் ஒரு சாந்தி நிகேதனம் ஏற்பட்டால், அதை விசுவ பாரதியாக வளர்க்கிறார்கள். காசி சர்வ கலாசாலை பெற்ற வளர்ச்சியைப் பாருங்கள்! தமிழகத்தில் பரம தியாகி ஒருவர் தமிழர் நன்மைக்கே ஒரு குருகுலம் கண்டால், அதைத் தகர்க்கக் கடைப்பாரை போடுகின்றனர். குருகுலத்தைக் கொலை செய்தாயிற்று. இனிப் பேசியென்ன? அந்தக் கொலையின் பயன், இன்னும் அரசியல் வாழ்விற் குறுக்கிட்டுத் தொல்லை செய்கிறது.

ஆனல் ஐயர் செய்த குற்றந்தான் என்ன? இவ்வளவு பழி சுமத்தியதற்கு ஐயர் எப்படி அருகர் என்பதை உலகம் அறிய வேண்டும். குருகுலக் கிளர்ச்சி எதனல் உண்டானது? காரணத்தைப் பலவிதமாகச் சொன்னர்கள். ஒரு தலைவர் ஓர் அந்தணர் வீட்டிற்கு வந்தபோது தனியாக அமர்த்திச் சோறு போட்டார்களாம். யாரோ ஒருவருக்குப் பால பாரதியின் செழித்த புகழ் பிடிக்கவில்லையாம்.........என்றெல்லாம் பல காரணங்கள் செவிக் கெட்டின; அவற்றை மறந்து விடுவோம். தனி ஆட்களையும் மறந்து விடுவோம். எதிரிகளும் தமிழர்தாமே. அவர்களையும் புண்படுத்த வேண்டா. உண்மையைப் பற்றிச் செல்வோம். "ஆசிரம மாணவரைச் சமமாக உட்கார வைத்துச் சோறு போடவில்லை. சமபந்தியை ஐயர் ஒப்புக்கொள்ளவில்லை. அவர் பிராமணராகையால் சாதி வேற்றுமை பார்க்கிருர். பிராமணப் பிள்ளைகளை ஒருவகையாகவும், அப்பிராமணரைத் தாழ்வாகவும் நடத்துகிருர்." இதுதான் இத்தனை ரகளைக்கும் பல்லவி. இது முழுப் பொய்ப் பழி. கட்டுக் கட்டாகப் பத்திரிகைகளில் வந்த புகார்களைத் துருவித் துருவிப் பார்த்தாலும், சமையற் பானை விஷயந் தவிர வேறு கிடையாது. ஐயர் பணத்தாசை பிடித்துக் "கொண்டா பணம் பணம்" என்று ஆவலாகக் கை விரித்துக் கேட்கிருராம்.......... மற்ெருரு மூலையில், பணம் கொடுத்த அப்பிராமணரைப் பாரபட்சமாக நடத்துகிருராம். இந்த மாதிரிச் சித்திர விளக்கங்கள் வேறு பத்திரிகையில் வந்தன.

26. ஐயரின் சமாதானம்

"ஐயரே தமிழருக்காகவே உயிரைப் பலிதானமாக்கி அல்லும் பகலும் அவர் நலனையே தாங்கள் கோரி நிற்கிறீர்கள். தங்கள் மேல் பொய்ப் பழி சுமத்துகிருர்கள். தாங்கள் ஏன் தங்கள் சக்தி பெற்ற எழுதுகோலால் இவர்களுக்குச் சரியான பதிற் சொல்லக் கூடாது? எடுங்கள்

பேணுவை" என்று வற்புறுத்தினேன். "கொஞ்சம் பொறுப்போம்" என்ருர் ஐயர்! பிறகு பால பாரதியில் குருகுல விஷயமாக இரண்டு குறிப்புகள் எழுதினர். பச்சை பச்சையாக எதிர்க் கட்சியார் எழுதிய வசை களுக்கும் ஐயரின் பெருந்தன்மையான சத்திய வாக் கிற்கும் வேற்றுமை அறிய வேண்டுவோர், அந்தக் கட் டுரைகளை அவசியம் படிக்க வேண்டுமென்றே இங்கே முழுதும் வெளியிடுகிருேம். நண்பர் பலர் எழுதிய கடி தங்களுக்கும், இதுவே ஐயர் பதிலாகும்:

"இக் குருகுல சம்பந்தமான சில பிரச்சினைகள், ஸ்ரீமான் ப. வரதராஜுலு நாயுடு அவர்களால் எழுதப் பட்டுப் பல சமாசாரப் பத்திரிகைகளில் விவரிக்கப்பட்டு வருகின்றன. நமது பால பாரதியானது வாரப் பத்திரிகை கள், தினசரிகளைப் போன்ற சமாசாரப் பத்திரிகை யன்று. இதிகாச ரீதியாகவும், சித்தாந்த ரீதியாகவும் ஹிந்து ஜாதியைப்பற்றி நடு நிலைமையில் நின்று எழுதி வர இருக்கிருேமாஞலும், எம்மால் முடிந்த அளவிற்கு இப் பத்திரிகையை ஜாதீய வாக்கு வாதங்களுக்கு நிலைக்கள மாக்க வேண்டாம் என்று இவ்விவகாரத்தை ஒதுக்கி வைக்கிருேம். ஆகையால் இதில் எம்முடைய உண்மையை ஆமோதித்து எழுத விரும்பும் அநேக நண்பர்களின் ஆசை யைப் பூர்த்திசெய்ய முடியாமையைப்பற்றி எம் வருத்தத் தைத் தெரிவித்துக் கொள்ளுகிருேம். அவருடைய அன் பிற்கு எமது நன்றியைச் செலுத்துகிருேம்.

ஒன்று மாத்திரம் பாரத்துவாஜ ஆசிரமம் பகிரங்க மாய்த் தெரிவிக்க விரும்புகிறது; இங்கே குருகுல வித்தி யாலயத்தில் தமிழ் பேசும், அல்லது தமிழில் கற்க விரும் பும் அனைவரும்......ஹிந்துக்கள், முஸல்மான்கள், கிறிஸ்து வர்கள், சுவர்ணர்கள், அவர்ணர்கள், தீண்டாதார் என்கிற பேதமின்றிச் சேர்ந்து சமமான கல்வி கற்கலாம். ஆகாரத்தில் திருஷ்டி தோஷம் பார்க்கப்படுவதில்லை. சேர்ந்துண்ண எல்லாருக்

கும் அனுமதியிருக்கிறது. உபாத்தியாயருள் யாருக்கும் எந்த வகுப்புடனும் உண்ணுவதற்கு ஆக்ஷேபமில்லை. ஆனால் சில தந்தையரின் குழந்தைகளுக்குத் தனியே உண்ணக் கூடியவரை வசதி ஏற்படுத்தித் தரப்படுகிறது. வேதமந்திரங்களை உபநயனம் பெற்ற துவிஜர்களுக்குத் தான் உபதேசிப்பார்களாதலால், ஹரித்துவார குருகுலத்தில்போல மாணவர்களனைவருக்கும் துவிஜஜன்ம ஸம்ஸ்காரம் செய்விப்பதைப்பற்றிப் பாரத்துவாஜ ஆசிரமம் பெரியார்களோடு கலந்தும், தானே சிரத்தாபூர்வகமாக ஆலோசித்துக்கொண்டும் வருகிறது.

இந்தச் சமாதானத்தைப் பெரிதாக அச்சிட்டு' பாருங்கள், நாங்கள் சொல்லும் நியாயத்தை. "ஐயர் குருகுலம் பிராமண குருகுலம் என்பதில் தடை என்ன? எத்தனையோ பிராமணரல்லாதார் பணத்தை விழுங்கிச் சில பிராமணர்களுக்குத் தனியாகச் சோறுபோடுகிறார்கள். ஐயர் தமது பிராமண மனப்பான்மையை எல்லாருக்கும் புகட்டத் தமிழர் அனைவருக்கும் பூணூல் மாட்டவேறே பார்க்கிறார். தமிழர்களே, உஷார்" என்று படத்துடன் மறுப்புகள் வந்தன.

நடந்ததென்ன? மாணவர் ஆசிரியர் அனைவரும் ஒன்றாக உட்கார்ந்தே சாப்பிட்டார்கள். ஐயரும் சமபந்தியே சாப்பிட்டார். ஒரு திருக்குலப்பிள்ளையைக் கூட்டி வந்து, அவனையும் உடன்வைத்துக் கொண்டே உண்டோம். ஆதலால் குருகுலத்தில் சமபந்தி போஜனம் இல்லை யென்பது பிசகு. ஐயர் பிராமணப் பான்மையுடையவர் என்பதும் முழுப் பொய்யாகும். எங்கள் வீர சங்கத்தில் வாரந்தோறும் ஐயர், "நமக்கு இப்போது வேண்டியது பிராமணரல்லார். நமக்கு க்ஷத்திரியரும் தொண்டரும் வேண்டும். நாம் வீரத்தொண்டர் குலத்தைக் காண்போம். அவர்களுக்கு "தாஸ சிம்ஹர்" என்று பெயரிடுவோம். மற்றச்சாதி வேறுபாடுகளை யெல்லாம்

மறப்போம்" என்று பகிரங்கமாகச் சொல்லுவார். குரு கோவிந்தனது 'கால்சா' இயக்கமே அவரது லக்ஷியம். ஆரிய சமாஜக் கொள்கையிலும் அவர் ஈடு பட்டவர். சாதிமத வேறுபாடுகளை நமது நாட்டிலிருந்து ஒழிக்க வேண்டுமானால், நமது ஐதீகங்களையும் அனுசரித்துச் செல்ல வேண்டும். அப்படியானல் அது பல அறிவாளர் ஒப்பக்கூடிய செய்கையாகும் என்பது ஐயர் கொள்கை. அதற்காகத்தான் அவர் உபநயன ஸம்ஸ்காரத்தை வற்புறுத்தினர். காங்கிரி குருகுலத்தில் அவர் தங்கியதால் அந்த நடைமுறையைத் தமிழ்க் குருகுலத்திலும் அனுஷ்டிக்கத் தொடங்கினர். வடநாட்டில் மாளவியாவும், சிரத்தானந்தரும் மாணவருக்குப் பூணூல் போட்டுக் காயத்திரி உபதேசம் செய்தார்கள்; அதை எல்லாரும் மகிழ்ந்து கொண்டாடுகிருர்கள். அவர்களுக்கு ஏராளமான உதவி கிடைக்கிறது. நமது தமிழகத்தில் அவ்வாறு ஒற்றுமைக்காக ஒருவர் முயன்ருல், இப்படித் தர்க்கங்கள் கிளம்புகின்றன. ஐயர் எல்லாருக்கும் உபநயனம் செய்ய, காவ்ய கண்டம் கணபதி சாஸ்திரிகளை வேண்டிக்கொண்டார். அவரும் "ஆஹா" என்று ஒப்புக்கொண்டார். இன்னும் இரண்டொரு மாதங்கள் ஐயர் ஜீவித்திருந்தால் அதையும் செய்து காட்டியே யிருப்பார். அந்தப் பாக்கியம் நமக்கு ஏற்படவில்லை.

நான் ஆசிரமவாசிகளைச் சுமார் நான்கு தடவை நீண்ட பிரயாணங்களுக்கு அழைத்துச் சென்றிருக்கிறேன். சுமார் 100 ஊர்களைச்சுற்றிக் காட்டியிருக்கிறேன். அப்போதெல்லாம் எல்லா மாணவரும் சரிநிகர் சமானராகவே என்னுடன் சமைத்து என்னுடனே சாப்பிட்டனர். பெரிய பெரிய வைதீகக் கோட்டைகளிலும் புகுந்திருக்கிறோம். அங்கேயும் நாங்களெல்லாரும் ஒன்ருகவே உட்கார்ந்து சாப்பிட்டோம். ஆதலால் சமபந்தி விஷயத்தில் ஆசிரமத்தைக் குறைசொல்லவே காரண

மில்லை. பிறகு என்ன நடந்தது? ஆசிரமத்தில் இரண்டு மாணவர் இருந்தனர். ஒருவர் ஆந்திரமாணவர். உள்ளூர் வைதீகர் பிள்ளை. சென்னை வாவெள்ளா ராமசாமி சாஸ்திரிகள், "நான் ஓர் ஆந்திரப்பையனுக்காக மாதம் பத்து ரூபாய் தருகிறேன். அவனை அவனுக்குரிய ஒழுக்கப்படி நடத்திக் கல்வி கற்பிக்க வேண்டும்" என்றார். அந்த மாணவன் தந்தையும் 'கலப்புணவுகூடாது; அதனால் எங்கள் ஜாதியில் கலவரம் உண்டாகும். இது வைதீகர் கிராமம். ஆதலால் என் பையன் உள்ளே உட்கார்ந்து சாப்பிடட்டும்" என்று வேண்டிக் கொண்டார். பையன் அதி புத்திசாலி; தந்தை ஆசிரமத்திற்கு அரிய உதவி செய்தவர். ஆதலால் ஐயர் சம்மதித்தார். மற்றொரு பையன் கல்லிடைக்குறிச்சியில் ஒரு தேசாபிமானியின் பிள்ளை. தந்தை பரம ஏழை; தேசாவேசங் கொண்டவர்; சாஸ்திர வித்பன்னர். நாள்முழுதும் தேசத்திற்கே பாடுபடும் உத்தமர். பையன் மகாசாது, கெட்டிக்காரன். நாள் முழுதும் குருகுலத்திற்கு வேலை செய்வான், பணிவுள்ளவன். தாயார், தகப்பனார், சுற்றத்தார் சம்மதப்படி அவன் உள்ளே உட்கார்ந்து சாப்பிட்டான். அதே பையன் என்னுடன் யாத்திரைக்கு வந்தபோது, எல்லாருடனும் உட்கார்ந்தே சாப்பிட்டான். ஆதலால் அவனுக்குச் சாதியுணர்வே கிடையாது. தந்தையின் கட்டளையைக் கௌரவிக்க வேண்டியே குருகுலத்தில் அவன் கொஞ்ச நாள் தனியாக உண்டான். இந்த இரண்டுபேரைத் தவிர வேறு யாருக்கும் தனியிடமில்லை. எல்லாரும் சேர்ந்தே சாப்பிட்டனர். பிற்காலம் முன்சொன்ன பையன் பத்தமடைப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்துவிட்டான். பின் சொன்ன பையன் எல்லாருடனும் சேர்ந்தே சாப்பிட்டான். ஆகையால் சமபந்தி விவகாரம் தீர்ந்துபோனது. ஆனால் இதற்காக ஐயர் பாரபட்ச முள்ளவரென்றும், பிராமணருக்குச் சலுகை காட்டுகிறார் என்றும் சொல்வது

பிசகு. அவரது கருணையுள்ளம் எல்லாரையும் ஒரே அன்புடனே நேசித்தது. அந்த அன்பை அறியாமல் இப்படிக் கிளர்ச்சி நடந்தது. வட இந்தியாவைப்போல நமது தென்னாட்டிலும் திருஷ்டிதோஷத்தை நிவர்த்திசெய்த ஒருவர் நமது ஐயரே. அந்தணரும் பரம திருப்தியுடன் தமது சாதி மனப்பான்மையை விட்டு எல்லாருடனும் தடையில்லாமல் கலந்துண்ண ஒரு வழியை ஐயர் கண்டு பிடித்தார். எல்லாருக்கும் காயத்திரி உபதேசிக்க முயன்றார். அவர் கொள்கையைத் தமிழர் அறியவில்லை. வடக்கேயிருந்து ஆரியசமாஜி ஒருவர் வந்து பூணூல் மாட்டி "எல்லாரும் ஒன்று" என்றால், வானளாவப் போற்றுவர்; நமது தமிழர் ஒருவர் சாதி ஒற்றுமைக்காக அந்தமாதிரிச் செய்ய முயன்றால் "பார்ப்பான் சூழ்ச்சி யென்று" தூற்றுவர்! என் செய்க?......என்ன காலம்! என்ன காலம்! தமிழன் நன்மை சொன்னால் தமிழன் அதன்படி நடக்கும் காலம் எப்போது வருமோ, தெரியவில்லை. ஐயரும் பேனாவைத் தீட்டிக் காரசாரமாக எழுத முடியும். அப்படி எழுதவில்லையென்று எங்களுக்குக் கூட மனத்தாங்கலாயிருந்தது. "போர்க்களத்தில் இப்படிச் சாத்வீகம் கொண்டீரே; நீர்தாமா 1910-ஆம் வருஷத்தில் இருந்த ஐயர்? உமக்கு எழுதப் பிடிக்காவிட்டால் எனக்காவது உத்திரவு கொடும்...நமது நியாயத்தை எடுத்துச் சொல்லுகிறேன்" என்றேன் ஒருநாள்!

"அப்படியில்லை பாரதி, நாமும் துச்சமாக எழுதிக் கொண்டிருந்தால், சண்டை வளரும். எரிநெருப்பில் எண்ணெய் வார்த்தது போலும். நாம் மஹாத்மாவைப் பின்பற்றுகிறோம். மனத்தாலும் வாக்காலும் உடலாலும் நம்மவர் யாருக்கும் தீமை செய்யோம். நமது நியாயத்தைப் பிற்காலம் உலகம் அறியும். இப்போது இந்த அனுவசியமான சண்டைக்கு முனைந்தவர்கள், பிற்காலம் எப்படி நடந்து கொள்கிறார்கள். அவர்கள் நமது ஜாதீய ஒற்

றுமைக்கும் தேசீய முன்னேற்றத்திற்கும் என்ன செய்யப் போகிருர்கள் என்பதை உலகம் அறியும். நம்மிடம் வஞ்சமில்லை. நாம் உண்மையாக நடக்குமட்டும் எதிரிகளுக்குப் பயப்படவேண்டியதில்லை. இன்னெரு தடவை வேண்டுமானல் பாலபாரதியில் இந்தப் பிரச்னையைப் பற்றி எழுதிவிடுகிறேன்" என்று பேனப் பிடித்தார். கலியாப்தம் 5027 சித்திரை பாலபாரதியில் ஐயர் எழுதியதாவது :

"நமது பாலபாரதியில் இவ் வித்தியாலய சம்பந்தமாக இதுவரை ஒரு முறைக்கு மேல் எழுதாமல் நிறுத்திக் கொண்டதற்குக் காரணம், இது சம்பந்தமாகச் சில பத்திரிகைகளில் நடத்தப் பட்டுவரும் விதண்டாவாதத்தைக் கண்டித்து எழுதுகிறவர்கள், பாரதியின் பக்கங்களை நிரப்பக் கூடாது என்றேயாகும். ஆனல் மேற் குறிப்பிட்ட பத்திரிகைகள் இடைவிடாமல், காலத்திலும் அகாலத்திலும் இவ் விஷயத்தைப் பற்றியே எழுதி வந்து, நாட்டில் கிளர்ச்சி உண்டாக்கி வருவதால், அது சம்பந்தமாக நிகழ்ந்து வந்திருக்கிற பொருள்களைச் சுருக்கமாகப் பாரதியில் ஒரு முறையாக வெளிப்படுத்த வேண்டியது அவசியமாகக் காணப்படுகிறது.

"தமிழ்க் குருகுலம், தமிழ்த் தேச வாலிபருக்கு இலக்கியக் கல்வியும் தொழிற் கல்வியும் போதித்து, அவர்களை அறவாழ்விற்கு உரியராக ஆக்க வேண்டுமென்ற கருத்துக் கொண்டு, ஸ்ரீமான் வ. வே. சுப்பிரமணிய ஐயர் உள்ளிட்ட பரத்துவாஜ ஆசிரமத்தினரால் ஆரம்பிக்கப்பட்டது.

"குருகுல வித்தியாலயம் ஆரம்பிக்க இருக்கிறதாக முதல் முதல் வெளியிடப்பட்ட பிரசுரம் கலி. 5024 ஐப்பசி கார்த்திகை மாதவாக்கில் வெளிவந்த விஞ்ஞாபனமாகும். அதில் மாணவர் வித்தியாலயத்திலேயே வாசித்துக் கொண்டு வித்தியாலயத்திலேயே சாப்பிட்டு வருவார்கள்

என்பதைத் தவிர, ஆகார விஷயமாக வேறென்றும் சொல்லப்படவில்லை. தமிழ் நாட்டின் பழக்க வழக்கங்கள் இருந்த நிலைமையில், பல ஜாதிகளினின்றும் சேர்க்கப்படப் போகும் மாணவர்களுக்குப் பந்திகள் எவ்வாறு அமைத்தல் சாத்தியமாகும் என்று நிர்ணயித்தல் யாருக்கும் முடியாத காரியம் என்று கருதப்பட்டது. நம்மைச் சுற்றிலும் உள்ள ஜனங்களுக்குள்ளே இது சம்பந்தமாக உள்ள பழக்கங்களைச் சுசி ஆசாரங்களுக்கு விரோதம் இல்லாமல் எவ்வளவு மட்டுக்கு விரிவான வழியில் மாற்றி ஏற்படுத்திக் கொண்டு போகலாமோ அவ்வளவு மட்டுக்கு மாற்றிக் கொண்டு போவதுதான் உசிதம் என்றே ஆசிரம வாசிகள் சங்கற்பித்துக் கொண்டார்கள்.

"குருகுலத்தைக் கல்லிடைக்குறிச்சியில் ஆரம்பித்த போது பிராமணரேதாம் சேர்ந்தார்கள். சில மாதங்களுக்கெல்லாம் பிராமணேதர மாணவர்கள் வந்தார்கள். ஆசாரியார் அவர்களுடனேயே உட்கார்ந்து சாப்பிட்டார். இஷ்டமான மாணவர்கள் அவ்வாறு தம்முடன் சமபந்தி யுண்ண உத்திரவிருந்தது. ஆனல் யாரையும் வலுக்கட்டாயப் படுத்தவில்லை. அச்சமயம் ஸ்ரீ வரதராஜலு நாயுடு குருகுலத்திற்கு வந்தார். நாங்கள் சாப்பாட்டிற்கு எப்படி உட்காருகிறோம் என்பது அப்போதே அவருக்குத் தெரியும். அதை ஆறுமாதத்திற்கு முன்பே பத்திரிகையில் ஒப்புக்கொண்டிருக்கிறார். சுற்றியுள்ளவருக்குத் தாராள மனப்பான்மை ஏற்பட ஏற்படத்தான் பந்தி யமைப்பும் தாராள நோக்கத்துடன் அமையும் என்று ஆசிரம நிர்வாகிகள் சொன்னதை அவரும் அக்காலத்தில் ஏற்றுக் கொண்டார். சேரமாதேவிக் குருகுலம் மாற்றப்பட்ட போது, அங்கே பத்தடிச் சௌக்கப் பர்ணசாலைதான் இருந்தது. பிள்ளைகள் மரங்களின் அடியில் ஒன்றாக உட்கார்ந்து வந்தார்கள். சில கட்டிடங்கள் கட்டிய பிறகும், பழைய சம்பிரதாயமே நடந்து வந்தது.

பிறகு சமயற் கட்டிடம் ஏற்பட்டது. அதன் தாழ்வாரத்தை விஸ்தாரமாக்கு முன்பு, இருக்கிற இடத்தில் மாணவர் சிலர் தனியாக அமர நேர்ந்தது. அனைவரும் விசாலமாக உட்காரப் பெரிய தாழ்வாரம் அமைத்த பிறகு, எல்லா மாணவரும் ஒன்ருகவே உட்கார்ந்து சாப்பிட்டனர். இன்று வரையில் அவ்வாறே நடந்து வருகிறது. பெற்ருேர் வேண்டுகோட்படி இரண்டு மாணவரே, உள்ளே உட்காருகிருர்கள். திருஷ்டி தோஷத்தை நீக்க இக் குருகுலம் வஞ்சனையில்லாமல் பாடுபட்டு வருகிறது.''

இந்த நியாயத்தை வெளிட்ட பிறகும், பத்திரிகைகளின் சொல்லம்பு நிற்கவில்லை. ஐயர் இதைப் பற்றி மஹாத்மா காந்திக்குத் தெரிவித்தார். "நாட்டுக்குப் பெரியவர் மஹாத்மா. அவர் சொற்படி நான் வணக்கத்துடன் நடந்து கொள்வேன்'' என்ருர். மஹாத்மா அப்போது சென்னைக்கு வந்திருந்தார். சே. ஸ்ரீநிவாச ஐயங்கார் வீட்டில் இரு கட்சியினரும் கூடிப் பேசினர். 1925, மார்ச்சு மாதம், மஹாத்மா இரு கட்சிகளையும் தீர விசாரித்துத் தமது அபிப்பிராயத்தை எழுதி நாயுடுகாரு கையில் கொடுத்தார். அதற்கு ஐயர் ஒரு நகல் எடுத்துக் கொண்டார். "'குருகுல வாசம் செய்கிற மாணவர்களனைவரும் ஒரே வரிசையில் உட்கார்ந்தே உண்ண வேண்டும். வெளி மாணவர்கள் அபூர்வமாகச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். ஆனல் அவர்களுக்கு ஆகார சம்பந்தமாக எவ்வித பிரத்யேகமான ஏற்பாடும் செய்துதரக் கூடாது. அதாவது, அவர்களைமட்டும் தனியே வைத்துச் சோறு போடக் கூடாது. ஏற்கெனவே அனுமதி பெற்ற இரண்டு மாணவரைத் தவிர மற்றெல்லாரும் ஒன்ருக உட்கார்ந்தே சாப்பிடவேண்டும். அவ்வாறு சமமாகச் சாப்பிட முடியாத மாணவரை இனிக் குருகுலத்திற் சேர்க்கக் கூடாது'' என்பதே மஹாத்மாவின் கட்டளை. சென்னையிலிருந்து ஐயர் முகமலர்ச்சியுடன் வந்தார். "மஹாத்மா [illegible]

வழி காட்டி யிருக்கிறார்; என்று படித்து இதன்படி தான் இனி நடக்க வேண்டும். இன்று முதல் சமபந்திக்கு இணங்காத மாணவரை நாம் இங்கே சேர்க்க வேண்டாம்'' என்றார். ஆஹா! என்று நாங்கள் ஒத்துத் தீர்மானித்தோம். இவ்வளவு செய்தபிறகும், கிளர்ச்சி நிற்கவில்லை. மலாயாவில் குருகுலத்திற்குச் சேர்ந்த பணத்தைத் தரமுடியாதென்று தேக்கிவைக்க யாரோ சுக்கிராசாரிகள் வேலை செய்து விட்டார்கள். "மஹாத்மாவின் உத்திரவைப் புகைப் படம் பிடித்துப் பத்திரிகையில் வெளியிடுங்கள்'' என்று நண்பர் கேட்டனர். பதிலில்லை; நாங்களும் வேண்டினோம் பதிலில்லை. திருவண்ணாமலை மகாநாட்டிற்குச் சென்று ஐயர் முயன்றும் எதிரிகள் அலட்சியமாக இருந்து விட்டார்கள். ஐயர் அப்போது பட்ட மனோவேதனை கொஞ்சமன்று.

"அதன் பிறகும் தகராறுகள் வளர்ந்து வருவதைப் பார்த்தால்,...........கருத்து குருகுலத்தை அழித்துவிட வேண்டும் என்றிருப்பதாகவே தோன்றுகிறது. ஜாதிப் பொதுவில் இருந்து வருகிற பழக்க வழக்கங்களுக்கு ஒரு தனி ஜாதியைச் சேர்ந்த ஒருவன் மீது பழி சுமத்தி, எழுதி எழுதி ஜாதித் துவேஷத்தை உண்டாக்குவது கடினமன்று; மிக மிக எளிதான காரியம். ஆனால் நடு நிலைமையுள்ளவர்கள் இக்குருகுலம் கல்வி விருத்திக்காக ஏற்பட்டது என்பதையும், உடனுண்ணல் சம்பந்தமாகத் தனக்குச் சக்தியுள்ள அளவு உழைத்து வருகிறது என்பதையும் மறக்க மாட்டார்கள் என்பது திண்ணம்'' என்று அடக்கமாக எழுதினார் ஐயர்.

அதே குறிப்பிற்கடுத்து ஐயர், குருகுலத்தை அகண்டமான தொழில் நிலையமாக வளர்த்து மேனாடும் வியக்கும்படியாக இங்கே எல்லாவிதமான இயந்திரத் தொழில்களை

யும் நடத்தும் ஆர்வத்தை வெளியிட்டார். அதைக் கண்டும் தமிழருக்கு அனுதாபம் வரவில்லை.

முன்னே அருட்பாவை எதிர்த்து ஒரு கிளர்ச்சி யெழுந்ததே. அப்போது அருட்சோதி வள்ளலார், "எல்லாம் அப்பன் செயல்" என்று தாம் அமைதியா யிருந்தாரல்லவா? அவ்வாறே ஐயரும் இருந்தார். "இனி நமது செயலில் இல்லை. மிஞ்சி வந்தால் அப்போது மனச்சாட்சி எப்படிச் செய்யச் சொல்லுமோ அப்படிச் செய்வோம்" என்றார் ஐயர். இத் தகராறை எப்படியா வது தீர்க்கவேண்டுமென்று, வை. சு. ஷண்முகஞ் செட்டியார், காவ்ய காண்டம் கணபதி சாஸ்திரியார், ஈ. வே. ராமசாமி நாயக்கர், எல். ராமநாதன் முதலியோர் குரு குலத்திற்கு வந்தார்கள். முதலில் நாயக்கரும், ராமநாத னும் வந்தனர். அவர்களுடன் கலந்து பேசிவிட்டு ஐயர் நாயக்கரை எனது பர்ணசாலைக்கு அழைத்து வந்தார். அப்போது நான் அந்தி தியானம் செய்து அம்மனுக்குத் தீபாராதனை காட்டினேன். மாணவர் சக்திப் பாடல் பாடினர். எல்லாருக்கும் கற்பூர ஹாரதியைக் காட்டி னேன். ஐயர் கண்ணில் ஒற்றிக்கொண்டார். நாயக் கரும் கற்பூர தீபத்தைக் கையால் போற்றினர். நாயக்கர் எனது உணவு முறைகள் கொள்கைகள் அனைத்தையும் கண்டும் கேட்டும் அறிந்தார். எல்லாரும் சமபந்தியில் உட்கார்ந்தே சாப்பிட்டனர்: இவர்களுக்குப் பிறகு வை. சு. ஷண்முகஞ் செட்டியார், காவ்ய காண்டம், ஒரு மலையாளத் துறவி இம்மூவரும் வந்தனர். அத்துறவி என்னுடன் பிற்காலம் இருந்தார். அவர் பௌத்த சம யத்தைத் தழுவினவர். சாஸ்திரிகள், வேத காலத்தில் இடையர்களே சமையல் தொழில் பூண்டனர். ஆதலால் சமையலிலும் சாதி வேறுபாடு பார்க்கக் கூடாது என்று வாதித்தார். சமபந்தி போஜனத்திலிருந்து யார் வேண்டு மானாலும் சமைத்து எல்லாரும் ஒன்றாகச் சாப்பிடவேண்

டும்; சமையற்கட்டு சாப்பிடுமிடம் இரண்டிலும் வேறு பாடு கூடாது என்ற பிரேரணைக்கு வந்து விட்டது விஷயம். அதற்குச் சாத்திரக் கோட்பாடு சொல்லவே சாஸ்திரிகளை அழைத்து வந்தனர். ஐயர், மஹாத்மாவின் கட்டளையைப் படித்துக் காட்டினார். மஹாத்மா, "அந் தணர் சமைத்து மற்றவரெல்லாம் உடனுண்ண வேண்டு மென்றே கட்டளை யிட்டிருக்கிறார்" என்றார். வந்தவர் பிடிவாதமா யிருந்தனர். ஆதலால் மறுபடியும் எல்லாரும் மாடியில் கூடினோம். எங்களில் ஒருவர் மிகவும் பிடிவாத மாக இருந்தார். "இதென்ன பெரிய காரியம். இதற் கெல்லாம் சண்டை வளர்வானேன். எனது பர்ணசாலை யைப் போலே சமையலுக்கும் ஒரு பர்ணசாலை கட்டிவிடு வோம். அதில் மூங்கில் பிளாச்சுகளால் எல்லாரும் பார்க் கும்படி சுற்றும் அமைப்போம், நாம் சமையல் செய் வதைப் பார்க்க வேண்டுமானாலும் பார்த்துப் போகட் டுமே. சமைத்ததும் பழையபடியே மரத்தடியில் வன போஜனம் செய்வோம். பிரம்மானந்தமாக இருக்கும்" என்று நான் பன்முறை சொன்னேன்.

27. ஐயர் தியாகம்

ஆனால் அச் சமயம் இன்னோர் சம்பவம் நடந்தது. மலயாப் பணம் தடைப்பட்டது; மஹாதேவ ஐயர் வெறுங்கையுடன் திரும்பி வந்தார். ஐயருக்கு இப் பத் திரிகைச் சண்டை பிடிக்கவில்லை. "இதோ என் பெயர் வைத்து இச்சண்டை நமது தமிழ் நாட்டில் வேண்டாம்; குருகுலத் தலைமையிலிருந்து நான் விலகிக் கொள்ளு கிறேன்" என்று மஹாதேவ ஐயரிடமே பொறுப்பைக் கொடுத்து, தமது ஆயுள் முழுதும் இலக்கியப் பணி புரிவ தென்றே தீர்மானித்தார். அப்போது எனக்கும் நாளெல் லாம் காவியச் சுவையிலேயே ஆழ்ந்திருக்கும் பாக்கியம் கிடைத்தது. ஐயரை மீண்டும் ஆசாரியப் பொறுப்பைப் பார்க்கும்படி எத்தனையோ நண்பர் தினம் எழுதித் தூண்

டினர். வை. சு. முதலியோரும் சாஸ்திரிகளும் சொன்னார்கள். ஐயர் மனம் விரக்தியடைந்து விட்டது என்பது மிகையாகாது. வந்தவர் சென்றனர். அதன்மேல் கலகம் வலுத்தது. "திருவானைக்காவிலிருந்து புறப்படுகிறது, தமிழர் படை.........குருகுலத்தில் சத்தியாக்கிரகம் நடக்கப் போகிறது.........போர், போர், போர்" என்று பத்திரிகையில் பெரிய பெரிய தடபுடல் விளம்பரங்கள் வந்தன. அன்று மதியம் ஐயருடன் நான் உணவு கொண்டேன். அப்போது அவர் பழைய ஐயராக ஒரு நிமிஷம் இருந்தார். "ஐயரே! இவர்கள் போர் என்னும் போது, எனக்குச் சிரிப்பு வருகிறது! போர் புரியும் வீரர் ஒருவர் தமிழ் நாட்டில் இப்போது உண்டானல் அவர், என் முன் நீலக்குன்று போல் விளங்கும் வீரரே! இதெல்லாம் வெறும் பத்திரிகை மிரட்டல்' வரட்டும் போர், பார்ப்போம். முதலில் நான் ஆசிரம வாசலில் குறுக்கே படுத்துக்கொள்ளுகிறேன்; என்னை மிதித்துச் சட்டினியாக்கித் தமிழர் தமிழ்க் குருகுலத்தை அழிக்க வரட்டும்" என்றேன். அதற்கு இன்னும் இருவரும் தயாராக இருந்தனர். ஐயர், "பழைய தீ இன்னும் அணையவில்லை. நமது நாட்டின் அடிமைத் தளையைச் சுட்டெறியவே அதை வைத்திருந்தேன். இந்த வாளை இன்னும் உபயோகிக்க முடியும்; ஆனல் நம்மவராகிய தமிழரிடம் எனது அன்பு அதிகரிக்கிறதே யொழிய, தமிழர் என்ன செய்தாலும் பகைக்கத் தோன்றவில்லையே" என்றார். இவ்வளவு ரகளை பண்ணியும் எதிரிகளை யாராவது மரியாதைக் குறைவாகப் பேசினல், ஐயர் தாங்க மாட்டார். ஒருநாள் தமிழ் நாடு பத்திரிகையைப் படித்து ஒரு மாணவன் "நாயுடு சொல்லுகிறன்" என்று வாய் தவறிச் சொல்லி விட்டான். ஐயர் "ஹூ, யாரது? நாயுடுகாரு சொல்லுகிறார்" என்று பேச வேண்டும். யாரையும் மரியாதைக் குறைவாகப் பேசக்கூடாது" என்றார். ஆசிர

மத்தில் எவரும் எதிரிகளை எள்ளளவும் தூற்றியதில்லை; தூஷித்ததில்லை. "ஐயரே, நாயுடுகாரு நமது குருகுலத்திற்கு வந்தால், எப்படி வரவேற்பது" என்று ஒரு நாள் கேட்டேன். "தேசத் தலைவரை எப்படி வரவேற்போமோ அதே போலக் கௌரவமாக அவரையும் வரவேற்க வேண்டும்" என்றார். பிற்காலம் நாயுடுகாரு ஆசிரமத்திற்கு வந்தார். ஐயர் சொன்னபடியே அவரை வண்டி நிலயத்திலிருந்து வரவேற்று உபசரித்தேன். மறு நாள் எல்லாரும் சமபந்தி உட்கார்ந்து சாப்பிட்டதை அவரே பார்த்துச் சென்றார்; நாயக்கரும் அவருடன் வந்திருந்தார்.

28. கவலை யில்லை

"படை திரளுகிறது; போர் போர்" என்று கிளர்ச்சி வலுத்தவுடனே, ஐயர் புத்தகசாலையிலுள்ள அரிய நூல்களை யெல்லாம் ஒரு பெரிய கள்ளிப் பெட்டியில் அடைத்துப் பூட்டி விட்டார். "இனிக் கவலையில்லை" என்றார். ஒரு நாள் இரவு கொஞ்சம் உலாவி வந்தோம். ஆசிரம வாசலுக்கு வந்தபோது ஐயர் பின்வருமாறு சொன்னார். "அவர்கள் சத்தியாக்கிரகம் நடத்தவந்தால், முதலில் புத்தகங்களைத் தென் புறமாகக் கொண்டு சென்று நல்ல இடத்தில் வைத்து விட வேண்டும். நல்ல வேளையாக்ப் பெட்டி போட்டு வைத்து விட்டேன். பிறகு, "உங்கள் நியாயமென்ன? என் இப்படி கிளர்ச்சி பண்ணுகிறீர்கள்? நாங்கள்தான் ஒன்றாயுட்கார்ந்து சாப்பிடுகிறோமே!", என்று சமாதானமாகச் சொல்ல வேண்டும். கேட்காத போனால், வாருங்கள் என்று சமாதானமாக அழைத்து அன்று எல்லாருக்கும் சமையல் பண்ணி ஒன்றாக உட்கார்ந்து சாப்பிடுவோம். இவ்வளவு செய்த பிறகும் கலாட்டா செய்தால், "ஐயா! தாராளமாக வந்து என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள்" என்று நாம் நமது காரியத்தைப் பார்த்துக் கொள்வோம். அவர் குருகுலத்தைக்

கைப் பற்றினுல் நாம் செலவிட்ட தொகையைக் கேட்போம். பாலபாரதியிலும், கலாசாலேயிலும், மற்றப் பணிகளிலும் நாம் பாடுபட்டிருக்கிருேம்; எவ்வளவோ பணம் செலவிட்டிருக்கிருேம். அதை யெல்லாம் தந்து விடட்டும். நாம் தனியாக ஒரு ஏற்பாடு செய்து கொள்வோம். ஒன்றும் சரியாவராவிட்டால் பாகவதத்தைத் தூக்கிக்கொண்டு நான் ஊர் ஊராக ஹிந்து தருமத்தையும் தேசாபிமானத்தையும் பற்றிப் பிரசாரம் செய்து கொண்டே என் வாழ்வைக் கழித்து விடுகிறேன்" என்ருர். "அப்படி யெல்லாம் வராது. திருவானேக்காவிலுள்ள சேனே மதுரைக்கு வந்தால் பார்த்துக் கொள்வோம். தமிழர் இன்றில்லா விட்டாலும் நாளே, தங்கள் அருமை பெருமைகளே உணருவார்கள்" என்றேன்.

இரண்டொரு மாதங்களுக்குப்பிறகு, போரும் அடங்கிப் போயிற்று. ஐயரை ஆசாரிய பதவி யேற்றுக் கொள்ளும்படி பல நண்பர் எழுதினர். ஐயர் கவனம் முழுதும் பால பாரதியிலேயே இருந்தது. மாணவருக்கும் அவர் பாடம் சொல்லிக் கொடுத்தார்.

29. சீர்திருத்தம்

சமூகச் சீர்திருத்தத்தைப் பற்றி ஐயரின் கருத்தைத் தமிழர் நன்ருக அறிய வேண்டும். ஐயர் ஸாவர்க்கார் எதை நினேக்கிருரோ அதை ஆமோதித்து நடப்பார். இன்று அவர் இருந்திருந்தால் ஸாவர்க்கார் இயக்கத்திற்கு உயிரா யிருப்பார். தென்னிந்தியாவில் சுத்தி சங்கடன வேலேகளே அமோகமாகச் செய்வார். நாஸிக்கில் ஸாவர்க்காரைப் பார்த்து வந்த பிறகு, அவர் அடிக்கடி ஹிந்து ஜாதியின் புனருத்தாரணத்தைப் பற்றியே பேசினர். குரு கோவிந்தனே அவர் ஆதர்சம். "வடக்கே ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையும், தெற்கே பிராமண பிராமணேதர ஒற்றுமையும் உண்டாக வேண்டும். வெறும் அரசியல் மகா நாடுகள் கூடிக் கலேந்தால் பயனில்லே. மாந்தர் மனப்பான்

CONNEMARA PUBLIC LIBRARY

மையே மாற வேண்டும். ஓர் அத்யாத்ம சக்தி எழுந்து ஒளி வீச வேண்டும். அந்த ஒளிச் சுடரில் வேற்றுமைக ளெல்லாம் சாம்பலாக வேண்டும். தீண்டாமை யொழிய வேண்டும். எல்லாரும் பாரதத் தாயின் பிள்ளைகள் என்ற உணர்ச்சி உதிக்க வேண்டும். வகுப்புவாரி பிரதிநிதித் துவத்தால் ஒற்றுமை உண்டாகாது. அது வேறுபாடுகளை யும், தனி உணர்ச்சியையும் அதிகமாக்கும். தக்காருக்குத் தகுந்த ஸ்தானம் அளிக்க நாம் எப்போதும் தயாரா யிருப் போம். முதலில் ஹிந்து ஜாதி பலம் பெற வேண்டும். இதற்கு ஓர் அகண்டமான இயக்கம் தோன்ற வேண்டும். ஹிந்து தர்மத்தை ஒவ்வொரு ஹிந்துவும் அனுஷ்டிக்க வேண்டும். அனுஷ்டான மில்லாமலே நமது ஜாதி வீழ்ச்சி யடைந்து இப்போது மிகவும் துர்ப்பலமா யிருக்கிறது. ஹிந்து ஜாதி தனது வன்மையை இழந்ததே ஹிந்துஸ்தா னம் வீழ்ந்ததற்குக் காரணம், இச் சமயம் இந்து மகா சபை செய்துவரும் காரியங்கள் மிகவும் அவசியமானவை; ஹிந்துக்கள் வீரதீரராக ஐக்கியப் பட்டு சக்தி மிகுந்து நிற்க வேண்டும். அப்படி அவர்கள் தங்கள் பலத்தையும் சக்தியையும் வளர்த்துக் கொள்வதைக் கண்டு இதர ஜாதி கள் விகற்பமாக எண்ணக் கூடாது. பலமுள்ள இருவ ருக்கே ஒற்றுமை சகஜமாகும். துர்ப்பலம் அடிமைத் தனத்திற்கே வழியாகும். தீண்டாமை பால்ய விவாகம் இரண்டும் ஒழிய வேண்டும். ஹிந்துக்களுக் கெல்லாம் உபநயன சமஸ்காரம் செய்து அனைவரையும் ஒன்று சேர்க்க வேண்டும். அதன் பிறகு சாதி வேறுபாடே தலை காட்டாமல் எல்லாரும் ஒரு குலமாக வாழலாம். இப் போது நமக்கு வேண்டுவது வீரம் தொண்டு இரண்டும் தான். அரசியல், கலை, பொருளாதாரம், தொழில், வாணி பம் அனைத்திலும் நமது ஜாதி மறுபடியும் வீறு பெற்று உலகமே அதிசயிக்கும் படியான காரியங்களைச் செய்ய வேண்டும்.''

இது தான் ஐயரின் கருத்து. ஸாவர்க்காரின் "ஹிந்துத்வம்" என்ற நூலை ஐயர் படித்து வியந்து அதன்படி நடக்கத் துணிந்தார். இப்போது ஐயர் இருந்திருப்பாரேயானுல் அவர் ஸாவர்க்காருடன் அரிய பெரிய காரியங்களைச் சாதிப்பார். ஆனுல் அவர் என்னென்ன செய்ய வேண்டும் என்று சமுதாய சீர்திருத்த விஷயமாக நினைத்தாரோ, அதையே நாடு செய்து வருகிறது. தமிழ்க் குருகுலப் போர் எந்தத் தனிமனிதர் போருமன்று; அதற்காக எவரையும் குற்றஞ் சொல்லக்கூடாது. அது தமிழ் நாட்டின் குறை நிறைகளை விளக்கவே எழுந்தது. குறைகள் விலகுகின்றன. இனி அதை மறப்போம்.

30. பால பாரதி

ஐயர் தமது உயிரை யெல்லாம் பாலபாரதியில் வைத்திருந்தார் என்பது மிகையாகாது. தமிழ்ப் பத்திரிகை யுலகிற்கே, பாலபாரதி ஒரு புதிய வழி காட்டிற்று. "மாடேண் ரிவ்யூ, பிரபாசி, சரஸ்வதி, பாரதி போன்று உயர்தரப் பத்திரிகை தமிழ் நாட்டில் விளங்க வேண்டும்" என்னும் எண்ணம் ஐயருக்குச் சென்னையிலேயே உண்டு. சேரமாதேவியிலேதான் அது நிறைவேறியது. 1924-ஆம் ஆண்டு அக்டோபர் மாதமே ஐயர் குருகுலத்தில் அச்சகத்திற்கு வேண்டிய ஒரு கட்டிடம் கட்டி ஒரு டிரெடிலும் எழுத்துக்களும் சென்னையிலிருந்து வரவழைத்தார். ஒருவர் பழைய அச்சு யந்திரம் ஒன்றை இனுமாக அளித்தார். ஆனுல் அது நெடுநாளாகப் பயன்பட வில்லை. செப்டம்பர் மாதம் அச்சு வேலைக்காரர் நியமிக்கப் பெற்றனர். அத்துடன் ஆசிரம கிருஷ்ணமூர்த்தி, சத்யானந்தம், மஹாதேவன், ராமசாமி முதலியோரும் அச்சுக் கோக்கக் கற்றனர், டிரெடில் அடிக்கப் பழகினர்; பாரங்களை அடுக்கித் தைக்கப் பழகினர். செப்டம்பர் முதல் வாரத்தில் ஐயர் பாலபாரதி தொடங்குவதைப் பற்றித் தீவிரமான ஏற்பாடுகள் செய்தார். தலையங்கப் பக்கத்தில் பாலபாரதி என்று

எழுதியிருக்கும் எழுத்தை என்னைக் கொண்டே எழுதச் சொன்னார். நான் எழுதியதில் அவர் S. B. என்று இடது பக்கம் எழுதி சென்னைக்கு அனுப்பினார். பிறகு சென்னை ஈஸ்டார்ன் ஸ்டுடியோவில் கலைமகள் வர்ணப் படம் தயாரித்து, பிளாக்கு செய்து அனுப்பச் சொன்னார். "எல்லாம் ஆயிற்று; ஆயிரத்து எண்ணூறு ரூபாய் இருந்தால் காகிதமும் அட்டையும் இன்னும் சில அச்சுத் தளவாடங்களும் வாங்கலாம்" என்றார். உடனே தேவகோட்டை கோவாபரேடிவ் பாங்கில் நான் வட்டிக்குப் போட்டிருந்த பணம் முழுதையும் வாங்கி ஐயரிடம் அர்ப்பணித்தேன். "இது பால பாரதிக்கு நிவேதனமா யிருக்கட்டும்" என்றேன். ஐயர் சந்தோஷமாக "நமது காரியம் ஜயம்" என்றெழுந்தார்! பாலபாரதி பிரகடனப் பத்திரிகையை எழுதிப் படித்தார்; அதை இங்கே குறிக்கிறேன்.

"இது பத்திரிகை யுகம். இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் ஜெர்மனியிலும் எண்ணத் தொலையாத பத்திரிகைகள் வெளியாகின்றன. நம் நாட்டில் இப்பொழுதுதான் அதிகமாகப் பத்திரிகைகள் வெளிவர ஆரம்பித்திருக்கின்றன. இன்னும் அனந்தமான பத்திரிகைகள் தோன்றி, தமிழ் நாட்டாருக்குப் புதியவிஷயங்களில் அறிவும் ஆனந்தமும் புகட்டவேண்டும் என்பதே எமது ஆசையாக இருப்பதால், நாம் இப் புதிய பத்திரிகையை வெளிப்படுத்துவதற்கு யாரும் வேறு காரணங்கள் கேட்கமாட்டார்களென்று நம்புகிறோம்

வெண்டாமரையில் வீற்றிருக்கும் எம்பிராட்டியின் பேரை இப் பத்திரிகைக்கு வைத்துள்ளோம். எதற்காகவெனில், இதில் சொற்பொழியும் ஆசிரியர்களுக்கு அவர்களுடைய வியாசங்களைத் துவக்கும்போதே சரஸ்வதியின் திருவுருவம் அவர்களுடைய நெஞ்சகத்தில் எழவேண்டும் என்றும், இதைப் படிக்கும் நேயர்கட்கு லௌகிக அறி

வையும், பாரமார்த்திக அறிவையும் ஒருங்கே தருபவ ளான வாக்குத் தேவியின் ஸ்மரணை அடிக்கடி ஏற்பட வேண்டும் என்றுமே. தன் பெயரைக் கொண்ட இப் பத்திரிகையை சகல வேதங்களுக்கும், சகல சாஸ்திரங்களுக்கும், சகல மந்திரங்களுக்கும், சகல தந்திரங்களுக்கும், தலைவியா யிருக்கிற கலை மடந்தை தன் பொற்கோயிலாகக் கொண்டு, அதில் நித்தியவாசம் செய்து, எம்மனோர் அனைவரையும் நிறைஞான முள்ளவர்களாக ஆக்கவேண்டுமென்று பிரார்த்திப்போம்.

இப் பத்திரிகை சேரமாதேவி குருகுலத்தின் வாயிலாகத் தோன்றுகிறது. தமிழ்க் குருகுலத்தின் நோக்கம் தனது இணையற்ற பேராற்றல் குலைந்து போயிருக்கும் தமிழுக்கு அதன் இயற்கையான முதன்மை ஸ்தானத்தைத் தந்து, புராதனக் கலைகளுக்குப் போலவே, இக் காலத்துக் கலைகளுக்கும் அதைப் பெரியதோர் நிலையமாக ஆக்கவேண்டு மென்பதும், தமிழ் மக்களுக்குப் பூரண மான கல்வி—அதாவது, இலக்கியக் கல்வியோடு விசுவ கர்ம கலைகளும் கற்பிக்க வேண்டு மென்பதுமே. அந் நோக்கத்திற் கேற்ப, இப் பத்திரிகையில் சீனத்தினின்று, பெரு தேசம் வரையில் உள்ள சகல நாடுகளிலும் பூத்த இலக்கியங்களைப் பற்றிய ஆராய்ச்சிகளை வெளிப்படுத்த முயலுவோம். சங்க காலம் முதற் கொண்டு, இந்நாள் வரையிலு முள்ள தமிழ் இலக்கியங்களின் விமரிசனங்கள் வெளியிடப் பார்ப்போம். ஐரோப்பா, அமெரிக்காவிலுள்ள வீரதீர விசுவகர்மர்களின் ஆச்சரியமான செயல்களைப் பற்றி இப் பத்திரிகையில் அப்போதைக் கப்போது சூக்ஷ்மமாக வர்ணித்தெழுதுவோம். ஆயுர்வேதம், யூனனி, ரண சிகிச்சையில் தற்காலத்துச் சல்லிய நிபுணர்கள் செய்கின்ற அதியாச்சரியமான வேலைகள், இயற்கை வைத்தியம் முதலிய வைத்திய முறைகளைப் பற்றி எழுதுவோம் உலகத்தில் வீரர் வரலாற்றைப் பற்றிய குறிப்புகள் நமது

பாலபாரதியை அலங்கரிக்கும். புதிய கதைகளையும், உயர்ந்த கதைகளின் பாஷாந்தரங்களையும் கலாப் பிரியர்கள் ஆனந்திக்கும்படி இப் பத்திரிகை தாங்கி நிற்கும். ஒவ்வோர் மதத்தின் விமரிசனமும், உலகத்தில் ரிஷிகள், நபிகள், நாதாக்கள் ஆகிய பெரியோர்களின் திவ்விய சரித்திரமும் நமது பத்திரிகையில் அப்போதைக் கப்போது தோன்றி, படிப்போரின் இருதயத்தை விரியச் செய்யும். ஏனெனில், எமது நேயர் அனைவரும் ஆத்யாத்ம வாழ்க்கையின் சுவையை அறிந்து, தங்கள் வாழ்க்கையை ஆத்யாத்மிக வழியில் திருப்பவேண்டுமென்பது எமது நோக்கங்களில் முக்கியமானதாகும். ராஜ தந்திரத்தையும் நாம் மறக்க மாட்டோம். ராஜ தந்திர சாஸ்திரத்தை அப்போதைக்கப்போது எழுதி வருவதுடன், உலகத்திலும் நாட்டிலும் நடைபெறும் சம்பவங்களைப் பற்றி நமது அபிப்பிராயங்களைக் குறித்து வருவோம். சுருங்கச் சொல்லில், உலகத்தில் அறிய வேண்டிய விஷயங்கள் அனைத்தையும் பற்றிப் பெரிய வித்துவான்களும், நாவலர்களும் பாலபாரதியில் எழுதி, அதை ஓரு விசுவ வித்யா நிலையமாக ஆக்குவார்கள்.

தமிழ் ஜாதி புத்துயிர் பெற்று, ஆச்சரியமான சக்தியுடன் விளங்கத் துவங்கும் இந் நாளில், அதன் மறுமலர்ச்சியாகிற கோடி சூரியப் பிரகாசத்தில், ஒரு லேசாலேசத்தின் பலத்தினல் தோன்றியுள்ள பாரத்துவாஜ ஆசிரமத்தின் ஆதரவில் பாலபாரதி உதித்துள்ளாள். நிமிஷத்துக்கொரு மனோகரமான வர்ணத்துடன் விரிந்து கொண்டு வருகிற இம் மறுமலர்ச்சித் திருவிழாவில் ஒரு பிரதான ஸ்தானத்தைப் பெற வேண்டும் என்று சங்கற்பித்துக் கொண்டு பாலபாரதி, அதற்குத் தன்னைத் தகுதியுள்ளவளாக ஆக்கிக் கொள்வதற்குப் பல்லாற்றிலும் முயலுவாள். ஸ்ரீமான்கள் சுத்தானந்த பாரதி, பொ. திருகூடசுந்தரம் பிள்ளை, மஹேசகுமார சர்மா, வையாபுரிப் பிள்ளை முத

லிய கலைஞர் தமது உயரிய வாக்குகளாலும், சீரிய நடையி ஞலும் பாரதியை அலங்கரிக்க இருக்கையில், அவள் விரும் பும் ஸ்தானத்தைப் பெறுதல், அவளுக்கு அசாத்திய மில்லை. அரிய வியாசங்கள், இலக்கிய ஆராய்ச்சிகள், நவரசம் ஒழுகும் கதைகள், ஆத்யாத்ம உபதேசங்கள் முதலிய பலவகைப்பட்ட சுவையுள்ள விஷயங்கள் பாரதி யில் மாதாமாதம் வெளிவந்து தமிழ்நாட்டு மக்களுக்குக் கலைப்பயிற்சி தரும்......ரஸானுபவத்தைக் கொடுக்கும். தமிழின் நறுமணத்தை அனுபவிக்க விரும்புவோர், பால பாரதிக்குச் சந்தாதாரராகச் சேர்ந்தே தீரவேண்டும்.''

இந்த அறிக்கை மூன்று பகுதியாகப் பிரிக்கப்பெற்று அட்டையிலும் தலையங்கமாகவும் வெளியிடப்பெற்றது. இந்த அறிக்கையானதும், பாலபாரதி வேலையை ஐயர் எனக்கே தந்தார். ஐயர் கம்பன் விமர்சனம், சிறுகதைகள் இலக்கிய விமர்சனம், ராஜகோபாலன் கடிதங்கள், ஆலோகனம் அவலோகனத்தில் ஆசிரியர் குறிப்புகள் இத்தனையும் எழுதிவந்தார். மேற்குறிப்பிட்ட நோக்கங் களுக்கேற்ற நூல்களைத் தருவார். "பாரதி, இதைப் படித்து இன்ன க்கட்டுரை எழுத வேண்டும்'' என்று பணிப்பார். பாரத சக்தியிலிருந்து உயர்ந்த கவிதைகளைப் படித்துக்காட்டி, ஐயர் தேர்ந்தெடுத்ததைப் பாரதியில் வெளியிடுவோம். ஆத்யாத்ம விஷயங்கள், மஹான்களின் வரலாறு, வேதாந்த சித்தாந்த தத்துவங்கள், யோகப் பயிற்சி' வீரர்வரலாறு, தமிழ்நாட்டின் சிறப்புச் செல்வ விளக்கம், புத்தக விமர்சனங்கள், சங்க நூல்களின் ஆராய்ச்சி, வள்ளுவர் ஆராய்ச்சி, பொருள் நூல், உயிர் நூல் பூத பௌதிக ரசாயன சாத்திரங்களின் ஆராய்ச்சி, அருட் கவிகளைப் பற்றியகட்டுரைகள், ஆங்கிலம், இந்தி, தெலுங்கு முதலிய மொழிகளினின்றும் பெரிய புலவர் வாக்குகளைத் தமிழாக்கல், பகவத்கீதை விளக்கம், தீர்க்கதரிசிகளின் உபதேச விளக்கம், காலக் கண்ணுடிக் கதைகள்

தேச பக்தர் வரலாறு, நாட்டு நடப்புகளின் குறிப்புகள்—இவை எனது வேலை. இந்த இலக்கிய வேலையைத் தவிர அச்சுக்கூட மேற்பார்வை, பாலபாரதி சந்தா ஜாப்தா, மணியாடர் பதிவு, கடிதக் கும்பல்களுக்கு உடனுக்குடன் ஐயர் குறிப்பறிந்து பதில், படங்களுக்கும், விளம்பரங்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் கடிதம், பாலபாரதி பிரதிகளைத் தபாலுக்கு அனுப்பல், எல்லா விலாசங்களுக்கும் சரியாய்ப் போயிருக்கிறதா என்று ஒவ்வொன்றாகச் சரிபார்த்தல், ஐயர் கட்டுரைகளைத் தவிர மற்ற அச்சுத்தாட்களை யெல்லாம் திருத்தல், அச்சுக் கோப்பவருக்கு வேண்டிய குறிப்புகளைச் சொல்லல், அச்சுக் கூடத்திற்குத் திருநெல்வேலியில் ஏதாவது தட்டுமுட்டு சாமான்கள் வேண்டியிருந்தால் ரயிலில்போய் உடனே வாங்கிவருதல் ஆகிய பல வேலைகள், மாணவருக்குப் பாடம்சொல்லி வைப்பதுடனேயே என் பங்கிற்கு வந்தன. ஐயரின் அன்பை நினைத்தபோது இவ்வளவு வேலைகள் வெகு எளிதாக நடக்கும். பகவான் எனக்கு இரவில் விழித்து வேலை செய்யும் ஆற்றலை அளித்ததனால், கட்டுரைகளை யெல்லாம் இரவிலேயே முடித்துத் தயாராக வைத்திருப்பேன்; புரூபையும் திருத்தி வைத்திருப்பேன்; காலை ஆசாரியார் என் பர்ணசாலைக்கு வருவார். அப்போது "இன்னது எழுதியிருக்கிறேன்" என்று காட்டுவேன். அவரும் "இன்னது எழுதுங்கள்" என்பார்! கொஞ்ச காலத்திற்குப் பிறகு திரு. வா. வாசுதேவன் திருச்சியிலிருந்து வந்து பாலபாரதி கணக்கை எழுதி வந்தார். திரு. டி. பிரகாசம், "ஸ்வராஜ்யா" தமிழ் ஆரம்பித்தவுடன், குடும்பஸ்தரான வாசுதேவன் அதிகச் சம்பளத்தை உத்தேசித்து 'ஸ்வராஜ்யா' துணையாசிரியராகச் சென்றார். ஐயர் அடிக்கடி வெளியூர்களுக்குச் செல்வார். அப்போது இன்ன விஷயங்கள் பத்திரிகையில் வரவேண்டும் என்று சொல்லிப்போவார். அப்படியே

விஷயங்களைத் தயாரித்து அச்சிட்டு ஐயருக்குப் பாரத்தை அனுப்புவேன். எந்த ஊரில் இருந்தாலும் ஐயர் பாலபார திக்காகச் சந்தாதார்களைச் சேர்த்துத் தகவல் எழுதுவார். நான் பதியவைத்துக்கொண்டு பத்திரிகை அனுப்புவேன். ஐயர் வெளியூர்களில் இருக்கும்போது 'ஆலோகனம், அவலோகனம்' என்னும் தலைப்பில் இன்னது விஸ்தரித்து எழுதுங்கள் என்பார். பாலபாரதி முதல் ஸம்புடத்தில் தை மாதப் பத்திரிகையில், காங்கிரஸ் நடவடிக்கைகளைப் பற்றி நான் எழுதினேன். அதன்பிறகே ஐயர் பத்தி ராதிபர் குறிப்பில் என்னை எழுதவிட்டார். ஏனெனில் தேசபக்தன் அனுபவம் இருக்கிறதல்லவா? யாராவது கண்டபடி எழுதிவிட்டுப் பத்திராதிபர் அகப்பட்டுக் கொண்டால் என்ன செய்வது?

எனக்குத் தீவிரமாக, காரசாரமாக, தேசீய விஷயங் களைப் பற்றி எழுத வேண்டுமென்றிருக்கும். சிற்பச் செல்வத்தில், குவாலியர் கோட்டையைப் பற்றி எழுதும் போது ராணி லக்ஷ்மீபாயைப் பற்றிக் கனல் பறக்க எழுதி விட்டேன்; அச்சேறும் சமயம். ஐயர், "என்ன அது?" என்றார். "குவாலியர் கோட்டை விமர்சனம்" என்றேன். "ராணியைப்பற்றி எழுதி யிருக்கிறீர்களோ?" என்றார். "[illegible]ம்" என்றேன். "ஒரு புரூப் பார்க்கலாம், தாருங் க[illegible]" என்றார். பார்த்ததும் கையை உதறி "அப்பாடீ! இதைப் போட்டால் பத்திரிகை போய்விடுமே;... நல்ல வேளை" என்று அதில் இரண்டு வரிகளை அடித்தார்." வேறொன்றுமில்லை......ஐயர் எல்லாவகையிலும் தற் காப்புடனே யிருப்பார். இச் சம்பவத்திற்குப் பிறகு, நான் எது எழுதினாலும் அவரிடம் காட்டியே அச்சேற்றுவது வழக்கம்.

ஐயர் பாலபாரதியில் எழுதிவந்தவை அத்தனையும் நிலையான இலக்கியச் சுவை பெற்றவையாகும். காவிய உத்தியானம், முஸ்லீம் பண்டிதரும் சனாதன தருமமும்.

ராஜகோபாலன் கடிதங்கள், கம்பராமாயண விமரிசனங்கள், புலவர் வறுமை, வைரங்கள், விவசாயம், குருகோவிந்த சிம்ஹன், லைலி மஜ்னுன், எறும்பின் மெய்க்கீர்த்தி, இஸ்லாமும் சாஸ்திர பரிசீலனையும், எதிரொலியாள், ஜஹாங்கீரின் முதற் காதல்—இவை ஐயர் எழுதிய இலக்கியங்கள். புலியைக் கொன்ற மலையாளிகள், கடுவாய் சமஸ்தானமும் நிஜாம் அரசாங்கமும், இந்தியாவும் ஆங்கில வாலிபரும், தமிழ்க்குருகுலம், புராதன குருகுலங்கள், ஹிந்தென்புர்க்கு, ஸர். பி. டி. தியாகராஜ செட்டியார், வங்காள அடக்குமுறை, ஆங்கிலத் தேர்தல்கள், யாதா பூர்விகள், தமிழ் மகாநாடு, ஐரோப்பிய சங்கத்திலிருக்கும் ஐரோப்பிய உத்தியோகஸ்தர்கள், புரட்சி எண்ணங்களை வேரறுக்கும் வழி, இந்தியரும் மனிதர் தாமே, கோஹத் அக்கிரமமும் அரசாங்கத்தார் பொறுப்பும், இந்துக்களின் துயர், இந்துக்களின் நிலைமை, ஹிந்து மஹா சபை, ஹிந்து சங்கடன இயக்கம், ஜாதீய சீர்திருத்தங்கள், மொராக்கோ, பாலிய விவாகம், இங்கிலாந்தின் உத்தர வாதம், ஒலிம்பிக் விளையாட்டுகள், வரவுசெலவுத் திட்டம் முதலிய குறிப்புகள், இன்று படித்தாலும் ரஸம[illegible] கின்றன; வீரந்துள்ளி எழும்படி சொற்கள் அமைந்[illegible] கின்றன. ஐயரின் தேசாபிமானக் கனல் ஓர் அமிசங் கூடத் தணியவில்லை என்பது இக் குறிப்புகளால் தெரியும். ஐயர் சாவர்க்காரின் கடிதங்களை மொழிபெயர்க்கச் சொல்லி முன்னுரையுடன் வெளியிட்டு ஆங்கிலத்தில் ஒரு விமரிசனமும் எழுதினர். முகம்மதலி ஆரம்பித்த "காம்ரேட்" பத்திரிகைக்கும் அழகான விமரிசனம் எழுதினர். ஐயரின் பொன்னெழுத்துக்க ளெல்லாம் நூலாக வர வேண்டும். கதைகளே இப்போது வந்திருக்கின்றன. ஐயர் ஆனந்தரங்கம்பிள்ளை தினசரியை வெளியிட்டது ஒரு புதிய அம்சமாகும்.

பாலபாரதி கட்டுரைகள் அனைத்துமே தமிழர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. இரண்டாம் மலர் வெளி வந்ததுமே மாதாமாதம் பத்திரிகையைப் போற்றி நாலா பக்கத்திலிருந்தும் நண்பர்கள் கடிதங்கள் எழுதினர். பத்திரிகைகளில் நல்ல விமரிசனங்கள் வந்தன. சந்தா ஐந்தே ரூபாய் தான். அக்கால நிலைக்கு இது மிகவும் குறைந்த சந்தா என்றே சொல்ல வேண்டும். நாங்கள் எச்செலவும் இன்றி அன்பிற்காகவே பாடுபட்டதனாலேதான் பாலபாரதி கட்டி வந்தது. காலை தபால் வந்ததும் ஐயர் விரைவாகப் பார்த்து குறிப்பெழுதித் தருவார். எனக்கு இரண்டு மணி நேரம் தபால் வேலை சரியாய் இருக்கும். பிறகு பத்திரிகையைப் படிப்போம். தினசரியில் வரும் நாட்டு நடப்பைக் குறித்துக்கொண்டு, முதன்மையானவற்றிற்கு விமரிசனம் எழுதுவோம். அகாலியரைப் பற்றி எழுதுவதானால் அதற்குரிய நூல்களைப் படித்து பத்திரிகையில் இரண்டொரு மாதங்கள் வந்த செய்திகளை ஆராய்ந்து திட்ப நுட்பமாகப் பத்திராதிபர் குறிப்புகள் வரும். காலை முழுதும் அச்சுக் கோப்பவருக்கு வேலை சரியாய் இருக்கும். ஒரு மணிமுதல் எங்களுக்கும் புரூப் வேலை சரியாயிருக்கும். இடையிடையே வகுப்புகளுக்குப் பாடம் சொல்ல வேண்டி வரும்; நூலாராய்ச்சிகளும் நடக்கும்.

பால பாரதிக்குப் பல நண்பர் பாடுபட்டனர். எனினும், ஆயிரம் பிரதிகளே செலவாயின; அதுவும் ஐயர் காலத்தில் 700 க்கு மேல் சந்தாதார் எண் ஏறவில்லை. ஐயர் சுமார் 5000-ம் சந்தாதாரையாவது எதிர் பார்த்தார். பால பாரதிக்கென்று எத்தனையோ கட்டுரைகளும் கதைகளும் நாடகங்களும் காவியங்களும் எழுதச் சொன்னார். எல்லாம் எழுதி எழுதி வைத்ததுதான் மிச்சம். பக்கங்களை அதிகமாக்கி அரிய கட்டுரைகள் வெளியிடப் பணம் இல்லாமற் போயிற்று. பைந்தமிழ்ச் சோலை, கீதை காட்டும் பாதை, குறளின்பம், கலக்கண்ணாடிக் கதைகள் இவற்

றிற் சில பகுதிகளே வெளிவந்தன. பிற்காலம் இவை நூல்களாக வெளி வந்தன. பெரியார் வரலாற்றில் ஆழ்வார்கள், தயானந்தர், தாஸர், பாரத நாட்டு வீரர் விமரிசனம், ஸமபிஸாதி, கொன்புத்ஸன், ஆனந்தரங்கம் பிள்ளை, ஸாவர்க்கார், பாரிவள்ளல், பெஸ்தலோஜி, விர்கிலியன், ஆகியவை தாம் வெளி வந்தன, எத்தனையோ வீரர் வரலாறும் மகான்களின் திவ்ய சரிதங்களும் எழுதி வைத்திருந்து எல்லாம் பிற்காலமே 'பெரியார் வரலாறு' என்ற பெயரால் வெளி வந்தன. பிரதாப சிங்கன். குரு கோவிந்தன், அப்பர், ஜயமணி, காலத்தேர் போன்ற நாடகங்கள் அங்கு எழுதி வெளி வராமற் போயின. இவற்றைத் தவிர வேதம் உபநிஷத் பைபிள் குரான் முதலிய புண்ணிய நூல்களைப் பற்றி யெல்லாம் விளக்கம் வெளியிட விருந்தோம். பூத வேதி கணித தாவர பூகோள நூல்களெல்லாம் படக் கட்டை செய்ய இயலாமல் பாரதியை அலங்கரிக்கவில்லை, சுமார் ரூ. 10000 சேர்த்து, பால பாரதியை இன்னும் விஸ்தாரமாக நடத்த வேண்டுமென்று யோசனை செய்திருந்தார் ஐயர்; நடத்தியிருப்பார், ஆனால் அதற்குள் அவர் கால வெள்ளத்தில் குதித்து மறைந்தார். அவருடைய வரலாற்றையே கண்ணீரில் தோய்த்து நான் பாலபாரதியில் எழுத வேண்டியதாயிற்று.

இறுதி நாளில் அவர் பேசிய பேச்சும், சொன்ன வார்த்தையும் தனி அத்தியாயமாக உள்ளன. ஐயர் விருப்பப்படி பால பாரதியை அவருக்குப் பிறகு நானே பொறுப்பேற்று நடத்தினேன். ஐயர் எழுதிய "ஜஹாங்கீரின் காதலை" அச்சிட்டுப் புரூப் திருத்திக் கொண்டிருக்கும் போது, ஜஹாங்கீர் அனார்கலியைப் பறிகொடுத்து கண்ணீர் விடும் கட்டத்தில், நானும் ஐயரைப் பறிகொடுத்துக் கண்ணீர் விடலாயிற்று. எப்படியாவது பால பாரதியை ஒரு 'மாடேன் ரெவ்யூ' வாக்கிவிட வேண்டுமென்று

நான் முயன்றேன்; ஐயர் அன்புருவை முன் வைத்துப் பால பாரதி நன்றாகத் தான் நடந்தது. இரவும் பகலும் அதே வேலைதான். ஸ்ரீ. தி. ரா. மஹாதேவ ஐயரும் பால பாரதி நடக்க வேண்டிய சௌகரியங்களைச் செய்து தந்தார்; அதன் முழுப் பொறுப்பையும் என்னிடமே கொடுத்தார். பத்திராதிபர் குறிப்புகள் கட்டுரைகள் எல்லாம் நானே எழுதி வந்தேன்.

“பால பாரதியைத் தொடங்கி நடத்திய எமது தலைவரான ஸ்ரீ வ. வே. சு. ஐயர் காலஞ் சென்ற பிறகு, அது தொடர்ந்து நடக்குமா என்னும் சந்தேகம் சிலருக்கு இருக்கலாம். ஐயர் பால பாரதியை அனாதையாக விட்டுச் செல்லவில்லை. அதன் பொறுப்பைத் தாங்கக் கூடிய வலிமையுடன், என்னிடம் அதை விட்டுச் சென்றிருக்கிறார். ஐயரின் ஸ்தாபனங்களில் குருகுலமும் பாரதியும் முதன்மையானவை யாதலால், அவற்றை எப்படியேனும் நடத்தவே உறுதி கொண்டுள்ளோம். ஸ்ரீமான் ஐயரின் கல்வித் திறனையும், வீரச் செயல்களையும், தூய வாழ்வையும், தன்னலமற்ற பணிகளையும், தேச பக்திக் கனலையும் வியந்து போற்றும் தமிழ் நாடு, அவரது அருமை மகளாகிய பாலபாரதிக்கு இனியும் வேண்டிய ஆதரவு தருமெனவே நம்புகிறேன். அழகான வியாசங்களாலும், அமிதமான சந்தாப்பொருளாலும் பாலபாரதியைஒப்பற்ற பத்திரிகையாக்க நற்றமிழ் நாட்டாருக்குத் திறமையில்லையோ? வங்காளத்தை மாடேன் ரெவ்யூ, பிரபாசி முதலிய பத்திரிகைகள் அலங்கரிக்கின்றன. சாரதா, பாரதி என்ற பத்திரிகைகள் ஆந்திரரின் சிற்பச் செல்வத்தையும், கலைப் பெருக்கையும் விளக்குகின்றன. நந்தமிழ் நாட்டுச் சிற்பமும், சித்திரமும், புலமையும், கவித் திறமையும், பால பாரதியின் மூலம் உலகிற்கு விளங்கும்படி செய்யத் தக்க ஆதரவு காட்டத் தமிழர் முன் வருவார்கள் என்று நம்பியே அதன் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்

ளேன். இனி நமது பாரதி புதிய வனப்புடன் தோன்று வாள். இணையற்ற உலக வீரர், பெரியார், கவிகள், புலவர், தீர்க்க தரிசிகள், தேச பக்தர் முதலியோர் வரலாறும் உபதேசங்களும் பாரதியை அலங்கரிக்கும். சிறு கதை கள், கற்பனைகள், தொடர் கதைகள், நாடகங்கள், அறிவு நூல்கள், கலை நூல்கள், சமயத் தத்துவங்கள் எல்லாம் பால பாரதியில் வரும். பெண்களுக்கும் சிறுவருக்கும் பயன்படும் கட்டுரைகள் வரும். உலகிலும், இந்தியா விலும், தமிழகத்திலும் நடக்கும் சம்பவங்களின் சுருக்க விளக்கமும், விமர்சனங்களும் பாரதியில் தொடர்ந்து வரும். தமிழ் நாட்டின் அன்பும், உதவியும் கிடைத்தால் பால பாரதியை வீரம், கலை, ஆத்யாத்ம வாழ்க்கை, கல்வி வளம், தொழில் விளக்கம் இவற்றிற்குப் பெரிய தூண்டு கோலாக்கலாம். பால பாரதி ஒவ்வொரு தமிழர் வீட்டையும் அலங்கரிக்குமாக !"

தமிழர் மனப்பான்மையை அறியவே, இந்த விளம் பரத்தைப் பால பாரதியில் வெளியிட்டேன். மறுநாளே "பால பாரதியை நடத்துங்கள்; வேண்டிய ஆதரவு கிடைக்கும்" என்று பல நண்பர் கடிதம் எழுதி ஊக்கினர். ஆறு இதழ்கள் வரையில் நன்றாக வெளிவந்தன., சந்தா தாரர்களும் மேன்மேலும் சேர்ந்தனர். அரிய கட்டுரை களும் அதில் வெளி வந்தன.

43. இறுதி நாளில்

வீர விளக்கான வ. வே. சு. ஐயருடன் சேர்ந்து வாழ்ந்த நாட்களை, நான் என்றும் மறக்க முடியாது; அந்நாட்கள் எனது பொன்னாட்கள். ஆ! அந்த இன்ப நாட் கள் நீடிக்குமென்றிருந்தேன்! அவை திடீரென்று ஒரு கொடிய சோக நாடகமாக முடிந்தன. அந்நாடக முடிவை நினைக்கையில் மனமே கவியாண அருவியாகி, அதில் என் சிந்தனை குளித்து நிற்கிறது!

மற்ற நாட்களின் நிகழ்ச்சிகள் பல; எனினும் அவையெல்லாம் மறைந்து, அந்த இறுதி நாளே என் உள்ளத்தில் துடிக்கிறது; அந்த நாள் என் வாழ்வையே மாற்றி விட்டது. அந்த இறுதி நாளில் அவர் சொன்னதும் செய்ததும் என் உள்ளத்தில் துடிக்கின்றன. அவையே ஐயரின் ஹம்ஸ கீதம். அவை தமிழர் உள்ளத்திலும் துடிக்க வேண்டுமென்றே ஐயரின் ஆவியை வணங்கி, இந்த ஆர்வமலரை நிவேதிக்கின்றேன்.

குருகுல பிரமசாரிகள் ஆசாரியரை வணங்கி, ஆசி பெற்றனர். "க்ஷேமமாகச் சென்று வாருங்கள்" என்றார் ஐயர். வந்தேமாதர கோஷத்துடன் ஆசிரியர், ஆசிரம காரியஸ்தர், பிரமசாரிகள் ஆகிய அனைவரும் பாபநாசம் அருவியைப் பார்க்கப் புறப்பட்டனர். அவர்களை வழி நடத்தி, நான் விடை பெற்றுத் திரும்பினேன்.

அப்போது கன்னி சுபத்திரா, மான் போலத் தாவி வந்தாள். "அப்பா! நானும் அருவியைப் பார்க்கப் போவேன். இதோ ஓரே ஓட்டமாக ஓடி, அவர்களுடன் கலந்து செல்வேன்" என்று குயில்மொழி பேசி ஐயர் எதிரே நின்றாள்.

"சுபத்திரா! இன்னொரு தடவை நாம் அருவியைப் பார்க்கப் போவோம்; பிடில் வாசி, போ!" என்றார் ஐயர். "உம், உம்.........இந்தத் தடவைதான் போகவேணும்" என்றாள் செல்வி. "சொன்னால் கேளு" என்று தமது மணிக் குரலைச் சற்று உயர்த்தினார் ஐயர். அப்பா சொன்னபடியே சுபத்திரா மெல்லத் திரும்பி, மாடிக்குச் சென்று, "ஸரஸிஜமுகிரோ" என்ற ஆரபி வர்ணத்தை மீட்டிப் பாடிக்கொண் டிருந்தாள். அந்திப் புட்களும் அதே சமயம் "காகூ, கலகல" என்று சுற்றிலுமுள்ள மரங்களில் பாடிக் கொண்டிருந்தன.

அச்சமயம் எங்களைத் தவிர ஆசிரமத்தில் இருந்தவர், ஆசிரம கிருஷ்ணமூர்த்தி ஒருவரே. அவர் தொண்டிற் சிறந்த வீரர். அவர் அச்சுக்கூடத்தில் வேலை செய்து கொண்டிருந்தார். "கிருஷ்ணமூர்த்தி! போரும். பாக்கி வேலை நாளைச் செய்யலாமே" என்றார் ஐயர். அன்று கோத்து முடிந்த அச்சுத் தாட்களை வாங்கிக்கொண்டு பால பாரதி கணக்கு வகையறுக்களைப் பைசல் செய்து, முடித்துக்கொண்டு, நான் எனது பர்ணசாலைக்குச் சென்று சந்தியா உபாயசனை செய்தேன். ஐயர் எனக்கொரு பராசக்தி உருவச் சிலை தந்தார். அஃது அவர் புதுவையில் வைத்திருந்த உருவம். அதை என் அறையில் வைத்து உபாசித்து வந்தேன். அதன் முன்புதான் நான் தியானிப்பது, கவி புனைவது, அன்றாடம் புனைந்த பாடல்களைப் பாடித் தீபாராதனை செய்வது. சில சமயம் மாணவருடனும் அப்பாடல்களைப் பாடுவதுண்டு.

அந்த வாரம் பாரத சக்தியில் இரண்டு படலங்கள் எழுதி முடித்தேன். ஒன்று குரு கோவிந்த சிங்கன் வரலாறு; மற்றொன்று 1907 முதல் 1910 வரையில் நமது சுதேசீய இயக்கத்தின் வரலாறு. இரண்டும் விருத்தப் பாடல்களே.

"குருகோவிந்த சிங்கனைப் பாடியது நல்ல காரியம்" என்று அதில் மூன்று கட்டம் படிக்கச் சொன்னார் ஐயர். அதிலிருந்து சுமார் இருபது கவிகள் படித்தேன்:

"பூவியல் வாழ்வை, உண்மைப்
புகழ்மணங் கமழ வைத்துத்
தேவியல் வாழ்வு பெற்றாய்;
சிற்றுடல் வருந்து கின்ற
சாவியல் உனக்கும் உண்டோ?
தந்தையே வீர வெற்றி
ஆவியை என்னுள் வைத்தாய்;
ஆருயிர் அறத்திற் கீந்தாய்."

என்று தந்தையின் தலைமுன் விரதம் பூணும்போது கோந்த ராய் சொல்லுகிறான். அப் பாட்டைக் கேட்டதும், "அந்த மாதிரி தீரமும் தியாகமும், தர்மாவேசமும் நமது ஜாதிக்கு வேண்டும்" என்றார் ஐயர்.

குருகோவிந்தன் பாரத தேசமும் தருமமும் உய்ய ஐந்துபேர் பலியை வேண்டுகிறான். பலர் அஞ்சி நடுங்குகின்றனர். முடிவில் தயாலால் முதலிய ஐவர் முன் வருகின்றனர்.

அவர்களே பஞ்சப்யாராக்கள்; அவர்களைக் கொண்டே குருமணி; கால்ஸா தீக்ஷை தொடங்குகிறான். அப்போது,

"பிறப்பினால் இல்லை; செல்வம்
பெற்றதால் இல்லை; பட்டச்
சிறப்பினால் இல்லை; கல்வித்
தேர்ச்சியால் இல்லை: அச்சத்
துறப்பினால்; உண்மை காக்குந்
துணிவினால்; தன்னலத்தை
மறப்பினால் அன்றோ வாய்மை
மானிடர் வீர ராவார்!"

என்று பாடும்போது, ஐயர் முகத்தில் புதிய தேஜஸ் உதயமானது! கண்கள் கனலுமிழ்ந்தன.

"இந்தமாதிரி வீரர்களைத் தமிழ் நாட்டில் உண்டாக்க வேண்டும். ஒரு ஜாதியின் உத்தாரணம் வீரர்களாலேதான் இயலும். வீரர்கள் என்றால் நிபுணர்கள்; அறிவிலும் செயலிலும் தியாகத்திலும் தீரர்கள்; கோவிந்த சிம்ஹன் செய்த கால்ஸா தீக்ஷையை நாமும் செய்யவேண்டும். இரும்புக் கலயத்தில் பானகம் செய்து, ஜயசண்டி மந்திரம் சொல்லி, வாளால் கலக்கி அமுதம் தந்தான், குருகோவிந்தன்! அவனது தர்மாவேசத்தால் சிட்டுக்குருவிகளும் வல்லூறுகளாயின. குரு, மகா சக்திமான்; முகம்

மது நபிக்கு அப்புறம், அவனே அப்படிப்பட்ட தீரர் கூட்டத்தைப் படைத்தான். சிறுமை பொறாமைகளை விட்டு, இப்படிப்பட்ட பெரிய காரியங்களில் நம்மவர் ஒன்றுபட வேண்டும்" என்றார் ஐயர்.

கால்ஸா தீட்க்ஷை பெற்ற சிஷ்யர்களைப் பார்த்து, குருமணி,

"ஏங்குகின்ற காலம் ஏகி
ஏறுபோல வீறுளோம் ;
தூங்கிலோம் ; துணிந்தனம் ;
துயர் செயும் அதர்மத்தைத்
தாங்கிலோம் ; தணலுகின்ற
சக்திபெற் றெழுந்தனம் ;
ஓங்கு வெற்றி வீரராக
ஒன்றி நன்று வாழுவோம் !"

என்று ஆவேசமாகப் பேசுகிறான் ! அந்தப் பாடல்களைக் கேட்டுவிட்டு, "பாரதி, அங்கே வரலாமே!" என்று எழுந்து ஐயர் தமது ஜாகைக்குச் சென்றார்.

நான் பத்து நிமிஷம் கழித்து ஐயரிடம் சென்றேன். அன்று எனக்கு உபவாச தினம். ஐயர் மெதுவாக இருந்து நிலைக் கடலையும், தேங்காயும், பேயன் வாழைப் பழமும் சாப்பிட்டுத் தயிர் குடித்தார். இவையே பெரும்பாலும் எங்கள் உணவு. உணவு கொள்ளும்போது, "மன்னிக்க வேண்டும் ; தங்கள் வாயினின்றும் அவ்வப்போது கேட்டதை யெல்லாம் கவிதையாக உளறி யிருக்கிறேன்" என்ற பீடிகையுடன் உணர்ச்சிப் படலத்தில் ஐயர் வரலாற்றினின்றும் ஐந்து கவிதைகள் படித்தேன் :

"வீரமே வடிவமானான் ;
வீரமே செயலுமானான் ;
வீரமும் கலையும் வாழ்வில்
விளக்கிநந் தமிழ்க் குலத்தை

வீரர்க ளாக்க வேண்டிப்
பாரத வீர ருக்குக்
குருகுலம் விரும்பி நட்டான்;
பரிதியே போன்ருன் மன்னே!"

என்பது இறுதியாகப் பாடிய கவிதை. "சரியாய்ப் போச்சு" என்ருர் ஐயர், ஒரு நாணப் புன்னகையுடன்! சாப்பாடானதும், ஐயர் பத்து நிமிஷம் இங்கு மங்கும் ஏதோ ஆலோசனையில் நடந்தார். பிறகு கம்பீரமாக அமர்ந்தார். அப்போது பல விஷயங்களைப் பற்றிச் சம்பாஷணை நடந்தது. அதன் சுருக்கமாவது:—

"ஆம், தமிழ் ஜாதியை வீரஜாதி ஆக்க வேண்டும். உலகில் வீரருக்கே முதல் ஸ்தானத்தை நான் தருகிறேன். வால்மீகி போன்ற முனிவரும், இராமன் போன்ற வீரரையே பாடுகின்றனர். சத்தியமும் பராக்கிரமும் நிறைந்த தர்மாத்மாவாகிய இராமனே முனிவர் தவத்தைக் காக்க வேண்டி யிருந்தது. வியாஸர், வால்மீகி போன்ற மகரிஷிகளின் அருள்வாக்கெல்லாம் வீரரா வேயே சோபித்தன!

"ஒடிக்குமேல், வடமேருவை
வேரோடு ஒடிக்கும்
இடிக்குமேல் நெடு
வானக முகட்டையும் இடிக்கும்;
பிடிக்குமேல் பெரும்
காற்றையும் கூற்றையும் பிடிக்கும்;
குடிக்குமேல் கடல்
ஏழையும் குடங்கையில் குடிக்கும்!"

இவ்வாறு கம்பர் அக்கால வானர வீரரை வர்ணிக்கிருர். என்று இப்பாட்டை ஐயர் பதம் பதமாகச் சொன்னர். "அந்த மாதிரி தீரர்களை, அசகாய சூரர்களை உண்டாக்க வேண்டும். ஐரோப்பியர்களுக் குள்ள பௌதிக சக்தி

யுடன் நமது நாட்டிற்குரிய ஆத்யாத்ம சக்தியும் சேர்ந்து ஒரு புதிய தர்மவீர ஜாதியை உண்டாக்க வேண்டும். பழைய வர்ணாச்ரமங்கள் தளர்ந்து போயின. நமக்கு இப்போது வேண்டுவது வீரம், சேவை இரண்டும். நாம் சீக்கிரம் எல்லாருக்கும் உபநயன சம்ஸ்காரம் செய்ய வேண்டும். எந்த ஜாதியானாலும் சரி, உபநயன சம்ஸ்காரம் செய்து, காயத்திரி உபதேசம் செய்ய வேண்டியது; பிறகு நமது கூட்டத்தில் அவர்களைச் சேர்க்கலாம். அவர்களுக்கு "தாஸஸிம்ஹர்" என்ற புதிய பட்டம் சூட்டலாம். அப்படி சம்ஸ்காரம் பெற்றவர்கள் ஆட்சேபணையில்லாமல் எல்லாவகையிலும் ஒன்றி வாழலாம். அந்த முயற்சிக்கு இடையூறாகச் சிலர் கிளர்ச்சி செய்து வருகிறார்கள்...... என்ன செய்வது?"

"திருவண்ணாமலை மகா நாட்டில் குருகுலத்தைப் பற்றிச் சமாதானம் செய்யலாம் என்று பார்த்தேன்; சரிப்படவில்லை. இந்த ஸ்தாபனத்தைக் கலைக்கவே கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். என்ன செய்வது? தமிழர் அப்யுதயமே பாரத்வாஜ ஆசிரமிகள் நோக்கம். தமிழரே அதை நடத்த முடியாமல் செய்தால், என்ன செய்வது? பராசக்தி இச்சை நடக்கட்டும்!...

"சிறுமை ஒழிய வேண்டும்; வசவும், பொறாமையும் ஒழிய வேண்டும்; ஆண்மையும் தீரமும் ஸஹன சக்தியும் வளர வேண்டும். ஒருவர் நல்லது செய்தால் அதற்குக் கைகொடுத்து உதவ வேண்டும். அப்படியானால் இந்த ஜாதி முன்னேறும்; நாம் செய்வதைச் செய்தாயிற்று:

"ஸுகதுஃகே ஸமேக்ருத்வா
லாபா லாபௌ ஜயா ஜயௌ
ததோ யுத்தாய யுஜ்யஸ்வ
நைவம் பாவம் அவாப்ஸ்யஸி!"

"சுகம் துக்கம் லாபம் நஷ்டம் தோல்வி எல்லாவற்றையும் சமமாகக் கருதிப் போர் புரி; பாவம் அடைய மாட்டாய்" என்ற கீதாசாரியன் வாக்குப்படி நமது கர்மத்தைச் செய்வோம் ; ஈச்வர இச்சை நடக்கட்டும்" என்று முடித்துப் பிறகு முன்னே பாடிய கவிகளைப் பற்றிச் சிறிது பேசினர். "இந்த மாதிரியே பாரத இதிஹாஸத்தை முழுதும் சிறந்த மகா காவியமாகப் பாட வேண்டும். அவற்றைப் படங்களுடன் பால பாரதியில் வெளியிடலாம். நல்ல சைத்திரிகன் அகப்பட்டால் இதிஹாஸப் படங்கள் எழுதச் சொல்லலாம். கம்பனுக்கும் படங்கள் எழுத வேண்டும்" என்று கலை விஷயமாகப் பல உத்தேசங்களைச் சொன்னர். மணி ஒன்பதரை யடித்தது. கிருஷ்ணமூர்த்தி படுக்கை விரித்தார். அவரிடம் எப்போதும் ஒரு முழ நீளம் ஐந்து விரற்கடை அகலமுள்ள ஒரு கனமான வாள் இருந்தது. ஐயர், அந்த வாளை எடுத்துவந்தார். படுக்கையில் உட்கார்ந்து அதைத் தடவிப் பதம் பார்த்தார். "குருகோவிந்தன் உத்யமம் நமக்கு வரவேண்டும்" என்றார். வாளைத் தலையணையின் கீழ் வைத்துக்கொண்டு ஓம் சக்தி என்று பள்ளிகொண்டார். வீரவுணர்ச்சிக்காகவே அவர் வாள் வைத்திருந்தார். 1918-ஆம் ஆண்டிற்குப் பிறகு ஐயர், பரிபூரண சத்தியாக்கிரகியாகவே இருந்தார். மகாத்மாவிடம் அவருக்குத் தெய்வ விசுவாசம் உண்டு. அக்காலம் காங்கிரஸ் அங்கத்தினர்கள் நூல் சந்தா செலுத்த வேண்டும். ஐயர் சிரமப்பட்டு நாளைக்கு 150 கெஜம் நூற்பார். தாம் செலுத்த வேண்டிய நூலை அவரே நூற்றனுப்புவார். கடமை காக்கும் விஷயத்தில் ஐயர் கிகாற்றவர்.

காலை மூன்று மணிக்கு எழுந்து தேக சுத்தி செய்துகொண்டு பால பாரதிக்கு வேண்டிய எழுத்து வேலை, திருத்த வேலைகளைச் செய்து தீர்த்துக் குளிக்கச் சென்

றேன். ஐயரும் குளிக்க வந்தார். முதலில் கூஜாவை விளக்கினர். மாவிலை போட்டுப் பல் விளக்கினர் ; பிறகு தொட்டியில் நீர் நிரப்பினர் ; ஆடை துவைத்தார். அதன் பிறகு கீதை மூன்றாவது அத்தியாயத்தில் "நகர்மணுமனாரம்ப" என்று தொடங்கும் நான்காவது சுலோகத்திலிருந்து "இந்த்ரியாணி பராண்யாஹு: " என்று தொடங்கும் 42-வது சுலோகம் வரையில் மெல்லச் சொல்லிக்கொண்டே தலை முழுகினர். ஐயர் நன்றாக அழுக்குத் தேய்த்து ஊறிக் குளிப்பார். சில சமயம் எலுமிச்சம்பழம் தேய்த்துக்கொள்வார்.

சுபத்திரா சந்தோஷமாக அங்கே ஓடி வந்தாள். "அப்பா, எல்லாம் கட்டி வச்சுட்டேன்" என்றாள். விஷயம் தெரிந்தது: "பாரதி, சுபத்திராவும் நானும் பாபநாசம் போகிறோம்." என்றார் ஐயர். காலை எழுந்ததும் அப்பாவைக் கெஞ்சி எப்படியோ அவர் சம்மதத்தைப் பெற்றாள் மகள். பதினொரு மணிக்கு என்னைத் தம்முடன் சாப்பிட அழைத்தார். உபவாசத்திற்கு மறுநாள் நான் சாதம் சாப்பிடுவது வழக்கம்.

காலை தியானம் ஜபம் ஆனதும் தபால்கள் வந்தன ; அவற்றிற்கு உடனே பதில் எழுதி முடிந்தது.

ஐயருக்குத் தினந்தோறும் சுமார் இருபது கடிதங்களாவது வரும். சில கடிதங்களுக்கு அவரே பதில் எழுதுவார். சிலவற்றிற்குக் குறிப்புத் தந்து எழுதச் சொல்வார். பதில் எழுதித்தான் தலை நிமிர்வார் ; சுருக்க விளக்கமாயிருக்கும் அவர் பதில். காலையில் சுறுசுறுப்பாய் அவர் உத்திரவுப்படி பால பாரதி வேலைகள் நடந்து முடிந்தன. அன்றுதான் ஐயரின் "அனர்கலி" (ஜஹாங்கீரின் முதற் காதல்) என்ற கட்டுரை அச்சானது. தமது வருணனைக் கதைகளில் அதுவே மிகச் சிறந்தது என்பது, ஐயர் அபிப்பிராயம். ஒருநாள் அவர் அதை

எனக்குப் படித்துக் காட்டினார். புஷ்பம் விற்கும் அனார் கலியின் வர்ணனையை வெகு உருக்கமாகப் படித்தார். "இந்த மாதிரித்தாங்கள் பல கதைகள் எழுத வேண்டும்; தமிழில் கதை இலக்கியம் சிருஷ்டிக்க வேண்டும்" என்றேன். "செய்ய வேண்டியது அனந்தம்; வங்காளி, தனது தாய் பாஷைக்குச் செய்துள்ளதெல்லாம், நாம் தமிழுக்குச் செய்ய வேண்டும். தமிழில் நாடக இலக்கியமே நல்ல துறையில் இன்னும் உண்டாகவில்லை; 'ஒதெல்லோ' 'யூலியகேசரி' (ஜூலியஸ், ஸீஸர்) 'ஹாம்லெட்' போன்ற உயர்ந்த நாடகங்களை மொழி பெயர்க்க வேண்டும். சுயமாகவும் அந்த மாதிரி நாடகங்கள் தமிழில் உண்டாக்க வேண்டும். பாரதி, ஜயவீரன், பிரதாப சிங், வசந்த சுந்தரி, புத்தர் கருணை போல, பல நாடகங்கள் எழுத வேண்டும். காவியத்திலும் தமிழ் எவ்வளவோ முன்னேற வேண்டும். ஹோமரும், ஷேக்ஸ்பியரும், மில்தனும், ஷெல்லியும் படித்துச் சுவைத்தவர்களுக்குத் தமிழில் ரஸமா யிருப்பது, கம்பன் ரஸனை யொன்றுதான் என்னலாம். நாட்டில் எத்தனையோ சம்பவங்கள் நடக்கின்றன. நமது இதிகாச சம்பவங்களைக் கொண்டே நல்ல மெருகு பிடித்த இளந் தமிழில் காவியங்கள் உண்டாக்க வேண்டும். இந்தியாவிற்கு முழுதும் கலைச் சொற்கள் பொதுவா யிருக்க வேண்டும். நமது பத்திரிகையில் பௌதிக, ரசாயன, யந்திர சாஸ்திரக் கட்டுரைகளே காணோம். மாணவருக்கேற்றபடி பல சாஸ்திரங்களை எழுத வேண்டும். உபயோகமான யந்திரங்களை நாம் செய்ய வேண்டும். நம்மை எந்த நாடும் ஜயிக்க முடியாதபடி எல்லாத் துறைகளிலும் நிபுணராக்கவேண்டும்; நிபுணர்களைச் சிருஷ்டிக்க வேண்டும்! செய்ய வேண்டியது அ—ன—ந்—த—ம்!" என்று ஐயர் பல தடவை சொல்லி யிருக்கிறார். அச்சமயங்களில் அவரே அத்தனையும் செய்து முடிப்பார் என்ற நம்பிக்கை எனக்கு

உண்டாகும். இறுதிநாள் பேச்சிலும், இவற்றை அவர் சொன்னார்!

மணி பதினொன்று; நான் அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, "கீதை காட்டும் பாதை"யில் நடுப் பகுதி எழுதிக்கொண் டிருந்தேன். அது எனக்கு வேதமானதால், சுலோகங்களை உரத்துப்பாடிக்கொண்டே விளக்கம் எழுதினேன். அச்சமயம்,

"சஞ்சலம் ஹி மனக்ருஷ்ண
ப்ரமாதி பலவத்ரிடம்"

என்று திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தேன்.

"தஸ்யாஹம் நிக்ரஹம் மன்யே
வாயோ ரிவ ஸுதுஷ்கரம்"

என்றொரு மணிக்குரல் கேட்டது—ஐயரின் இனிய குரல்! ஐயர் மாத்யான்ஹிகம் செய்ய அங்கே வந்தார்.

"ஆம், மனம் சஞ்சலமாகத்தான் இருக்கிறது. எப்படிப்பட்ட தைரியவானையும் காலம் சோதித்து விடுகிறது. இரவும் பகலும் ஜாதீய புனருத்தாரணத்திற்காகவே தம்மைப் பலிதானம் செய்யும் தீரர்களுக்குத்தான் சோதனை பலமாக வருகிறது. அச்சமயம் மனம் தளர்கிறது; உடைந்து போகிறது. காற்றைப் போல அதைக் கட்டுப்படுத்துவது கஷ்டமாகி விடுகிறது. வைராக்கிய சாதனங்களால் மனத்தை வென்று விடலாம். நமக்கு தேசோத்தாரண சாதனங்கள் வேண்டும். தேச சேவையே ஒரு வைராக்ய சாதனமாக வேண்டும். அதில் வரும் சுக துக்கங்களைத் தாங்குவதே வைராக்யத் தவமாக வேண்டும். அந்த வழியையே சிவாஜி, பிரதாப சிங்கன், ராமதாஸ், தேஜ்பகதூர், குரு கோவிந்தன் முதலிய தீரர்கள் காட்டினார்கள். ஆதலால் நமக்கு வந்

திருக்கும் சோதனைகளையும் தீவிரமாக வெல்லவேண்டும்'" என்றிவ்வாறு பதினைந்து நிமிஷம் உறுதியாகப் பேசினார் ஐயர். பிறகு, பாரதி! சாப்பிட வரலாமே" என்றழைத்தார். பதினொன்றரை மணிக்குச் சாப்பிட உட்கார்ந்தோம்: அன்று ஆசிரம கிருஷ்ணமூர்த்தி சமையல் செய்திருந்தார். மோர்க் குழம்பு, கீரையும் கத்திரிக்காயும் போட்டு ஒரு கூட்டு, பருப்பு சாதம்—இவையே சமையல். ஆசிரமத்தில் புளி, மிளகாய், வெங்காயம் இவற்றின் வாடையே கூடாது. தாமஸ பதார்த்தங்களை ஐயர் தொட மாட்டார்.

கட்டுக் கட்டாய் விபூதி வைத்துக்கொண்டு, தலையையும், தாடியையும் அழகாக வாரி விட்டுக்கொண்டு, பஞ்சகச்சம் வைத்து வேஷ்டி கட்டி, இடுப்பில் ஓர் உத்தரீயம் வரிந்து கட்டிக்கொண்டு, ஐயர் ஓர் ஆசனத்தில் அமர்ந்தார். அவருக்கு வலதுபுறம் நான் உட்கார்ந்தேன். கிருஷ்ணமூர்த்தி எதிரே உட்கார்ந்தார்:

"பாரதி! புஷ்டியாகச் சாப்பிட வேண்டும்; உடம்பு பலமா யிருக்க வேண்டும். சரீரப் பயிற்சியும் ஒரு கலை" என்ற பீடிகையுடன் இலை போட்டார். அன்று சுபத்திராவுக்கு வெகு சந்தோஷம்; இரவிலேயே பயணத்திற்கு மூட்டை கட்டி வைத்து, காலையில் அப்பாவின் மனதை வென்று விட்டாளல்லவா? அவளுக்கு இரட்டை மகிழ்ச்சி! ஆதலால், 'அப்பா! நானே பரிமாறுவேன்" என்று மளமளவென்று சொல்லும் செயலும் ஒன்றுனள்! பெரிய கலியாண விருந்துக்குப் பரிமாறுவது போல அவள் எங்கள் மூவருக்கும் உபசாரம் செய்து பரிமாறினள். ஐயருக்கும் அடங்கா மகிழ்ச்சி உண்டாயிற்று!

"அன்பும் அழகும் சேர்ந்துதான் இன்பம் பிறக்கிறது!" என்று பேச்செடுத்தேன். "கம்பன், அழகை

எப்படி சிருஷ்டிக்கிறன் பாருங்கள்!" என்று தொடங்கினர்.

"உமையா ளொக்கும் மங்கையர்
உச்சிக் கரம் வைக்கும்,
கமையாள் மேனி கண்டவர்
காட்சிக் கரைகாணு
இமையா நாட்டம் பெற்றிலம்
என்ருர்; இருகண்ணுல்
அமையா தென்ருர் அந்தர வானத்
தவரெல்லாம்."

"தன்னேர் இல்லா மங்கையர் செங்கை
தளிர் மானே!
அன்னே, தேனே, ஆரமிர்தே!" என்று
அடி போற்ற,
முன்னே முன்னே மெய்ம்மலர் தூவி
முறை சாலப்
பொன்னே சூழும் பூவின் ஒதுங்கிப்
பொலிகின்ருள்!"

என்ற மிதிலைக் காட்சிப் படல விருத்தங்களைப் பதம் பதமாகச் சொல்லி, சுபத்ராவைப்பார்த்து மகிழ்ந்தார்!,

"கம்பன்வர்ணனை இங்கே பொருத்தமா யிருக்கிறது:"

"மின்சேவிக்க மின்னரசென்னும்
படிநின்ருள்"
"கல்லும் புல்லும் கண்டுருகப் பெண்
கனி நின்ருள்"

என்னும் கம்பச் சித்திரங்களும் ஒப்பற்றவை" என்றேன்.

"கம்பன் முழுதும் கற்கண்டுதான்! கம்பன் முழுதையும் காட்சி காட்சியாக நடிக்கும்படி நாடகங்கள் எழுத வேண்டும்; சித்திரமாக எழுத வேண்டும்; கவிதை என்ருல் கம்பனே!" என்ருர், ஐயர்.

"வாழ்வில் வள்ளுவர் பேச வேண்டும்; வாக்கில் கம்பன் தவழ வேண்டும்—அதுவே இன்பம்! கம்பனை வசனமாக எழுதவேண்டும்; பால காண்டம் போலவே எல்லாக் காண்டங்களையும் பதம் பதமாகப் பிரித்து அச்சிட வேண்டும். கம்பராமாயண ஆங்கிலமொழி பெயர்ப்பை ("A Study of Kamba Ramayanam"), சீக்கிரம் வெளியிட்டால், வள்ளுவரை அறிந்தது போல் கம்பனையும் உலகம் அறியும்" என்றேன். "வெளியிட வேண்டும்; செய்ய வேண்டியது அனந்தம். இந்தச் சில்லறைத் தொந்தரவுகளும், சிறுமைப் பூசல்களும் (குருகுலப்போரைக் குறித்து) இல்லா விட்டால், எவ்வளவோ செய்யலாம். புயலில் நீந்தித்தான் கரை சேரவேண்டி யிருக்கிறது" என்றார் ஐயர். வயிற்றுணவை விடச் செவியுணவு மிகவும் இனிமையா யிருந்தது. ஐயர் ஜலம் சுற்றிவிட்டு, "கர்மண்யேவ ஆதிகாரஸ்தே; மாபலேஷு கதாசன" (கர்மத்திற்கே நீ அதிகாரி; ஒருகாலும் அதன் பலத்திற்கன்று) என்ற கீதா சுலோகத்துடன் எழுந்தார். இலையை எடுத்தெறிந்து கை கழுவி வாய் பூசி, மாடிக்குச் சென்றோம். ஐயர் ஒரு பீடத்தில் அமர்ந்து, தமது "ஸ்டடி ஆப் கம்பன்" கையச்சுப்பிரதியை எடுத்துப் பிரித்தார். "வாலி வதம்" வந்தது. வாலி, இராமன் வீரத்தைப் பழிக்கும் இடத்தை, ஐயர் படித்தார். வாலி வதம், இரண்யன் வதம்—இரண்டும் அவருக்குப் பிரியமான பாகங்கள். ஐயர் ஆங்கிலம் படித்தால் மிகத் தெளிவாயிருக்கும். சொற்கள் அப்படியே மனதிற் பதிந்து போகும். அவர் அன்று படித்ததில் நாலைந்து வரிகள் இன்னும் என் செவியில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

"A foe has carried off thy spouse
while on thy idle shoulder hangs the bow
Mocking thy valour."

" தாரம் மற்றொருவன் கொளத் தன் கையில்
பாரவெஞ்சிலை வீரம் பழிப்பதே "

என்றதன் அழகான மொழிபெயர்ப்பு அது. Griffith வால்மீகி ராமாயணத்தை மொழிபெயர்த்தது போலவே, ஐயரும் கம்பனில் சுவைமிக்க பாகங்களை வடித்தெடுத்து, எதுகை இல்லாத ஐஞ்சீர்ப் பாக்களாக (Pentametre) மொழிபெயர்த் திருக்கிறார். அவர் அடிக்கடி சொல்வது போலக் கம்பன் கவிச் சுவையைக் காட்சிப் படலங்களாகக் காட்டியிருக்கிறார். உதாரணத்திற்காகப் பின் வருங் காட்சியை மட்டும் படித்துப் பாருங்கள் !

இந்திரசித்தன் பிரம்மாஸ்திரத்தை விடுத்து இலக்குமணனையும், வானர வீரர்களையும் உயிரொடுங்கச் செய்தான். இதை அறிந்தான் இராமன்; திடுக்கிட்டான்; போர்க்களம் சென்றான் ; தம்பியின் உடலைத் தேடிக் கண்டான். "தம்பி விண்ணகஞ் சேர்ந்திட்டான் ; இனி மீளான்" எனக் கருதி, மனம் புண்ணிலெரியிட்டாற்போல நொந்து புலம்பினான். இராமன் புலம்புதலை வர்ணிக்கும் பதினைந்து கவிகளும், கம்பனின் சோகச் சித்திரமாகும். அவற்றிற்கு ஐயரின் ஆங்கில மொழிபெயர்ப்பைக் கீழே தருகிறேன்; அதன் உத்வேகத்தைப் படித்துப் பாருங்கள் :

Rama's Grief At Lakshmana's Supposed Death

*

" I died not when I heard our father's death,
Though he a kingdom gave, for in thy love,
I learned to forget his loss: but, thee now dead,
What's life to me? I come, my brother, I come!

But wert thou brother alone? Thou wert to me
A child and father, mother and blessings all:
And thou art gone! And thou art gone without
A 'farewell' said. Alas, have I become
More cruel than thee! For I see thee dead
And still, pretending sorrow, I bear to live.
My heart is made of stone, it breaketh not:
E'en *thy* loss I shall bear and cling to life!

In all these fourteen years of forest life
Through sun and shower, thou labouredst hard for me
And ne'er didst rest; art thou now gone for rest?

Thy one desire, child, was to see me crowned:
Now ope the eyes, behold, I'm grown home-sick;
Take me to Oudh and crown me with thy hands!

Thou wert a brother born, but grew'st a friend
Insep'rable. Thou didst thy father leave
And mother, and Dharm itself and followed'st me:
But do I follow thee now thou art dead?

Why did I part from thee, and let thee fight
Alone with Indrajit? I hate myself,
I hate this life inconstant: I come, I come!
Behold, I follow thee!."

From "A Study of Kamban's Ramayanam"
By V. V. S. Aiyer.

இவ்வரிய மொழி பெயர்ப்பின் அழகை, பின்வரும் கம்பர் சித்திரங்களால் காண்க :

"எந்தை யிறந்தா னென்று மிருந்தே னுலகெல்லாந்
தந்தன னென்னுங் கொள்கை தவிர்ந்தேன் ;
றனியல்லேன் ;
உய்ந்து மிருந்தாய் நீயென் நின்றே னுரைகாணேன் ;
வந்தன னையாவந்தன னையா வினிவாழேன் !

தாயோ நீயே, தந்தையு நீயே, தவ நீயே,
சேயோ நீயே, தம்பியு நீயே, திரு நீயே,
போயோ நின்று யென்னை யிகந்தாய் புகழ்பாராய்,
நீயோ யானே நின்னினு நெஞ்சம் வலியேனுல் !

ஊரும் நின்ற புண்ணுடை யாய்பா லுயிர்காணேன்
ஆரு நின்றே னுவி சுமந்தே யழுகின்றேன்
ஏறே யின்னு முய்யினு முய்வே னிருகூருக்
கீரு நெஞ்சம் பெற்றன னன்றே கெடுவேனே !

பயிலுங் காலம் பத்தொடு நாலும் படர்கானத்து
அயில்கின் றேனுக் காவன நல்கி யயிலாதாய்
வெயிலென் றுன்னுய் நின்று தளர்ந்தே மெலிவெய்தித்
துயில்கின் ருயோ ? வின்றிவ் வுறக்கந் துறவாயோ ?

மாண்டாய் நீயோ ? யானொரு போது முயிர்வாழேன் !
ஆண்டா னல்ல னுனில மாந்தோ பரதன்றான்
பூண்டா ரெல்லாம் பொன்றுவர் துன்பம் பொறை
யாற்றூர்
வேண்டா வோநா னல்லற மஞ்சி மெலிவுற்ருய் !"

(யுத்த காண்டம் : பிரமாஸ்திரப் படலம்)

சுமார் அரை மணி நேரம் கம்பன் கவிதையில் இருவரும் ஆழ்ந்திருந்தோம். பிறகு ஐயர் வேறு அலுவல்களைக் கவனித்தார். நான் எனக்குரிய காரியத்தை நோக்கினேன்.

மீண்டும் அவரை அலுவலாக மூன்றரை மணிக்குப் போய்ப் பார்த்தேன். அப்போது ஐயர் ஒரு கடிதம் எழுதிக்கொண்டிருந்தார். "பாரதி! உங்கள் பாடல்களைச் சுதேசமித்திரனில் வெளியிட்டு வரலாமே. இதோ ஏ. ரெங்கசாமி ஐயங்காருக்குக் கடிதம் எழுதுகிறேன்" என்றார்; "சித்தம் போல் நடக்கட்டும்" என்றேன். உடனே அவர் மேற்படியார்களுக்கு ஒரு கடிதம் எழுதி, இரண்டு பாடல்களுடன் வைத்து, கூட்டை ஒட்டினார். அக் கடிதம் 13—5—1925 சுதேசமித்திரனில் எனது பாடல்களுடனும், ஸ்ரீ. ஏ. ரங்கசாமி ஐயங்கார் குறிப்புக்களுடனும் வெளி வந்திருந்தது. அதன் அச்சுப் பிரதி என்னிடம் இன்றும் இருக்கிறது. ஐயர் கடிதம் எழுதும் அருமையை அதிற் காணலாம்:

"அன்புள்ள ரங்கஸ்வாமி ஐயங்கார் அவர்களுக்கு, அநேக நமஸ்காரம்; உபயக்ஷேமோபரி.

இப்பால் எனது நண்பரும், "பால பாரதி" உப பத்திராசிரியருமான ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் என்பார், மிக அருமையான தேசீயக் கீதங்கள் எழுதி யிருக்கிறார்; அவைகளை அப்போதைக்கப்போது, "மித்திரன்" மூலமாக உலகுக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என நான் வேண்டிக்கொள்ள, அதற்கிசைந்துள்ளார். இரண்டு கீர்த்தனைகள் இதனோடு தங்கள் பார்வைக்கு வருகின்றன. தயைசெய்து இவற்றைப் பிரசுரிக்க வேணும். அப்போதைக்கப்போது அனுப்புவதை அங்கீகரிப்பீர்கள் என நம்புகிறேன்.

இங்ஙனம்,
அன்பன்,
—வ. வெ. சுப்ரமணிய ஐயர்.

இக்கடிதம், அப்பெரியார் எனக்கு அன்று கொடுத்த ஆசீர்வாதம் போலத் தோன்றியது! சில நிமிஷங்கள் எனது ஆர்வங்களைக் கூறினேன்; ஐயர் அவற்றை ஆமோதித்தார்.

"நமது பாரத நாட்டு மகான்களையும், உலகில் உதித்த மகானுபாவர்களையும், மற்ற கம்பீரமான விருத்தங்களில் இராமாயணம், பாகவதம் போலப் பாடிச் சிறப்பிக்க வேண்டும்; அவற்றைப் புராணம் படிப்பது போலச் சகலரும் படிக்க வேண்டும். பாரத சக்தியை இத்துடன் நிறுத்தக் கூடாது. இன்னும் நகாசு செய்து பூரணமாக்குங்கள். ராணா, சிவாஜி, குரு கோவிந்தனைப் பாடியிருப்பது போலவே, ராஜ ராஜசோழன், கரிகாலன் போன்ற வீரர் வரலாற்றையும் கம்பீரமான விருத்தங்களில் செய்ய வேண்டும். ஜனங்களிடையே பிரசாரத்திற்கேற்ற பாடல்கள், நாடோடி மெட்டுக்களில் எளிய நடையில் இருக்க வேண்டும். அப்படியிருந்ததினலேதான் சுப்ரஹ்மண்ய பாரதி பாடல்களில் ஜனங்களுக்கு அவ்வளவு மோகம் ஏற்பட்டது. "பாஞ்சாலி சபதம்" போல, சரித்திரப் பாடல்களைப் பாட வேண்டும். ஷேக்ஸ்பியர், ராஸின் போல, நாடகக் காவியங்கள் எழுத வேண்டும். கவிதை அரிய கலை. அது நாளாக நாளாகத்தான் பூரணமாகும். மில்தன் வாக்கு முதுமைப் பருவத்திலேதான் எழுதும்படியான காம்பீர்யத்தைப் பெற்றது. ஷேக்ஸ்பியரின் வாக்கு "ஹாம்லெட், ஒதெல்லோ, மாக்பெத், கிங் லீயர்"—இந்த நான்கு நாடகங்களிலேதான் பூரண விகாசம் பெற்றுள்ளது; மிகவும் பொறுமையாகக் கவிதையை வளர்க்க வேண்டும்" என்றார்.

கலைமகளே ஆணுருப் பூண்டு வந்து எனக்கு அன்று அவ்வாறு உபதேசித்ததாகக் கருதினேன்.

மணி ஐந்து ; ஐயர் மகள் சுபத்திரா, தாயிடம் ஓடி வரும் இளங்கன்று போலத் துள்ளி வந்து, " அப்பா ! புறப்படுவோம் " என்ருள். அப்போது " போய் வருகிறோம் " என்ற குரல் கேட்டது. எழுந்து வெளியே ஓடி வந்தேன் ; " நமஸ்காரம் " என்றேன்.

ஆ ! அப்போது ஐயரின் காட்சி, ஒரு புதிய கம்பீரமுடன் விளங்கியது ! நெற்றி நிறைய விபூதிப் பட்டை ; அழகாகச் சீவிவிட்டு, கழுத்தில்படிந்து, கருங்கொடி போல் ஒருதரம் சுருண்டு நிவந்து பார்க்கும் கேசம் ; ரிஷிகளைப் போன்று மார்புமட்டும் நீண்டு வளர்ந்த தாடி ; அதில் இடையிடையே நரை நிறம் ; சிம்மம் போன்ற முகம்; ஆழ்ந்தகன்ற கருணையும் வீரக்கனலும் படைத்த விழிகள்; சுமாராகப் புன்னகை புரியும் பவள வாய் ; பஞ்சகச்சம் வைத்துக் கட்டிச் சற்று நீர்க் காவி ஏறிய கதர் ஆடை ; மேலே மார்பையும் ஒரு புஜத்தையும் மறைத்த யோக வேஷ்டி ; தோளில் ஒரு பை ; நன்ருக இறுகி, ' வலிமை, வலிமை ' என்று முண்டாள்கள் பேசும் உரத்த கரங்கள் ; அழகான குஞ்சர நடை ; ஆ ! அந்த வீரத் திருவடிவின் பின்னே ஒரு குரு கோவிந்தன், ஒரு அர்ஜுனன் நின்ருன் ! அவ்வடிவம் ஒருநாள், பாரத சேனு சமுத்திரத்தை நடத்தி விடுதலைக் கோயிலுக்கு அழைத்துச் செல்லும் என நினைத்தேன் ; அந்தியழகிற் பூத்த நவமல்லிகைக் கொடி போல், சுபத்திரா பொலிந்தாள். ஐராவதத்துக்குப் பின் செல்லும் காமதேனு போல் சுபத்திரா, அப்பா பின்னே தனது ஆடை மூட்டையைச் சுமந்து சென்ருள். பசும் வெய்யில், ஐயர் முகப்பொலிவை மிகச் செய்தது !

ஆ ! பிறகு அந்த முகத்தைப் பார்க்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்கவே யில்லை ! ஒரு மாதமாகவே ஐயர் தமது ஜாதகத்தைப் பார்த்துப் பலன் சொல்லிக்கொண்

டிருந்தார். கோடிக்கணக்கான எண்ணங்கள் குவிந்த வாழ்வுக் கப்பல் குபீரெனக் கவிழ்ந்தது !

இரண்டாம்நாட் காலை அனந்தகிருஷ்ண ஐயரும், சுப்பையரும் அருவியிலிருந்து திரும்பி வந்தனர் ; என்னை மாடிக்கு அழைத்துச் சென்றனர். "ஐயர் எப்போது வருவார் ?" என்று ஆவலாய்க் கேட்டேன் !

"சுபத்திரா அருவியில் வீழ்ந்தாள் ; அவளை எடுக்க ஐயர் குதித்தார் ; தேடிக்கொண் டிருக்கிறார்கள்" என்று விம்மி விம்மி யழுதனர். அனந்தகிருஷ்ண ஐயர், ஐயருடனே யிருந்தார் ; அவரைக் கிண்டிக் கிண்டிக் கேள்வி கேட்டேன். அவர் சலிப்படைந்தும் நான் விடவில்லை ; நான் அன்று உணவுகொள்ள மறுத்தேன் ; அவரையும் உண்ண விடவில்லை. கேள்விகள் கேட்டு முழு விவரமும் அறிந்தேன். இரவில் பராசக்திபிடம் முறையிட்டழுதேன்.

மறுநாள் கலியாண அருவியை நோக்கி ஓடினேன் ; வழியில் ஐயரின் அரும் புதல்வனான கிருஷ்ணமூர்த்தியைக் கண்டேன். தமிழ் ஜாதியே ஓர் அனாதைக் குழந்தை போலத் தோன்றியது ! நான்கு நாட்களுக்குப் பிறகு துக்கப்பட்ட பத்தினியைக் கண்டேன். தமிழ் நாட்டின் பாக்கியமே அஸ்தமித்தது போலத் தோன்றியது ! குருகுலத்தைக் கண்டேன். கொள்ளைபோன கோயில் போலத் தோன்றியது ! இனி, அருவி ஐயரை அழைத்த சம்பவத்தைக் கேளுங்கள்.

44. அருவியின் அழைப்பு

கலியாண அருவி, அன்று கடும்பசி கொண்ட கோடி சிம்மங்கள் போலக் கர்ச்சித்தது. அமிர்த மதனம் போன்ற அதன் மதுர கம்பீரவாணி, அன்று ஆயிரக் கணக்கான வாட்கணங்கள் மின்னிக் கலக்கும் பேரொலி

பாக மாறியது. அதன் உள்ளத்தில் பாட்டில்லை; பயங்கரமான ஊழியிடி முழக்கமே கேட்டது. இயற்கையழகை விரும்பிச் சென்றவர், அதன் உருத்திர வடிவைக் கண்டு நடுங்கித் திகைத்து நின்றனர்! சுமார் எண்பதடி உயரத்திலிருக்கும் அதன் வாயினின்று வெண்மையான நுரை கக்கியது; சடசடவென்று சுற்றித் துமிகள் தெறித்தன. கோபாவேசத்தில் கொட்டும் கணைக் கூட்டங்கள் போல, அம்புராசி விழுந்து கொண்டிருந்தது. அதனருகில் நிற்கவும் பயமா யிருந்தது. அச் சமயம் 'வா, வா' என்று யாரையோ அது பலிவாங்க அழைத்துக் கொண்டிருந்தது. அதன் கொடுமையான அழகைக் கண்டு அஞ்சி, நீராட வந்தவரும் மிக்க கவனத்துடன் பலமான ஆதாரத்தைப் பிடித்துக்கொண்டு ஒரு முழுக்குப் போட்டதும் "தப்பினோம்" என்று வெளியேறினர்.

* * *

இவ்வருவியில் சில வாலிபர்கள், இயற்கையின் கோபத்தைச் சற்றும் பொருட்படுத்தாது மீன் குஞ்சுகள் போன்று நீந்தி விளையாடிக் கொண்டிருந்தனர்: நீர் வீழ்ச்சிக்கு மேலான ஆரவாரஞ் செய்துகொண்டும், தங்களைக் கொஞ்சிக் கொஞ்சி எழும் அலைகளில் மூழ்கியும், படபடவென்று பரவும் துமிகளிற் களித்து ஆடியும் திரியும் இவ்விளைஞரே, நம் ஐயரின் குருகுல மாணவர்கள். இவர்களுடைய ஆசிரியரும் பிள்ளைகளைக் கவனித்துக் கொண்டும், இயற்கையின் அழகைப் புகழ்ந்து கொண்டும் அருகே இருக்கின்றனர். வேறு சில நண்பர்களும் இவர்களுடன் வந்திருக்கின்றனர்.

இவர்களுக்கிடையே, இம்மலைக் காட்சியும் வெட்கும் படியான காம்பீர்யத்துடன் அதோ நீலக் குன்று போல ஒரு வீரவடிவம் தோன்றுகிறது—குரு கோவிந்த சிங்கன் போன்ற தோற்றம்! சிங்கப் பார்வை, கருணை

பொழியும் கனல் விழிகள், சிறிது புன்னகை மின்னும் பவளவாய்; ஹம்ஸத்வனி வாசிக்கும் ஜலதரங்கம் போன்ற இன்சொல்லருவி; சாந்தமும் உறுதியும் பொலியும் திருமுகம்; உலகின் சுகதுக்கங்கள் போலே கறுப்பும் வெளுப்பும் கலந்து அனுபவத்தைக் காட்டி நீண்ட தாடி, இக்கோலங் கொண்ட ராஜரிஷியே, ஆசிரியர் வ. வே. சு. ஐயர்! அவர் அருகில் ஒரு மதிமுக மின்னற் கொடி விளங்குகிறது. அப் பச்சிளங்கொடியே, செல்வி சுபத்திரை. இவ்விருவரும், அருவியின் அழைப்பைக் கருதாது, அதன் அழகிலேயே ஈடுபட்டுக் களிகொண்டு நின்றனர். இயற்கையழகை ஐயர் ஆனந்த பரவசங் கொண்டு அனுபவிப்பார்; பிறரும் கண்டு இன்புறச் செய்வார்.

ஐயர், மாணவருக்கு இயற்கையழகை மொழி பெயர்த்துச் சொன்னர். அருவித் துமிகளில் காலைக் கதிரும் இன்ப நீராடுகிறது. அதனுல் உண்டான எழுநிற விற்காட்சியை ஐயர் அனைவருக்கும் காட்டிக் களித்தார்.

நெப்போலியன் போல, அருவியில் தலையைக் கொடுத்து, வீர மார்பால் அதனை எதிர்த்து நீந்தினுர் ஐயர். இவருடன் இருப்பதே இன்பமெனக் கருதிய மாணவருக்கும், மற்றவருக்கும், நயாக்ரா, சிவசமுத்திரம் முதலிய நீர்வீழ்ச்சிகளின் பெருமையையும் கம்பீரமான அமேஜான் பிரதேசங்களின் அழகையும், காங்கோவின் வனத்தையும், ஐரோப்பிய யாத்திரைகளில் தாம் கண்ட காட்சிகளையும் சொல்லிக்கொண்டே அவர் நீராடி வெளியேறினுர்.

நீராடிய பின்னர், பாபநாச மலைக் காட்சிகளைக் காண ஐயருடன் அனைவரும் மேலே சென்றனர். ஐயர் பின்னே சுபத்திரை, அன்னம் போலத் தவழ்ந்தாள்.

குமாரன் கிருஷ்ணமூர்த்தி வெகு சூக்ஷ்ம புத்தியுடையவன். அவன் கேட்கும் ஓய்வற்ற வினாக்களுக்கும் ஐயர் பொறுமையோடு விடையளித்து வந்தார்; இணைநோக்காடியால் (Binocular) சுற்றுமுள்ள வனக்காட்சிகளை எல்லோருக்கும் காட்டிக் களிப்புறச் செய்தார். ஸ்வித்சர்லாந்தில் தாம் கண்ட இயற்கையின் வனப்பைப் புகழ்ந்தார். அதனினும், தமிழ் மலைக் காட்சி இனிதென வியந்தார்! இத்தகைய இயற்கையின் மடியில் குருகுல மாணவர் வளர வேண்டுமெனச் சொன்னார். இம்மலைச் சூழலை வாங்கி, அதில் ஓர் ஆசிரமம் நிலைநாட்டித் தமிழ் நாட்டுச் சிறுவர்களை, சிவாஜி, பிரதாபசிங், குருகோவிந்தன், மஸ்ஸினி, நெப்போலியன், அன்னிபாலன், சிக்கந்தர், யூலியகேசரி போன்ற ஜய வீரர்களாக வளர்க்க வேண்டுமென ஆசை கொண்டார். நம் தமிழ் வீரர், அமேஜான், மிஸிஸிப்பி, காங்கோ, மூர்ரே, தான்யூப், நைல் முதலிய நதிக் காடுகளிற் குடியேற வேண்டும்; மேல்நாட்டுப் பாதிரிகள் அமெரிக்க அடவிகளில் சிகாகோவும், நியூயார்க்கும் எழுப்பினர்! அவர் போல நாமும் செய்ய வேண்டுமென்று ஊக்கமுடன் சொன்னார். திராபல்கார், வாத்தர்லு, அமியன்ஸ், தெர்மாபோலி, அலிவால், ஹல்தி கட்டம் முதலிய இடங்களில் நடந்த யுத்தங்களையும், அவற்றில் வென்ற வீரரையும் குறித்துத் தம் திண்ணிய தசைகள் துள்ளிக் குதிக்க வருணித்தார். அவ்வீரரைப் போன்று தமிழர் சுதந்தர பாரத வீரராக விளங்கவேண்டுமென்பார் ஐயர். 'தமிழரைச் சீக்கியர் போன்ற வீர ஜாதியாக்க வேண்டும். அவர்களுக்குப் பூரணமான ஞானமும், வீரமும் புகட்ட வேண்டும். அர்ஜுனன் போன்ற தீரர் தமிழ் நாட்டை அலங்கரிக்க வேண்டும்' என்பார். அவ்வாறு செய்து முடித்த பிறகு சில வீரருடன் ஐயர் அமேஜான் வனங்களில் குடியேறப் போவதாய் உறுதி கூறுவார். ஆந்திஸ் (Andes) மலையை

அளக்க வேண்டும்; டேவிட், லிவிங்ஸ்டன் போலே காங்கோக் காடுகளைத் துருவ வேண்டும்; மஞ்சள் நதியின் நீளத்தை அளக்க வேண்டும்; கௌரி சங்கரத்தைக் காணவேண்டும் என்பார் ஐயர். ஆம்! அவர் சிந்தனை எவரஸ்டினும் ஓங்கியது! வால்கா நதியினும் வளைந்து வளைந்தோடுவது; மிஸிஸிப்பியினும் நீளமுள்ளது; அமேஜானினும் அகலமுள்ளது. ஐயர் ஆசைக்கு அளவேயில்லை! அவர் எண்ணங்களுக்கு எண்ணில்லை! அருவி முகத்திற்குச் செல்லுமுன்பு, ஆயிரம் எண்ணங்கள், ஆயிரம் காட்சிகள், ஆயிரம் வீர உருக்கள் அவர் நெஞ்சில் உதித்து விட்டன. கற்பகாலமே உருவெடுத்து முயன்றாலும் அவை அவர் எண்ணங்களை நிறைவேற்றுமோ வென்பது சந்தேகம்! இத்தனை எண்ணங்களையும் அடக்கியாளும் இவ்வீரர், கலியாண அருவியாகக் கொட்டும் தாமிரபருணி யாற்றினருகே, அன்பருடன் வந்தார்.

கலியாண அருவி, இரை பிடிக்கத் தாவும் சிங்கம் போலப் பொதிய மலையிலிருந்து பாபநாச மலைக்குத் தாவி, விம்மிப் பொழிகிறது. இப்போது அந்த அருவிக்கு மேலே இவர்கள் நிற்கின்றார்கள். காலத்தினும் வேகமாய் அக்கொடிய மலையாறு சென்றுகொண் டிருக்கிறது. ஐயர் அருவியைப் பார்த்துப் பரவசங்கொண்டு நின்றார்; அவர் பக்கம் மாணவரும் பரவசங்கொண்டு நின்றனர். அருவி யாரையோ பசியுடன் அழைத்துக் கொண்டிருந்தது. ஆம், அது ஐயர் மகளையே அழைத்தது!

அருவியின் அழைப்பு, செல்வியின் காதில் ஒரு கவர்ச்சியை உண்டுபண்ணிக் கொண்டே யிருந்தது. அருவியின் குமுதம் இவள் நெஞ்சில் ஏதோ ஒரு மையலை உண்டுபண்ணிற்று. பிறப்பு இறப்பின் நடுவே நமது ஜீவநதி ஓடுவதுபோல், இந்தப் பருணி ஆறும் இரண்டு பாறைகளுக்கு நடுவே ஏதோ புலம்பிச் சென்று கொண்டிருந்

தது. இப்புலம்பல் அப்பெண்ணின் மனக் காதுகளுக்கே எட்டியது! இப்பொழுது நீர் வீழ்ச்சியின் தொடக்கத்தில் ஒரு பெரிய பாறையின்மீது இவர்கள் நிற்கின்றார்கள்; அங்கிருந்து கீழே நோக்கினல் யாருக்கும் மயக்கம் வந்துவிடும். மருமுறை இணைநோக்காடியால் தம் அருமை மகளுக்கும் மற்றுமுள்ளோருக்கும் ஐயர் இவ்வுலகை அலங்கரிக்கும் இயற்கையழகைக் காட்டினர்: "எத்தகைய அழகான உலகில் கடவுள் நம்மைப் படைத்திருக்கிறார்! இதற்குத் தொண்டு செய்வதே இன்பம்; தைரியமும் வீரமும் இருந்தால்தான் நமது தொண்டு நிறைவேறும். இடர்களில் புன்னகை புரியும் ஸஹன சக்தி வேண்டும். மனத்திட்பமும் வினைத் திட்பமும் வேண்டும். லியோனிதாஸன், தேசிங்கன், ஜோராபர் முதலிய வீரர்போன்று, நமது கடமையை நாம் காக்க வேண்டும்; சிறிது நேரம் வாழ்ந்தாலும் பெரும்புகழ் பெற்று வாழவேண்டும். "தோன்றிற் புகழொடு தோன்றுக!" என்று, உபதேசங்களை ஐயர் முடித்துக் கொண்டார். இவை யொன்றும் சுபத்திரையின் காதில் படவில்லை. அருவியின் அழைப்பிலும் எதிர்க்கரையின் வனப்பிலுமே அவள் மோகங் கொண்டாள். எதிர்க் கரைக்குக் கட்டாயம் சென்றே தீரவேண்டுமென்று அவள் மனம் துடித்தது.

இச்சமயம் மாணவரிற் சிலர், கலியாண ஆற்றின் அகலத்தைக் கவனமுடன் கடந்து அக்கரைக்குச் சென்றனர். அப்பெண் இதைப் பார்த்தாள். அவள் மனமும் அவளை அக்கரைக்கு இழுத்தது; அருவியும் பெண்ணைப் பலமாக அழைக்கத் தொடங்கியது. "நான் அக்கரைக்குச் செல்கிறேன், அப்பா!" என்று மகள் சொன்னாள். மகளின் கிளிமொழியைத் தடுத்து, குழல்போன்ற குரலுடன், "அம்மா, தண்ணீரின் வேகம் நம்மீது சீறி நிற்கிறது; இறங்கும் பாறைகளோ வழுக்கலானவை.

கால் தவறினல், பசியினல் கூவும் இந்த அருவிக்கு இரையாக வேண்டியதுதான். நீ இங்கேதான் இருக்கவேண்டும்" என்று சொன்னர் ஐயர்.

பெண் : போகத்தான் வேண்டும் அப்பா, உம்........ உம்........!

ஐயர் : முரண்டு செய்யாதே; அருவியின் உக்ர வேகம் உனக்குத் தெரியவில்லையா ?

பெண் : அதன் ஓலத்தை அறிந்தேதான் சொல்லுகிறேன் ; போகத்தான் வேண்டும்.

ஐயர் : அபாயம் நேருமம்மா ; அங்கே போவதை மறந்துவிடு !

பெண் : அவர்களெல்லாரும் போகிருர்களே! என்னைமட்டும் ஏன் தடுக்கிறீர்கள்? நீங்கள் இருங்கள். நாளுகிலும் தைரியமாய்ச் செல்லுகிறேன்.

ஐயர் : அவர்கள் ஆண் பிள்ளைகள், செல்லுகிருர்கள் ; அதோ பார்த்தாயா, ஒருவருக்கொருவர் கை கொடுக்கிருர்கள். நீ பெரிய பெண்ணு யிருக்கிருய், உன்னை அவர்கள் எப்படித் தொட்டு அக்கரை சேர்ப்பர் ?

பெண் : பெண் என்ருல் அவ்வளவு கேவலமா அப்பா ? நான் ஜான்ஸி ராணி லக்ஷ்மீபாய் போன்று தைரியமுள்ளவளாக இருக்கக் கூடாதா ? நீங்கள் அடிக்கடி ராணி துர்க்காவதி, சாந்துபீபி, பத்மாவதி, அஹல்யா பாய், ஜோன் ஆப் ஆர்க், லக்ஷ்மீபாய் முதலிய பெண்களைப்போல் வீராங்கனையாக விளங்க வேண்டும் என்பீர்களே ! இப்போது எனது தைரியத்தை என் அணைப் போட்டுத் தடுக்கிறீர்கள் ? இச் சிறு வாய்க்காலைக் கடக்கா விட்டால், நான் பாரத நாட்டுப் பெண் ஆவேன ?

ஐயர் : சுபத்திரா, அருவி விஷயத்தில் இவ்வளவு ம[illegible] தனம் கொள்ளாதே! இதன் பயங்கரமான ஆழம் க[illegible] தன் போல் வாயைத் திறந்து கொண்டிருக்கிறது. இதில் விழுந்து இறந்த கணக்கில்லா மாந்தரின் ஆவியே, இங்கே கூவுகிறது. கேள்! இவ்வழுக்குப் பாறைகளில் சற்றே கவனத் தப்பா யிருந்தால் இவ்வருவி நம்மை இழுத்துப் பாதாளத்தில் தள்ளி, நமன் வாயில் புகுத்திவிடும். உன் எண்ணத்தை விட்டுவிடு, சுபத்திரா!

பெண் : எனக்குப் பயமில்லை; எப்போதாயினும் சாகவேண்டியதுதானே. நான் சாவிற்கு அஞ்சவில்லை. தைரியமாக அக்கரை சென்று, அதோ அந்தப் பாறையின் பசுங்காட்சியில் உட்கார்ந்து, அதைச் சுற்றியுள்ள வனத்தின் அழகை அனுபவிப்பேன். என் மனம் அங்கே தான் இருக்கிறது. அருவி என்னை அக்கரைக்குக் கூவுகிறது. அப்பா, உடனேசெல்வோம்..........உம்...... உம்...........!

ஐயர் : சுபத்திரா! இந்த ஆசையை அடக்கு; வா, திரும்பிப் போவோம். பெரியவர்கள் சொல்வதைக் கேள்!

பெண் : என்னால் ஆசையை அடக்க முடியவில்லை. ஐயோ, அப்பா! நான் கட்டாயம் இறங்கியே அக்கரை செல்வேன். இதோ இறங்குகிறேன்!

ஐயர் : சுபத்திரா! நான் சொல்வதைக் கேட்க மாட்டாயா? உம்...

சுபத்திரையின் பிடிவாதத்திற்கு ஐயர் பதில் சொல்லி அலுத்துப்போனார். அருவியின் அழைப்பு அவளை வென்றது! இல்லை, கொன்றது!

"அப்பா! இதோ நான் தாவிச் செல்கிறேன்" என்று சொல்லி, கண்மலரைக் கசக்கி, நீரருவி சொரிந்தாள், அழுதாள், தொழுதாள். ஐயர் இளகினார். சுபத்திரை மறுபடியும் அவரை வென்றாள்!

*   *   *

சுருண்டு சுருண்டு கார்மேகம் போலப் புயங்களிற் படிந்த ஐம்பால், பசுங் கதர்ப் புடவை, வசந்த ரோஜா போன்ற அழகிய வதனம், மின்னும் இளம்பிறை போன்ற முறுவல், தீபசிகை போன்ற திருவடிவம், பவள வாய், குவளைக் கண்கள், கிளிமொழி—ஆ! தமிழ் நாட்டின் உத்தமப் பெண்மணிகளில் ஒருத்தி சுபத்திரை. அவள்மட்டும் ஆயுளோடிருந்தால் பெண்ணுலகின் வீரத் திருவாக இன்று விளங்குவாள்! என்ன செய்வது? இதோ அருவி அழைத்தது! "இதோ வந்து விட்டேன்" என்று அவள் காற்சிலம்பினின்று விதி விடையளிக்கிறது!

"அழாதே அம்மா! இதோ உன்னை நானே அழைத்துச் செல்லுகிறேன்" என்று மகளை ஆற்றினார் ஐயர். சுபத்திரா கலகலவென்று முல்லை வாய் திறந்து சிரித்தாள். ஐயர் தமது செல்வச் சுபத்திரையைச் சுமந்து, சாவதானமாக இறங்கி, ஒரு பாறை மீது வைத்துக் கொஞ்சம் அரிமா நோக்காக மாணவரைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"அப்பா!" என்று ஓர் அபயக் குரல் கேட்டது! திரும்பினார் ஐயர். அருவிப் பேய் அருமைச் செல்வியை அள்ளியணைத்துக் கொண்டு போயிற்று! மேக ராசியில் தோன்றி மறையும் மின்னலைப்போல, இந்தக் கொடிய அம்புராசியில் மின்னாள் மறைந்தாள்! கண்ணிமைப்பொழுது அந்தச் செம்பவளக்கொடி அருவியில் தோன்றி மறைந்தாள்.

"ஹா சுபத்ரா!" என்றொரு இடிமுழக்கம் கேட்டது! மற்றொரு நீல மலை, அந்தச் செம்பவள மின்னலைத் தேடி அருவியில் குதித்தது. ஆ! அந்த மலையையும் அருவிப் பேய் விழுங்கி விட்டது!

அந்தோ! நமது அருமை ஐயர் மறைந்தார்; பாரத தேச விடுதலைக்கே வைத்திருந்த தம் உயிரை மகளுக்காகப் பலிதானம் செய்துவிட்டார்! தமிழ்நாட்டின் குருகோவிந்த சிங்கன் மனதிற் கட்டிய கோட்டை யிடிந்து, இந்த நீர் வீழ்ச்சியிற் கரைந்தது! தமது உயிரைக் கொண்டு, மகள் உயிரைத் தேடுவது போல, வீரவிளக்கு வ. வே. சு. ஐயர் மறைந்தார்!

இலண்டன் இந்திய விடுதியில் பூண்ட வீர சுதந்தர தீக்ஷை, சாவர்கார், கிருஷ்ணவர்மா, மாதாம் காமா முதலியவர்களுடன் இலண்டனிலும் பாரிஸிலும் வளர்த்த புரட்சிக் கனல், பத்து ஒற்றர் கண்ணில் பொடி தூவி, விக்கிரம சிங்கனாகவும், பார்ஸியாகவும், பக்கிரியாகவும் வேடம்பூண்டு, ஐரோப்பா, கெய்ரோ முதலிய இடங்களிற் சுற்றி, தாய் நாட்டிலும் சுற்றித் திரிந்து மாறு வேடத்துடன் புதுவைக்கு வந்த அந்த அற்புதமான மனத்திண்மை, புதுவையில் புரிந்த வீரச்செயல்கள், வறுமையும் பெருமையெனத் தாங்கி, அருமைத் தாய் நாட்டுப் பணியே தவமெனப் புரிந்த அந்தத் தியாக வேள்வி, எந்த இடர் வந்தாலும் கலங்காத அந்த வைரவுறுதி, கம்பரும், வள்ளுவரும், ஷேக்ஸ்பியரும், காளிதாஸரும் தவழும் அந்தக் கலை நாக்கு, வீரலக்ஷ்மி கொலுவீற்றிருக்கும் அந்த மலைப்புயம், எதிலும் நிபுணன் எனக் காட்டும் அந்த உரத்த கரங்கள், கோயில் ரிஷபம்போன்ற அந்த காம்பீர்ய நடை, தேசபக்தன் மூலம் மஹாத்மாவின் சாத்வீகப் போருக்கு முரசு கொட்டிய அந்த ஜயவாணி, பல்லாரிச் சிறையிலும் கம்பக் கவியின்பஞ் சுவைத்த

அந்த ரசிக ரஞ்சனம், தமிழரை வீர ஜாதியாக்கக் குரு குலம் நிறுவி ஒரு புது வழி காட்டிய அந்த ஆசார்யத்வம், குருகுலத்தினின்றும் ஆயிரம் ஸங்கற்பம் செய்து, தமிழருக்கே ஒரு மகத்தான பணிபுரியத் துடித்த அந்த விசாலமான உள்ளம், நட்பிற்கினிய அந்த அன்பு, தற்பெருமை பேசாத அந்தச் சீரிய அடக்கம், இதோ ஒரு நிமிஷத்திற்கு முன்பே உலகெலாஞ் சுற்றித் தமிழ்க் கொடியை நாட்ட வீறு பேசிய அந்த மனத்திட்பம், ஆ! அந்த உரம்பெற்ற நீலக்குன்று போன்ற திருமேனி, அதில் வளர்ந்தோங்கிய கோடி கோடி எண்ணங்கள் எல்லாம் கண்ணிமைக்கு முன்பு, அந்தோ! ஒரு காரிகைக்காக, அருவியில் தாவி மறைந்தனவே!

ஐயர் முகம் பளிச்செனத் தெரிந்தது. கைகள் சுபத்திரையின் ஆடையைப் பற்றின. ஆனால் அந்தோ! அதேசமயம் இருவரையும் நமன்பற்றி விழுங்கிவிட்டான்! மகளைக் காணோம்; ஐயரைக் காணோம்; அருவிமட்டும் இன்னும் அவர்களின் துக்ககரமான முடிவை உலகிற்கு வீறிட்டு நிற்கிறது! Men may come and men may go but I will be going on for ever.

"யாக்கை வாழ்வு ஒரு மின்னோட்டம்; இன்றிருப்பவர் அடுத்த நிமிஷம் இல்லை" என்னும் தத்துவத்தை ஐயர் விளக்கி விட்டார்.

ஐயர் வீரராகவே வாழ்ந்தார்; வீரம் வீரம் என்றே உயிர்த்தார்; வீரச்செயல்கள் புரிந்தார்; வீரரை உண்டாக்கவே அல்லும் பகலும் விரும்பிப் பாடுபட்டார். இறுதியில் ஒரு நோய் நோக்காடில்லாமல் வீரராகவே உயிர் நீத்தார்! தமிழ் உள்ளமட்டும், கம்பன் உள்ளமட்டும், தமிழகம் உள்ளமட்டும், பாரத தேசாவேசம் உள்ளமட்டும், ஐயர் பெயர் நின்று நிலவும்; இது உறுதி!

ஐயரை நாம் இழந்துவிட்டோம். ஆனால், அந்த வீரக்கனலை நாம் இழக்கமாட்டோம்! ஐயர் நம்மைச் சுவர்க்கத்தினின்றும் ஆசீர்வதிக்கிறார். நமது கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, அவர் நமக்கு விட்டுச்சென்ற காரியத்தைச் சீர்பெறச் செய்து, தமிழ் ஜாதிக்குப் புத்துயிர் தருவோம்!

ஐயர் ஆவிக்கு வணக்கம்! ஐயரைப் பெற்ற தமிழன்னைக்கு வணக்கம்! ஐயர் நமது நெஞ்சில் இருக்கிறார்; அவர் நினைப்பு மற்றோர் உருவில் நிறைவேறித்தான் வருகிறது. அவர் ஏற்றிய வீரக்கனல் அணையவில்லை. அதுவே என் ஆறுதல். என்னுள் ஐயர் இதயத்துடிப்பாயிருக்கிறார்.

பின்வரும் தமிழ்க் கண்ணிகளால் ஐயரின் நினைவை மனனம் செய்கிறேன்: